தமிழ்நாட்டு அரசின்
சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு வெளியீடு : 1

சோவியத்துக் கவிஞர் நூற்றுவர்

தமிழாக்கம்

த. கோவேந்தன்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition—1980
Number of Copies—2,000

© Government of Tamilnadu

ONE HUNDRED SOVIET POETS

(Soviet Literature - Sep. 1972)

Tamil Translation
THANGAVĒL KŌVĒNDAN

Price: Rs. 19-00

Printed on 70 GSM imported paper

Printed at
Bhagat Printers, Madras-600 016

பொது முன்னுரை

யாம் அறிந்தவரையிலே, வேறு எந்த அரசும் மேற்கொள்ளாத ஓர் அரிய திட்டத்தைத் தமிழ்நாடு அரசு தானே முன்னின்று நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறது. தமிழில் உள்ள பேரிலக்கியங்களை உலக மொழிகளிலே மொழிபெயர்த்துத் தமிழ் மக்களுடைய பண்பாட்டையும் இலக்கியப் பாங்குகளையும் உலகத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்னும் நோக்கத்தோடும் உலக மொழிகளிலே உள்ள பேரிலக்கியங்களைத் தமிழாக்கம் செய்து, தமிழ்மக்களுக்கு அறிமுகம் செய்வதோடு, இத் தமிழாக்கங்கள் தமிழிற்கே புத்துயிரும், புதிய வளமும் நல்க வேண்டுமென்னும் நோக்கத்தோடும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்தத் தனிப்பெருந் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு தொகை செலவானாலும் அவ்வளவையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது என்று பன்முறை அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 8—5—78-ல் டாக்டர் திரு. ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் தலைமையில் கீழ்க்காணும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்ட வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு நியமித்திருக்கிறது:

1. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் திரு. கொண்டல் சு. மகாதேவன் அவர்கள் — செயலுறுப்பினர். இவர் இரண்டாண்டுகள் செயலுறுப்பினராக இருந்து, அவருக்குப்பின் தற்பொழுது தமிழ் வளர்ச்சி

இயக்குநராக இருக்கும் திரு. டாக்டர் மா. நன்னன் அவர்கள் செயலுறுப்பினராக இருந்து வருகிறார்.

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் — உறுப்பினர்.

3. சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் — உறுப்பினர்,

4. சென்னை சாகித்திய அகாதமியின் தென்மண்டலச் செயலர் திரு. டாக்டர் சி. ஆர். சர்மா அவர்கள் — உறுப்பினர்.

மேற்கண்ட வல்லுநர் குழு உலகத்திலுள்ள பல பல்கலைக் கழகங்களோடு தொடர்புகொண்டு உலக மொழிகளிலே தமிழாக்கத்திற்குத் தகுதியான பேரிலக்கியங்கள் எவை என்று பரிசீலனை செய்துவருகிறது; தமிழ் இலக்கியங்களில் எவற்றை அயல்மொழிகளில் மொழிபெயர்க்கலாம் என்பதையும் பரிசீலனை செய்து, இரு மொழிப் புலமையும், எழுத்தாற்றலும் பெற்றுள்ள அறிஞர்களைத் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுத்த பேரிலக்கியங் களை மொழியாக்கம் செய்யும் பொறுப்பை வல்லுநர் குழு அவர் களிடம் ஒப்படைத்து வருகிறது. ஆங்கிலமும் தமிழும் நன்றாகக் கற்று, ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்து வல்லமை பெற்றவர் பலர் இருந்தபோதிலும் பிரஞ்சு, ஜெர்மன், டச்சு, இத்தாலியன், பெர்சியன், ஸ்பானிஷ், ரஷ்யன் முதலிய மொழிகளில் உள்ள பேரிலக்கியங்களைக் கற்று, அவற்றைத் தமிழாக்கம் செய் வதற்கோ, தமிழ்ப் பேரிலக்கியங்களை மேற்சொன்ன மொழி களில் மொழியாக்கம் செய்வதற்கோ வல்லமை பெற்ற அறிஞர் கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அத்தகைய அறிஞர் கள் வல்லுநர் குழுவுடன் தொடர்புகொண்டு, மொழியாக்கம் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு ஆர்வம் ஊட்டி, அவர்களோடு ஒத்துழைக்க, இந்த வல்லுநர் குழு தயாராக இருக்கிறது. பத்தாவது நூற்றாண்டு முதல் பதின்மூன்றாவது

நூற்றாண்டு வரையில் பிரெஞ்சு நாட்டிலே அயல்மொழிகளில் உள்ள நூல்களையெல்லாம் பிரெஞ்சில் மொழியாக்கம் செய்து வந்தார்கள். அதன் பயனாக, பிரெஞ்சு இலக்கியம் வலுவும்' நுட்பமும், மேன்மையும் பெற்று உலக இலக்கியங்களிலேயே முதலிடம் பெற்று நிற்கிறது. வின்சுலோ கூறியபடி, தமிழ்க் கவிதை கிரேக்கக் கவிதையைக் காட்டிலும் மிக்க துல்லியத்தை யும் மெருகையும் பெற்றிருந்தபோதிலும், தமிழ் உரைநடை வேண்டிய அளவு முன்னேறவில்லை. தமிழ்நாடு அரசு தீட்டி யுள்ள இந்தத் திட்டத்தின் விளைவாக வெளிவரப்போகின்ற இதைப் போன்ற நூல்கள் தமிழ்மொழியின் மேனியிலே புதிய ரத்த ஓட்டத்தையும், தமிழ் விந்துவுக்குப் புதுத் தென்பையும் ஊட்டி, எதிர்கால இலக்கியப் படைப்புகளுக்குப் புத்துயிரும் புத்தார்வமும் நல்கும் என்று நம்பலாம்.

எஸ். மகராஜன்

தலைவர்
தமிழ்நாடு சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்ட வல்லுநர் குழு.

நூல் அறிமுகம்

'One Hundred Soviet Poets' என்னும் நூலிலுள்ள கவிதைகள் அனைத்தையும் கவிஞர் த. கோவேந்தன் அவர்கள் தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். பாடல்கள் சோவியத்து மக்களுடைய உணர்ச்சிகளையும், பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. கவிஞர் த. கோவேந்தன் அவர்கள் பாரதிதாசனுக்கு நெருங்கிய நண்பர் பல கவிதை நூல்கள் எழுதியவர். 'தோழனைப் பாடுவேன், என்னும் இலெனினைப்பற்றிய கவிதை நூல் ஒன்றை எழுதி, அதற்காகச் சோவியத்து நாடு நேரு இலக்கியப் பரிசை 1972-ல் பெற்றவர். அவருடைய தமிழாக்கம் தமிழ் மக்களுக்குப் பயனுள்ளதாகவிருக்கும். இந்த நூலை அழகாக அச்சிட்டு, விரைவாக வெளிக்கொணர்ந்த தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ரா. குழந்தைவேலு அவர்களுக்கும், அவர்களுடைய அலுவலகத்தைச் சார்ந்த அனைவருக்கும் எங்கள் வல்லுநர் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். மகராஜன்
தலைவர்
தமிழ்நாடு சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத்
திட்ட வல்லுநர் குழு

இலக்கியங்களின் பெரும் உடன்பிறப்பாண்மை

நமது இலக்கிய வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும்போது மறக்கமுடியாத ஆயிரத்துத்தொள்ளாயிரத்து இருபதுகளுக்கு வருங்கால், ஒவ்வொன்றும் அப்போது எப்படிச் சீறிக் குமிழியிட்டு, ஒரு புரட்சியின் தன்மையில் இருந்தது என்பதைக் காண்கிறோம். இவ்வாண்டுகளில் இலக்கிய வாழ்வின் பல்வேறுபட்ட முன்னேற்றங்களுக்கு மேலாக, புரட்சிக்கு முன்பே தங்களை நிலைநாட்டிக் கொண்ட எழுத்தாளர்கள் இருந்ததோடு, அவர்கள் நம் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் அறிமுகமாயிருந்தார்கள். அவர்களும் புதிய தலைமுறையினரும் உலகில் இதுவரை ஏற்படாத வகையில் புத்திலக்கியத்தைப் படைத்தனர்.

இவ்வெழுத்தாளர்களுள் தலைமையானவர் மாக்சீம் கோர்க்கி. அவ்வாண்டுகளின் ஏடுகளையும் பிற வெளியீடுகளையும் காண்போர், அவர்களுள் பாவலர்கள் மாயாகோவஸ்கி, அக்மதோவா, மேண்டல்ஸ்டாம், டெமியான் ஸிட்னி, பிரையூசோ, சுவெட்டயேவா, கினியூவேவ், எஸினின் முதலியோர் இருந்தனர். அவர்கள் பல்வேறு அளவு அடிப்படையுடன் அக்டோபர்ப் புரட்சிபற்றியும், பெரிய சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டதைப்பற்றியும் எழுதினர். மற்றும் புது இலக்கிய ஆற்றல்கள், அவர்கள் குரல்கள் அப்போதும்கூட முழுமுதிர்ச்சி பெறாதவைபோல் ஒலித்தாலும் - தோன்றின.

நாம் குறிப்பிடத்தக்கது, தொடக்க முதல் நமது இலக்கியம் பல்தேசிய இலக்கியமாகவே வளர்ந்தது. சோவியத்து ஆற்றலின் தொடக்க ஆண்டுகளில் முன்னணியில் உருசியப் புரட்சிப் பாவலர்களாகிய விளாடிமிர் மாயக்கோவஸ்கி, உஸ்பெக் இலக்கியத்தில் டெமியான் ஸிட்னி, எடுத்துக்காட்டாகப் புரட்சிக் கவிஞர் ஹம்ஸாநியாஸி (பே அண்ட் பார்ம்கோஸ்ட் எழுதியவர்) தோன்றினார்கள். பின்னர் ஒவ்வொரு குடியரசிலும் புரட்சிப் பாவலர்கள் இருபதுகளின் தொடக்கத்தில் புதுவாழ்வு மலர்வதனை முன்னறிவிப்பவர்களாகத் தோன்றியதனை நாம் காண்கிறோம்.

நாட்டின் பண்பாடு, அவ்வளவு சிறந்த சமூக நிலை மாற்றங்களைத் தோற்றுவித்தது; ஏதுமில்லாமையின்மீது எழுப்பப் பட்டதன்று. அவ் வேளையில் தோன்றிய இளம் சோவியத்து எழுத்தாளர்கள் பின்னணியிலே சோவியத்து இலக்கியம் நின்றது. அவர்களது மரபுகளைச் சார்வது தேவையாகவும் சாதனையாகவும் இருந்தன. சோவியத்து ஆற்றலின் தோற்ற நாள்களிலிருந்தே அதன் முதன்மைக் குரல் பன்னாட்டுக் குழுவினருடையதாய், மெய்யாகவே உருசிய இலக்கியத்தினுடையதாய் அமைந்திருந்தது. ஆனால், அப்போதுங்கூட உடன் இணைவாகவே உருசிய எழுத்தாளர்களின் பெயர்கள் அங்கே உயர்திற உடன்பிறப்பு இலக்கியங்கள் இயற்றியோர் போலவே ஒலித்தன. முன்னரே புகழ்பெற்ற டாரஸ் ஹெவ்சென்கோ தவிர, ஐவான் பிரான்கோ, மிக்காயில், கோட்சிபின்ஸ்கி, இலியா சோவாட்ஸி, ஆகாகி செரட்ஸலி, கச்சாட்டூர் அபோவியன், ஒவனிஸ் தும்மானியன், கேப்டுல்லா துக்காய் போன்ற முன்னணி எழுத்தாளர்கள் இருந்தனர்.

உருசிய மக்களல்லாதவர்களின் உடன்பிறப்பு இலக்கியங்கள் வளர்ச்சியின் பல்வேறு நிலையில் இருந்தனவேனும், உக்ரேனிய இளம் எழுத்தாளர்கள் வளர்ச்சியில் மிக்காயில் கோட்சியூபின்ஸ்கி அல்லது ஐவான் பிரான்கோ ஆகியோரின் வலிய செல்வாக்கு புரட்சிக்குமுன் ஏற்படுத்தியிருந்தது; முன்னோடியாகத் திகழ்ந்தது. சோவியத்து ஆற்றல் நிலைபெறுத்தப்பட்ட உடன் பின்தொடர்ந்த ஆண்டுகளில் தாஜிக், உஸ்பெக் இலக்கியங்களின்மீது சாட்டிரின் அயினியின் செல்வாக்குப் புலப்பட்டது. புரட்சிகர லாட்வியன் இலக்கியத்தில் ஜேனிஸ் ஒயினிஸ், ஆண்ட்ரெஜ் ஆகியோர் வயத்திறத்தினை ஒருவர் காணலாம்; அப்காசியா டிமிட்ரி குலியாவில் உரைநடை எழுத்தாளர், கவிஞர், வரலாற்றாளர், இலக்கிய அறிஞர் ஆன சிரில் மற்றும் மைத்தோடியஸ் ஒன்றிக் கலந்துவிட்டதைக் காணலாம். ஏனெனில், அப்காசியா எழுத்துகளை உருவாக்கியவரும் அதிலே முதல் கவிதைகள், உரைநடைகள், நாடகங்கள் ஆகியவற்றை இயற்றியவரும் அவரே ஆவார்.

உடன்பிறப்பு இலக்கியங்கள் எப்படி இவ்வாறு முகிழ்த்தன? அது நீண்ட வழிமுறை கொண்டது. அருகே ஒன்றாக வரவேண்டுமென்ற விழைவு மிக முறுகிக் கவர்ந்தது. இச் சீரிய இன்றியமையாத காரணத்திற்கு மிக்குயர் பங்காற்றிய மாக்சீம் கோர்க்கியைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். பல ஆண்டுகள் மாக்சீம் கோர்க்கி பல்வகை இலக்கியங்களையும் நெருக்கமாக

இணைப்பதற்கு உழைத்து வந்தார். புரட்சிக்கு முன்பாகவே அவர் லாட்வியன் ஆசிரியர்கள், ஜார்ஜியன் யூதக் கவிஞர்கள், அர்மீனிய உரைநடை எழுத்தாளர்கள் ஆகியோரின் படைப்புகளைச் செப்பம் செய்து வெளியிட்டார். பின்பு வேலரி புரூயிசோவ் அர்மீனியாவுக்கு முதல் செய்யுளை இயற்றியளித்ததுடன் அர்மீனியப் பாடல்களை மொழிபெயர்த்தும் அர்மீனியச் செய்யுள் தொகுப்பு வெளிவரப் பெரும் அக்கறையை மேற்கொண்டார்.

முதல் தொடக்க நாள்களில் இளம் எழுத்தாளர்களிடையே ஒருவருக்கொருவர் அத்துணையளவு பழக்கமில்லாமல் இருந்தது. ஆனால், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளின் முடிவில் கவிஞர்களும் ஆசிரியர்களும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தப் புது வழிகளைத் தேடினார்கள். புரட்சிக்குப்பின் ஓர் உக்கிரேனிய எழுத்தாளர் குழு லெனின்கிராட்டுக்கு வந்தது. பல நாடுகளைச் சார்ந்த எழுத்தாளர்கள் மாஸ்கோவில் தொடர்ந்து கூடி வந்தனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அவர்கள் மாஸ்கோவில் வந்து கவிந்தனர். எது புதியது என்று காணவும், ஒருவருக்கொருவர் அறிமுகம் பெறவும் நான் வாழ்ந்து வந்த லெனின்கிராடில்கூட மிக வியப்பான சந்திப்புகள் நிகழ்ந்தன.

எனது லெனின்கிராடு மாடியறையில் ஒருநாள் திறந்தவுடன் அங்கே பைலோரஷியன் பாவலர் யாங்கா குப்லா எப்படி வந்து நின்றார் என்பதை நினைவுகூர்கின்றேன். அவரும் நானும் நீண்ட நேரம் நெஞ்சிற்கு நெஞ்சிணைய இலக்கியங்கள்பற்றி நாங்கள் எழுதக் கருதியவற்றைப் பற்றிய கனவுகளைப்பற்றி உரையாடினோம்; பொதுக் கருத்துகளில் இணைவினைக் கண்டோம். என் இலக்கிய உடன்பிறப்பாளர்களின் தொடர்பு மேலும் ஏற்பட 1924-ல் முற்றிலும் என் விருப்பமாகவே டிரான்ஸ் காகசஸ் சென்றபோது அங்கு மிகவும் ஆர்வமூட்டும் கவிஞர்களின் குடும்பங்களைக் கண்டேன். நான் உயர்ந்த மனிதராகிய டிட்டியன் டாபிட்ஸேயின் அறிமுகம் பெற்றேன். அப்போதுதான் நான் காகசஸ் மீதும் அதன் கவிஞர்கள், கவிதைகள் ஆகியவைமீதும் காதல் கொண்டேன்.

நம் பண்பாட்டு வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று 1934-ல் நடைபெற்ற முதல் சோவியத்து எழுத்தாளர்களின் பேராயமாகும். மாக்சீம் கோர்க்கி அதற்கு நீண்ட, விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்ததுடன் எங்களைப் போன்ற இளம் எழுத்தாளர்களை உண்டாக்கினார். நாங்கள்

அப்போது 30 பேர் வரை இருந்தோம். நம் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்குப் பின் செல்லும் இலக்கியங்களைப் பெற்ற மக்களிருந்தனர். சான்றாக அர்மீனியர்கள், ஜார்ஜியர்கள், அப்போதுதான் இலக்கியங்களை உருவாக்கி வந்த மற்றவர்களும் இருந்தனர். இன்னும் புரட்சியின் பயனாக எழுத்து மொழியையும் வாய்ப்பையும் பெற்ற மற்றவர் இருந்தனர். இவ் வாய்ப்பைச் 'சொல்வண்ணம் தீட்ட' என்றே கோர்க்கி அடிக்கடி குறிப்பிடுவார்.

இத்தகைய தனிக் கூறுபாடுகள் எல்லா இலக்கியங்களையும் ஒரே முறை அணுகுவதனை இயலாததாகி விட்டதனை நாங்கள் உணர்ந்தோம்.

அதனால், எழுத்தாளர் பேராயம் தொடங்குவதற்குச் சற்று முன்னர், இலக்கியக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களை நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் அனுப்புவதன் வாயிலாக அவர்கள் உடன்பிறப்புக் குடியரசுகளின் எழுத்தாளர்களுடன் பழகி நட்புகொள்ளச் செய்ய முடிவு செய்யப்பட்டது. இக் குழுக்கள் சோவியத்துப் பன்னாட்டு இலக்கியம் அதன் காலில் ஊன்றி நிற்கப் பெரும் பங்காற்றியுள்ளன. ஆங்காங்கே இருந்த எழுத்தாளர்களின் படைப்புகளை அவர்கள் ஆராய்ந்ததுடன் அவர்களே புதுப்பாவலர்களையும் எழுத்தாளர்களையும் துழாவினார்கள். எடுத்துக்காட்டாக, விளாடிமிர் வியூகோவஸ்கியும் பியோட்டிர் பாவ்லோங்கோவும் நானும் தாகிஸ்தானுக்குப் பயணமானபோது நாங்கள் ஒவ்வோரிடத்திலும் கேட்டது: 'இங்கே யாராவது கவிஞர்கள் இருக்கிறார்களா?' என்பதே. சில வேளைகளில் நாங்கள் பெற்ற பதில், 'இங்கே நாங்கள் எல்லோரும் கவிஞர்கள் தாம்.' நாங்கள் மெய்யாகவே கவிஞர்களைக் கண்டோம். நான் கண்டுபிடித்தவர்கள் தாம் எத்தன்மையர்! குறிஞ்சிநிலப் பாடி ஒன்றில் நாங்கள் சுலைமன் ஸ்டால்ஸ்கியைக் கண்டுபிடித்தோம். அங்கிருந்த மக்கள் 'இங்கே காட்டு வேளாண்மைக்காரர் ஒருவர் இருக்கிறார். அவர் நிலத்திலும் சொற்களிலும் வேளாண்மை செய்கிறார்; அவர் கல்வி இல்லாதவர். ஆனால், அவர் மகன் அவரது கவிதைகளை ஒரு கணக்குப் புத்தகத்தில் எழுதுகிறான்' என்று சொன்னார்கள். நாங்கள் மலையூருக்குச் சென்றோம். அங்கே எங்கள் முன் ஓர் அறிஞனை, ஒரு விந்தையான கவிஞனைக் கண்டோம். விரைவில் அவன் புகழ் நாடு முழுவதும் பரவியது. எழுத்தாளர் பேராயத்தில் மாக்சிம் கோர்க்கி சுலைம்ன் ஸ்டால்ஸ்கியை 'இருபதாம் நூற்றாண்டின் ஓமர்' என அழைத்தார்.

நாங்கள், உறைக்கும் அங்கதக் கவிதைகள் புனைவதில் தலை சிறந்த காம்சாட் சாடஸாவைச் சந்திக்கும் பேறு பெற்றோம். அவர் மனம் உள்ளாழம் மிக்கது. அவர் அக்கால மக்கள் வாழ் வின் சிக்கல்களை நன்கறிந்திருந்த அறிவாளியாவார். மக்கள் அவரது கூரம்புகளைத் திருப்பிக் கூறுவார்கள். அவர் செய்யுள் களும் குறும்புத்தனமானவை; நாட்டுப்புற நகைச்சுவை யுடையவை; மலைச் சிகரங்களில் நிலைத்து வாழ்ந்தன. நாங்கள் கண்ணுற்ற மிக அரிய ஒரு காட்சியைக் கீழே விளக்க மாகத் தந்துள்ளேன்.

நாங்கள் தாகிஸ்தானுக்குப் பயணப்படும்போது மாக்சீம் கோர்க்கி எங்களிடம் அப்போது சோவியத் அரசின் அழைப்பின் மேல் வந்திருந்த உலகப் புகழ்பெற்ற அணைகட்டும் பொறியாளர் வரைதிட்ட விரகர் ஆங்கினிகோ ஓமோடியோவிடம் பழகிக் கொள்ளுமாறு அறிவுரை கூறினார். தாகிஸ்தானில் சூலாக் அணை கட்டுவதற்கு அவர் ஓர் ஆலோசனையாளராக இருந்தார். ஒருநாள் குன்னாஸ்க் கோட்டையிலே காம்ஸட் சாடஸாவும், ஆங்கினிகோ ஓமோடியாவும் சந்தித்தனர். இரு பேரறிஞர்கள்—திறமிக்கவர்கள்—பட்டறிவுள்ளவர்கள்—ஒத்த வயதினர். ஆங்கினிகோ ஓமோடியோ, ‘இப்படிச் சிறந்த தலைமையுடைய இம் மலைவாழ் மனிதர் யார்?’ என்று வினவினார். இக் கேள்வி காம்ஸட் சாடசாவிடம் மொழிபெயர்க்கப்பட்டதும், அவர், ‘இதை மொழிபெயர்த்துச் சொல்லுங்கள். நான் ஒரு மருத்துவர் (டாக்டர்) என்று கூறுங்கள்’ என்றார். ஆங்கினிகோ ஓமோடியோ உரத்துச் சிரித்தபடி ‘நான், அவர் ஓர் ஆசிரியராகவோ ஒரு மருத்துவராகவோ இருக்கவேண்டுமென்று நினைத்தேன். அவர் தம் நோயாளிகளுக்கு எவ்வாறு மருத்துவம் செய்கிறார்? மலை யின் மேய்ச்சல்வெளியில் உள்ள மூலிகைகளைக் கொண்டா?’ என்று கேட்டார். காம்ஸட் சாடஸாட், ‘இல்லை, நான் குணப்படுத்துவது மூலிகைகளைக் கொண்டன்று; சொற்களைக் கொண்டு. அவை மூலிகைகளை அல்லது மருந்துகளைவிடவும் கசப்பானவை. நான் என் உடனுறை சிற்றூர் மக்களுக்குக் கசப்பான உண்மைகளை உரைக்கின்றேன். அவர்களை அறியாமை, இருள் ஆகியவற்றில் இருந்து குணப்படுத்துகிறேன்’ என்று விடையளித்தார்.

அந்த இத்தாலியர் கவிஞரின் நுண்திறத்தைப் புகழ்ந்துவிட்டு, ‘என் இனிய நண்பரே, என்ன மகிழ்ச்சி தரும் வாய்ப்பு நம் இரு வரையும் இன்று அருகே கொணர்ந்திருக்கிறது! நானும்கூட ஒரு மருத்துவனே. நானும் மூலிகைகளைக்கொண்டு மருத்துவம்

செய்வதில்லை. நான் என் மக்களைக் குணப்படுத்துவதில்லை. நான் மலைகளுக்கு மருத்துவம் செய்கிறேன். அவற்றுக்கு கான்கிரீட்டால் ஊசி போடுகிறேன். நான் பாறைகளை வெட்டி அகற்றுகிறேன். நான் நலிவுற்ற செங்குத்தான பாறைகளுக்கு மருத்துவம் செய்கிறேன். நான் மலையில் சீறிவரும் நீரோட்டங்களின் மடமைக்கு மலைகள், மக்கள் ஆகிய இருவர் நன்மைக்காகவும் அணைகள் கட்டி மருத்துவம் செய்கிறேன்' என்று கூறினார்.

ஒருவரையொருவர் முழுக்க முழுக்கப் புரிந்துகொண்ட இரு கவிஞர்கள் போல அவர்கள் பேசினார்கள். இவையெல்லாம் வியப்பளிப்பன; விந்தையானவை. நாங்கள் இப் பயணங்களின் போது பல பயனுள்ள ஆர்வமூட்டும் இலக்கியத் தொடர்புகளைப் பெற்றோம். பின், முதல் எழுத்தாளர் பேராயக் கூட்டம் நிகழ்ந்தபோது மாக்சீம் கோர்க்கி அறிவிப்பை மிக்க கவனத்துடன் செவிமடுத்தோம். 'நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட வேண்டுவது இன்றியமையாதது எனக் கருதுகின்றேன்—சோவியத் இலக்கியம் உருசிய மொழியிலே இருக்கும் இலக்கியம் மட்டுமன்று. அது அனைத்துச் சோவியத்துக் கூட்டுடைமைக் குடியரசுகள் ஒன்றியத்தின் இலக்கியமாகும்.'

பேராயத்துக்குப் பிறகு படைப்பாக்கத் தொடர்புகள் பெருகத் தொடங்கின. அனைத்துச் சோவியத்து எழுத்தாளர்கள் ஒன்றியம் அமைக்கப்பட்டது. மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடத்தக்க ஆர்வம் செலுத்தப்பட்டது. பல குடியரசுகளிலிருந்த எழுத்தாளர்கள் தங்கள் தாய்மொழிகளில் எழுதினார்கள்; மிகச்சிறப்புற எழுதினார்கள். அவை அதுவரை மொழிபெயர்க்கப்படவில்லை. இந்த வேளையில் நாங்கள் தீவிரமாக ஈடுபட வேண்டிய நிலையில் இருந்தோம். அவர்கள் குறிப்பிடுவது போலப் போரிஸ் பாஸ்டர்நாக்கும் நானும் ஜார்ஜியன் கவிஞர்களை மொழிபெயர்க்கத் தொடங்கினோம். விரைவில் எங்கள் கூட்டு மொழிபெயர்ப்பின் முதல் தொகுதி வெளிவந்தது. அது 'ஜார்ஜியன் கவிஞர்கள்' என மகுடமிடப்பெற்று திலிசியில் பதிப்பிக்கப்பட்டது. அவ்வாண்டுக்காலங்களிலே மொழிபெயர்ப்பு நம் நாட்டில் எண்ணிப்பார்க்க இயலாத அளவுக்கு மிகுந்திருந்தது. நாம் எவ்வளவு இலக்கியச் செல்வம் பெற்றிருந்தோம் என்பது ஒவ்வொருவருக்கும் தெளிவாகப் புலப்பட்டது.

அது மிகமிகப் பதற்றமான காலம். போர் முகில் மூட்டங்கள் ஐரோப்பாவைச் சூழ்ந்து வந்தன. மெய்யாகவே பாசிஸத்தின்

ஆபத்துக் காத்திருந்தது. 1935-ல் பாரிசில் பண்பாட்டுப் பாது காப்புப் பேராயம் கூட்டப்பட்டபோது, அழைக்கப்பட்டவர் களுள் மாக்சீம் கோர்க்கியும், ரோமையின் ரோலண்டும் இருந்தனர். ஆயினும், இருவராலும் அதில் வந்து கலந்து கொள்ள இயலவில்லை. பேராயம் நடைபெற்றபோது அதற்கு நம் பிரதிநிதித்துவக் குழு மெய்யான பிரிதிநிதிக் குழுவாகவும், சோவியத்து ஒன்றியத்தில் நம் உடன்பிறப்புக் குடியரசு பலவற்றி லிருந்து தூதுவர்களும் கலந்துகொண்டனர். மேலை உலகின்—குழம்பிய ஐயப்பாடு கொண்டிருந்த உலகத்தின் முன்—நம் உணர் வார்ந்த அழைப்பு முன்நின்றது. அப் பேராயத்தில், சோவியத்து எழுத்தாளர்களைப் பல நாட்டைச் சேர்ந்தவர்கள்—அலெக்ஸி டால்ஸ்டாய், அலெக்ஸாண்டர் கோர்க்னிசும், கேலக்டியல் டாமிட்ஸி, அபுல்காசிம் லாகுட்டி ஆகியோர் சோவியத்து இலக்கி யத்தில் பலதிறப் பாங்கையும், சோவியத்து இலக்கியத்தின் ஒற்றுமையையும் எடுத்துரைத்து அதன் வல்லமையை வெளிப் படுத்தினர். இக் கோளம் முழுமைக்கும் சோவியத்து இலக்கிய உலகம் காட்டப்பட்டது. அவ்வுலகம் பரந்துபட்டு மெய்யாகவே நல்ல துணிவுள்ள மக்களைக் கொண்டது. அவ்வுலகம் எதற்கும் அஞ்சியதில்லை. அது புதுவாழ்விற்கான வீரத்தனமான செயல் களுக்காக வாக்களித்தது. நான் என் உரையில் சோவியத்து நாட்டிலே புதிய சமுதாயத்திற்காகப் பேருழவன் தயார் செய்து கொண்டிருக்கிறான். தொழிற்சாலைகளும், மின்நிலையங்களும் மட்டுமே காகசஸில் உண்டாகவில்லை. கவிதைகளில் புதிய தொட்டில்களும் கூடவே உணர்ச்சிப் பாடல்களும் ஆக்கப்படு கின்றன. அப் பாடல்களின் வீரர்கள் உயர்ந்த வெற்றி நம்பிக்கைக் காரர்கள்; தொழிற்சாலைகளில் கடைசல் பொறியிலே, கப்பல் கள், விமானங்களில் சுங்கானிலே நிற்பவர்கள்; பேருந்துகள் மீது அமர்ந்து செலுத்துபவர்கள், நமது எல்லைகளைக் காவல்புரியும் போருந்துகளை இயக்குபவர்கள் ஆகியோராவர். நான் பேராயத்தில் சொன்னேன்: 'நம் கவிதைகளின் குரல் வலிமை மிக்க சோவியத்து அணிவரிசைகளின் குரல்; அமைதியைக் கவனத் தோடு எதிர்பார்த்துப் பழகிப் போன மக்களின் குரல். சோவியத்துச் செய்யுளை மூன்றாம் ரீச் போர்வெறிப் பாடகர் களினால் எதிர்த்து நிற்க முடியாது. அவர்கள் வரலாற்றுச் சூறாவளியிலே அடித்துச் செல்லப்படுவார்கள்.' அதற்கு அவர்களே உற்சாகக் காய்ச்சலால் உந்தப்பட்டுக் கிளர்ந்து நிற்கிறார்கள். வரலாறு, மிக ஆழ்ந்த நம் வரலாற்றுணர்வை உறுதி செய்துவிட்டது. மிக்க நாட்டுப்பற்று விளங்கிய போர் வெடித்தபோது பன்னாட்டைச் சார்ந்த வேறுபட்ட நம் எழுத்

தாளர்கள் நெறியுணர்வு திரட்டுவதற்குப் பகைவனுடன் உயிர்ப் போர்செய்து வெற்றியைப் பெற்றிடப் பெருந்தொண்டாற்றி யுள்ளார்கள்.

போர்முனைகளில் பல எழுத்தாளர்கள் கொல்லப்பட்டனர். நம் இலக்கியங்களில் உடன்பிறப்புத் தன்மை குருதியிலேயே உயர்ந்தது. ஆயினும், போர்கூட ஒரு புதிய இலக்கியப் படையணி பிறப்பதற்கும் காரணமாயிற்று. போர்த்தீயின் நாவிலிருந்தே, திறமைசான்ற ஒரு புதுத் தலைமுறை எழுத் தாளர் தோன்றினர். செய்யுள்களும் விளைந்தன. அவை நம் நாட்டு இலக்கியத்தை வளப்படுத்தின. அவை வெறும் போர் நடவடிக்கைகளை விளக்குவனவாக மட்டுமன்றி எவ்வாறு இன்னல்கள் சோவியத்து மனிதனை எஃகாக்கியது என்பதையும் காட்டின. அவை உலகுக்குக் கூட்டுடமைச் சமூகத்தில் வந்து நிலைப்பட்ட புதிய மனிதப் பண்புகளைச் சோவியத்து மக்களும் தசையும் குருதியுமாய் ஆகிவிட்ட பண்புகளை உலகுக்கு காட்டின.

இதுவரை உலகம் கண்டிராத அத்தகைய வீரனுடைய தோற்றத்தை உருவாக்கியதில் சோவியத்து இலக்கியம் தலை சிறந்த பணியாற்றியிருக்கிறது. சோவியத்து இலக்கியத்தின் கருப் பொருளாய் அமைந்த புரட்சி வாயிலாக உண்மையாக்கப்பட்ட மக்களின் மகிழ்ச்சியான வருங்காலம் எனும் கனவே அஃது என்று கூட ஒருவர் கூறலாம். இது முன்னர் உலகிலிருந்தும் இலக்கியங் களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டப்படுவதாய் அமைந்தது. சோவியத்து இலக்கியம் மனித இனத்தின் வருங்கால வாழ்விற்குப் பின்வழித் தோன்றல்கள் விழிக்காக வலியுறுத்திப் போர்க்கால ஆண்டுகளில் பணியாற்றிய மனிதப் பண்பினைத் தீட்டுவதாய் இருக்க வேண்டியிருந்தது. சோவியத்துப் படையில் எல்லாச் சோவியத்து நாட்டினங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் தோளோடு தோள் இணைந்து போரிட்டனர். சோவியத்து இலக்கியம் நெடுநாளாகக் கனவு கண்டுவந்த அதே வீரன் கொடுங் கோன்மையத் தூரோடு துடைத்தெறிந்து பெர்லின் நகருக்குள் முன்னேறினான் என்று சொல்லலாம். அந்த உயர்ந்த, திறம்மிக்க சோவியத்துக் கவிஞர்கள் எழுத்தாளர்களின் இனம், போரின் செழுந்தணலில் உருகி ஒன்றாகிவிட்டது.

சோவியத்து இலக்கியம் மேலை முற்போக்கு எழுத்தாளர் களுக்கு ஒளிகாட்டி அழைக்கும் விளக்காயுள்ளது. அதில் மக்கள் ஒற்றுமைக்கும் நட்புக்கும் சின்னங்களாக ஒளிரும் உயரிய

உண்மைகளையும், உயரிய மனச்சான்றுகளையும் காணலாம். போருக்குப் பிந்திய நாள்களில் அறிவியலாளர்களும், பண்பாட்டுப் பணியாளர்களும், பொதுவாழ்வு முன்னணியினரும் நூறு மில்லியன் கணக்கான மக்களின் மனவுறுதியினால் ஆதரிக்கப் பட்டதால் அமைதிக்கான புது உலகில் போர் கட்டவிழ்த்து விடப்படக் கூடாதென்னும் ஒருமிப்புணர்வுடன் துணிவுடன் நடத்தினார்கள். எழுத்தாளர்கள் உலக அமைதிக்கான போரில், நேரடிப் பங்கை ஆற்றியுள்ளனர். நாங்கள் அயல்நாட்டினரைச் சந்தித்தபோது அவர்கள் பாதி வேடிக்கையுடன் 'உங்கள் எழுத்தாளர்கள் எவ்வளவு தொகுதியினர் அமைதிக்கான போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வர்?' என்று கூறு வார்கள். மெய்யாகவே பாடியேவ், எக்ரைன்பர்க், வாசிலேவ்ஸ்கா, பஸ்ஹன், சுர்க்கோ மிர்ஸோ டர்ஸன் ஸெட் ஆகியோரும் நானும் நாங்கள் எல்லோரும் ஜோலியட் கியூரி தலைமை தாங்கிய இயக்கத்தில் அமைதிக்காகப் போர், அணு ஆயுதப்போருக்கு எதிரான போரில் தொடக்கத்திலிருந்தே முன்னணியில் இருந்தோம்.

அடிக்கடி நாங்கள் வேற்று நாடுகளுக்குப் போய் வரும்போது, எங்களால் சோவியத்து ஒன்றியத்தின் மீது ஆர்வம் வளர்வதையும் நம் பன்னாட்டு இலக்கியம் எய்தியிருந்த உலகப் புகழையும் நேரில் காணமுடிந்தது.

எங்கெல்லாம் மக்கள் நம் நாட்டைப்பற்றியும் நம் இலக்கியத்தைப்பற்றியும் பேசினார்கள் ஆயினும் அவர்கள் எப்பொழுதும் நம் உடன்பிறப்புக் குடியரசுகளின் இயற்றிய நூல்களைப்பற்றிக் குறிப்பிட்டனர். நான் அயல்நாட்டு வாசகர் களிடம் நம் நாட்டில் பல்வேறு குடியரசுகளிலுள்ள என் நண்பர் களான கவிஞர்களையும், வாழும் ஆசிரியர்களைப்பற்றியும் கூறுவதற்கு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். மாஸ்கோவிலும் இலெனின்கிராடிலும் உள்ள பல எழுத்தாளர்களைப் போல நான் பெருமிதத்துடன் கூற முடியும். 'எங்கெங்கு நான் சென்றாலும் நம் நாட்டில் எந்தக் குடியரசாயினும் சரி ஒவ்வோரிடத்தும் எனக்கு நண்பர்கள் உளர். முன்னறிவிப்பின்றி நான் நேராக அவர்கள் இல்லத்திற்குச் சென்றிட முடியும்.'

நான் முக்கியமாக ஆசிய நாடுகளுக்கு அடிக்கடி போய் வந்திருக்கிறேன். ஏனென்றால், நான் இளவயதிலிருந்தே அவற்றின்பால் ஆழ்ந்த ஆர்வமுடையவனாய் இருந்தேன். நான் அடிக்கடி ஆசிய எழுத்தாளர்களிடம் சோவியத்துப் பண்பாடு

சோஷலிச அமைப்பிலிருந்து பிறந்ததென்று சொல்லி வருகிறேன். அவர்களிடம் மிகக் கூடுதலான பாராட்டைத் தூண்டுவ தெல்லாம் நம் இலக்கியம் தொடர்ந்தும் வற்புறுத்தலாகவும் சோவியத்து ஒன்றியம் மக்களிடத்திலே முரிக்க முடியாத நட்புறவை இணைத்து வாழும் உயரிய உணர்வைக் குடும்பத் தினிடையே வளர்த்து வலுப்படுத்தி வருவதாகும். நான் மிகவும் மகிழ்ச்சியுடன் அவர்களிடம் சொல்வது, எப்படி உடன் பிறப்புக் குடியரசுகளின் எழுத்தாளர் நூல்கள் உருசிய மொழி களிலும் நம் நாட்டு மற்றைய மொழிகளிலும் மொழிபெயர்க் கிறார்கள். பொதுச் சொத்தின் பாகங்களாகச் சோவியத்துப் பண்பாட்டின் பொது நிதியமாகியுள்ளது என்பதாகும்.

நாம் எல்லோரும் விரும்புவன பண்பாடு, அறிவியல், இலக்கியம் மற்றும் மனிதனின் பேரறிவால் படைக்கப்பட்ட ஒவ்வொன்றையும் அணு ஆற்றலிலிருந்து பாண்பாடல்வரை ஒருபோதும் அவை அழிவுக்கு உதவாதவை. ஆனால், முன்னேற்றம், மனிதத் தன்மை ஆகியவற்றில் செவ்விய நோக்கங்களை நோக்கிச் செலுத்தப்படல் வேண்டும்.

நான் என் மனத்தில் பதிந்துவிட்ட சித்திரத்தை நினைவுகூர வேண்டும். எங்கள் முன்பு இருந்த ஈரானிலிருந்து அஸ்கா பாத்துக்குச் செல்லும் சாலை கௌடனின் எல்லைக்கம்பம் வரை சென்றது. அங்கே நாங்கள் கண்ட ஓர் அடையாளக் குறிப்பு: 'இங்கே சோவியத்து ஒன்றியம் உள்ளது.' இந்தப் பன்னெடுங்கால வழியிலே சென்ற ஒட்டகப் பயணிகள் தொகுதி ஒரு புதிய உலகில் நுழைவதாகக் கண்டது. வாயில்களின் ஊடாக வந்ததும் சோவியத்து ஒன்றியத்தினுள் நுழைந்துவிட்டனர். அவர்கள் தாண்டி வந்துள்ளது இருளும், ஒடுக்குதலும், அச்சுறுத்தலும் நிறைந்த உலகிலிருந்தாகும். அவ்வுலகம் ஆயிரம் ஆண்டுகளாகக் கண்டது. இப்போது வந்துள்ளதோ ஒரு புதிய நேர்த்தியான உலகத்தை உருவாக்கும் விந்தை நிலத்திற்கு. வரலாற்றுக் காலவழியும் அங்கேயிருக்கிறது. அதன்வழி இந்தியப் புரட்சியா ளர்கள் வந்து மாஸ்கோ சென்று இலெனினைக் கண்டு அவருடன் பேசியிருக்கிறார்கள். ஆனால், கவுடான் வாயில் ஓர் அடையாள முக்கியத்துவம் உடையது. அவை கிழக்குச் சோவியத்தின் விழிப்பைச் சுட்டுகிறது. நம் நாடு ஆசியக் குடியரசுகளின் எடுத்துக்காட்டு அவற்றின் வளமான பொருளாதாரத்தையும் ஓங்கும் பண்பாட்டையும் சால்பையும் அறிவூட்டுவதாகும். ஆசியக் குடியரசுகளின் எழுத்தாளர்கள் அண்மை, தொலைவு மற்ற நாடுகளில் பற்றியெழும் ஆர்வத்தை எழுப்ப வல்லவையாய்

இருப்பதால் வியப்படைய வேண்டியதில்லை. கீழ்நாடுகளில் மிர்ஸோ துர்சூன்ஜாட்டின் நூல் எவ்வளவு புகழ்பெற்றுள்ளது என்று கற்பனை செய்வது கடினமாய் இருக்கின்றது. தாகிஸ் தானில் அறிவாளிகள் அனைவரும் பார்சியைத் தெரிந்துள்ளனர். மிர்ஸோ துர்சூன்ஜாட் தமது சொந்தப் பாடலைப் படித்தபோது அதை அவர்கள் புரிந்துகொண்டதுடன் முழு மகிழ்ச்சியுடன் கற்றனர். அங்கு முதலில் ஒரு பிரதிநிதிக்குழு சென்றபோது சோப்ரனோவ், ஆய்பிக், மிர்ஸோ துர்சூன்ஜாடேட் ஆகியோருடன் நானும் இருந்தேன். நாங்கள் பாகிஸ்தானின் எல்லையில் ஒரு மலைப்பகுதியில் மிக ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் மகிழ்வுந்தில் சென்று தாண்டினோம். முதிய ஒரு பாகிஸ்தானி ஆனவர் எல்லைக்காவலர் தலைவர், அவர் எங்கள் பாஸ்போர்ட்டைக் காணக்கூடவில்லை. ஆனால், அவர் 'நான் உயர்ந்த சோவியத்துப் புலவர், மிர்ஸோதுர்சூன் ஜாடேடிற்குப் பாகிஸ்தான் மண்ணில் நல்வரவு கூறுகிறேன்' என்றார். பின் அவர் எங்களை ஒரு குளிர்ந்த அறைக்கு இட்டுச் சென்றார். அவர் கையைத் தட்டியதும் எங்களுக்குத் தேநீர் அளிக்கப்பட்டது. அவர் மீண்டும் கைதட்டியதும் ஒருவர் பாகிஸ்தானின் புகழ்பெற்ற கவிஞர் இக்பாலின் புத்தகம் ஒன்றைக் கொண்டுவந்தார். அந்த எல்லைக் காவலர் தலைவரும் மிர்ஸோ துர்சூன்ஜாடேயும் செய்யுள்களை ஒப்புவிக்கத் தொடங்கினர்.

அஃது ஓர் அரிய காட்சி. கவிதை எங்களுக்குச் சாலையைத் திறந்துவிட்டது. பாடல்கள் மனிதன்மீது மனிதன் வைத்திருக்கும் உயர்ந்த நம்பிக்கையைப் போன்று ஒலித்தன. பின் நீண்ட இடை வெளிக்குப் பிறகு நாங்கள் அதே சாலையின் வழியே திரும்பும் போது எல்லைக் காவலர்தலைவர் எங்களைப் பக்கத்திலிருந்த மலைக்கு அழைத்துச் சென்று அங்கே அவர் நட்ட செம்மலரைக் காட்டினார். 'இந்தச் செம்மலர் கவிஞர் இக்பாலின் தோட்டத்திலிருந்து வந்தது. முழுமதி நாளன்று நான் இங்கு வருவேன். இக்பாலின் பாடல்களைச் செம்மலர்களுக்குப் பாடிக் காட்டுவேன்.'

இக்பால் ஓர் உயர்ந்த கீழைநாட்டுக் கவிஞர். அவர் பாகிஸ்தான் நிலத்திலே பிறந்தார். அவரது கல்லறை லாகூரிலுள்ளது. அவரது கவிதைகளில், தத்துவக் கவிதைகள் நம் புரட்சிக்கு ஊற்றமான இலெனினைப் போற்றி உரைக் கின்றன.

கீழை இலக்கியங்களிடையே உள்ள நட்புறவு, அமைதி இயக்கத்தினை வலுப்படுத்த உதவின. தாஸ்கண்டில் நடை

பெற்ற ஆசிய ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் பேராயத்தின்போது இது மிகவும் முக்கியத்துவம் பெற்றது. அடுத்த எழுத்தாளர் பேராயம் ஆல்மா - ஆட்டாவில் 1973-ல் நடைபெற்றது. இன்று தொன்மையான ஆசிய ஆப்பிரிக்க மக்கள் பண்பாடுகள் ஒன்றுக் கொன்று ஒரு புதிய முறையில் வயமுறுநிலை பெற்றுள்ளன. எல்லாப் பக்கங்களிலும், பண்பாட்டுக் கருவூலங்களைப் பரிமாறிக் கொள்ளும் முயற்சியும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் ஆர்வமும் நாம் காண்கிறோம். நாம் வந்துள்ள வழியைத் திரும்பிப் பார்த்தால் நாம் எவ்வளவு தொலைவு வந்திருக் கிறோம் என்பதைக்காட்டும். நட்புறவு இடையறாத எதிரெதிரசக்கமும், பண்பாடுகள் பற்றிய பொருள் விளக்கங்களும் வாழ்க்கையில் எண்ணிட வேண்டிய ஒரு கூறாகிவிட்டது. கட்சியின் 28ஆம் பேராயம் நமது மக்கள் ஒரு புதிய வரலாற்றுச் சமுதாயத்தை, சோவியத்துப் பன்னாட்டு மக்களை உருவாக்கிடும் உண்மையைத் தனியாகக் குறிப்பிட்டது. வாழ்க்கையின் வேறுபாடுகள் புதிய செழுமையான ஆக்க வடிவங்களுக்கு வழிகோலுகின்றன. வடிவங்களில் வேறுபாடு இருக்கவே செய்கின்றன. அங்கே ஒரே உலகம் என்னும் உள்ள தென்பதுடன் அது திட்டமான தேசியக் கூறுகளை முற்கருதுவதன்றி மாறாக அவற்றை அகற்ற எண்ணவில்லை. கட்சி எப்போதும் அக்டோபர்ப் புரட்சியின் நாள்களிலிருந்தே உயர்ந்த அனைத்து நாட்டுத் தேசியத்தையே புகட்டி வந்துள்ளது. இன்றைய சோவியத்து மனிதனின் சதையும் குருதியும் பன்னாட்டுத் தேசியத்திடையே உள்ளன என்று கூறி விடலாம்.

நம் இலக்கியத்தில் தொடக்கமுதல் இலக்கியம் மக்களோடு அதன் அமைப்பிலேயே இணைந்திருக்கவேண்டும் என்றும் அதே நேரம் அதில் (அனைத்து நாடுகளின்) தேசியம் குழைந்திருக்க வேண்டும் என்றும் நாம் கனவு கண்டோம். சோவியத்து எழுத்தாளர்களின் நூல்கள் நாடெங்கும் உலகெங்கும் வெற்றி நடையுடன் வீறுநடை போடுகின்றன.

நிக்கலை திக்கனொவ்

பொருளடக்கம்

			பக்கம
1.	கிரிகோல் அபாஷிட்சே	...	1
2.	இர்காலி அபாஷிட்சே	...	3
3.	மைராம்கான் அபில் கசிமோவா	...	4
4.	பெல்லா அஃமதுலினா	...	6
5.	அன்னா அஃமதோவா	...	8
6.	மார்கரீட்ட அலிகேர்	...	11
7.	பாவெல் ஆண்டகொலஸ்கி	...	13
8.	நிக்காலாய் அஸயேவ்	...	15
9.	ரம்ஸ் பாபாசான்	...	17
10.	ஆல்கிமண்டாஸ் பால்டகிஸ்	...	18
11.	மிகொலா பாஷான்	...	20
12.	விளாடிமிர் பீக்மென்	...	22
13.	ஓல்கா பெர்கோல்ட்ஸ்	...	24
14.	ரீகர் பரதூலின்	...	27
15.	பாவல் போட்ஸ¬	...	29
16.	பெத்ருஸ் புருேவ்க	...	31

பக்கம்

17.	எமிலியான் புகோவ்	...	34
18.	மரிஸ் ஸக்லாஸ்	...	36
19.	நிக்கோலாய் தம்தினோவ்	...	39
20.	சிமியோன் தானிலவ்	...	41
21.	ஜனின தெகுதைத்	...	44
22.	மிகையில் துதின்	...	47
23.	எவ்கெனி எவ்திஷெங்கோ	...	49
24.	ஜிவோர்க் எமின்	...	53
25.	ஸ்யுன்பாய் எரலியேவ்	...	55
26.	ரஸூல் கம்ஸாத்தாவ்	...	57
27.	ஃபிக்ரெட் கோஜா	...	60
28.	கபூர் குல்யாம்	...	63
29.	நிக்கொலாய் கிரிபெச்சோவ்	...	67
30.	கார்லோ காலாட்ஜே	...	69
31.	முமின் கனாத்தவ்	...	72
32.	சில்வ கபுத்திக்கியான்	...	74
33.	முஸ்தாய் கரீம்	...	76
34.	ரிம்மா கஸாக்கவ	...	80
35.	மிர்ஸா கெம்பே	...	83
36.	பெர்தி கொர்பாபயேவ்	...	87
37.	அலிம் கேஷக்கோவ்	...	90

			பக்கம்
38.	பெதர் குஷங்காய்	...	93
39.	சிமியோன் கிர்ஸனவ்	...	95
40.	அனா கவுஸோவ்	...	97
41.	டேவிட் கூக்லித்னோவ்	...	99
42.	ஆர்காடி குலேஷேவ்	...	102
43.	கயிசின் குலியேவ்	...	105
44.	அப்துல்கசிம் லகுதி	...	108
45.	விளாடிமிர் லுகவ்ஸ்க்கோய்	...	110
46.	மிகையில் லுக்கோனின்	...	114
47.	ஆந்திரேய் லுபான்	...	118
48.	ஆந்திரேய் மலிஷ்கோ	...	120
49.	ஜஸ்டினாஸ் மார்கின் கேவிஸியஸ்	...	123
50.	சாமுவெல் மர்ஷாக்	...	126
51.	லியோனித் மர்த்தினவ்	...	128
52.	ஸிர்பாய் மௌலெனவ்	...	131
53.	எட்வர்டஸ் மிஸெலையிட்டிஸ்	...	133
54.	ஜுபன் முல்தாகலியேவ்	...	136
55.	மிகோல நக்னிபேத	...	138
56.	செர்கி நரவசாத்தவ்	...	141
57.	யோஸவ் நோனாஷ்விலி	...	143
58.	ஸக்கி நூரி	...	146

பக்கம்

59. அக்ஜெமால் அமரோவா ... 148

60. செர்கி ஓர்லவ் ... 149

61. ரசிய ஓவனேஸ்யான் ... 151

62. அந்த்ரேய் பாஸர் ... 153

63. போரிஸ் பாஸ்டர்நாக் ... 155

64. அலெக்சாண்டர் ப்ரொக்கபியேவ் ... 157

65. ராபர்ட் ரவ்தேத்ஸ்வென்ஸ்கி ... 159

66. பால் - இரிக் ரும்மோ ... 162

67. மக்சிம் ரில்ஸ்கி ... 164

68. ராமிஸ் ரிஸ்குலோவ் ... 166

69. ரசூல் ரஸா ... 169

70. காரா ஸெயித்லியேவ் ... 171

71. பருயிர் சேவாக் ... 173

72. ஸ்திபன் ஷிபச்சேவ் ... 176

73. லோயிக் ஷெரலியேவ் ... 179

74. யுவான் ஷேஸ்தலோவ் ... 181

75. ஓலெக் ஷெஸ்தின்ஸ்கி ... 183

76. கன்ஸ்தாந்தின் சிமனவ் ... 186

77. யாரஸ்லாவ் ஸ்மெல்யாகோவ் ... 190

78. ஜானிஸ் சூத்ரபகல்ன்ஸ் ... 193

79. ஓல்ஷாஸ் சுலைமானவ் ... 195

பக்கம்

80. அலெக்சி சுர்கோவ் ... 197
81. மிகாயில் ஸெவத்லோவ் ... 200
82. மக்சிம் தாங்க் ... 204
83. அப்தில்தா தஃபிபாயேவ் ... 207
84. நிக்கொலாய் திகனோவ் ... 209
85. அலி தொகம்பாயேவ் ... 212
86. மாட்ஸ் த்ராத் ... 215
87. மிர்ஸோ துர்சூன் - ஜாடே ... 217
88. அலெக்சாண்டர் துவர்தோவ்ஸ்கி ... 220
89. தெபோர வாரண்டி ... 223
90. ஓஜர்ஸ் வாஸெட்டிஸ் ... 225
91. பக்தியார் வகப்ஜாடே ... 228
92. எர்கின் வகிதோவ் ... 229
93. அந்தனாஸ் வென்ஸ்லோவ ... 230
94. ஆரன் வெர்கெலிஸ் ... 233
95. கிரிகோரே வியெரு ... 235
96. எவ்கெனி வினகூரவ் ... 238
97. அந்த்ரேய் வஸ்னஸென்ஸ்கி ... 241
98. ஸமெத் வர்கூன் ... 244
99. அலெக்சாண்டர் யாஷின் ... 249
100. ஸுல்பிய ... 252
ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர்கள் ... 255
அருஞ்சொற்பொருள் ... 257

1

கிரிகோல் அபாஷிட்சே   ஜியார்சியா

(பி. 1913)

தாய் நாடு

அன்புமிகும் என்நாடே, அமிழ்தே, என்றும்
அணையாத பெருவிளக்காய் உனைக்காண் கின்றேன்
உன்பெருமை வாழ்வினுக்கோர் முடிவே இல்லை,
ஊற்றானாய் என்வாழ்வின் மகிழ்ச்சிக் கெல்லாம்.
என்இனிய கொடிமுந்திரித் தோட்டம் நீயே;
என்றென்றும் உனைப்பேணி வளர்க்கின் றேனே.

தென்பாங்கை இசைக்கும்நின் ஆறு கட்கும்,
திருக்கிளரும் மலைகட்கும் நெகிழு கின்றேன்.
அன்னவைதாம் நான்பாடும் உணர்வுப் பாடல்
அத்தனைக்கும் அடிமுடியாய் உயிர்ப்பாய் நிற்கும்.
என்பாட்டின் அடிகள்தொறும் நீயே அன்றோ!
எழுகின்ற பேருணர்வும் நீயே அன்றோ!

மறையாத ஞாயிறென ஒளிர்கின் றாய்நீ,
மடங்காத எழுச்சியும்நீ! மண்ணில் போற்றும்
குறையாத பெருவண்மை நெஞ்ச மும்நீ!
கொழிக்கும்அழ கோடுபல நாடுண் டேனும்
நிறைவாக என்நெஞ்சில் நிற்ப தற்கு
நின்னைப்போல் ஒருநாடும் இல்லை என்பேன்.

உள்ளபல நாடனைத்தும் உளம்செ லுத்தி
உவக்கின்றேன்; உயர்மலைகள் பள்ளத் தாக்கில்
துள்ளுகின்றேன்; தோய்கின்றேன்; உலக னைத்தும்
தோழமையால் தழுவுகின்றேன்; ஆனா லும்நான்
அள்ளூறிப் பாடுகின்ற என்நாட் டின்முன்
அவையெல்லாம் ஒளிமங்கிப் போவ தென்னே!

என்இனிய சோவியத்து நாடே, நின்றன்
எழில்மிக்க செயல்நோக்கம் அனைத்தை யும்நான்,
அன்புடனே பாடுகின்றேன்; தெளிந்த சொல்லால்
அகம்தூய மொழியால்உன் பெருமை சொல்வேன்.
மன்னுபல காலமெலாம், வரலா றெல்லாம்
மக்கள்தம் ஒன்றியமாய் நிற்பாய் நீயே.

போர்நமது பெருநாட்டை அலைத்து நின்ற
பொல்லாத சூழலிலும் அறுப டாமல்
பேர்உறவின் பிணைப்பானோம்! இனிமேல் என்ன?
பிறங்கிடுமே நமதுகுடி யரசு கள்தாம்.
சீர்பெறும்அவ் வரசுகளுள் சியார்சி யாவே!
சிறக்கின்ற முன்னணியில் நீஒன் றானாய்.

மன்பதையில் ஒளிர்கனவாய் என்றும் நிற்கும்
மாண்புமிகு பொதுவுடைமைக் கொள்கை தன்னில்
வன்பிடிப்பும் உண்மையும்நீ உடையை ஆனாய்,
வான்தூக்கி முன்நின்றாய் இறுதி மட்டும்.
உன்புகழைப் பாடுகின்றேன்; என்றன் பாட்டின்
உயர்கருவாய் என்றென்றும் நீயே நிற்பாய்.
என்இனிய கொடிமுந்திரித் தோட்டம் நீயே;
என்றென்றும் உனைப்பேணி வளர்க்கின் றேனே.

2

இர்காலி அபாஷிட்சே ஜியார்சியா

(பி. 1909)

இமைப்பொழுது அல்லது ஈறிலாக் காலம்

நோன்புற்று வீறார்ந்து சுழன்றோடி நிற்கும்
ஊழூழிக் காலத்தின் தொகுப்போடும் காணில்
ஊன்பெற்ற வாழ்க்கைஇது தோன்றிமறைந் தோடும்
ஒருதென்றல் விருந்தன்றி வேறொன்றும் இலையே.

எனினும்நம் வாழ்நாள்கள் ஈறிலவாய்த் தோன்றும்:
ஏகினைநீ நெடுந்தொலைவு, மீண்டும்செல வேண்டும்.
பிணைந்துள்ள பேரின்ப துன்பங்கள் சுவைத்துப்
பெருநினைவில் வாழ்கின்றாய் பழமையினை எண்ணி.

திடும்என்றா பிரிவுவரும்? நம்புதற்குஒண் ணாதே;
திருந்தாத நடைபயிலும் சிறுபருவ நாளில்,
தொடுத்தஇள மூங்கில்புனை சிறுவண்டி இழுத்துத்
தொலைவான வாழ்க்கையதன் பயணத்தைத் தொடர்ந்த
வாழ்நாளும் நூற்றாண்டு பலவாகத் தோன்றும்.

அரைநூற்றாண் டுக்காலம் உன்பின்னால் உண்டே;
வாழ்க்கைமரம் இலைகளினை ஒவ்வொன்றாய் உதிர்க்கும்;
முறையாக இன்பத்தும் துன்பத்தும் பழகல்
உனக்கொன்றோ எல்லோர்க்கும் பொதுநிகழ்வே வாழ்க்கை.

வாழ்நாளில் நடைமுறையில் செயல்தொடர்பில் எல்லாம்
யாரிடத்தும் எவ்விடத்தும் நேர்மையினைக் கொண்டாய்.
வாழ்க்கைக்கும் எப்பெயரை நீசூட்டு விப்பாய்,
இமைப்பொழுதோ ஈறில்லாக் காலமோநீ தேர்வாய்.

3

மைராம்கான் அபில் கசிமோவா கிருசிஸ்யா

(பி. 1936)

இன்இளவேனில் மலர்வளம்

மஞ்சளும் செம்மையும் மலர்ந்த பொன்மலர்!
கொஞ்சமோ இன்இள வேனில் கூர்ந்தது!
மிஞ்சுபேர் இன்பமாய் மிளிரும் புற்களும்!
விஞ்சிய பெருமழை விளைத்த வண்மையே.

எழுச்சியை இன்இள வேனில் ஈந்தது,
கொழுமைசார் புல்வெளி உலாவல் கொள்ளுவேன்.
விழுமைசேர் காதலில் மீண்டும் வீழ்குவேன்!
செழுமையைச் செஞ்சொலால் பாடு வேன்அரோ!

களிப்பதன் இன்கனல் கலக்கும் என்னுளே,
குளிர்ந்தநல் நீரினைக் குடிக்க எண்ணுவேன்
தளிர்த்திடும் களிப்பனல் தலைக்குள் ஏறலால்
பிளிற்றிய களிப்பில்நான் பித்தி ஆகினேன்.

புற்றலை மழைத்துளி புதுக்கும் பொன்ஒளி!
அற்புத ஒளிநகை அழைக்கும் அன்புடன்!
இற்றைநாள் பிறந்ததாய் இலங்கும் வையமே.
சுற்றிலும் ஒளிச்சுடர் வெள்ளம் சூழுமே!

செழுமையின் கொழிப்பினில் சிறந்த ஆண்டிது;
அழகிய புல்தலை பரிகட்கு ஈந்திடும்.
குழந்தையின் தொட்டிலைக் கொடுக்கும் இன்மரம்;
எழுந்துயர் மலைவயின் இனிதின் ஓங்குமே!

பள்ளியறைப் பலகைகள்

பிறந்தபொன் நாடே!
பள்ளிப் பிள்ளையாய்ப் பலகையில் குந்திய
இனியஅந் நாள்களில் எத்தனை நினைவுகள்,
நெஞ்சில் குவித்தாய். தேசப் படத்தில்
கடல்களும் ஆறுமாய்க் காட்சி அளித்தாய்.
நெடுந்தொலை நாடு களுக்கு எல்லாம்
பயணம் செல்வதாய்ப் பற்பல கனவுகள்
உளத்துரு வாக்கினாய்.........

பிறந்தபொன் நாடே!
முதன்முத லாக முக்கி முனகிநான்
எழுத்துக் கூட்டிப் படித்த
உருசிய மொழியின் சிறிய தொடரையும்,
பின்எனை ஊக்கியும், நல்லறிவு ஊட்டியும்,
விரிபெரு நாட்டுடன் ஒன்றுமாறு இணைத்த
பாட்டையும் உரையையும்
சுண்ணக் கட்டியால் எழுதுதல் போல
எண்ணத் தால்இங்கு எழுதிப் பார்க்கிறேன்.

பிறந்தபொன் நாடே!
கழிந்திடும் ஒவ்வோர் ஆண்டும்
அறிவிலும் ஆண்டிலும் முதிர்குவோம்; ஆயினும்,
குழந்தையாய் வகுப்பறைப் பலகையில் குந்தி
உணர்ந்தஅப் பழைய உணர்வுகள்
இன்றும் புதுமையாய் எழுந்துமே லோங்க
நினைந்து நினைந்து நெகிழ்கின் றேனே.

4

பெல்லா அஃமதுலினா உருசியக் கூட்டரசு

(பி. 1937)

மார்கழி

குளிர்பனியின் காலவிதிக்கு உட்படுவோம் நாமே.
குளிர்பனியின் ஒருதிரளை உருட்டிஓடு வோமே,
திரட்டுதொறும் பெரிதாகக் கண்டுசிரிப் போமே,
வழித்தெறிவோம் தேவையிலாப் பனியினையே நாமே.

நடந்துவழிச் செல்பவர்கள் நடப்பதுஎதோ என்று,
கிடக்கும்ஒரு வேலியோரம் கேளிருடன் கூடி
இடங்கொள்குளி ராலிதழ்கள் பற்களும் நடுங்கத்
தொடங்கியநம் செய்பணியைத் துல்லியமாய்ப் பார்ப்பார்.

பனிஉருவ மாந்தனைநாம் படைத்துமகிழ் கின்றோம்,
பனிஉருவப் பணிசெயும்உன் கைந்நலமும் சேர்ந்து,
வலிமையுடன் நெடிதான வன்பனியின் உருவம்
நினைத்ததுபோல் வெளிப்படுங்கால் நெஞ்சில்மகிழ்வு என்னே!

கைத்திறமை காண்எனவே செப்புகிறாய் அன்ப!
செய்திறனும் ஆர்வமுமே சேர்ந்துறவு கொள்ள
மெய்யுருவம் ஆக்குகிறாய் வடிவிலாத ஒன்றில்;
ஐயஉனை விரும்புகிறேன், விரும்புகிறேன் என்பேன்.

எண்ணுகிற உருப்பொலிவை ஏற்றுமிக நன்றாய்ப்
பண்ணுகிற பனித்திரளின் பாங்கினைஎன் சொல்வோம்!
மண்ணுகிற நின்உருவம் முகம்திரும்பும் போது
நண்ணுகிற இன்னொளியை நான்நுகரு கின்றேன்.

கூட்டத்தினைப் புறந்தள்ளித் தன்உறுதி யோடு
தோட்டத்தினை நீத்திடுவோம், தோழமைமி குந்தோய்!
வேட்கைமிகு குழந்தையென ஆருயிரே, நீதான்
ஆட்டமிட என்றுமேநீ ஆவல்கொள்ளு வாயே.

அன்பனின்கை வண்ணமே! நின் அருமுயற்சி யோடும்
ஒன்றியஅவ் உழைப்பினுக்கே உற்றபயன் ஈவாய்;
தன்கையால் வண்ணமலர் நீட்டிஒரு குழந்தை
முன்நின்று முகிழ்பரிசை முழுதும்அளிப் பாயே.

5

அன்னா அ்.மதோவா

உருசியக் கூட்டரசு

(1889—1966)

* * *

என்னுடைத் தாய கத்தைப்
பாழ்செய்த போர்கள் நீங்கிச்
சென்றன ஆண்டோர் ஐந்தே.
சேர்ந்ததே அமைதி மெல்லப்
பொன்னுடை உருசி யாவின்
பொலிசம வெளியில் எல்லாம்
மின்உறை பனியும் முன்போல்
மேவிடும், அமைதி இன்பம்.

கலங்குறும் அலைகள் ஆர்க்கும்
கடற்கரை இருளின் ஊடே
கலங்கரை விளக்கம் மீண்டும்
கதிர்ஒளி பரப்பிச் சுற்றும்;
நலமனை வாயில் நின்று
நகைசெயும் அன்பர் கண்போல்
இலம்நோக்கும் கடல்வா ணர்க்கே!
இன்னொளி அவைவ ழங்கும்.

போருந்து திரிந்த மண்ணில்
ஏருந்து உழக்கும் இன்று
போர்எரி மூண்ட மண்ணில்
கோதுமை விதைவி தைப்பார்;
சீர்அற்று மேடு பள்ளம்
செறிந்தஇச் சாலை எல்லாம்
சீருற்றே உந்து லாவும்
செம்மையைக் காண்கின் றோமே.

புஷ்கின் மற்போர் பயின்ற சார்கோயி செலோ

1

துயரில் துடிக்கிறேன்!
உன்னைப் பொசுக்கித் தரைமட்ட மாக்கினர்!
பிரிவினும்இச் சந்திப்பு துயர்அளிக் கின்றதே!
முன்பிங்கு—
நீரூற்று ஒன்று பேரொளி பொழிந்தது,
சாலை மருங்கில்வாழ் கோல மரங்களின்
இலைகள் சலசலத்து இன்னிசை பாடின;
செங்கட லாக வான்சிவந் திருந்தது;
இளவேனில் மண்ணின் வளந்தரு மணத்தை
எல்லையற்று இனிய முத்தமாய் ஈந்தது.

2

நீண்ட நாளின் முடிவில்
அழுகுணி மரங்களின் இலைகள் உதிர்ந்தன.
அவற்றின் வெண்மை உயர்ந்து துலங்கி
என்றன் பாடலில் இன்றிடம் பெற்றன.
செம்மலர்ப் பூக்கள் செத்தன; ஆயினும்,
மாணவர் பாடல்கள் மடிந்தி டாமல்
மருள்கூர் மாலைபோல் கற்பனைச் செவிக்கு
விருந்தா கின்றன.

ஐம்ப தாண்டுகள் அகன்று விட்டன;
பரபரப் பான வளமிகு வாழ்க்கையால்
ஆண்டுகள் கழிந்ததை அடியொடு மறந்தேன்.
திரும்பேன் அந்தப் பழையநாள் களுக்கே
என்உள் உணர்வுகள் நின்று பொலிகையில்
லெத்தியின் ஏரிக் கரைமீது அமர்ந்து
விரும்பிய இடங்களில் பொருந்திநிற் பேனே.

வேனில் பாட்டு

இங்குள்ள எல்லாமே எனக்குப்பின் வாழும்
இளம்புட்கள் கூடுகட்டும் சிறுபெட்டி யோடு.
பொங்குற்ற கடல்மீது புரண்டுமகிழ்ந் தாடிப்
புக்குவந்தே எனைத்தழுவும் பூங்காற்றும் வாழும்.

இங்கென்னை எல்லைஇலாக் காலங்கள் அழைக்கும்,
இடைநீங்கா அவ்வழைப்பை மறுத்திடவா முடியும்?
செங்கனிகள் கொழிக்கின்ற செரிமரத்து மீதில்
சீதமதி தான்மிதந்து மலரில்ஒளி கிளரும்.

எங்கும்அடர் பசுங்காட்டில் வெண்ணிறமாய் மின்னி
ஏகிடும்ஓர் பெயர்இல்லாப் பாதையிலே நானும்
பங்கம்இலா உரிமையொடு செலவேண்டும் போலும்,
பரந்தங்கே பளிச்சிடும்அம் மரங்களின்ஊ டாக.

அங்கங்கே காட்டினிலே ஏரியினைத் தாண்டி
அலைகின்ற தடம்போல்என் பாதையுமே செல்லும்.

6

மார்கரீட்ட அலிகேர் உருசியக் கூட்டரசு

(பி. 1915)

* * *

அருமருந் தன்ன ஷேக்ஸ்பியரின் துன்பியல்காள்!
இடைக்காலத்து அரசர் வாழ்வின் நாடகங்காள்!
உருகும் போர்ஒலி, விருந்தின் ஆரவாரங்கள்
இருளும் ஒளியும், உணர்ச்சியின் பற்பல கூத்துகள்,

மதிப்பும் பண்பும் சூழ்ச்சியும் ஐயோ போராடும்.
இரண்டகம், அழிவு, உண்மையும் பொய்யும் மோதிடுமே,
குதிப்பான் கொடியன் அரசைக் கைக்கொண்டு ஆண்டிடவே,
குறையுற் றார்க்கே துணைநின் றார்ப்பான் பெருவீரன்.

இழிவுக் கொலைகள் இரத்தம் தோய்ந்த கொடுங்கைகள்,
நச்சுக் குவளை, இழுக்கின் கொலைவாள், எத்தனையோ?
பொழியும் துன்பம், குழப்பம் இவைதாம் மானிடமோ?
இரவில் புலம்பும் மக்கள் குரலின் முறையீடோ?

பழித்துரை, இயற்கை மீறிய செயல்கட்கு எக்காளம்,
ஊழொடு தருக்கம், பரிவே இல்லாப் போராட்டம் —
கழித்துப் பார்த்தால் இவர்தாம் இவர்தாம் நிலமாந்தர்;
ஒவ்வொரு வருமே வாழ்வின் உண்மை உணர்த்துவரே.

என்றன் துன்பம், தவற்றின் கறைகள் அத்தனையும்
பரபரப் பற்ற ஏக்கத் தனிமொழி ஆகிடுமோ?
என்றும் அழியா வீறார்ந் துயர்ந்த ஒலியாக
என்றன் அவலம் உருமாற் றங்கள் கொண்டிடுமோ?

என்றன் கவலை, வெற்றிகள் குறிக்கோள் எய்தாத
முயற்சி, தோல்விகள் இவையே யாவும் ஒருமாந்தன்
தன்னுள் ஓடித் தொட்டிங்கு எழுப்பி வெற்றியினில்
தலைநிமி ரத்தான் செய்திடும் ஆற்றல் உள்ளனவா?

அன்றி அருகில் கேட்கும் இன்னிசை ஒலிமங்கும்
தொலைவின் இன்னிசை தெளிவாய் நிறைவாய் ஒலித்திடுமே!
இன்றுநாம் எய்தும் இன்பம் துன்பம் இவைதாமும
எழுதப் படலாம் நம்வர லாற்றின் முதல் ஏடாய்.

தற்கா லத்தின் மேன்மைவர லாற்று ஆசிரிய,
எங்கள் துயரைத் தனதாய்ப் பாடும் பாவலனே!
முற்கா லத்தை நோக்கும் பொழுதோ யாம்உண்ட
உணவு துவர்ப்பாய், தண்ணீர் உப்பாய்க் காண்பாயே.

விழிப்பாய் இருப்பாய், நற்பெய ரைநீ கெடுத்துவிடேல்,
விலக்கும் குற்றம் செய்யேல், பொய்மை வீசிஎறி,
சுளிக்கும் முகத்தைச் சிரிப்பென எண்ணி மயங்கிவிடேல்,
தோன்றும் கானலை நீர்என நம்பிப் பின்தொடரேல்.

பெண்காள்! ஆண்காள்! உம்முடை மாண்பார் வாழ்க்கையினால்
பெரிதும் அவர்க்குத் துணைசெய் திடுவீர்; ஒருபோதும்
பண்புகள் மாறா மாந்தர்க ளாக வாழ்ந்திடுவீர்,
வஞ்ச ராக நில்லீர், தோழமை முரிக்காதீர்,
உண்மையை மறையீர், தற்செருக் குற்றே அலையாதீர்.
ஒன்றும் இல்லை சொல்லிட என்ன உள்ளனவாம்?
மாபெரும் பணிகள் செயல்கள் செய்யும் திறனின்றேல்

திண்ணிய நெஞ்சால் சீர்தூக்கிச் செய்யும் பெரும்பணியில்
சிலுகுகள் ஏதும் இடையூ றாகச் செய்யாதீர்.
விண்ணிலும் மண்ணிலும் உன்றன் கனவுக் கெட்டாமல்
எண்ணில் பொருள்கள் இங்குள மறவேல் ஒரேஷியோவே!

7

பாவல் ஆண்டகொலஸ்கி

உருசியக் கூட்டரசு

(பி. 1896)

வருந்தும் நிலை......

என்பாட்டன் தனையறியேன் வருத்தம்இது அன்றோ?
முப்பாட்ட னையும்அறியேன் தொடர்பற்றுப் போச்சு.
முன்னோர்க்கும் பின்னோர்க்கும் ஒட்டுறவுஇங்கு இல்லை;
முறையான இயற்கைஉறவு இல்லைஎன்றே தோன்றும்.

ஆனாலும் பேரன்பின் பேரனுடைப் பேரன்
ஆகஅவர் என்னுள்ளே முதிர்ந்துவரு கின்றார்.
வானாக என்இளமை நிலையாத போழ்து
வாகிளமைப் பாங்களித்து நிலைபெறவே செய்தார்.

என்னுள்ளே தழைத்தினிது மகிழ்ச்சிஒலி கொஞ்சும்
இளவேனில் காடுகளின் தெளிவற்ற இசைகள்
முன்னுள்ள மீட்பினையும், இறந்தபுது உயிர்ப்பில்
முகிழ்த்தலையும் ஆண்டுதொறும் கூட்டுவிக்கும் மாதோ.

மழைக்கால மாலையிலே மரவேர்போல், அன்னார்
வளங்கொழிக்கும் சாரம்என்பால் உறிஞ்சுதல்போல், இனிமேல்
கிழப்பருவம் எய்தியபின் முதியஒரு நாய்போல்
கிளரும்அவர் கணப்பருகில் குளிர்காய்ந் திருப்பேன்.

பின்னுள்ள காலத்தில் மிகப்பலவாம் நாளில்
பேய்ப்புயல்கள் எத்தனைதான் சுழன்றடித்த போதும்,
துன்னுபல எல்லைகடந்து அப்பால்சென் றாலும்
துயரமிகும் என்பாட்டின் அழைப்பைஅவர் கேட்பார்.

என்னுடைய இடர்க்குரல்அச் செவிகளிடை வீழும்
இறந்தஎன்றன் உடுக்கள்அவர் உயிர்க்கதிரால் தெரியும்.
இன்னதுவும் குழந்தைமையில் மறந்திட்ட பாடல்
இரவுவரு கதைகளில் எதிரொலித்தல் போலும்.

8

நிக்காலாய் அஸயேவ் உருசியக் கூட்டரசு

(பி. 1889-1963)

கோடையின் முடிவு

கரும்பும் வேம்பும் பொருந்தும்என் பாடல்கள்,
புல்வெளிக் குளிரும் வெம்மையும் கொண்டவை;
வேம்பாய்க் கசப்பினும் வெந்துயர் நீக்குமே,
மென்மையும் கடுமையும் அவற்றில் விரவுமே.

மாந்தன்இவ் வாடலைத் தேர்ந்ததும் இல்லை
உலகமே அதனைக் கோள்களோடு ஆடிடும்;
உலகைச் சுழற்றிடும் ஊழியாய்க் காலமாய்
இரண்டற நிற்பவை என்பா டல்களே.

கார்சியா லோர்காவின் பாடல்

கார்சியா லோர்காவைச் சாவுக் கழைத்துச் செல்லுகையில்
கார்ஒளி வானை ஏனோ வெறித்துப் பார்க்கின்றாய்?

'வேலன்சி யாவும் ஆண்டல் சியாவும்' இதையறியும்
ஆயினும் கொலைஞரைக் கண்டவை அலறா திருந்தும்ஏன்?

சாவினை நோக்கிப் பாடல்கள் தள்ளப் படும்பொழுதில்
நாவை அடக்கிக் கைகட்டி நீஏன் மூச்சற்றாய்?

சிறைக்கோ அன்றிச் சதுக்கத் துக்கோ செலுத்தினரா?
கறைநெஞ் சத்தார் பழத்தோட் டத்துள் கடத்திட்டார்.

வீறுட னேஅவன் விளைந்த பழங்கள் பறித்தபடி
வீசினன், அவையோ குட்டைகள் எங்கும் வீழ்ந்தனவே.

பொன்போல் பொலியும் பழங்கள் நீரில் நிலவொளியில்
நின்று மிதந்தன, நீரின் அடியில் மூழ்கவில்லை.

ஒளிரும் துகள்களை விண்ணில் இருந்தவன் பறித்தானோ?
வெளிரும் சாவில் வீழும் பாவலர் அதைச்செய்வார்.

குட்டைகள் வறளப் பழங்கள் சூம்பி வெம்பினவே
இட்ட பாவலன் அடியின் சுவடுகள் அழிந்தனவே.

ஆயினும் படைஞர் சுவைநீர் அருந்தி இருக்கையிலே
மேவிய பாவலன் பாடலை அன்றோ பாடினரே.

9

ரம்ஸ்பாபாசான் உசுபெகிஸ்தான்

(பி. 1921)

நாலடிகள்

எளிதில் மலையில் ஏறுபவன் இறங்கல் மிகவும் எளிதாகும்;
அளிதே வழுக்கி விழுந்துவிடில் அடிபட்டு அல்லல் உற்றிடுவான்.
நெளியும் சுமையோடு ஏறுபவன் நெஞ்சில் சுமந்தே ஏறுகிறான்;
ஒளிசெய் வானம் மிகஅருகில் உதவி நிற்றல் காண்கின்றார்.

பிறர்க்கு வறளை வருமுன்னர், பெரிதே என்னை அணுகட்டும்;
பிறர்க்கு வெள்ளி நரைமுடிகள் வருமுன் எனக்குப் பெருகட்டும்;
பிறர்க்கு முன்என் நெற்றியிலே வாழ்க்கை உழுத திரைத்தழும்பு
பதிக்கும் எனினும் வரவேற்பேன் பாடிச் சிரித்துப் போரிடுவேன்.

குப்பிக் குள்ளே பேரமைதி குடிகொண் டுள்ள இனியமது
தப்பி உன்னுள் சென்றவுடன் தாறு மாறாய்க் குதிப்பதுபார்!
கப்பும் உன்றன் கவலைகளைக் கலைக்கா தேமதுக்
[குப்பியினால்,
தப்புச் செய்வாய் முட்டாளே, குப்பி யோடு மோதாதே.

பெரிது வளரும் கோதுமைக்குப் பெருமை கொள்க காகசுதான்
நெடிதாய் ஓங்கும் பீர்ச்சுமரக் காட்டால் வடக்குப் பீடுறுக.
முடிபுனை வோம்நாம் நாட்டிற்கு முற்றும் பருத்திக்
[கிளைகளினால்
பருத்தி விளைவால், விளைவிப்போன் என்றும் பெருமைப்
[பட்டிடலாம்.

10

ஆல்கிமண்டாஸ் பால்டகிஸ் லிதுவேனியா

(பி. 1930)

சினங்கொள்ளாதே நிலமே......

சினங்கொள் ளாதே, சீர்சால் நிலமே!
திரைத்தஉன் முகத்தில் மேலும் நாங்கள்
பெரிய தழும்புகள் புரிந்தனம் என்று
புண்ணுற் றேநீ பொறுமை இழந்திடேல்.
குண்டின் தடங்களோ குழிகளோ அல்ல;
புதிய தொழிலகப் பதியங் கள்அவை,
மின்நிலை யங்கள் விளைக்கும் அகழ்வுகள்.

சினங்கொள் ளாதே, சீர்சால் நிலமே!
எங்கள் கலப்பையால் தங்கமண் உடலைப்
புண்ணுறச் செய்து செவிப்புலம் தன்னை
வெடிப்புறச் செய்வதால் இடிந்துபோ காதே.
நோக்காட் டினில்நீ ஏக்கமுற்று இருப்பினும்
எங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்நீ —
அத்தனையும் உன்னோடு ஒட்டிக் கொள்ளவும்
ஆர்வத் தால்உனை அணைந்திருக் கவுமே.

சினங்கொள் ளாதே, சீர்சால் நிலமே!
மண்ணில் இருந்தெழும் விண்வெளிக் கப்பல்
எண்ணிலாத் தொல்லை இழைத்திடும் போதும்
அமைதியாய்ப் பொறுமைகொள்.
தழும்புண் டாக்கிக் கிளம்பட் டும்அவை.
மேலே பாய்ந்தவை சாலப் பறக்க
உன்னை உதைத்துஅவை முன்எழ வேண்டும்,
பாங்குறு நிலமே தாங்கிக் கொள்வாய்
இப்போது மட்டுமா? இனிஎப் போதுமே.

சினங்கொள் ளாதே, சீர்சால் நிலமே!
எஃகு விரல்களால் இங்குநின் தசையினைக்
கிழிக்கின் றோம்எனப் பழிக்கா தேநீ.
எங்களின் ஆர்வம், பொங்கிடும் துணிவு
ஊக்கத் தையெலாம் மன்னித் திடுகநீ —
உன்றன் நெஞ்சின் ஆழத்து உட்போய்
ஊன்றும் இரும்பு வேர்களைக் கொண்ட
புதிய மரங்கள் யாம்எனப் புகல்வோம்.

11

மிகொலா பாஷான் — உக்ரைன்

(பி. 1904)

அழியாப் பாறை

பசுமை முடிமீது பசுமைமுடி ஒன்றெனவே
ஒசிந்துயரும் சிறகாய், கூர்பொம்மை நரம்பலைகள்,
விசும்புயரப் பாறைக்கு மாலை வளையமிடும்,
பசுமையிலாச் சாட்டைகள்போல் கட்டின்றி வளர்ந்திடுமே.

இத்தகைய பிணைப்புகளால் யாராலும் கேடையா
வித்தின்றி ஓங்கி நிமிர்ந்துயர்ந்த பாறையிது;
உய்த்தநில நடுக்கத்தால் ஒன்றும் அசையாது,
கத்திவிழும் வான்இடிக்கும் சற்றும் கலங்காதே.

முகத்தோடு முகம்இணைந்து, விளிம்போடு விளிம்புடனே
மிகப்பிணைந்து, மேன்மைத் திறம்வாய்ந்த கைகளினால்
புகழ்மிகுந்த காட்டாறு, பாறைகட்குக் கொடுமுடியாய்
மிகுகின்ற சாலைஇரைச் சலுக்கப் பால்ஒளிரும்.

விண்ணுறவே மேலோங்கி வேட்கும் இமர்சியாவின்
கண்ணுறவே கதிர்ஒளியின் காட்சி கலந்ததுவே;
மண்ணிருந்து உயர்ந்தோங்கி மணிமுடி கொண்டதுபோல்
பண்ணும்ஒளி கமழ்பள்ளத் தாக்கில் படர்ந்தெழுமே.

பெருவீரன் பீடார் தடக்கையால் வளைத்ததுபோல்
பெருவானில் கொடுவில்லின் பேரழகு தோன்றியே
பெருமலைகள் பிணைக்கின்ற பென்னம் பெரும்பாலம்
அருமைமிகும் நம்நாட்டின் போர்வீரர் படைப்பன்றோ!

நெக்குவிடாக் கடும்பாறை நெஞ்சை நெகிழ்வித்தே
மிக்கபெருந் தாழியெனப் பழங்களும், பழங்களைப்போல்
தக்கபெரும் தாழிகளும் தம்உழைப்பால் தாம்தந்தார்
அக்காலம் அடிமைகளாய் நெடிதுழைத்த கலைஞர்அவர்
இக்காலம் நாம்மகிழ இறும்பூது விளைத்தனரே.

அன்னவர்தம் ஆக்கவெறி ஆர்வத் தழலாலே
இன்னுயிரைத் தாம்இழந்து பாறைகளை எழில்கொழிக்கும்
மென்மலர்கள் செழிக்கின்ற மேன்மை வகைப்படுத்தி
நின்றபெரும் பாறைக்கு நிலையான வாழ்வீந்தார்.

12

விளாடிமிர் பீக்மென் — எஸ்தோனியா

(பி. 1929)

இரண்டு சப்பான் பொம்மைகள்

இரண்டு பொம்மைகள்;
சப்பான் நாட்டின் செர்ரி மரத்தில்
செய்தவைஎன் அறையில் தொங்கு கின்றன;
இரோசிமா விலிருந்து எனக்கவை வந்தன.
சாம்பலின் மணம்அதில் சார்ந்துளது என்பர்.
கீழை நாட்டின் பொம்மையின்
சாய்ந்த விழிகளில் எண்ணங்கள் புதையும்;
கவிந்த தலைகள்
மலர்உதிர் செர்ரி மரத்தின்
நினைவை மறைக்கும்.

வாழ்வொரு சாம்பலாய் வீழ்ந்த காலையில்
இரோசிமோ அழிந்த நாளில்
செர்ரி மரமும் செத்து அழிந்தது.

எரிந்து ஒடிந்த அடிமரத் திருந்தே
சப்பானியன் ஒருவன் சாய்துயர் விழிகொள்
இரண்டு பொம்மைகள் இயற்றினான்;
செர்ரி மரத்தில் செழித்துப் பூத்த
எழில்மலர்க் கொடிகளால் அழகுறப் புனைந்தான்.

என்னைக் காண நண்பன் எய்தினான்;
ஐயத் துடன்அவன் பொம்மையை நோக்கினான்;
''உண்மையாய்,
ஆயப் பெற்றவை தாமா உறுதியா?''
என்றவன் வினவினான்.
தீய விளைவுஇதில் புதையுண் டிருக்கலாம்
என்றுஎச் சரித்தான்: மேலும்,
விளையாட்டு இல்லை இதுஎன விளம்பினான்.

ஆயினும்,
மரத்தால் ஆன இரண்டு பொம்மைகள்
என்அறைச் சுவரில் தொங்கிக்கொண் டிருந்தன.
மீண்டும் நண்பன் ஈண்டுஎன் அறைக்குள்
தீங்கின் கமுக்கம் தெரியப் படுத்தும்
கருவியைக் கொண்டு வரவும் கூடும்.
கதிரியக்கக் கலப்புள தாகக் கண்டு
தொல்லைப் படநான் துணிந்துள தாக
வற்பு றுத்தி அறையவும் கூடும்.

ஆயினும், அவ்விரு பொம்மை யையும்
அப்படி யேநான் அங்குவைத் திருப்பேன்.
பருத்த ஈயச் சுவர்க்குள்
பருதியின் கதிர்களைக் கல்லறைப் படுத்தும்
அச்செயல் தனினும்...............
இச்செய லாலே இடர்மிகக் குறைவுதான்.
பட்ட செர்ரி மரத்தினால் செய்த
சப்பா னியரின் இரண்டு பொம்மைகள்
என்னறைச் சுவரில் தொங்குகின் றனவே.

13

ஓல்கா பெர்கோல்ட்ஸ் உருசியக் கூட்டரசு

(பி. 1910)

என்னைப்பற்றி

போரமைதி ஓய்ந்தபின் போந்த அமைதியிலே
ஓரமைதி நான்தேடி உள்ளம் புதைகின்றேன்...
....
....
நல்லதற்கோ தீயதற்கோ என்னுள்ளம் மாறியதே;
சொல்லும் அளவிற்குத் தோதொன்றும் தெரியவில்லை.
மிக்க கடுங்குளிர்க்கும் நடுங்கவைக்கும் மிடுக்கில்லை;
ஒக்க நெருப்புக்கும் ஓகைதரும் வெப்பில்லை.

பெண்மைக்கு இயையாதுஎன் விண்மீன்கள் மேல்ஒளிரும்
பெண்மைக் குழைவின்றிப் பாடும்சீர் பீடுஇறுகும்.
கண்இமையா விண்மீன்கள், காரிருளில் போர்த்தீயால்
துண்ணென்று எரியூட்டப் பெற்றபடி தாமுழங்கும்.

நிகழ்ச்சிகளை மறதியினால் நெகிழ்ந்துவிட நினைவோர்க்கே
உகந்ததொரு நினைவுக் குறிப்பாக நான்இருப்பேன்;
மக்களற்ற பாலைநிகர் மஞ்சள் பனியிடையே
எப்படி வீழ்ந்துஅழிந்தார் லெனின்கிராட் மக்களகோ!

இரட்டை அடிமரங்கள் இணைந்து வளருகையில்
உரமற்ற மண்ணுக்குள் ஆழமாய் ஊன்றிவிடும்;
மேலே உயர்ந்திணைந்து காற்றில்விளை யாடுகையில்
சால முடிபுனைந்து நிழல்கவிகை ஆகிடுமால்,
என்நகராம் கோல்கொதாவில் இணையாக வேரூன்றி
இன்பமும் துன்பமும் என்னைஆட் கொண்டிடுமால்,
ஒன்றிணைந்து புத்தம் புதுநாளாய் உயர்ந்தெழுமே.

இப்பொழுது புயல்சூழலும் உச்சியை நோக்கிஎழும்,
கப்பிக் கவிழாமல் ஆண்டு பலகழிய
என்ஆன்மா விடுதலையால் கோபுரமாய் வளர்கிறது,
ஒன்றாக, இவ்வுலகம் உவநதளிக்கும் உரிமையதே.

ஒரு மறுமொழி

உனக்கொன்று உரைப்பேன் ஓர்ஆண்டு கூட
வீணாய் வாழ்ந்த தேஇல் லைநான்.
உற்ற பிழைக்கா உற்றிலேன் வருத்தம்,
கற்றவை தம்மை எண்ணிக் கலங்கிலேன்;
பொய்யாப் பரிசில் எவர்க்கும் ஈந்திலேன்.
நலம்இல் லாததும், பாதுகாப்பு அற்றதும்,
பொருளி லாததும் ஆகிய காதலில்
பொருந்திய தில்லை.
காதலின் தூய கவின்ஒளி
என்றும் எப்போதும் என்னுளே உள்ளது;
புதுமலர்ச் சிக்குப் பொழுதிங் குள்ளது.
வறுமையி லிருந்து வளர்ந்துமேல் செல்லலாம்;
ஆயினும்,
இறந்த காலத்தைத் தூற்றுதல் தவிர்க;
நினைவும் துயரும் துறப்பதைத் தவிர்கவே.

* * *

அன்பிற்கும் பாடற்கும் அல்லற் கும்நான்
அட்டியின்றி என்னுளத்தை ஒப்ப டைப்பேன்......
அன்பே,நான் தரும்துன்பம் மன்னிப் பாய்நீ
ஆனால்நாம் பிரிந்திடினும் என்றன் ரத்தம்
இந்நிலத்தில் கசிந்திடினும், இதும கிழ்வே.
எனைத்தின்னும் அச்சம், ஆம், கடுமை அச்சம்.
என்னில்வரும் சோதனைகள் வெறுமை, மற்றும்
இடர்செய்யும் பழந்துயர்கள் எனினும் இன்பம்.

புயலிடையில் மரங்களினைப் போன்று நின்றன்
புண்உரைகள் எனைமோதும், கண்ணீர் பொங்கித்
தியங்குகின்றேன் வாயடைத்துப் போகின் றேன்நான்.
தீராத மனத்துயர்தான் அதற்கே நீயும்
வயவுகளை நிறுத்தாதே; மன்னிக் காதே.
காதல்ஒரு போதும்மன் னிப்ப தில்லை;
முயங்குகின்ற மகிழ்ச்சியுமே இப்ப டித்தான்;
முனைந்துயரும் பேராற்ற லுடன்காத லும்தான்.

துயர்உறுத்தும் அழித்துஒழிக்கும், துளிஇ ரக்கம்
காட்டாது; தூய்காதற்கு இரக்கம் ஏது?
மயற்காதல் வாழ்க்கையிலோர் விளையாட் டன்று;
விளையாட்டுப் பொருளும்அன்று; தெளிதல் வேண்டும்
இயற்கையிலே காதல்என்ப தென்ன? ஐய
இன்மகிழ்ச்சி ஆற்றாமை இரண்டும் அன்றோ!

14

ரீகர் பரதூலின் — பைலோரஷ்யா

(பி. 1935)

* * *

இறக்கை பெற்ற இனக்குடும் பத்திலே,
விண்வெளி வீரர்க்கு இரட்டை நான்தான்
உந்து பொறியின் உறுமலி னின்றும்
புய்த்துக் கொண்டு போன வாஸ்டாக்
மண்ணி னின்றும் என்னிட மிருந்தும்
புய்த்துக் கொண்டு போயிற் றென்க.
இடிமு ழக்கமும் விடியலின் செக்கரும்
கொண்ட என்மனை விண்வெளி அகமே.
ஈறிலா ஒன்று என்றன் தூவலே!
விண்கணை வடிவில் விண்மீன் ஒளிபோல்
பசும்பொன் பூச்சில் நீபளிச் சிடுக.
தாய்மைக் கைகளைப் பாடுகின் றேன்நான்
சிச்சிலிச் செரிகளின் சிவப்பொளி பாடுவேன்.
மெல்லிசை யோடும்என் மென்குரல் தாழ்ந்திட
விரைவி லே,ஆம் விரைவிலே சுழற்சி
வட்டப் பாதையில் பாடலை இசைப்பேன்.
விரைவிலே நெஞ்சின் ஆழத் திருந்து
பரிதியை நோக்கிப் பாடிடத் தொடங்குமே.

புயலுக்குப்பின்

புயலும் கடந்தது. தேன்சிட்டாய் நின்விழி
பூரித்து உவந்திசைக் கூத்திடு கின்றன.
புயல்மழை ஆடிய இன்கனி ஆப்பிள்கள்
போற்றிக் கொணர்ந்தனை நின்பா வாடையில்.

கன்னிநின் மார்பகம் குன்றாய் விளங்கக்
காற்றில் பறந்தது கச்சா டையும்;
முன்நிலா மேல்நின்று வெயிலிற் கறுத்தஉன்
முழங்காலைக் கெண்டையைப் பார்த்தே இளிக்கும்.

பூத்துக் குலுங்கித்தன் நாளைய குலங்கள்
போர்த்தி மறைத்த கனிம ரம்நீ,
கோத்த நினைவினைக் கண்களில் கொண்டுநீ,
கோதை கவலை யற்றுஉவந் தனையே.

15

பாவல் போட்ஸூ மால்டேவியா

(பி. 1933)

காலைப் பாட்டு

அனைத்திற் கும்மேல், அதிகா லைகளைப் பாடுகிறேன்.
பலகணி ஊடே பனிசேர் வழியால் பார்த்திருக்கும்
தொழில்மனைச் சங்கின் ஒலியல் புத்துணர் வூட்டிவிடும்
காடு விழித்து முணுமுணுப் பாலே களைகட்டும்
கனிவிண் மீன்கள் தரையில் வீழ்ந்து சலசலக்கும்.

அனைத்திற் கும்மேல் அதிகா லைகளைப் பாடுகிறேன்.
வாயில் அருகு காத்திருக் கும்நல் பாதைகளும்
உறங்கி இருக்கும் ஆர்வமும் எண்ணமும் உடனுறையும்
அந்தக் காலைகள் அவற்றின் அழகைப் பாடுகிறேன்.
இற்றைப் பகலிற் செய்தற் குரியன இவ்வளவே.
சுடச்சுட வெந்த அடையினைப் பலகூறு ஆக்குதல்போல்
பலப்பல கூறாய் ஒருநாள் பொழுதைப் பகுக்கோமோ!

இராஒரு நரியாம்; இருண்டதன் காலடி நக்கிடுமே
எப்படி வைகறை விளிம்பை நோக்கிப் பதுங்கிடுமே
பயன்தரு மரங்கள் வளங்கள் உதிர உலுக்கிடுமே
வாயில் நின்றே உறங்கும் போப்லார் மரங்களவை
விண்ணின் வெள்ளிப் பனித்துளி சிதறும் வியப்புறவே.

அனைத்திற் கும்மேல் அதிகா லைகளைப் பாடுகிறேன்;
வியப்புடன் சாலை வழிகள் விழிக்கக் காண்கின்றேன்.
பலகணி விளிம்பில் தவிடு பொறுக்க முனைந்துநிற்கும்
பகற்பொழு துடன்பிறந் தார்களைப் பார்த்து மகிழ்ந்தபடி
இரவுப் பறவைகள் கூடுகள் நோக்கித் திரும்பினவே.

விடிவான் எங்கும் வைகறை முரசொலி ஆர்த்ததுவே
தெப்பக் காரரே, கேணிகள் அகழும் தோழர்களே,
செங்கல் அறுப்பீர், உழவீர், செஞ்சொற் பாவலரே!
உங்கள் வேளை வந்தது வந்தது எழுவீரே!
இளங்கதிர்க் கீற்றுப் போல்நிமிர்ந் தெழுவீர்! எழுவீரே!
முந்திரிக் கொடிகள் முளைத்துச் செழிக்க முனைவீரே
குழந்தைகள் விழியுள் புத்தொளி மின்ன ஒளியுலகம்
விழைந்தவாறுஅங்குத் துயிலிலும் வளர்வதைக் காணீரே...
அனைத்திற் கும்மேல் அதிகா லைகளைப் பாடுகிறேன்.

16

பெத்ருஸ் புரூவ்க

பைலோரஷ்யா

(பி. 1905)

கம்பு அடை

வெந்து கறுத்தநல் கம்பின்அடை — அதை
விழைந்து மனமுந் தவித்திடுதே
எந்தச் சுவையிதற்கு ஈடாகுமோ — என்கை
எய்த எதற்குத் தரம்உளதோ?

வெந்து கறுத்தநல் கம்பின்அடை—அதன்
வெந்த இருபக்கம் நோக்கிடுவீர்
முந்து கமழ்எண்ணெய் வெங்காயம் — கொண்டு
முத்துப் பொடியுப்புத் தூவியுண்பீர்.

பென்னம் பெரிய அடைஇதுதான் — வாய்
மெல்ல மொறுமொறுப் போடினிமை
துன்றும் இதற்குஇணை ஈடிலையே — சுவை
சொல்லில் அடங்கிடு மாறிலையே.

வெந்து கறுத்தநல் கம்பின்அடை — நம்
விடலைப் பருவத்து உணவிதுவே!
முந்திடும் ஆவி பறக்கும்அடை — நீர்ப்
பஞ்செனு முற்றும் பருத்திருக்கும்.

எத்தனை நாழி உனைச்சுடவே — அட
ஏமாற்றம் என்னைத் துளைத்திருக்கும்?
புத்தம் புதிதாய் உனைக்கொணர்ந்தார் — என்றன்
பூரிப்பை என்னென்று நான்உரைப்பேன்.

புன்னகை யோடும் மதிப்புடனும் — உனைப்
பொற்புடன் மேசையில் கொண்டுவைத்தார்
பொன்னின் முகத்தினில் நெய்கனிந்தாய் — இது
போதும்உன் முத்திரை ஆவதற்கே.

உன்பொன் நிறத்தில் மொறுமொறுப்பில் — ஆவி
ஓங்க எழுந்த நறுமணத்தால்
எங்கள் எளிய மேசையொடு — கந்தல்
ஏழ்மை விரிப்பும் பொலிந்தனவே.

கம்பு வயலின் நறுமணம்போல் — நீயும்
கமகம என்று கமழ்ந்திருப்பாய் — உன்
இன்ப நினைவினில் மூழ்குகிறேன் — அட
என்றென்றும் உன்னை மறப்பதுண்டோ?

இல்லத் திருந்து மகிழ்ந்தாடி — அட
எத்தனை ஆண்டுகள் தோழர்களே,
நல்லகம் பின்அடை ஒன்றை எண்ணி — என்றன்
நாக்கில்நீர் ஊறிடும் இன்னமுமே.

ஆலிலை

கார்முகிலின் பேரிரைச்சல் கலக்கிடாதே என்னை
சேர்ந்தெழுப்பும் பேய்க்காற்றால் சிதைந்திடாது இருப்பேன்
பேராலின் கிளையதனில பிணைந்திருக்கும் இலைபோல்
ஆர்க்கும்புயற் கசையாமல் வாழ்வைப்பற்று வேனே.

கூதிர்கால மழையூடும் துயர்இருளின் ஊடும்
மீதொளிரும் செப்பொளியாய் மின்னுவத னோடும்
தீதியற்றும் சுழல்காற்றுத் திமிர்த்தலைக்கும் போதும்
நோதல்இலாது அசைந்தாடி பாடிடும்ஆல் இலையே.

பனிக்காலம் கடுங்குளிரால் பகையாகி னாலும்,
பனிப்புயல்தான் கங்குல்தொறும் படைவீசி னாலும்
பனிமழையைத் துணிவுடனே தான்மறைத்துக் கொண்டு
கனிவுடன்தாய் மரக்கிளைக்குக் காப்பாகும் கிளையே.

இளவேனில் இனியபல வியப்பிழைக்கும் வேளை,
உளமார வரவேற்கும், அதற்கடிமை ஆகும்;
தளிரோங்கும் இளமைஇலை வளரஇடம் தந்து
நிலமீதில் ஆலிலையும் மெல்எனத்தான் விழுமே.

17

எமிலியான் புகோவ் மால்டேவியா

(பி. 1909)

நெஞ்சின் ஆழத்தில் நிறைந்த சொற்கள்

மாந்தனுக் குயர்ந்த பாட்டினை அளித்து
மலர்முக முறுவல் மகிழ்ச்சியைப் பெறுகநீ!
எய்திடும் சிறந்த பரிசிது வாகும்......
இருந்தும் நாணிடக் காலம் இருந்ததே.
ஏந்து பட்டினி நிறைபழந் தெருவில்
உலர்ந்து வெடித்த உதட்டொடும் முனகினார்
'ஆம்நீ ஒருதொழி லாளி எழுதுகோல்
அதன்பணி யாளனாய்க் கிட' என முனிந்தே.

அந்த நாளில்நான் அணிந்த ஆடைகள்
அழிவுறு கந்தலாய்ப் பஞ்சாய்ப் போனவை...
முந்தும் சொல்லினைத் திருகிக் கொணர்ந்திட
மூழ்கடா! மூழ்குநீ கடலின் அடியிலும்—
வெந்திடும் பட்டினித் தெருவின் தொண்டையில்
வெடித்தே எழுந்து கிளம்பிய அக்குரல்
தந்த நீதியின் தீர்ப்பினைப் போன்றதே
தக்க வண்ணம் பழியினைத் தீர்த்தல்போல்
முந்து சீற்றங் கிடந்தஅந் நெஞ்சினில்
முரசம் ஆக எழுந்து கனன்றதே.

இன்று விடுதலை யாகிய நல்உரை
எங்கும் பொங்கி நிரம்புதல் காண்கிறோம்!
நன்று நீர்இனி முன்நடப் பீர்,உயர்
நல்ல பாமாலை மாந்தனுக் களிப்பீர்.
நன்று நெஞ்சில் கனன்றெழும் செஞ்சொலின்
நிமிர்ந்த சீரிய பாடலைத் தருகுவீர்.
வென்று பெற்ற வீர வெற்றியை
விண்உடுக் கள்ஆக ஏட்டில் ஏற்றுவீர்.

என்றன் உள்அகத் தெழுந்த சொற்கள்
என்பால் எழுச்சியும் ஆர்வமும் இல்லெனின்
என்றும் உயிரிலாச் சொத்தையாய்ப் போகுமே,
எரிமலை வாய்உறா வெறுங்குழம் பாகுமே.
நின்ற புதுநடுக் கோடுபோல் மண்ணினை
நெருங்கி வளைக்கும் என்பற்று உறுதியே
என்றும் செருக்கு நெஞ்சொடும் செந்தழல்
உமிழும் கோலொடும் உயர்ந்து வாழ்வனே.

18

மரிஸ் ஸக்லாஸ் லத்வியா

(பி. 1940)

* * *

நிலவுல கென்னும் உலவுறும் கோளில்
உள்ள மாந்தரை உரைப்பின்முந் நூற்று
ஐம்பது கோடி மக்கள் ஆவர்;
இவருள் இலாத்துவியர் பதினைந்து இலக்கமே
பெருங்கடல் அதனில் ஒருதுளி ஆவர்......
சின்னஞ் சிறிய இந்த ஒருதுளி
பென்னம் பெரிய பரிதியைப் பற்றிப்
பாடல் புனைந்திடத் துணிவது தகுமா?
எனினும், கதிரவன் இன்னொளி நலத்தால்
இலாத்துவிய நாடு மாட்சிமை கொள்ளுமே.
எனினும் செங்கதிர் இன்கனற் சிறப்பால்
இலாத்துவிய மக்கள் வேட்புற்று வாழ்வரே.
மண்ணையும் கதிரொளி மாண்பையும் புகழ்ந்து
பண்ணிசைத் திடுவோர் பாடலைக் கேண்மின்:

'விண்ணின் ஒளிமிகு விளக்கே பகலைஅனுப்பு
வெயிலுக்குப் பின்மாலை வேளையில் மறைவாய்
என்றும்உழைப் புக்குளங்கள் குருதியை மகிழ்செய்
இனிதுறங்கிட அமைதியும் ஓய்வும் தருவாய்.'

சாலைப் பாடல்

சாலைப் பாடல் இதுவாகும்
சாலைப் பாடல் பாடுவன்நான்......
சாலை வழிப்போக்கு ஒன்றினையே
சார்ந்தி ருந்தால் வழியிடையில்
கோல நெருப்பில் குளிர்காயக்
கொழுந்தீ எரியும் பைன்மரத்தின்
காலக் கனியின் கமழ்மணத்தை
நுகர்ந்தி ருக்கக் கூடுவனோ?

ஏரிப் பரப்பில், ஆறுகளில்,
எழுமுன் கதிரோன் மீன்துள்ளி
நீரில் நிகழ்த்தும் ஆடலினை
ஒருபோ தும்நான் நுகர்ந்தறியேன்;
நேரில் தெரியும் மலைகளிலே
நேராய்ப் பேசும் எதிரொலியின்
பூரித்து உவக்கும் குரல்கள்தமில்
பூரித் திருக்கக் கூடுவனோ?

வேட்டைக் காரர் வழிகளிலே
மட்டு மேநான் விரைந்திருந்தால்
காட்டும் நகரின் கட்டடங்கள்
கங்குல் அமைதி நீரினிலே,
கூட்டும் எழிலாய் இலங்குவதில்
வயப்பட் டிருக்க வாய்ப்புண்டோ?

கொழித்துச் செழிக்கும் புதியநகர்க்
கோட்டங் களிலே குழந்தைகளின்
ஒழிச்சல் அற்ற கூச்சல்களில்
உள்ளம் வயப்பட் டிருப்பேனோ?

தாலின் நகரச் சந்துகளில்
பூங்காக் களிலே தனித்துலவும்
கோலக் கூந்தல் கோதையர்பால்
உள்ளம் போக்கி யிருப்பேனோ?

அதனால் தான்நான் பாடுவனே
அழகிய தெருக்கள் பாதைகளாம்
உதவும் சிற்றூர்ச் சந்துகளாம்
ஓயா நெடிய சாலைகளாம்......

சொந்த வழிஎன்று ஒருவழியைச்
சுழன்று மாந்தன் அடைந்திடுமுன்
இந்த வழிகள் யாவினுமே
இவர்ந்து செல்ல வேண்டுமடா!

19

நிக்கோலாய் தம்திளோவ்

பர்யாட்டியா,
உருசியக் கூட்டரசு

(பி. 1932)

புல்வெளிப் பாடல்

பரந்தபுல் வெளியில் நுழைந்துசெல் வதைப்போல்
வாழ்வுப் பாதையில் ஆழ்ந்துசெல் கின்றேன்......
நான்ஏன் விரைய வேண்டும்?
ஏன்நான் மானாய் ஏகிட வேண்டும்?
சாலை ஓரக் கல்மேல், சரிவினில்
சற்று நின்று உட்கார்ந் தால்என்?
தடையும் நிறுத்தமும் இடையூறும் இன்றிப்
படர்ந்துள வழியினைப் பார்த்துவந் தால்என்?
இயலாது என்றால் நிற்க இயலாது.
தொடுவான் முகட்டில் கதிரவன் எழுங்கால்
அவனை எதிர்கொள விரைகின் றேன்நான்.
அரும்பெரும் பரிசாய் விரிவுலகு அளித்த
இந்தப் பிறவியை எந்த வகையிலும்
ஏய்த்துப் போக எண்ணிட மாட்டேன்.
அதற்குள வழியில் அதுஏ கட்டும்
இறுதி வேளை நெருங்கி வருகையில்
மலர்ந்த விழியுடன் நலஞ்சால் உலகின்
அழகையும் மகிழ்வையும் அடிவரை பருகுவேன்.

கதிரவன் மலைவாய் வீழ்ந்து மறுபடி
காலைப் போதில் கவினுற விழித்தே
உலகில் நானிலா முதல்நாள் அதனைத்
தொடங்கிவைத் திடுவான். தொடர்ந்துநான் வாழாது
இனிவரும் பல்லா யிரநாள் களுக்கும்
அதுதான் முதல்நாள் ஆகுமே அன்றோ!
என்றன் இனிய புல்வெளி நிலமே!
என்றன் இல்லமே! என்றன் தோழனே!
பரிதியின் ஒளிக்கீழ் பரந்து விரிந்துநீ
வாழ்க்கையைப் போல வரம்பற் றிருப்பாய்.
எல்லையும் முடிவும் இல்லாது இயங்குவாய்
இதோநான் பாடல் இசைத்துக் கொண்டே
என்றன் வழியில் ஏகிட லாயினேன்.
விண்ணை முட்டும்அப் பண்ணின் பெருங்குரல்
விண்மீன் கணத்தொடு மின்னிப் பிணைந்திடும்.
ஆயினும் வான்அரங்கு இருந்தப் பாடல்
உடுக்கள் நிறைந்த ஒருநாள் இரவில்
மெல்லென நிலத்தில் இழுமென இழியும்;
புத்தம் புதியதாய்ப் பிறந்த குழந்தையின்
அழகிய தொட்டிலின் அருகில்
இனியதா லாட்டாய் என்றும் வாழுமே.

20

சிமியோன் தானிலவ்

(பி. 1917)

யகூடியயா,
உருசியக் கூட்டரசு

என் பெருமை

அடிக்கடி நீண்ட நெடுவழிச் செல்வேன்;
அயலூர் பலவிடைத் திரிவேன்,
கடுவழி, நல்வழி, அரண்மனை, குடிசை
கருதாது எங்கணும் மகிழ்வேன்.

என்வழிப் போக்கின், போடுதலாம் என்றன்
இனியநற் குடியினைப் பற்றி,
என்உழைப் பேற்கும்அம் மண்ணினைப் பற்றி,
எவர்க்கும்நான் விடையளித் திடுவேன்.

தாயகப் பெருமை கூறிடக் கேட்பார்
தாயகம் முழுதும்கண் டவர்போல்
மாயமோ என்று மருட்கைஉற் றிடுவார்
மனத்தினில் ஆர்வமே நிறைவார்.

காட்டினில் பனியில் வேட்டைகள் ஆடி
மீண்டவன் போல்எனைக் கருதி
வேட்புறும் அன்பில் வியப்புடன் வீட்டில்
விருந்துண வருகென அழைப்பார்.

மாணிக்கப் புதையல் வைத்திருப் பவன்போல்
மகிழ்வுடன் எனைஅவர் பார்ப்பார்;
காணிய என்ஊர் அழகெலாம் சுற்றிக்
காட்டினேன் போல்எனை மதிப்பார்.

பற்றுஅது கண்டென் தாயகப் பற்று
பன்மடங் காய்அவண் உயரும்!
உற்றதாய் நாட்டை, உறவினை நினைந்தே
உள்ளமும் பெருமையில் திளைக்கும்.

பனி

இக்குளிரை இன்பனியை
ஏத்திடுவேன் நானே
இப்பனியின் ஊடுபிறந்து
எழுந்தவனும் நானே.

வாழ்வினிமை ஆகிடநான்
திளைத்ததும்இப் பனியே,
சூழ்ந்துநடை பழகிஅடி
தோய்ந்ததும்இப் பனியே.

மென்துகிலின் திரைஎனவே
என்முகத்தில் மேவும்,
முன்னியேநான் பள்ளிசெலின்
முகத்தில்பனி தூவும்.

கம்பளியின் மெத்தைபோலக்
காலில்முத்தம் இடுமே,
வம்புசெயும்! உருகிடவே
மறுத்தெனையே தொடுமே.

துள்ளிக்குதித்து ஆடும்ஒரு
குட்டிப்பரி போலே
உள்ளம்உவந்து உயர்களைப்பில்
இனிதுவர வேற்கும்.

பனித்தஅதன் பார்வையுடன்
பழகும்அதன் வெம்மை,
இனித்தெனிலே வெம்மைதரும்
உயிரைக்கனல் ஆக்கும்.

இன்பினிலும் துன்பினிலும்
என்னுடனே பாடும்
என்னுடைய வாழ்வுஅனைத்தும்
இன்புறவே பாடும்.

கம்பிகளில் கம்பங்களில்
காணரிய ஒசிவாய்ச்
செம்பனியின் துணிக்கைஇசைக்
குறிப்புகள்போல் திகழும்.

இக்குளிரை இன்பனியை
ஏத்திடுவேன் நானே!
இப்பனியின் ஊடுபிறந்து
எழுந்தவனும் நானே.

21

ஜனின தெகுதைத் — லிதுவேனியா

(பி. 1928)

நெரிங்கா பைன் மரங்கள்

நெரிங்கா புதைமணல் மீதி லேஅவை
மேலும் மேலும் விரைந்துமுன் னேறின;
மேலைய ராலே விரைந்தன; வளைந்தன.
கிளைகளின் றி
உயர்ந்தஅம் மரங்களின் உச்சிக் கொண்டைகள்
புயலின் ஓலமும், பொலிகடற் காக்கைகள்
விதும்பலும் சுமந்து விதிர்விதிர்ப் புற்றே
அங்கும் இங்குமாய் அசைந்துஅசைந் தாடின.
துருப்பிடித்துச் சிதைந்த சிலைகள் போல
இருண்ட உருவொடும் எண்ணிலா வரிசையில்
அமைதி யாகவே அவைமுன் னேறின;
புதைமணல் மீதில் பொன்னிலம் நோக்கியே
ஒளிர்ந்தஇந் நெரிங்கா உயர்பைன் மரங்கள்
உடன்பி றந்தஎன் தமக்கையர் போலுமே.

ஆண்டிகனீ

விடைபெறு கிறேன்என்றன் வருங்காலக் கணவனே!
விரும்பும்உன் முத்தத்தை அறியாமல் போகிறேன்.
விடைபெறு கிறேன்எனக் கொருபோதும் பிறவாத
வேட்புமிகு மகனுக்கும் பிரியாவிடை கூறுவேன்.

என்காத லேஇங்குக் கொண்டுவந்த தென்னை
ஏகவேண்டும் வழிதனையும் அதுவே காட்டிடும்
பொன்போது வைகறை நடுங்குகுளிர் வாடைஎன்
உள்ளங்கைப் போதினில் புகுந்துநலம் காணுமே.

மாண்டஎன் உடன்பிறந் தோர்களை நள்ளிரா
வேளையில் மண்ணினில் புதைத்திட வேண்டியே
மீண்டிட வேண்டும்நான் மீண்டிட வேண்டும்நான்
ஆயிரம் முறைக்குமேல் மீண்டிட வேண்டுமால்.

தீய்ந்திட்ட நிலமீது சாம்பலின் ஊடுநான்
எரிந்திட்ட செம்மணல் மீதிலும், மென்மையாய்
வாய்த்துமே மழைமாறித் தோய்ந்திட்ட களிமண்ணில்
வழுக்கிடும் நிலத்திலும் நான்செல்ல வேண்டுமே.

படையின்றி மீளுவேன் காலணி இன்றியே
பாதைகள் யாவையும் கடந்துநான் செல்லுவேன்
உடைகின்ற அவர்களின் சட்டங்கட் கஞ்சிடேன்
உண்டாக்கி னோர்எனை வெறுக்கட்டும் ஒடுக்கட்டும்.

ஏனெனில் அறிகுவேன் ஆயிரம் முறைஎனைத்
தண்டித்த போதும்அவர் தீர்ப்பிட முடியாது,
ஏனெனில் அவர்க்குநான் உட்பட்டு விதைத்தவயல்
எங்கணும் தோன்றியே உலாவிடும் ஆவிநான்.

போர்க்களங் களிலேநான் வெள்ளையர் கறுப்பராம்
உடன்பிறந் தோர்களைப் புதைக்கிறேன் இடுகாட்டில்
ஆர்க்கின்ற கடலும்இம் மண்ணுலகும் கொடியவர்
ஆட்சியில் அல்லலில் முனகிடும் காலம்வரை

அடிமைஎனும் வெட்கமுறு பெயரது நெற்றியின்
அனல்பெற்றுத் தீயும்வரை நானிங்கு மீள்குவேன்;
குடிகொண்ட வீட்டில்மென் துகில்தவழ் இருட்டினில்
குழவியாய் ஆயிரம் முறைபிறந் திடுவேன்நான்.

என்அன்பே உயிரற்ற தலையினை வருடுவேன்,
இடையிலொரு வாளினை உனக்குநான் அணிகுவேன்,
உன்உடன் பிறப்புநான் ஆண்டிகனீ சாவிப்பை
உற்றவள் தண்டிக்கப் பட்டவள்நீ யறிகுவாய்.

22

மிகையில் துஷின் — உருசியக் கூட்டரசு

(பி. 1916)

இறவானத்தில் அடைக்கலாங் குருவிகள்

1

அறிவுடைமை மடமைஎது எனக்கேளுங்கள்,
நேர்மையுடன் உண்மையுடன் விடைஅளிப்பேன்.
வெறிதே'நான் உன்னைமிக விரும்புகின்றேன்,'
விளம்பியஅம் மாதரையான் அறிந்திலேனே.

எங்கிருந்தோ அவர்வந்தார் தெரியவில்லை
ஏழையரா, செல்வரா அறியேன் அஃதும்.
இங்கினிய நன்மையினை நோக்குவோர்தாம்
இரும்புலவர்; மெய்யறிஞர் அவர்என்பேனே.

உங்கள்முதல் இடம்பற்றி வினாக்கள் தோன்றும்
என்றாலும் முதல்தொடக்கம் அதுவேயாகும்.
பங்குற்ற நரம்புகளோ புல்லின் நீண்ட
வேரினைப்போல் நெஞ்சுக்குள் ஆழ்ந்து பாயும்.

2

இன்னொளிப் பொழுது புலர்ந்தது என்றே இறப்பினிலே
எவ்வளவு நேரம் உரத்து அழைக்கும் குருவிகளே,
மின்னொளிப் புறாப்போல் கருங்கோல் குறிஞ்சி பூத்திடுமே
மேவும் நாளின் வாழ்வும் குப்பைச் சாம்பலிலே.

பகுப்புகள் அற்றே உலகம் முழுமை ஆனதுகாண்
இற்றை நாளைப் பகுத்துப் பார்த்திட முடியாதே.
வருங்கா லம்என் குறிக்கோட்கு உரியது ஆதலினால்
வாழும் நெஞ்சம் அன்பால் என்றும் கனிவுறுமே.

வருங்கா லத்தின் தோற்றக் காட்சி நிறுத்திடவே
நெஞ்சின் நினைவே, என்றன் உயிரைக் கிளர்த்திவிடு;
கழுக்க மானஎன் அச்சம் பனியால் கழுவிடுவாய்,
கடந்த காலத் துன்பமும் நீயே களைகுவையே.

அன்பின் அழைப்பிற்கு அன்போடு அளிக்க வேண்டும்விடை
அப்போழுது அன்றோ நெஞ்சொடு நெஞ்சம் சென்றடையும்.
ஒன்றும தகுதி உடையே னாயின் உலகரெலாம்
உடன்பிறந் தோராய்த் திகழும் விழாவினைக் காண்குவனே.

....
....

4

உரியநம் நிலத்தை ஓம்புதல் விட்டோம்
மக்களே மக்களே உணர்வீர்,
துருப்பிடித் திட்ட கத்தியால் அன்னை
வயிற்றினைக் குத்துதல் பித்தே.

கதிரவன் ஒளியால் கைபடா முன்பே
காய்ந்திடும் பனித்துளி மரத்தில்,
அதிரவின் வெளிக்குள் ஏகுவோம், வானம்
அன்பனுக்கு இடம்தரும் உவந்தே.

அன்புசால் வெற்றி வாகையால் நெஞ்சம்
அகமலி உவகையால் சிலிர்க்கும்
அன்னமும ஆன்மத் தூய்மையைக் காண
அகமகிழ்ந்து உலவுவாள் இங்கே.

வெளிப்படைப் பண்பு வென்றிடும் நாங்கள்
பொய்புரட்டு உளறலை வெறுப்போம்
களிதரும் அன்பு கண்டிடப் புலவர்
அறிவரும் ஒன்றினர் போரில்.

23

எவ்கெனி எவ்திஷெங்கோ

உருசியக் கூட்டரசு

(பி. 1933)

பிர்ச்சு மரம்

தனிஒரு வேட்டைக் காரன் தொலைவில்
தானே சுட்டனனே,
பனியினை நோக்கிக் குண்டின் உறையினைப்
பட்டெனப் பாய்ச்சினனே.

உரத்தெழு நடுக்கம் பனிவிழு தூடே
உள்ளே புகுந்ததுவே,
உறைபனி அடியில் வெளிறிய கிளைகளை
உலுக்கி முழங்கியதே.

முன்பொரு மகன்போல் கட்டுண் டிருந்த
முதிராப் பிர்ச்சுமரம்
இன்றுபுண் ஏற்ற பட்டையின் ஊடே
இனிதொளி பொழிகிறதே.

குண்டுப் பொறியின் நடுக்கத் தாலே
கொண்டஉள் செழுமைஎலாம்
எண்ணக் கணத்துள் எல்லா வற்றையும்
இழிய விடுகின்றதே.

தோய்ந்துறை பனியின் கல்லறை இருந்து
துலங்கும் அரசின்பால்
பாய்ந்திடும் குண்டால் அன்று, பணிவால்
முத்தம் பதித்ததனால்.

வாழ்வின் களிப்பும் பொங்கிச் சுரந்திடும்
வகைபோல் அம்மரத்தில்
சூழ்ந்துள் விழிப்பில் வாழ்வெதிர் நோக்கிச்
சுடர்ந்து நின்றதுவே.

வேட்டைக் காரனும் வாய்ப்பேச் சற்று
வியப்பால் ஆழ்ந்தபடி,
ஊட்டம் மிகுந்த மரத்தின் அடியில்
அவனின் சிறுகுண்டு

துளைத்த இடத்தில் சொளசொள வென்றே
சுரக்கும் சாறருவி
விளைக்கக் கண்டான், நின்றான் நெஞ்சின்
வறட்சி மறந்தனனே.

நேற்றைய கிழமைக் காலத்து அன்பின்
நெருக்க மானவரை
ஆற்றிடும் அன்பால் அணைதல் போல
அணைந்து பிணைந்தானே.

மேலும்அப் பிர்ச்சு மரத்தின் பால்அவன்
மேவும் செயல்அறியா
ஏலவோர் காசும் அவனிட மிருந்தே
எதிர்பார்த் திடவில்லை.

அடிமரத் தூற்றின் ஒவ்வொரு துளியை
அவன்வாய் உறிஞ்சையிலே
வடிவுடை இளமை வளமைத் துளியை
இழக்கும் அம்மரமே.

உறுகடுப் புடனே தாராள மாக
ஊற்றுகள் சுரந்தனவே
செறுபெருங் காட்டில் அவன்குறி தப்பிய
சேவல் போல்முழங்கி,

நின்றிடும் அவனை நோக்கியே உலகம்
நிறைந்த பழிஉணர்வால்
கன்றிய குரலால் தொண்டை உவந்தே
கழுத்தொலி எழுப்பியதே.

அவன்பற்கள் குளிர்காற்றால் கிட்டிப் போகும்
அவன்தன்துப் பாக்கியினை மூழ்க விட்டான்......
அவன்தந்த புண்ணினையும் மறந்த பிர்ச்சு
மரம்அவனின் வேட்கைக்கு வழங்கிற் றன்றே.

* * *

பாதிகள் எனக்கு வேண்டா,
அரைகுறை வெறுக்கின் றேன்நான்
மாநிலம் முழுதும் ஈவீர்
வான்அரங் கனைத்தும் தாரீர்.

நீணில மலைகள், ஆறு,
நெடுங்கடல் இவற்றின் செல்வம்
யானலாது எவர்க்கும் பங்கை
அளித்திடேன் எனக்கே யாவும்.

வாழ்வேநீ குழைந்தி டாதே,
வழங்கிட முணங்கி டாதே,
வீழ்முழுச் சுவையும் ஈவாய்
வெற்புஎனும் தோள்கள் உண்டே!

அல்லாடும் மகிழ்ச்சி சீச்சீ!
அரைகுறை முறுவல் வேண்டேன்,
புல்லிய அவலப் பாட்டில்
பொதிஅரைத் துன்பம் சொன்னேன்.

விரும்பும்ஓர் பாதி யுண்டு
விளைதுயில் தலைஅ ணைக்கண்
அரும்பாதி அதுவே யாகும்!
அங்குஎன்றன் கன்னத் தோடு

பதிந்தொளி வீசி விண்வீழ்
கொள்ளிபோல் பதைப தைத்துப்
பொதிந்துபொன் விரலில் ஆழி
பொலிந்திடக் காண்ப தாலே.

24

ஜிவோர்க் எமின்

அர்மீனியா

(பி. 1919)

* * *

இயன்றவர் என்னிடம் இயம்புக;
மாந்தனைக் காட்டிலும் வன்மை குன்றியும்
வன்மை மிகுந்தும் இருப்பவர் யாரோ?
மண்ணின் எல்லையைத் தாண்டினோன் மாந்தன்.
வீறுடை அணுவினைக் கூறுகள் செய்தவன்.
ஆயினும், சருகுபோல் நெஞ்சினைப் பெற்றுளான்.
ஒளிபுறம் தோன்ற ஓடுசெங் குருதி
குதிக்கும் நல்ல குருதிக் குழலொடு
பாண்டங்கள் அனைத்தினும் நொய்மைப் பாண்டமாய்
இன்றுவாழ்ந் திங்கு இருக்கின் றானே.
மலைகளை எல்லாம் தகர்க்கும் மாந்தனை
சிறியதோர் குண்டோ, சினச்சொலோ, கொடியதோர்
ஏளன உரையோ இவற்றுள் ஒன்றுஅவன்
நெஞ்சாங் குலையின் துடிப்பினை நிறுத்துமே!
மாந்தன்மா மாயன், தந்திரஞ் செய்வதில்
பெரும்புள்ளிக் காரன், அப்புள்ளிக் காரன்
பல்லிக்குக் கூட நிகராக மாட்டான்.
(பல்லியின் வாலைத் துண்டித்துப் பாருங்கள்

மீண்டும், வளர்ந்திடும் ஒன்றும் நிகழா ததுபோல்)
மண்புழு வோடும் எண்ணிடல் ஆகுமோ?
(இரண்டாய் நறுக்கு சிரித்துயிர் வாழும்
ஒன்றுமே நிகழா ததுபோல்)
இயன்றவர் என்னிடம் இயம்புக;
மாந்தனைக் காட்டிலும் வன்மை மிகுந்தும்
வன்மை குன்றியும் இருப்பவர் யாரோ?
இருப்பினும் அன்னவன்
நொறுங்கும் நொய்மைப் பாண்டம் போன்றவன்.
ஒருதலை அசைப்பில் உயிரை இழப்பவன்,
இறைவ னுக்கே தீர்ப்புஅளித் திடுவான்,
துறக்கம் நரகம் இரண்டையும் எதிர்த்தே
கிளர்ச்சிசெய் திடுவான்.
உதை,அடி தாங்கிப் பகைபல எதிர்ப்பான்.
இத்தகு மாந்தன் ஒருகா லத்து
விதியின் கையில் விளையாட்டுப் பொருளாய்
அடிமையாய்க் கிடந்தவன், அழுகி நாறும்
அடவிக் குகையில் அரும்பசி நீங்கிப்
புடவியை வெல்லப் புறப்படு மகன்அவன்
இடர்களி னின்றே இன்பத்தை நோக்கி
நடைதள ராமல் நடப்பவன் தானே.

25

ஸ்யுன்பாய் எரலியேவ்

கிர்கீசியா

(பி. 1921)

என் தாலிசியன் மலைக்குதிரை

நீர்நாயின் பளபளப்பும் நெய்கனியும் பொலிவும்
நேர்உறுதி மென்மையுடன் நிமிர்ந்தநடைச் செலவும்
சீர்திகழுக் கொண்டொழுகு வெள்ளிஒளிச் செம்மை
போர்த்தபிடர் மயிருடனே போகும்மலைக் குதிரை.

காதுகளோ புதல்வளர்ந்த கவின்கோரை போலும்
ஊதுலைபோல் நெருப்புஉமிழும் ஒளிமூக்குத் துளைகள்.
மோதுமலை நின்றிழியும் முழங்கருவி போலே
தோதுடைய வெண்பிடரிக் குதிரைதுமித்து ஓடும்.

மெருகிட்ட குளம்புகளோ கொப்பரைபோல் மின்னும்
இருகண்ணும் காவல்நெருப்பு என்னஒளி காலும்.
அருமைமிகும் என்னுடைய தாலிசியன் குதிரை
பெருவானை நோக்கிஎழும் கழுகெனவே பறக்கும்.

பறந்துயரும் கழுகைப்போல் பதிவிருக்கும் என்மா
இறங்கிவரும் காற்றூடே இரைந்துவரும் தீப்போல்
பறந்தெழுந்து மேல்நோக்கிப் பாய்ந்துவிரைந் தேறும்
சிறந்துநிற்கும் குன்றின்முடிச் செம்மாப்புத் தாழும்!

பூட்டிடிலோ கடிவாளம் போட்டுக்கடித் திடுமே
கூட்டிநுரை கொப்புளிக்கக் குதப்பிடும்தன் வாயை.
ஓட்டிடுமுள் குத்திடவும் ஓங்கிஎழும் வானில்
காட்டியவிண் மீன்தலையில் கால்களைவைத் திடுமே.

செழித்தபசுஞ் சமவெளியில் சிலிர்த்தகொழும் புல்லை
வளப்பமுற மேய்ந்துவளம் பெற்றதென்றன் குதிரை;
பொழியுமலைப் பனிச்சுனையின் புனலினைக்கண் டோடி
விழைந்தினிது பருகிநலம் படைத்ததும்என் குதிரை!

கல்லைநிகர் நெஞ்சுறுதி, எஃகொத்த கால்கள்,
நல்ஒளிகொள் பளிங்குநிகர் தூயஒளிக் கண்கள்,
வல்லவனாம் தேசிங்கு மன்னன்பரி போல
எல்லையிலாத் தொலைவினையும் ஈர்க்கும்ஒரு கணத்தே.

தாலிசியன் மலைக்குதிரைத் தனிப்புகழோ பெரிதே!
ஆலித்துஎழும் பரிவீரர் கடிவாளம் இடுமின்;
ஞாலம்இதில் மக்கள்பெயர் காக்கும்ஒரு வனையே
கோலமலைக் குதிரையும்தன் தலைவன்எனக் கொளுமே.

26

ரஸூல் கம்ஸாத்தாவ்

(பி. 1923)

தாகிஸ்தான்,
உருசியக் கூட்டரசு

என் தாய்மொழி

உறக்கத்தில் மடத்தனங்கள் அலைக்கும் போலும்
ஓரிரவு நான்இறந்த கனவு கண்டேன்;
பிறர்எவரும் காணாத மலைஇ டுக்கில்,
பிணமாகக் குண்டுபட்டுக் கிடக்கக் கண்டேன்.

பெருமுழக்க முடன்ஓடை ஒருபால் ஓடும்,
பிறர்உதவி வரும்என்று பேத லித்தேன்.
ஒருகணத்தில் மண்ணோடு மண்ணாய்ப் போகும்
உடல்மண்ணில் உயிர்ப்புமெல ஒடுங்கக் கண்டேன்.

நான்இங்கு இறப்பதனை அறியார் யாரும்,
நடுவானில் வட்டமிடும் கழுகின் கூட்டம்
மான்ஒன்றோ இரண்டோபே ரச்சத் தோடு
மருளுவதை விழிகாணும் வேறொன்று இல்லை.

எதிர்பாராது இறக்கின்ற என்னைக் கண்டே
இரங்கிஉளம் பதறிஅழ யாரும் இல்லை
முதியஎன்றன் தாயாரோ, மனைவி, நண்பர்
மொய்த்துஎன்பால் துயர்உறுவோர் யாரும் இல்லை.

பிறர்காணாது ஒப்பாரி பெறாது சாவின்
பெருவழிக்கே நான்அணியம் ஆகும் போதில்
உறவுறும்என் தாய்மொழியில் இருவர் யாரோ
உரையாடும் இனியமொழி செவியில் கேட்டேன்.

பிறர்அறியா மலைப்பிளவில் சாகின் றேன்நான்,
பெருமகிழ்ச்சி யோடுஇருவர் களிப்புப் பொங்கத்
திறம்வாய்ந்த அசனுடைய தந்தி றங்கள்
அலிசெய்த சூழ்ச்சிகளைப் பேசிச் சென்றார்.

தாய்மொழியாம் 'அவார்'மொழியைப் பேசக் கேட்டுத்
தலையூற்றாய் வலிமையெலாம் மீளக் கண்டேன்
போய்அறிஞர் வாய்கேளா மருந்தீது ஆகும்,
மருத்துவர்கள் காணாத களிம்பீது ஆகும்.

நீள்உலகில் அவரவர்க்கிங்கு ஏற்ற வண்ணம்
நிலவும்அவர் தாய்மொழிகள் நலஞ்செய் யட்டும்,
நாளைஎன்றன் 'அவார்'மொழிதான் அழியு மாயின்
நான்இன்றே இறந்திடுவேன் கணமும் வாழேன்!

அரசியலுக்கு உகந்தமொழி இலைஆ னாலும்
அதுபற்றிக் கவலைஉறேன், நான்வி ரும்பும்
உரமான 'அவார்'மொழிதான் எனக்கு உவப்பாம்—
உலகத்தில் 'அவார்'மொழிதான் உயர்வு எனக்கே!

மூதறிஞர் முகமதுவின் பாடல் எல்லாம்
மொழிபெயர்ப்பி லாஎங்கள் மக்கள் கற்பர்?
ஓதும்'அவார்' மொழியினிலே எழுது கின்ற
ஒருகடைசி எழுத்தாளன் நானே தானா?

இவ்உலக வாழ்க்கையினை விரும்பு கின்றேன்,
எல்லையற்றுப் பரந்துள்ள உலகை அன்பின்
செவ்வியொடும் நோக்குகின்றேன் அனைத்தின் மேலாய்ச்
சோவியத்தை 'அவார்'மொழியால் புகழு கின்றேன்.

பரந்துயர்ந்த உரிமைஉள உழைப்பா ளர்தம்
பாடுயர்வால் செழித்துள்ள நாட்டிற் காக
இறப்பதற்கும் அணியன்நான், எனைப்பு தைக்கும்
இடுகாடோ 'அவார்'நிலமாய் இருத்தல் வேண்டும்.

'அவார்'மொழிப் பாவலனின் மகனும், நல்ல
'அவார்'மண்ணின் அருந்தோழன் இரசூல் பற்றி
'அவார்'மக்கள் 'அவார்'மொழியில் பேசல் வேண்டும்
'அவார்'மொழியே அவனுக்கின் அமுதம் ஆகும்!

* * *

வையம் முழுவதும் சுற்றிவந்தே—பொருள்
வல்லநல் நூல்களை வாங்கி வந்தேன்,
மெய்யாய் நினைக்கையில் இவ்வுலகே—எழில்
மேவும்கை நூல்எனத் தோன்றிடுதே!

தப்புத் தலைப்பில் சிலபகுதி; —சில
தாறுமா றாம்கருத்து உள்ளவையாம்;
செப்பனிட் டேஇதைச் சீர்திருத்தி — ஒரு
செவ்விய நூலாக்கின் நற்பயனாம்.

27

ஃபிக்ரெட் கோஜா அசர்பைசான்

(பி. 1938)

நான் ஓர் உழைப்பாளி

நான்ஓர் உழைப்பாளி,
என்றன் தோளும் முதுகும்
வலிமையும் தசையுமாய் வாய்ந்தவை.
மண்ணின் குடல்களைப்
பிணைப்புக் கயிற்றால் அணைத்துப் பிடிக்கிறேன்.
எஃகினை இணைக்கிறேன்,
இயக்குகின் றேன்சுமை தூக்கிகளை.
காண்பீர் மீண்டும் காண்பீர்! —
ஆற்றின் ஆழத் தடத்தில்
எழுப்பிடு கின்றேன் கற்சுதைத் தூண்களை;
அவற்றின் உச்சியில் அடுக்கடுக் காகப்
பாலம் அமைக்கிறேன்.
என்றன் கைகள் எஃகு கைகள்,
எஃகினை யேஅவை வார்த்தளிக் கின்றன.
தண்டவா ளங்களைத் தாம்உரு வாக்கும்;
நிலக்கரிச் செல்வம் அகழ்ந்து எடுத்திடும்;
மாந்தரின் உறைவிடங்களை
இம்மண் உருண்டையின் மீது

செங்கல்மேல் செங்கலாய் அடுக்கி
வானளா விகளை இங்கமைக் கின்றேன்.
புதுமனை புகுந்திடும் நீவிர்
அதன்தரைச் செங்கல் ஒவ்வொன் றிற்கும்
அதில்உள பலகை ஒன்வொன் றிற்கும்
எனக்கு நன்றியை இயம்பிட வேண்டும்.
கூரிய முள்ளுடைக் குதிகால் செருப்பால்
பலகைத் தளத்தைப் பாழாக் காதீர் —
அவைஎன் விரல்கள்!
விரல்கள் மிதிபட விரும்புமா?..... ஓ,ஓ!
கால ணிகளைக் கழற்றி எறிந்தபின்
கோல இருக்கையில் குந்துக.
மேலும், இதையும் தெரிந்து கொள்வீர்:
அங்குள சாளரம் அனைத்தும்
எதிர்காலத் தைநான் ஏறிட்டு நோக்கிடும்
என்றன் கண்கள்! இன்னும் நீங்கள்
குளிரக் குளிரக் குளிக்கின் றீர்களே!
அந்த நீரை மாடியில் ஏற்றிக்
குழாயின் வழியாய்க் கொணர்ந்தவன் நானே!
தோட்டத்து மரமும் தூமலர்ப் பாத்தியும்
நான்உமக் களித்த பரிசுகள் அலவோ?

நான்ஓர் உழைப்பாளி,
உழைப்பால் என்றும் சாகாத் தன்மையன்—
காரைத் தூணிலும், சலவைக் கல்லிலும்,
பளிங்கிலும், தகட்டிலும், வாழ்கிறேன்.
ஆர்வத் துடன்நான் அயராது உழைக்கிறேன்.
புரைஒன்று கண்டால் பொறுமை இழக்கிறேன்.
எனதுநாடு இதனில்யான் இயற்று வனவே
சட்டங்கள் ஆகும்.
என்றன் கால்களை இந்த மண்ணில்
ஊன்றிடும் வேர்போல் ஊன்றியுள் ளேன்நான்.
எனினும்நான் நிலத்தொடு
பிணிக்கப் பட்டவன் அல்லேன்,

கட்டற்று இயங்குவேன்; வெளியெலாம் திரிகுவேன்,
என்தலை உடுக்களின் அரங்கில் திகழ்ந்திடும்.
எல்லார்க்கும் ஒளிசெயும் இந்த ஞாயிறு
...எனக்கொரு விளக்காம்!
விளக்கு இல்லாமல் எதுவும் முடியுமா?
ஒவ்வொரு காலையும் வேலைக்கு ஏகுமுன்
மலைக்குப் பின்னால் மறைந்திருக் கும்அந்த
ஞாயிற்று விளக்கை நான்தான்
வெளியில் எடுத்து வைக்கின் றேனே.

28

கபூர் குல்யாம்

உஸ்பெகிஸ்தான்

(1903-1966)

* * *

பாடலையும் காதலையும் என்றோநான்
மூட்டைகட்டி விட்டேன்
பற்றிவந்த வழியினையும், தெளிவுடனே
பார்த்துக்களித் திட்டேன்.
பாடலையும் காதலையும் ஒருவழியாய்
மூட்டைகட்டி விட்டேன்.
பற்றியஎன் கவலைமுடிச் சிக்கலினை
அவிழ்த்தெறிந்து விட்டேன்.
தெளிவான பாதைஎன்றன் எதிரினிலே
சிக்கலின்றித் தெரியும்.
சீறுபுயல் ஏதும்இல்லை வீண்கனவு
மனக்குழப்பம் இல்லை.
ஒளிக்கோடாய் நேர்எதிரில் சந்துபொந்து
கிறுக்குத்தனம் இன்றி
ஓடியஅப் பாதையிலே மெல்லெனநான்
வெற்றிநடை இட்டேன்.
இருந்தாலும் முன்இருந்த சத்திரத்தைக்
கண்டதுமே நெஞ்சில்
என்றென்றும் உள்ளூறங்கும் பழங்கிளர்ச்சி

விழித்தெழுந்த தம்மா!
அருந்தொலைவு காரணமோ? அயர்ச்சிமிகு
வழிவருத்தம் தானோ?
அடுகதிர்க்கும் சாலைக்கும் இடையில்ஒரு
முகில்புகுந்த தாலோ?
கடுகளவும் எதிர்பாரா வகையில்,உளம்
கண்டுகொளும் முன்னர்க்
கழுகொன்று பாய்வதுபோல் பாட்டுணர்வும்
காதலதும் பாய்ந்தே
கதுமென்றன் நெஞ்சத்தை நன்றாகக்
கவ்விக்கொண் டனவே.
கடந்தவழி கடைசிமுனை திரும்புகையில்
நிகழ்ந்திது தானோ?
நண்பகலை நினைக்கின்றேன்; வெயில்கொடுமை
என்னஎன்று சொல்ல!
நறும்பொழிலில் செம்மலர்கள் வாட்டமுற்றுத்
துவண்டுவிழும் அந்தோ.
நண்பகலும் தாழ்ந்ததுவே; குளிர்ந்துஇனிது
மாலைமகிழ் செய்யும்
நறுமலர்கள் வாட்டம்எலாம் தவிர்ந்துஇனிதே
நகைசெய்தல் காணாய்.
இருந்தும்என்ன! பகற்பொழுது தீர்ந்ததுஇனி
என்னநினைத்து என்ன?
இருந்துறங்கும் வேளைஇது. புத்துணர்ச்சி
எய்தவழி இல்லை.
இருந்தும்இவன் சுவர்அருகில் கரியநிழல்
எழுந்துபர விடுதே.
இதுவேதான் நல்விளைவு நற்பரிசும்
விடுதலையும் ஆகும்.
நிழல்ஒளியில் செம்மலர்கள் தம்தலையை
நிமிர்ந்தழகாய் நீட்டும்.
நிறந்திகழும் இதழ்வட்டம் மங்கலிடைத்
தெளிவுறவே தெரியும்.

நிழல்பதியும் இருளிடையும் மிகத்தெளிவாய்
மிகநன்றாய்த் தோன்றும்,
நெடிதுகமழ் மணம்ஏதோ பொருள்மொழிந்து
நெஞ்சொடு உறவாடும்.
எவ்விடத்தோ மனைவாயில் திறந்தபடி
இருக்கின்றது எனினும்
இருள்நடுவில் செம்மலர்கள் விசும்பினிடை
உயிர்க்கின்ற மூச்சோ,
எவ்விடமும் போய்ப்பரவி நிலமனைத்தும்
இடைவெளியே இன்றி
இனிதுகமழ் நறுமணமாம் செல்வத்தை
யாவர்க்கும் வழங்கும்.

ஒட்டகத்தின் சுமை

வாழ்க்கை, சிக்கலும் முடிச்சும் இன்றி
வகைபட நூற்றஓர் நூலன்றே.
வானில் இனிய பொறையுடன் ஏறும்
வண்ணக் கனவின் உலாஅன்றே.
வாழ்வின் அகற்சிஓர் ஒட்டகம் தாங்கும்
திமில்மேல் சுமையை நிகர்த்ததுவே.
வகுத்திரு பக்கமும் நிறைத்தே இறுக்கமாய்
வாங்கிப் பிணித்த வகையதுவே.

வாழ்க்கைப் பெரும்புதிர் காலந் தோறும்
வல்லார் மனத்தையும் மருட்டிடுமே!
வாகாய் ஒட்டகம் இவர்வோய், என்றன்
வாய்மொழி சிறிது கேட்டிடுவாய்:
வாழ்ந்தநாள் எல்லாம் ஒருபக்க மாக
வரிந்து கட்டி இருக்குதடா!
வரும்எதிர் காலமோ மற்றொரு பக்கம்
வன்மை முடிச்சாய்த் தொடங்குதடா!

நிகழ்காலத் துக்கோ இருபுறச் சுமையிலும்
நேர்பட ஓர்இடம் இல்லையடா!
நெகிழ்ந்தொரு பக்கம் சுமைகுறை வானால்
மறுபுறும் சுமையது கூடிடுமே.
உகப்புறத் தொடக்கத் தினிலும் முடிவிலும்
ஒத்த நடையினைக் கொண்டிடுக.
ஏன்எனில், பின்னர்ச் சமநிலை தன்னை
ஒழுங்குறச் செய்தல் மிகஅரிதே.

நிகழ்பொழுது ஓடி மறைந்திடும்; அதனை
நிறைசெய் துலாக்கோல் நிறுத்திடுமா?
நேரும்இவ் வுண்மைநீ கொள்ளினும் தள்ளினும்
நிலையாம் அதுவே உண்மையடா!
நிகழ்பொழுது என்பது நீயின்றி வேறிலை,
நெஞ்சம் அறிய உணர்ந்திடுக.
ஏனெனில், இவர்பவன் நீயே, ஒட்டகம்
இயக்கு பவனும் நீஅன்றோ!

29

நிக்கொலாய் கிரிபெச்சோவ்

உருசியக் கூட்டரசு

(பி. 1910)

நம் உலகம்

புன்மொழிகள் பலதூற்றிக் குருட்டுஆந்தை போலப்
பொய்மைக்குக் கண்ணவிந்த புல்லியர்க்குஇஃது உரைப்பேன்:
எம்உலகை அவ்வுலகின் எழில்வளத்தைச் சிறப்பை
யார்துணையும் இல்லாமல் படைத்தவர்கள் நாங்கள்.

உங்களுடை மயக்குரைகள், வசைஉளறல் தாமும்,
உம்பொல்லா முடிபுகளும் எவரையும்ஏ மாற்றா.
எங்களுடைக் கைகள்இவை! இயற்றியவை காணீர்!
இரும்பொறிகள், கட்டடங்கள், நூல்கள்என நிற்கும்.

அனைத்துலகும் காணஇது மிகத்தெளிந்த உண்மை
அளவில்வழி இவ்வுலகை மாற்றஉத வினோம்யாம்;
முனைப்புற்ற எம்கதையைச் சொல்லாமல் நில்லோம்;
முயற்சி,கடும் உழைப்பீந்த மதிப்பினையும் சொல்வோம்.

நடுங்குகுளிர், நோய்,வறுமை; தொழிற்சாலை நோக்கி
நடப்பதற்கும் வலிவில்லை தொழிலாளர் கட்கே,
அடுத்தடுத்துப் பலவாரம் உணவொடுசா றில்லை,
அவர்மனைக்குப் பலமாதம் பால்கூட இல்லை.

எங்கள்துயர்க்கு இரங்கிடவே அங்குளவரும் இல்லை;
எமைத்தேற்ற ஒருகையும் முன்நீள வில்லை;
அங்குப்பின் கண்பறிக்க மின்னிஇடி முழங்கி
அரத்தம்தோய் முகம்வீங்கிப் போர்அரக்கன் வந்தான்!

பலிவேட்கை கொண்டஒரு பண்டையநாள் பூதம்
பசிதீர்க்க எழுந்ததங்கே! சினவெறிக்கூத் தாடிக்
கொலைவெறியும் கொடுநெருப்பும் தலைவிரித்துப் பாய்ந்த
கொடுந்துயர நாடகத்தை நடத்திற்றே அம்மா!

தீமைமிகும் அக்கதையை மீண்டும்எடுத் துரைக்கத்
தேவையில்லை, கல்லறைப்புல், படைஞனிலாச் சட்டை,
வேம்உளத்தால் நரைபெற்ற தாயின்துயர் எல்லாம்
வெட்கமுறும் கொடுஞ்செயற்குச் சான்றுகளாய் நிற்கும்.

துயர்ப்புயல்தான் ஓய்ந்ததுவே. ஆடுகின்றார் சிறுவர்;
தொழில்புரியும் கைகள்,மனம் தொலைநோக்கிப் பாயும்.
வியனுலகில் யாம்யாவர், எக்குறிக்கோள் நோக்கி
விரைகின்றோம் என்பதிலே ஒளிவேதும் இல்லை.

தார்த்தூஃபி அயல்நாட்டில் காப்புற்ற செருக்கால்
தப்பெண்ணப் பொய்மைகளை உமிழ்ந்தாலும் நாங்கள்
சாற்றுகிறோம்: வெறுங்கையால் இவ்வுலகு செய்தோம்!
தாவும்அதன் விரிவெல்லை விண்வெளிக்கும் அப்பால்.

மெய்மையிது; தெளிந்ததிது; எம்வாழ்வே சான்றாம்.
விரித்துரைத்தால் ஏதும்இலா வெறுமையினில் தொடங்கித்
தெய்வத்தை விதியதனைச் சிறிதும்நம் பாமல்
சிறுதுணையும் இல்லாமல் வளர்ந்துவெற்றி பெற்றோம்.

30

கார்லோ காலாட்ஜே

ஜியார்சியா

(பி. 1907)

ஜியார்சியன் மொழி

கடிதான சொற்களினால் செய்த அப்பம்
கருத்தூறும் வாழ்வப்பம், சியார்சிப் பேச்சாம்
எடுத்ததனைப் பகிர்ந்துண்போம், வாரீர் நண்பீர்!
எத்தனை முறைஎனினும் உண்ண லாமே.

திணறவைக்கும் அடிக்களத்தில் கோது மையைத்
தேவையிலா உமிநீக்கிப் பெறுவ தற்குத்
தணல்வியர்வை பொழிந்து,தடி ஓச்சு தற்கே
வாழ்நாளில் பாதியினைக் கழித்தி ருப்பேன்.

கோதுமையை விளைப்போனின் உருவ கத்தால்
கொண்டஇந்த மொழிவிளக்கத் துணிந்து விட்டேன்:
ஏர்உழுது சொல்விளைத்தல், நோய்வா ராமல்
இறைவேண்டும் எனமுயற்சி யாவும் பாரீர்.

எழும்என்றன் உணர்ச்சிஎலாம் விண்ணை நோக்கி
ஏற்றமழை, காலநிலை வேண்டி நிற்கும்;
செழித்தெழும்பும் கோதுமையின் கதிர்கள் யாவும்
சீர்சிறந்து கருகாமல் முதிரக் கூடும்.

வார்ப்பச்சுப் பொறியுடனே ஆர்வம் உள்ளோர்
வரிவரியாய்ச் சொல்லறுத்து வீழ்த்தி விட்டார்.
சேர்த்தெடுத்த அச்சிட்ட பக்கங் கள்தாம்
செம்மணிசேர் கோதுமையின் கதிர்க ளாமே.

விதைப்புமுதல் அறுவடையின் கால மட்டும்
வித்தும்அதன் வாழ்வதனைக் காண்பா யானால்
அதனைப்பின் காலம்எனும் ஆலைக் கல்லில்
அரைக்கும்வன் கொடுமையினை அறிவா யானால்

வேகவைக்கும் அடுப்புஅனலுக்கு உள்ளே இந்த
விளங்காத பெரும்புதிர்தான் மறைந்தி ருக்கும்......
ஆகநீ விதைத்தும்பின் களைப றித்தும்
அறுத்தரைத்தும் முயற்சிபல செய்த பின்தான். ....

இவ்வெளிய அடக்கமிகும் கோது மையும்
எழில்வானின் நிலவொளியின் துகளாய் மாறும்.
செவ்வினிய சியார்சியரின் திரண்ட பேச்சும்
சீருயிர்க்கு வாய்த்தநல்ல உணவா கும்மே.

வாழ்வப்பம் இங்குளது, பழமை யோடு
வளர்புதுமைத் தன்மையது! பகிர்ந்துண் போம்நாம்.
ஆழ்ந்தென்னோடு இதையுண்டு தெரிந்து கொள்வீர்
ஆன்மாவை உடலைவலுப் படுத்தும் கொல்லோ?

கடுமைமிகு சொல்லப்பம் இந்த அப்பம்,
கடந்தபல செயல்காட்டும் சான்றாய் நிற்கும்.
சுடச்சுடநாம் உண்ணும்உண்மை அப்பம் போலச்
சூடாக இதனையும்நாம் பகிர்ந்துண் போமே.

கொடிமுந்திரி அறுவடைக் காலமும் இரவும்

கொடிமுந்திரிக் காலம்! கொடிமுந்திரிக் காலம்!
கூடும்அய லார்க்குதவும் இன்பத்துள் இன்பம்!
கொடிமுந்திரிச் சாறுபொங்கி கோடி பாயுமே
கொடிமுந்திரித் தாழிஎலாம் நிறைந்து வழியுமே.

குடில்தோறும் ஓங்கும்களிப் பாடல் எழவே
கூடும்இரா இன்பத்தில் தள்ளாடிக் கழியுமே.
துடிப்பிதழ்கள் குவளையினைத் தொட்டு உறிஞ்சுமே!
துள்ளிஎழும் புதுநறவின் வெள்ளம் பொங்குமே!

இராநிழலில் மதுக்கலங்கள் கலக லக்குமே
எல்லாரின் மண்டைகளும் விறுவி றுக்குமே!
நறாமயக்கில் உளறிக்கொண்டே வீடுசெல் கையில்
நடுத்தெருவில் அடர்நிழல்கள் எதிரொ ளிக்குமே!

வழியில்எதிர் வீசும்தென்றல் காற்றுங் கூடஉன்
சட்டையினைப் பிடித்திழுத்துத் திசையை மாற்றுமே.
களிமயக்கில் அதுகூட நிலைஇ ழந்ததே!
கையசைப்பாய்; சிரிப்படக்க முடிய வில்லையே!

31

முமின் கனாத்தவ்

தாஜிகிஸ்தான்

(பி. 1932)

என் மரபுரிமை

வஞ்சக் கொடுமையை அறிவியலாய்
வாழ்தொழி லாக்கிய ஒருகுயவன்
செம்பாதி உலகைக் கைப்பற்றிச்
சேர்த்தான் தன்கிளை நுகர்வதற்கே.

உலகின் உயரிய மேற்பரப்பும்
ஒப்பில் செல்வ அடிப்பரப்பும்
வளஞ்சேர் தந்தையின் சொத்துகளால்
வாழும் கயவர்பால் சிக்கினவே.

விலங்காண் டியைப்போல் ஒருவரைமற்று
ஒருவர் வேட்டையில் வீழ்த்தினரே.
பலத்தால் உடன்பிறந் தோன்குருதி
பருக வேட்டனன் உடன்பிறந்தோன்.

ஆயினும் எனக்கோ என்தந்தை
அரியஇவ் வுயிரே சொத்தாக
ஈயப் பெற்றேன் உயர்ந்ததுதான்
எனினும் இன்னல் மிகுந்ததுவே.

பொன்னும் பொருளும் இதற்கிணையோ?
புரையே இல்லாச் செல்வம்இது!
என்றும் இதன்விலை மதிக்கொணுமோ?
இதனினும் ஒன்றை நினைக்கொணுமோ?

எந்தை பெயரால் சூளுரைப்பேன்,
என்றன் மேம்படு கருவூலம்
இந்த நாட்டுயர் மேன்மைக்கே
ஈடாய் வைத்துயிர் வாழ்ந்திடுவேன்.

காதல் தீ

நிலைதடு மாறிடச் செய்யும் பொல்லா
நெருப்பல் லவோஉயர் காதல்,
மலைநெருப் பாய்அது தீய்க்கினும் அத்தழல்
மாந்தவே ஏங்கிடும் நெஞ்சம்!

மற்ற நெருப்பெனில் தள்ளி விலகி
மறுபுறம் சென்றிடக் கூடும்.
உற்ற தழல்இது ஓங்கும், புகையின்றி
உள்ளத் திருந்திசை பாடும்.

நீங்கிட நீங்கிட மேலும்மே லும்இது
நெஞ்சினில் ஆசையைத் தூண்டும்.
ஓங்கிடும் இத்தழல் விட்டுப் புறம்செல
ஒருவழி இல்லையே யாண்டும்!

32

சில்வ கபுத்திக்கியான் அர்மீனியா

(பி. 1919)

வரவேற்பு

சனிக்கிழமை என்றாலே எனக்குமிக மகிழ்ச்சி,
சரியாக விடியுமுன்னே என்றன்மரு மக்கள்,
இனிக்குமுகத் தோடாடிக் குதித்துவரு வார்கள்,
எச்சரிக்கை இல்லாமல் உள்நுழைந்து விடுவார்.

வேலையில்லை ஓய்வும்இல்லை ஒரேஅமளி! 'பயல்காள்!
வீடெல்லாம் போச்சு'என்று திட்டிடுவார் என்தாய்;
சாலைமண்ணில் பாதியினை அவர்கள்குதி கால்கள்
தரையெல்லாம் நிரப்பிவிடும்! சொல்லிஎன்ன நடக்கும்?

சிரிக்கின்றார்! என்செய்வோம்! ஆண்டவற்கே வெளிச்சம்!
சில்வென்று நாட்டுப்புற மணம்அவர்பால் வீசும்.
அடிக்கின்றார் பாட்டியவள் பெட்டியினைக் கொள்ளை!
அரியதொலை பேசியினைத் திருகிமகிழ் வாரே!

இப்படிஇ ருந்தவர்கள் இருமாத மாக
இறைவன்தன் தூதுவர்போல் ஆகிவிடக் கண்டேன்.
இப்பொழுதெல் லாம்அவர்கள் உள்நுழைந்த உடனே
இசைப்பேழை முன்னேபோய் இருந்துகொள்கின் றாரே!

புத்தம்புதி தாய்த்திறந்த சிற்றூரின் பள்ளி
புகட்டியபண் அத்தனையும் ஒன்றுவிடா மல்தாம்
வைத்திசைப்பார் வையத்தார் காத்திருந்து மகிழ்வாய்
வாய்திறந்து கேட்டிருப்பார் வடிக்கும்இசை எல்லாம்.

யாரும்உணர்ந் திடுமுன்னர் மாலைவந்து நிற்கும்,
இருங்கருக்கல் ஒளிவானில் தெளிந்துபரந் தோங்கும்,
பேரிசையோ உளம்பிணிக்கும்! பிடித்திழுக்கும் நெஞ்சை,
பேசாமல் புத்தகத்தை மூடிஉள்ளே வைப்பேன்.

பீதுவனாம் பெரும்புலவீர்! மலைவாழ்க்கை நீங்கிப்
பெருநகர்க்குள் இங்குவந்தீர்! என்னுள்ளும் புகுந்தீர்!
ஓதுபழங் குறிஞ்சிஇசை அன்றிவேறு அறியா
ஊர்ப்புறத்தி னின்றிங்கே எமைஅடைந்து விட்டீர்.

துயர்ப்பாட்டை மலைக்குறவன் இசைக்கையிலே இங்குத்
தூங்கிப்போய்க் கற்கள்தாம் கேட்டிருக்கும்; இன்றோ
உயர்இசையை அறிந்துகொண்டோம். இனிவிடவும் மாட்டோம்
ஒண்புலவீர், பீதுவரே, எம்விருந்து நீரே!

33

முஸ்தாய் கரீம்

(பி. 1919)

பாஸ்கிரியா,
உருசியக் கூட்டரசு

உருசியன் அல்லேன் உருசிய மண்ணில் உதித்தவன்

உருசியன் அல்லேன் உருசிய மண்ணில் உதித்தவன்நான்,
உரிமையும் வலிமையும் உடையேன் மனந்திறந்து
உரைக்கின்றேன்.
உருசியப்பே ராற்றின் நீரை உண்டு களித்துள்ளேன்,
உயர்ந்த திண்காழ் ஓக்மரம் போலே வளர்ந்துள்ளேன்.

யான்என் வாழ்வால் பெருமிதம் கொள்வேன்; இதுசரியே
இவ்வுரு சியர்தம் வருங்காலம் நம்வருங் காலங்காண்!
நானூ றாண்டு வீரமும் புகழும் பிணைந்துயர்ந்தே
நல்லுற வினில்நம் இரண்டினங் களையும் இணைத்தனவே.

அழைத்தேன் மாசுகோ நட்புற வுக்குரல் கொடுத்ததுவே,
அடிநாள் தனிலும் வலுவாய் அவ்விசை அமைந்ததுவே.
விழையும் உயர்ந்தோர் அவர்போல் இல்லை, உடன்பிறந்தார்—
விரும்பி என்னோடு அவர்தம் விதியை இணைத்தனரே.

உருசியன் அல்லேன் உருசிய மண்ணில் உதித்தவன்நான்,
உருசியக் காற்றை உயிர்ப்பதற்கு உள்ளம் உவக்கின்றேன்.
தருவீர் ஐந்துயிர்; என்உயிர் வாழ்க்கை இதுஒன்றே.
தரும்அவ் ஐந்தொடு பிறபல வுக்கும் சமமாமே.

பாசுகீர் உருசியன் இணைந்தே பயணம் மேற்கொள்வர்:
போரில் வீரத் தோழராய்த் துணிவர்பற் றார்வத்தார்.
மாசில் விருந்தில் மாப்பே றுகளிலும் இணைந்துவப்பர்,
மானச் சாவிலும் மண்ணில் ஒன்றாய்ப் புதைந்திடுவர்.

வலிமை புகசேவ் — சலாவத் தன்னைக் கண்டதுமே
ஒருவரை ஒருவர் உடன்பிறப் பாகத் தழுவினரே.
பொலியும்உன் உயிரும் முன்பே நட்புணர்வு ஆழ்ந்ததனால்,
பொங்கிற்று அன்பில் தோய்ந்துடன் பிறப்பே உருசியனே.

உருசியன் அல்லேன், உருசிய மண்ணில் உதித்தவன்நான்,
சோவியத்து மண்ணில் உதித்த உண்மை மகன்நானே.
ஒருமையில் வாழ்வோம், வானின் உச்சி மின்னலிடும்
உயர்மலை மீதில் ஒன்றாய் நாமும் ஏறிடுவோம்.

என்உயி ருள்ளே இன்இள வேனில் உதயம்எழும்,
என்கண் ணுள்ளே செங்கதிர் இன்னொளி ஏமுறுமே.
என்நெஞ் சுள்ளே நூற்றாண் டுகளாய் ஒலித்துவரும்
ஈடிணை அற்ற உலகின் இன்பப் பாட்டிசைக்கும்.

மாந்தன் உறையும் உண்மை வலிவை, வாழ்வின்ப
மகிழ்வை வேட்டேன் அறிய விழைவேன்; பிறவேண்டேன்.
ஏந்தும் எல்லாக் காலமும் நிற்கும் இவற்றுக்கே
ஓ!என் உருசியப் பிறப்பே உளத்தின் நன்றியடா.

நீயே உணவில் சுவையும் நீரும் உவந்தளித்தாய்,
நீயே கரம்பை விளைநிலம் ஆக்கி நிறைத்துயிர்த்தாய்,
நீயே எம்மவர் மகிழ்வில் திளைக்க நிமிர்வித்தாய்,
நீயே மண்ணில் எம்மைப் பிறரொடும் இணைத்தாயே.

உருசியன் அல்லேன் உருசிய மண்ணில் உதித்தவன்நான்,
உருசியக் காற்றை உயிர்த்த தனாலே உவக்கின்றேன்.
ஒருபத்து உயிர்கள் உதவீர்; என்றன் ஒருவாழ்க்கை
ஒருபத்து உயிர்க்கும் பிறபல வுக்கும் ஒப்பாமே!

* * *

வாழ்வுச் சாலையில் நடந்து செல்கிறேன்
வாகாய்க் காது கொடுப்பீரேல்,
ஆழும் காலடி கேட்பீர்; மற்றும்என்
அருமைப் பாடலைக் கேட்பீரே.

சூழும் இன்பகல் போதில் ஒண்கதிர்
சுடர்கொளுத்துவான் என்வழி
ஆழும் கங்குலில் மின்னும் வான்உரு
ஆயிரம்பல ஆயிரம்.

ஆண்டுகள்பல மங்கல் வெள்ளியாய்
ஆக்கி நின்றன என்முடி,
ஈண்டு வீசிய காற்றுஎன் இன்முகம்
இருள்அடைந்திடத் தீய்த்தது.

வீட்டின் வாயிலைத் தட்டி மக்களின்
வீடுகள் தோறும் செல்கிறேன்,
பாட்டிசைத்திடும் நெஞ்சைத் தட்டினேன்
பாய்ந்து உட்புறம் செல்லுவேன்.

இருண்ட நாள்களும் எண்ணிலாச்சுமை
ஏறும் நாள்களும் இங்குள;
கருமுகில்களும் ஞாயிற்றொளியினைக்
கண்மறைத்துஇருள் கொண்டிடும்.

கருநிழல்களைத் துளைத்துச் சென்றிட
மனமும் வீண்அவாக் கொண்டிடும்,
குருடாய் மாறிடும் விண்மீன் யாவுமே
அந்த நாளில்பின் மங்குமே.

எனினும் என்னுடை வாழ்க்கைப் பாதையில்
ஏகுவேன் தொடர்ந்தே ஏகுவேன்,
குனித்த சாலைகள் தாமும் சட்டென
முடிவை எய்திடும் அறிகுவேன்.

என்ற னக்கொரு வழியைக் காட்டிட
மக்கள் கண்களைப் பார்க்கிறேன்,
‘நன்று நண்பனே, செல்,ந டுங்கிடேல்’
என்ற நாவுரை கேட்கிறேன்.

மாய்க்கும் கோடையின் நாளில், கொட்டிடும்
மாரிக் காலநல் மாலையில்,
வாய்த்த பேயிருள், கொண்டல் வன்குளிர்
வான்அ ரங்கினில் தோய்கையில்,

விண்மீன் தம்மையே நம்பிச் செல்கிறேன்
வெளிறி மங்கிடும் என்வழி,
கொண்டு காட்டுதல் கூர்மை கொண்டநல்
மக்க ளின்விழி கொண்டுதான்.

சீரார் மக்கள் இருக்கும் போதினில்
தவறு செய்திடல் இல்லையே,
தேர்ந்த வழியிலோ அன்றிப் பாட்டிலோ
சிறிதும் விலகலும் இல்லையே.

34

ரிம்மா கஸாக்கவ

உருசியக் கூட்டரசு

(பி. 1932)

புயற்பாதை

பயணம் கடியது, பயணம் இனியது.
பாதை முள்ளது, செங்குத் தானது.
புயலில் சிதைபடு மரங்கள் சூழ்ந்திடும்
பொடிபடு பாறைகள் இடறும் வழியது.

பரிசும் அங்கிலை, விருதுகள் பெறுகிலை,
பரிவுறு புகழ்மொழி ஊக்கம் பெறுகிலை,
விரும்பின் அவ்வழி ஏற்றுக் கொள்குவை:
விலகலும் தொடர்தலும் உன்னைப் பொறுத்ததே.

தடைகள் பற்பல, குழிகளும் எண்ணில,
தளரா உரமும் துணிவும் கொள்வையேல்,
அடையும் அவ்வழி உனக்கு மாத்துணை
ஆகும்; வெற்றிக்கு அழைத்துனை ஏகுமே.

இருமருங்கிலும் தூக்கு மேடையின்
இருண்ட நீழலே தொடரும்; ஆயினும்,
உறுதி மிக்கநம் செங்கா வலர்படை
இழப்பைத் தாங்கியே சென்ற திவ்வழி.

போரின் தீத்தழல் களங்கள் கண்டது;
புயல்கள் வீசிய பாதை; பின்னரோ
நேரும் நாள்களில் அமைதி கண்டது;
வீடுகள் தொழிலின் கூடம் எங்குமே.

நிலத்தி ருந்துபல் சுனைகள் பொங்கியே
நெடுங்கடல் சென்று பாய்தல் போலவே,
உயர்ந்து உயர்ந்துபல் மக்கள் பொங்கினர்
ஊர்கள் தோறும்நல் நகர்கள் தோறுமே.

இல்இ ருந்துஉறை வாழ்வை எள்ளியே
எழுந்து பொங்கிடும் அன்பு நெஞ்சொடும்
வெல்லும் ஒருகுறி நோக்கி ஏகிய
வீரர் தம்மை அவ்வழி மறக்குமோ?

ஈதென் செவ்வழி; வேறு வேண்டிலேன்;
யானும் மக்களுள் ஒருத்தி ஆகுவேன்.
ஓதும் யாவரும் உடன்பி றப்பினர்;
உறைகு வேன்அவர் வாழ்வில் ஒன்றியே.

யார்க்கும் கீழ்ப்படேன்; தாழ்வைத் தள்ளுவேன்;
இடிமு ழக்கம்என் பாட்டும் வாழ்க்கையும்!
ஆர்க்கும் நம்பிக்கை கொண்டு பாதையின்
அறைகூ வல்தனை ஏற்றுச் செல்லுவேன்!

* * *

பீர்ச்சுமரச் சிற்றிலைமேல் தூங்கும்பனி போலே,
மாசுகோசூழும் நாட்டுப்புறம் மங்கல்ஒளி மிளிரும்.
தோற்றும்பனித் திவலையிலே பொடியுருவாய்த் தோன்றும்.
தூய்மைமிகு உருசியமே தெள்ளுருவாய்க் காணும்............

ஆலிலைமேல் அமர்ந்தபனி மங்கிஒளி பொழியும்,
அலைந்தகதிர் பாய்ந்தபனி உருகிஓடை வழியும்,
மால்உருசிய மக்கள்பாடும் மகிழ்வினிய பாடல்
மலரும்வேனில் காலையிலே கரையும்கருங் காக்கை.

கானில்காளான் பொறுக்கும்போதோ, பனிசறுக்கும் போதோ,
காணும்வழி நேர்எனினும் வளைந்துசெல்வ தெனினும்,
தோன்றுகுடைக் காளானும் செம்பெரியும் தெரியும்;
தூயவெள்ளைப் பளிங்கெனவே பனிப்படலம் சரியும்.

முன்னொருநாள் செவிடுஊமை குருடர்என வாழ்ந்தோர்
முனைப்புற்றார் உள்ளொளியின் மாற்றம்மிகப் பெற்றே.
சின்னஞ்சிறு தூசித்துகள் போல்ஒளியைப் பெற்றே
தெரியவேண்டும் உண்மைகளை நான்தெரிந்து கொண்டேன்.

மரங்கள்ஆற்றைக் காண்பதைப்போல் உருசியாவைக் கண்டேன்.
மணிஒளிகொள் கழனிகளும் ஓடைகளும் தழலும்,
திரண்டசையும் அசோகமரம் ஒவ்வொன்றிலும் புகுவேன்,
தேனொளிசார் இளமரமும் என்னூடே புகுமே.

காட்டைநானே படைத்ததுபோல், கழனியெலாம் செதுக்கிக்
கண்டதுபோல், வீடொவ்வொன்றும் கட்டியது போலே,
மாட்சிதிரு உருவாக உருசியாஎனில் வாழும்
உருசியஉயிர் என்உயிராம் உருசியஉடைமை நானே.

35

மிர்ஸா கெம்பே லத்வியா

(பி. 1907)

இன்னிசை

பகலும் இரவும் தீஞ்சுவைப் பண்ணின்
    இசையைக் கேட்கின்றேன்;
புகழ்சேர் புடவி தழுவிய பாக்கிசை
    தொல்லை புரிகிறது.

பெரும்பேர் ஆற்றல் பீதுவன் பண்ணிசை
    சுவரைப் பிளக்கிறது,
பெரும்புய லூடே சோசுதா கோவிச்
    பீடுடன் வாதிடுவார்.

குருசெம் தீவின் கொழுத்த பொழிலில்
    கொஞ்சும் மிடுக்குடனே,
அரும்பேர் இசையின் கருவி முழங்கி
    ஆர்க்கும் கூட்டிசையில்.

பின்னர் பால்டிக் பேரியாழ் பேரொலி
    வெள்ளம் முழக்கிடுமே;
இன்ப இலாத்துவிய ஓடை, ஆறுகள்
    இசைக்கும் பண்ணினைப்போல்.

மின்னேர் யாழ்கள் என்றன் உயிருள்
மேவிப் பாய்ந்திடுமே;
மென்மழை விரல்கள் வயல்வெளி யான
செங்கோட்டு யாழினிலே,

கதிர்கள் என்னும் தந்திகள் தம்மைத்
தழுவி இசைத்திடுமே,
பதியும் விரைவிசைக் கூத்தால் இனிய
மகிழ்ச்சி பரவிடுமே.

விண்ணில் புட்கள் பறக்கும் வெள்ளித்
தந்தியின் இன்னிசையோ
விண்ணில் பறக்கும் புட்கூட் டத்தை
விஞ்சி எழுந்திடுமே.

சிறுவெண் முகிலும் மோசாட் குழலிசை
போன்று சிலிர்த்திடுதே.
பெருங்கடல் நாவாய்ச் சங்கின் முழக்கொலி
பெருக்கிச் சிலிர்த்திடுதே.

நகர்கள் உழைப்பின் கைத்தா ளத்துடன்
நன்றாய் இணைந்திடுமே,
நகரும் வாழ்வின் இன்பம் பெற்றே
நாளும் உயர்ந்திடுமே..

புயற்காற்று இனிய முழவொலி தன்னைப்
புகுந்து முழக்கிடுமே.
இயற்கைப் பண்ணரங்கு அதனில் ஒலிக்கும்
இசைப்பேர் அலைபோலே!

ஏர்உந் துகள்பல நிலத்தில் இயங்கி
எதிரொலி ஈந்திடுமே,
பார்முழு மைக்கும் ஒலியின் இனிய
பண்ணை இயக்கிடுமே.

பேரிசை யேநீ எத்தா ளத்தினில்
 புலவனின் எப்பாட்டைச்
சீரிசை வழங்கச் சிந்திக் கின்றாய்
 செப்புக என்னிடமே?

யாரே நின்றன் அத்துணை உயர்வை
 அடைந்து சிறந்தவரே?
யாரே நினக்குச் சொற்கள் காண்பார்
 இசைப்பாய் பண்ஒலியே.

இம்மா நிலத்தில் உன்னை ஊன்றி
 ஓர்ந்தே நுகர்கின்றேன்,
நம்ப இயலா உலகின் இசைஞர்
 குழாத்தின் இணைஇசையே.

மகிழ்ச்சி

எளிதாய்நான் வெற்றிபெற யாரும்விழை யற்க,
யான்வேண்டேன் முயற்சியிலா நல்வாய்ப்பின் விளைவை.
களித்துவப்பேன் முயற்சியினால்; பொறைவலிவும் துணிவும்
கைக்கொள்ளாது களித்திருத்தல் நாணமுடைத் தாமே.

கோழைநெஞ்சம் அஞ்சுகின்ற மகிழ்ச்சிஎனக் காமே
கொள்ளும்ஓர் அமைதிநிலை உணரமுடி யாதே.
தாழ்வெண்ணம் தூண்டும்அனல் மகிழ்ச்சியினைத் தாரீர்
தன்னம்பிக்கை அற்றார்பால் அதுநழுவிப் போகும்.

தன்னிலும்தான் மகிழ்ச்சியுமே தான்உயர்ந்து நிற்கும்
தலைமலர்கொள் அமளிமிசை மென்துயில்கொள் ளாதே.
வன்மைஇடி வாழ்வின்பட் டடையுறுதல் போலே
மற்றவர்க்கு மிகுந்தளித்தால் மிகுதல்நமக் காமே.

உண்மைமகிழ்வு என்பதெலாம் கடுமைஉறுதி யாமே;
கான்றுமிழும் கோழையையும் திருடனையும் கண்டால்,
மண்டுதுயர் போராட்டம், இடுக்கணுடன் ஒருவர்
வலியனைத்தும் வாழ்வுபெற்ற அனைத்தையும்பெற் றிடுமே.

இன்றன்றி எதிர்காலத் தெப்பொழுதா னாலும்
எளிதாக வெற்றியினை விரும்பிடுதல் வேண்டா.
துன்பத்தில் நெருக்கடியில் புத்தூக்கம் தோன்றி
துயரோடும் கண்ணீரில் பிறந்திடுமே மகிழ்ச்சி.

36

பெர்தி கெர்பாபயேவ் துருக்மேனியா

(பி. 1894)

துருக்மேனிய வேனில்

காலையிலே நீல்நிறமாய் ஒளிரும் வானம்,
காலமுதல் தொடக்கத்தின் தடத்தில் ஆப்பிள்
கோலவடி வமைந்தபடி நாரை கள்தாம்
குரல்எடுத்து வணக்கமிட்டுப் பறக்கும் வானில்.

நீலநிறம் எல்லையறக் கவிழ்ந்தி ருக்கும்
நெடுவெளியை அளந்துவந்த நாரைக் கூட்டம்,
காலம்ஒரு கணப்பொழுது தயங்கி நிற்கும்,
கடும்பழிக்கே ஆளாகும் தலைமை நாரை.

தவறாக மணல்வெளியைக் கடந்து விட்டோம்,
தலைவன்வழி இழந்தான்என்று உளைந்தார் தோழர்.
அவக்குரலும் கூக்குரலும் இட்ட வண்ணம்
அவன்பின்னே பறந்ததுவே நாரைக் கூட்டம்.

'தலைவன்தான் தவறுடையான் வியப்பீ தென்னே!
தனிவானின் கீழேநாம் காண்ப தென்ன?
தொலைஏரி எதிரொளிர்ந்து நம்மைக் காட்டும்
தோன்றியதும் எப்பொழுதோ மண்ணின் மீதே.'

வறள்பாலை காராகும் களைப்பு மிக்க
நாரைகளின் சிறகின்கீழ்த் தோன்றல் வேண்டும்,
திரளான மணற்குன்று, மஞ்சள் மேனித்
தீவிலங்கின் பேருடலாய்த் தெரிய வேண்டும்.

'காசுபியன் கடலதனைக் கடந்திட் டோம்நாம்'
கடுவியப்பாய் நாரைகள்இவ் வாறுகூறும்:
ஏசும்வணம் நம்தலைவன் தவற வில்லை,
எதிரேபார் 'கோபட்டாக்' விரிந்து தோன்றும்.

வடக்குநோக்கிப் பறந்தபொழு திருந்து சற்றும்
வழிதவறாது ஒழுங்காக வந்துள் ளோம்நாம்
நடக்கட்டும் விந்தைஎன அல்லா, கீழே
நமக்கிந்தக் காட்சிகளை வழங்கி னாரோ?

ஒருவேளை இவ்வேரி தனையும் மாந்தன்
ஓங்குபெரும் பாலையிடைப் படைத்திட் டானோ?
உருவநிழல் தரையெல்லாம் படியும் வண்ணம்
உயர்வானில் திரியும்அவை கத்திக் கொண்டே.

மாந்தரெலாம் கடவுளரைப் போல்ஆம்! திண்ணம்
வருணனொடும் இந்திரனும் செவ்வாய் போல்வர்!
ஏந்திப்பேர் ஆற்றின்திசை மாற்று கின்றார்
விண்மீன்கள் நோக்கியவர் சுவடும் மின்னும்.

முன்னொருகால் சாரூமின் பெரும்பே ராட்சி
முழுதோங்கி இருந்தகொடும் பாலைக் காட்டில்,
இன்றரிய அமுதாறு பாயச் செய்தார்
இயற்கையதன் ஆற்றலினை வெற்றி கொண்டார்.

நீர்அதன்நல் அழைப்பாலே உயிர்த ளிர்ப்ப
நீர்க்கரையில் செம்மலரின் செடிகள் ஓங்கும்
நாரைகளோ வியப்புக்கே வியப்பாம் இந்த
நலங்கண்டு நினைக்கவொணா மலைப்புக் கொள்ளும்.

பாலைநிலச் சாயல்எலாம் மறைந்தோ டிற்று,
பசுமைநில வயல்வெளியே வழிமுன் தோன்றும்.
ஆர்வமுறு நாரைகளும் மாரிக் காலத்து
ஆப்பிரிக்கா செலவேண்டா! இதுவே போதும்.

அன்பான பறவைகளே! துருக்கு மீனப்
புல்வெளிகள் உம்மனைகள் இனிதா கட்டும்.
எம்வேட்டைக் காரரும்இவ் வெல்லைக் குள்நீர்
இருக்குமட்டும் துமுக்கிதனை எடுக்க மாட்டார்.

பண்டுமுதல் இருந்துவரும் உந்து ணர்வால்
படுதொலைவு நீல்விசும்பைக் கிழித்துக் கொண்டே
கண்டிடவே சியார்சியன் சமநி லத்தைக்
கரைந்துகொண்டு பறந்ததுவே நாரைக் கூட்டம்.

37

அலிம் கேஷக்கோவ்

(பி. 1914)

கபார்டினோ
பல்காரியா,
உருசியக் கூட்டரசு

மாலைப் பாடல்

சாய்ந்த நிழல்கள் மேலும் இருண்டு தூங்கவே
தவிக்கும் குன்றில் பாதையில் கோடாய்ச் சென்றன.
வாய்த்த செவ்வான் சிப்பி, உடுக்களின் மெல்லிய
அலகால் பிளக்கப் பன்னிற மணிகள் வழங்குமே.

பகலவன் மறையும் காட்சி மேன்மை விருந்தடா ....
பார்,பார்.........தொல்நரைக் குன்றுகள் பத்தும் வட்டமாய்
அகல்வான் அரங்கில் மணிச்செம் மதுவழிந் தோடிடும்
அழகிய மதுக்கிண் ணத்தினைச் சுற்றி அருந்துமே.

மெல்லென அம்மது தாழ்ந்து தாடியில் வழிந்ததே
மேவும் தாடையில் சிவப்புச் சாயம் பூசுமே!
வல்விசும்பு இறங்கி வருதல்போல் நெருங்கித் தோன்றிடக்
கல்லெழுந் தோங்கும் காகசு மலையினும் படிந்ததே!

என்றும் அழியாக் காலம், பகலொளி போலவே,
இருந்திடும் காற்றின் பூடக் இசையும், அஃதொரு
செந்நிற மதுவின் கிண்ணமும் என்றும் இறங்குமே.
செறிந்தும் சாய்ந்தும் வீழ்ந்திடும் நிழல்களும் அன்னவே.

விண்கலம் செல்கையில் அதன்பின் புதியதோர் பால்வழி
மெல்லத் ததும்பி வானம் எங்கும் பொங்கிடும்,
வெண்ணி லாத்தான் இருளில் குறியிடம் சேர்கையில்
மேவிய அவ்வொளி நீளும் தடம்போல் பின்வரும்.

குதிரை மேலே ஏறி வரும்ஓர் வீரன்போல்
குமுறி வெள்ளம் இருமலை முகட்டிடைப் பாய்ந்திடும்,
புதிய வைகறை மாலைக் கருக்கலும் புத்தொளி
புலப்ப டுத்தியே மாய மருட்கை காட்டிடும்.

கட்டாரி

மின்னும் இருபால் அலகுகள் மேவும்
ஒருகட் டாரிதனில்,
முதுகும் முதுகும் இணைந்திரு புறமும்
கூர்மை திகழ்ந்திடுமே.
ஒன்றாப் பகைமேல் இன்னற் போதில்
இடையூறு எழும்போதில்,
சென்று எதிர்த்து வெற்றியை இழிவைச்
சேர்ந்து பகிர்ந்துண்ணும்.

தொழிலின் கமுக்கம் தெரிந்தோர் மட்டும்
சுடர்கொள் கட்டாரி
வழிவழி யாக வடிக்கும் பணியை
வாழ்வில் கொண்டார்கள்;
தொழிலை ஒருவன் தந்தை வழியில்
தொடர்ந்து கற்றிடுவான்,
அழிவில் அன்பால் மைந்தற் கன்றி
யார்க்கும் புகட்டாரே.

கட்டாரி யின்முறை அடிமைத் தனத்தில்
கட்டுப் படாமுறையே;
கட்டாரி யின்சூள் உரையை முரித்தல்
இயலாக் கடுமைஅது.

கட்டாரி யின்கூர் விளிம்புகள் இருண்ட
கறைகள் தோய்ந்தவையே;
எட்டாக் காலமும் கடினப் பாதையும்
உறையாய் இட்டிருக்கும்.

காலப் போக்கில் கனிந்து சிறந்த
செம்மைக் கட்டாரி,
சால மாந்தர் நன்றைத் தீதைச்
சாரத் துணைபுரியும்.
மேல வர்க்கும் எளியர்க் கும்அது
மேலாய் உதவியது,
கோல உயிரின் உயர்வை இழிவைக்
குறித்தது இதுவாகும்.

மானம் என்றால் ஒருமுகம் தானே,
என்றும் இரண்டாமோ.........?
மானத் திற்கா ஊக்கத் துடனே
மலைக்கும் கட்டாரி.
ஆன அலகுகள் அதனால் தானே
மழுங்க மறுத்திட்டுத்
தான்ஓர் எஃகின் வாளாய் இணைந்து
விளிம்பு பெறும்ஒன்றே.

எஃகின் சினத்தில் கனன்ற தோற்றம்
வியந்தே ஆர்வமுடன்,
மிக்கென் எண்ணந் தன்னுள் ஆழ்ந்த
வேட்கை விளைந்ததுவே.
உண்மையும் சொல்லும் ஒன்றாய் இணைந்தே
ஒளிர்கட் டாரியதன்
நுண்கூர் இருமுனை போல்மின்னி ஒளிக்கும்
அலகாய் மாறுகவே.

38

பெதர் குஷங்காய்

சுவெஷியா,
உருசியக் கூட்டரசு

(1907—1970)

சுவெஷியாவிற்கு அழைப்பு

என்றும் மாறா இளமை கொண்டது
எங்கள் பழநாடே!
இதனைப் போலக் கதையில் பாட்டில்
யாரும் படித்ததுண்டோ?
இங்கே மாந்தர் இணைவிழை அரங்கின்
இருள்சேர் ஆடலிலும்
எழும்பண் தூய இன்னிசை ஆகி
நெஞ்சம் சிலிர்த்திடுமே;
இங்கே விளையாட்டு உவகை ஊற்றாய்
இன்னொளி பொங்கிடுமே;
இங்கெம் உழைப்பால் மலையைக் கூட
இடம்பெயர்த் திடுவோமே.

நூறா யிரமாய் வளங்கொள் சொற்கள்
நுவலும் இனியமொழி;
நூறா யிரமாய்க் காதுக் கினிய
நுகரும் பண்ணிசைகள்.
நூறா யிரமாம் பின்னல் வேலைகள்
நுட்பப் பாங்குடனே,

சீராய் இயற்றும் மக்கள் எம்போல்
நீவிர் அறிந்ததுண்டோ?
நேராய் வந்து பாரீர் எம்மை
நெஞ்சில் ஐயம்எழின்
நீளத் துருவிப் பார்ப்போம் நாமே!
உண்மை நிலைபெறுமே.

* * *

பைன்மரக் காடு, படர்ந்திடும் எறும்புகள்,
பசுமரம் தோறும் பயில்மரங் கொத்தி,
அழுகும் சருகிடை எழுந்திடும் காளான்,
இந்த மண்ணகம், இங்குள உயிர்கள்,
என்றன் நண்பர்கள்; என்வழித் தோழர்கள்.
இவர்களை எல்லாம் திடுமென ஒருநாள்
பிரிந்து செல்ல வேண்டுமா?
என்னால் நம்ப முடிய வில்லையே.

நான்பிறந்த ஒல்கா காணா தொழியவா?
மீனவர், படகு, வான்உலாம் கடற்புள்,
மக்கள் இன்னிசை மறந்து போகவா?
'வாழ்வதா சாவதா?' என்பதற்கு ஒருவிடை-
எதுவெனின் என்ன? எனதுஓர் விருப்பம்
இங்குஇவ் விடத்தே என்றும்
வாழ வேண்டும் வாழ வேண்டுமே.

39

சிமியோன் கிர்ஸனவ்

உருசியக் கூட்டரசு

(பி. 1906)

எ[redacted] மந்திர அறை

மாய[redacted]கம்பியால் சூழப் பட்டதென்
மாய [redacted]றையே.
மாய உ[redacted]டகள் மாட்டிக் கிடக்கும்,
விண்மீன்[redacted]ன்னிய கூம்புநேர் பாகையும்
நிலாஇழை[redacted]ன்னியே ஆடையும் இருக்கும்;
மந்திரக் கே[redacted]ல்பல மண்டிக் கிடந்திடும்.
மூன்று குறளி[redacted]ள்,
ஒருபெரும் பூத[redacted],
பறக்கும் கம்பள[redacted]
மாயக் காரியின் [redacted]டைப்பம் ஒன்று,
மூவெழு கற்கள் நீ[redacted]பெருஞ் செருப்புகள்.
கண்கா ணியனின் க[redacted]ப்புமுக மூடி,
கத்தாக் கழுதை ஒன்[redacted]ம்
அய்யா தயவு செய்க [redacted]ன்னும்
வணக்க உரையினை வ[redacted]ங்கி நிற்குமே!
இருளை விரட்ட விளக்[redacted]ற் றியதும்
வீட்டு வேலைப் பாடங்க[redacted] முடிந்ததும்
நான்என் மாய அறைக்கு[redacted]

இளைய மகனை அழைத்துச் செல்கிறேன்
பச்சை ஊதாம் பையில் பறக்கிறோம்,
பயணச் சீட்டிலை அறிக!
நிலவின் வெள்ளித் தோட்டில்ஓர் பகுதியை
உரித்தெ டுத்துக் கொண்டு திரும்புவோம்.
பலகணி வழியாய் வீட்டினுள் நுழைகிறோம்.
நேராய் மாயக் காரன்விளை யாட்டு
விளையாடத் தொடங்குவோம்.
உறைபனிப் புயலை உரத்தழைத் திடுவோம்.
கற்களைப் பல்லியாய் மாற்றுவோம், மீண்டும்
கற்களாய்ச் செய்வோம்.
அமைதியி னோடும் ஆர்ப்பொலி கூட்டிப்
போலி இசைபதி தட்டுகள் செய்வோம்.
கட்டை விரல்அளவுக் கன்னி ஒருத்தி
மேசைமேல் சுழன்று சுழன்றே ஆடுவாள்.
எதிர்பார்த்து நிற்கும் மகனிடம் சொல்கிறேன்.
'இங்கே இருப்பது கனவுலகின் திறவுகோல்
எங்கும் பரவி எங்கும்ஊ டுருவும்
நீல நிறத்து மாயக் கதிர்இதோ,
வைரம் வேண்டிநீ விரும்பின்
கதிரினைப் பாய்ச்சு! பிறகு காண்நீ!
பதக்க முகப்பிலே வைரம் பளிச்சிடும்.
சட்டைப் பையில் இடமுடி யாது;
பேரா சைக்கைப் பிடியில் கொள்ளாது.
தேவதைக் கதையின் மாந்தரை அழைக்கலாம்;
ஆனால், அளவளா வுகையில்
அதட்டலும், துடுக்கும் ஆகவே .ஆகா;
அதனை அவர்கள் தாங்கமாட் டார்கள்.
அவர்கள் அகல்வர்என் மாய அறையும்
சிறிது சிறிதாய் மறைந்திடும்.
மாயக் கோல்கள், உடுக்கள்,
மாயக் காரியின் துடைப்பம் எல்லாம்
ஒருபொடி இன்றி ஓடி மறையுமே.'

40

அனா கவுஸோவ் — துருக்மேனியா

(பி. 1920)

கழுகு

தகதகக்கும் விண்மீன்கள் மறைவதற்கு முன்னால்,
தன்ஒளியைத் தான்இழக்கும் தொடுவானப் போதில்,
மிகஉயர முகில்இடையில் கழுகுஒன்று தோன்றும்;
நிலத்திடையில் மஞ்சள்மணல் மீதில்விழி நிறுத்தும்.

பாலைவனத்து உயிர்கள்எலாம் வெறுத்துஅஞ்சும் கழுகு
பகரஒண்ணா இகழ்ச்சியுடன் மண்உலகை நோக்கும்.
மாலுறுநல் சமவெளியின் விந்தைகளை எல்லாம்
மனம்நெகிழாது எரிச்சலுடன் சலிப்புடனே காணும்.

எனினும்அது விழிதாழ்த்திப் பறக்கையிலே ஒருநாள்
எதிர்பாராக் காட்சிகண்டு திடுக்கிட்ட தன்றே.
இனிமைஇலா வறள்நிலத்தில் மாந்தன்கை வண்ண
எழுச்சியினைப் பண்பாடிப் பாய்ந்ததுஓர் ஆறே.

பாவலனின் தொழில்

காலமெலாம் சட்டம் இப்படித் தானே
கழுகைச் சந்திக்க மலைபற வாதே.
சால வணிகமும் வணிகரைச் சாரா,
சால்புள்ள வணிகரே வணிகத்தைத் தேர்வார்.

வணிக வரிசையில் வேறான ஒன்று
வகைபடப் பாட்டினைப் புனைதலே ஆகும்.
வணிகங்கள் அனைத்துளும் புதிது அன்றே,
வணிகரின் விதிகளுள் இதுஅடங் காதே.

தோழனே! இத்தொழில் யாதென அறியாய்,
கோடையில் வீட்டினை விட்டகல் போதில்,
பாவல னாய்உனை நீதேர்ந்த தில்லை;
பாட்டுனை அடைந்தது உன்னொடும் நடந்தே.

ஆர்ப்புஅலை காசுபியன் கடல்கடக் கையிலே
அங்குஅந்தக் கப்பலில் பாட்டுஅணங்கு இருந்தாள்;
ஆசுகாபாத் தில்இன்பப் பூங்காவில் உன்னை
அருகுஅணைத்து இளவேனில் பாட்டுயிர் ஆனாள்.

இருந்தும் உனக்குஅவள் மயக்குஅணங்கு அல்லள்,
ஏகும் நெடுவழிக்கு இன்புறு துணையாய்
வருபவள் தானலள்! கடமையின் செல்வி!
வண்மைகொள் முதிர்வினள்; வலிமைகொள் பாட்டே..

காலமெலாம் சட்டம் இப்படித் தானே
கழுகைச் சந்திக்க மலைபற வாதே.
சால வணிகமும் வணிகரைச் சாரா,
சால்புள்ள வணிகரே வணிகத்தைத் தேர்வார்.

மலைவளர் நிரையிடைப் பிறந்தவள் நீயே
மறைசுவர் அருகுஉனைக் கிடத்தினள் உன்தாய்...
ஒளிர்கதிர்ப் போர்வையில் உனைஎடுத்து அணைக்க
ஓடிவந் தாள்ஒரு தாய்,அவள் பாட்டே!

41

டேவிட் கூக்லித்னோவ்

காலமைசியா,
உருசியக் கூட்டரசு

(பி. 1922)

* * *

கங்குற் கனவுகளில் நண்பனைக் கண்டேன்நான்;
இங்குஎன் உளந்தொட்டான்; ஏகினான் — பின்அங்குக்
காலம்எனும் யாழ்நரம்பு கல்என்று அதிர்ந்ததுவே,
மேல்விரைந்து பாடும் இனி.

துடிக்கின்ற நெஞ்சைத் தொடுகின்றேன் கையால்;
துடிப்பதென்ன? தோன்றாஎன் பாட்டா?—வெடிப்புறவே
கூர்அலகால் 'இல்லாமை' யாம்ஒட்டைக் குத்திடுதே
ஆர்வமாய் மேலே வரற்கு.

* * *

விரைந்தோடும் உயர்குதிரைக் கடிவா ளத்தை
விட்டதுபோல் வீச்சொன்றில் என்றன் எல்லா
நிரைஉறுதிப் பாடெல்லாம் வீணா வாகி
நேராக நல்லறிவை மீறிப் பாயும்.

முடிவாக விடுபட்ட என்றன் சொற்கள்,
மூண்டபெரும் சுழல்காற்றாய்ப் பாய்ச்சல் கொள்ளும்.
அடியார்ந்த கனவிருந்து பீறிட் டோங்கும்
அன்புஎழும்பி உன்மீதில் விரையும் ஓங்கும்.
ஒடியாத உள்ளத்தில் உணர்கி லாயா?
உனக்கிலையா அச்சஉணர்வு என்னைக் காண?

முன்னைப்போல் இருப்பாயா! மகிழ்ந்துஏற் பாயா?
முன்னைப்போல் தோழன்என அழைத்தி டாயா?
என்னைநீ சந்திக்கும் நேரம் எல்லாம்
உன்நெஞ்சை மீண்டும்நீ திறந்தி டாயா?

துயரற்ற இன்முறுவல் தோன்றி டாதா?
துணைவழியில் நம்பிக்கை மின்னி டாதா?
விரைவற்ற அமைதியுடன் இனிய பாங்கில்
விழைவுறும்என் கையொடுகை பிணைத்தி டாயா?
இல்லை! இனிமேல் இல்லை! நில்நில்!
எல்லை இல்லாத் துன்பினுள் ஆழ்கிறேன்
எனைச்சிறைப் பிணித்துளாய், அதுமுறை யன்று.
ஏனெனில் எவனது களவினில் யானும்
பங்குண் டிருப்பனோ, அவனைப் பழித்துநான்
நம்பி என்னை நாடிய உன்றன்
அன்பிற்கு இணங்க ஆட்படு கின்றேன்.
மாந்தர் அழினும் அவர்தம் விழிகள்
கண்ணீர்ச் சுவடே காட்டா ததுபோல்
என்றன் அழுக்காற் றுள்ளம்
ஊமை ஆனதே உரிமை இன்மையால்...

என்முறை யீட்டினைக் கேட்பாய்:
என்னைப் பற்றி அவனிடம் இயம்புக,
அவனைப் பற்றி என்னிடம் வேண்டா,
யாரைநீ விரும்பினும் விரும்பா விடினும்
நான்உன் நம்பிக்கை யாளனோ

ஈன்ற தாயோ அல்லேன்.
நானுனை இரந்துகேட் கின்றேன்.
நீநின் நெஞ்சா ழத்தினைக் காட்டக்
கூறிய சொல்லினும் வேறுசொல் தேடுக,
என்னிடம் கழுக்கங்கள் ஓய்வுற மாட்டா.
இனியும் காதல்மேல் நட்பினைத்
திணிக்கவும் மாட்டா தெரிந்து கொள்கவே.

42

ஆர்காடி குலேஷேவ் பைலோரஷ்யா

(பி. 1914)

என்றன் பாடல்கள்

'மலரிடை மலர்ந்தவை அல்லஎன்
பாடல்கள்...........'

யான்கா குபலா

எச்ச ரிக்கை ஏதும் இன்றி
முதுமை வந்த டைந்ததே.
இறைஞ்சு கின்றேன் உடன்பி றந்தீர்!
இனிப்பி றக்கும் இளவல்காள்!
மெச்சும் இன்பம் கொஞ்சல் இன்றி
என்றன் இளமைப் பாடல்கள்,
மிகவெ றுக்கும் நச்சுப் போலும்
உருளும் தாழி போலுமே.

என்றன் பாடல் மலர்கள் ஊடு
பிறந்த தில்லை தம்பியே.
இன்னற் காலம் போரை நோக்கி
யாங்கள் செல்ல நேர்ந்ததே.
இன்று நாங்கள் எங்கள் பாட்டை
அணிவ குப்பில் பாடினோம்,
எழுச்சி மறவன் விவரப் பாடல்
முன்ன ணிக்கண் ஓங்கிடும்.

காலணிகள், இடுப்பின் கச்சை,
பழுப்பு டைகள் மாட்டியே
பாடல் தம்மை நடக்க வைத்தேன்
படரும் துன்பம் தாங்கவே.
போலிப் புகழை விரும்பி அவைதாம்
போரை நாட வில்லையே!
புனையும் எதுகை மோனை தம்மால்
பொன்போல் உயிரைக் காத்தவே.

சீர்த்தி, புகழின் நாட்டம் அங்குச்
செழித்தி ருக்கக் கூடுமோ?
சிந்தை செவியில் பாடல் இன்பம்
சிலிர்த்து இனிக்கக் கூடுமோ?
ஆர்க்கும் பாட்டின் அடிகள் தோறும்
நாட்டின் குருதி தோய்ந்ததே;
அழிந்த ஊர்கள் அஞ்சி நின்ற
குழந்தை கள்தாம் கொஞ்சமோ!

உயிர்அ ழிக்கும் தீக்குள் பாடல்
ஓட நானும் பின்சென்றேன்;
உருகும் நெருப்பில் பாடல் கள்போல்
நானும் வெந்து கருகினேன்;
நயம்இ லாத முரட்டுப் பாடல்
வடித்த அந்தக் கையினால்
நாட்டில் அந்தப் பாடல் வாழத்
துமுக்கி தனையும் ஏந்தினேன்.

ஓல்கா விரிவைச் சிவேரிக் காட்டை
கிரெம்ளின் நகர்கள் யாவையும்
உயிர்கொ டுத்து நானும் என்றன்
பாடல் தாமும் மாய்வதே
மீள்வு செய்யும் வழியாம் என்னில்,
மிகவும் மகிழ்வு பொங்கவே,
வீரர்கல் லறைக்குள் அன்றே
மேனி மாய்ந்தி ருப்பனே.

அதனால் அன்றோ இந்நாள் போர்கள்
அடங்கி ஓய்ந்து சென்றபின்
ஆர்க்கும் அமரில் வெற்றி தந்த
என்றன் பாட்டில் ஆழ்கிறேன்;
பதைவு செய்த அடிமை நீக்கி
என்றன் மக்கள் உரிமையாம்
பாதை ஏறி உயர்வு பெற்ற
பாங்கில் மேலும் மகிழ்கிறேன்.

என்றன் பாடல் மலரைப் போல
இயன்ற தில்லை — உங்களின்
இனிய உயிரைக் காக்க விழுப்புண்
ஏந்தும் எளிய மறவனாம்.
புண்ஒவ் வொன்றும் புகலும் கதையை,
வடுக்கள் ஆழ்ந்த பொருளவே.
புகழ்உ டுக்கள் புனைந்த மறவன்
போல அவனை ஏற்பீரே.

43

கயிசின் குலியேவ்

(பி. 1917)

கபார்டினோ
பல்காரியா,
உருசியக் கூட்டரசு

என் நண்பர்களுக்கு

எவ்விடத்தும் நாமே இணைந்தொன்றாய் நின்றிடுவோம்;
அவ்விடத்து இன்பம், அவலம் பகிர்ந்தேற்போம்;
தன்னந் தனியானால் தாக்குங்கல், செங்குத்து
முள்வழியில் சென்று முடமான மாப்போல்வேன்.
என்றன் விருப்பம்இதே ஈடில்நம் நட்புத்தீ
நின்று சுடர்விடுக, நீள்நிலத்தில் பொன்றும்வரை
நாண்ஏற்றா வில்லாவேன் நான்தனித்தால், செந்நெருப்புக்
காணா அடுப்பாவேன், காயா மரமாவேன்.
வாழ்வுப்பண் பாடி முடியுமட்டும் உங்களொடும்
ஆழ்ந்திருப்பேன் அன்பில்; அரியநண்பீர் நீரும்இவண்
வாழ்வீர் எனைப்பிரியா வாழ்வு.

அங்கொரு நங்கை ஓடையில் குளிக்கிறாள்...

ஓடையி லேஒரு நங்கை — அவள்
ஒய்யார மாய்க்குளிக் கின்றாள்
கோடை யிலேசெம் பரிதி — ஒளி
கூட்டுகின் றாள்கதிர்க் கன்னல்.

பொற்கதிர்க் கைகளி னாலே — அவள்
பொன்மேனி தழுவுதல் போலே
முத்தொளி ரும்வேய்த் தோளை — மெல்ல
மொய்த்து மனமகிழ் கின்றான்.

நீரின் கரைமிசை நாணல் — புதர்
நின்று கவிழ்ந்திடும் நாணி
சீரின் மிகும்அதன் நீழல் — அவள்
சித்திரக் கூந்தலைக் கோதும்.

ஓடைக் கரைப்புதர் தாமும் — நல்
ஓம்பிடும் அமைதியை ஆங்கே.
மேடைப் பசும்புல் வெளியில் — புல்
மேவும் உறக்கத்தில் ஆழும்.

ஓடையி லேஒரு நங்கை — அவள்
ஒய்யார மாய்க்குளிக் கின்றாள்
பாடையில் சென்றது சாவு — அதன்
பாழ்மை இருந்ததே இல்லை.

வருத்தம், பிணிகொடும் தீமை — இனி
வந்து நெருங்கிட மாட்டா.
குருதியும் சிந்துதல் இல்லை — கொடும்
பூசலும் போரும்அவ் வாறே.

ஈடில் அழகொடு அமைதி — அட
ஏற்றம் பொலிந்தது வாழ்க்கை!
ஓடையி லேஒரு நங்கை — அவள்
ஒய்யார மாய்க்குளிக் கின்றாள்.

* * *

எம்மரமும் ஒக்கெனினும் செரிஎனினும் இங்கே
இன்நிழலால் வேறுபடும், மற்றதுபோல் ஆமோ?
என்றேனும் இளவேனில் இனிமைஅறு மேனும்
இலையுதிர்நாள் தனிலும்அது எவ்விதத்தும் மேலாம்.

அடவியதன் பசுமையிலும் பலவகைகள் உண்டே
அடர்வண்ணம் வெளிர்வண்ணம் அழகுபல வாகும்.
படிந்துமலைப் பாறையிலும் சரிவினிலும் மின்னும்
பனிப்படல வெண்மையிலும் பலசாயல் காண்பாய்.

ஒவ்வொன்றும் அதற்குரிய நோக்கம்நிறை வேற்றும்,
ஒவ்வொன்றும் உரியசுமை தான்சுமந்து செல்லும்;
இவ்வினிய உலகத்தில் கல்லுக்கு நிகராய்
எங்கேனும் மரக்கட்டை இருப்பதுண்டோ? கூறாய்.

தமக்கென்று துயரங்கள் உயிர்க்கெல்லாம் உண்டு,
தமக்குரிய தொலைவுதனைப் பறவைகளே கடக்கும்.
எனினும்இங்குக் கடல்உள்ள காரணத்தால் காட்டின்
எழில்ஓடை வறளத்தான் வேண்டும்எனல் முறையோ?

எருதுகளின் குளம்புகளும் கொம்புகளும் ஒன்றாய்
இருப்பதிந்த உலகத்தில் எங்கேனும் உண்டோ?
அருமைமிகு காதலியே! நின்நிறை குறைகள்
அடியேன்பால் தேடுவதை விட்டொழிப்பாய் நீயே.

44

அப்துல்கசிம் லகுதி தாஜிகிஸ்தான்

(1887-1957)

நாலடிகள்

உன்பெய ராலே இவ்வுலகம் பெருமைப் படுமேல் மிகநன்று,
வன்துயர்ச் சுமையாய் வையத்தார் நாணும் படிக்கு வாழாதே.
ஆயினும் உலகம் முழுமையுமே அடர்ந்து பழிக்க முன்வரினும்
நேர்மை கட்டளை இடும்போது நீஅதிற் சிறிதும் பிறழாதே.

* * *

எவர்க்கும் வணங்காத் தலையினரை ஏத்திப் புகழ்ந்து பாடுகிறேன்
அவர்தம் திண்ணிய நெஞ்சந்தான் அருங்கடன் ஆற்றிப்
[புகழ்எய்தும்.
வென்று பெற்ற விடுதலையை வேற்றார் காலில் சாய்க்காமல்
நின்று பொருது மடிந்தோரை நினைந்தே என்றும் போற்றுவனே.

* * *

இரும்புத் தளைகள் கைபிணிக்க இருந்தான் சிறையில் தொழிலாளி
வருத்தும் வலிய கூரைக்குள் வாடும் அவன்என் குரல்கேட்டான்

கோமா னுக்கே கோட்டையினைக் கொடுநில வறையை
[நீர்சமைத்தீர்
ஆமாம் நீங்கள் அதைநொறுக்கி அழிப்பீர் வேறு வழியில்லை.

* * *

நீயில் லாத கணமெல்லாம் நெருப்பின் வாயில் நிற்கின்றேன்
நீயுன் கண்ணால் காண்பாயின் களைத்த நிலையைக் காணாயா?
என்றன் விழிகள் கனத்தனவே, நெஞ்சம் துயரால் இடிகிறதே,
என்றன் இளமை நீயின்றேல் முதுமை எய்தி விறைத்திடுமே.

* * *

காலம் எல்லாம் உன்காதல் பாடிப் பாடிப் புகழ்கின்றேன்;
காலம் முற்றும் உனைஎண்ணிக் கற்ப னைக்குள் திளைக்கின்றேன்;
நெஞ்சில் வாழ்வது நீயன்றோ! நின்னை வைத்துக் காப்பாற்றும்
நெஞ்சக் கோட்டை தனைஏன்நீ புண்ணாய்ச் செய்வாய்
[விழிக்கணையால்.

45

விளாடிமிர் லுகவ்ஸ்க்கோய்

உருசியக் கூட்டரசு

(1901-1957)

வேனில் பாடல்

சுனையூற்று மிகுந்தோடும் விண்ணோங்கும் நீல
மலைப்பாங்கில் எஃகுருக்கும் ஊரல்பங் கதனில்

அழகாலே புகழ்பெற்ற தொழிலாளி நங்கை
முழுநேரம் கடமையிலே முனைந்தாழ்ந்து நின்றாள்.

எவருமே லையூபாஷா காதல்பெற வில்லை,
எவருமே அவள்நெஞ்சத் திறவுகாண வில்லை,
காரிகையின் கனிவுக்குப் பலர்திரண்ட துண்டு,
காரிகையோ புறக்கணிப்பாள் சிடுசிடுப்புக் கொண்டு.

தற்செருக்கை லையூபாஷா கொண்டிருந்தாள் இல்லை
எற்றியவள் இகழ்ச்சியுடன் நோக்கியதும் இல்லை.

செம்மாந்து சார்பற்றுத் தொழில்புரிந்து வாழும்
கம்மியரின் மரபுதித்த கடமைமிகு கன்னி.

பெறற்கரிய பெரும்பரிசாம் பெண்இவளைக் கொள்ளும்
திறம்எவர்க்கோ என்றெஃகு தொழிலாளர் திகைப்பர்.

வானரங்கில் வண்ணஒளி வகைவகையாய்க் கோலம்
தானமைக்கும் தனிமாலை தனைக்காத லித்தாள்.

தன்நீல விழியொத்துத் ததும்பிநெகிழ்ந் தோடும்
இன்கோல சுசோவியா ஆற்றைக்கா தலித்தாள்.

எழில்கொஞ்சும் இளவேனில் வனம்விரும்பி னாலும்
ஒழிவற்றுத் தன்குரலால் பாடுவதை வேட்பாள்.

கணக்கற்ற காதற்பா இசைக்கின்றாள், ஆனால்
இணங்கத்தான் மறுக்கின்றாள் இதமில்லாப் பெண்ணாள்.

அவளுக்கே மூச்செறிந்தேன் இளைஞனாம்அந் நாளில்
அவளுக்கே அரற்றினேன்நான் அறிவில்லாப் போதில்.

அவளுக்கே அரற்றலொடு பெருமூச்சும் விட்டேன்
அவளுக்கே இறப்பதற்கும் அன்றுதுணிந் திருந்தேன்.

படர்துயர மேலீட்டால் முதுகம்மி யன்பால்
கடலணங்கு நம்பிக்கை பற்றிச்சில கேட்டேன்.

'யார்அறிவார் ஆங்கதனை, ஆனாலும் ஒன்று
வாரியிலே பலவகையாம் மீன்வாழ்தல் உண்டு.

கடலணங்கு என்றிருந்து வெளிப்பட்டுஇசை பாடின்
அடலணங்கு லையூபாஷா பாடுதல்போல் இருக்கும்.

என்றிசைத்தான். இன்னொளியின் வெண்மதியம்......பாடும்
அல்லிசைப்புள்.........குன்றுகளின் மீதொளியின் சுடர்கள்.

பறந்தேகும் பறவைநிழல் விலகிவழிச் செல்லும்
சிறந்தோங்கும் பாடல்ஒன்றோ ஆற்றருகில் கேட்கும்.

விண்மகளின் ஒருகன்னம் நாணத்தால் சிவக்கும்
வெம்மையினால் மறுகன்னம் கன்றிப்போய்க் கிடக்கும்.

பேரலைகள் விடியலுடன் பெருகொளியால் மோதும்
காதலருக்கு இனிமைதரும் கங்குல்மறைந் தேகும்.

மேற்றிசைக்கு நிழல்கள்தமை வைகறைது ரத்தும்
தோற்றமுற வெள்ளமிசை மலைகள்நிமிர்ந் தோங்கும்
நாற்றிசையும் கருங்கற்கள் குருதிஒளி பொழியும்.

உடையட்டும் என்நெஞ்சம் ஓங்கும்கொடுந் துன்பம்
உடைந்திடுங்கால் ஓங்கிஎழும் உள்ளூறங்கும் பாட்டு.

செக்கர்ஒளி உலையின்தழல் செழித்துக்காய்ந் திடவே
சுக்குநூறாய் உடைநெஞ்சே, அவள்எழில்பா யட்டும்.

படபடத்துத் துடித்தேகும் பறவையினைப் போலே
அடடேநீ இளவேனில் உருசியமாய்ப் பொலிக.

நெஞ்சேநீ உடைந்திடுக, நீஒதுங்கேல், மற்ற
நெஞ்சங்கள் உணர்ந்திடநீ யாரென்று காட்டாய்.

இருதிசையில் இரண்டொளியும் இறங்கிமறைந் தனவே
அருமைநீர் அரமகளிர் சுசோங்கடலில் மிதப்பர்.

உரால்மலையாம் தந்தையரை அழைக்கும்அவர் பாடல்
சரேல்என்றங்கு அவர்விடையும் கரைஎதிர்ந்து மீளும்.

கங்குல்எலாம் லையூபாஷா கனிவுமிகும் பாட்டு
பொங்கிவரும் வெள்ளமென எதிரொலித்து மிஞ்சும்.

விண்ணளவாய் ஓங்கிஎழில் பைன்மரத்தால் தோயும்
மண்ணகத்துப் பெருங்கோயில் மண்டபத்தில் பாயும்.

விடிவெள்ளி நோக்கிவிம்மிப் பாடல்விரைந் திடவே
நெடுங்காட்டில் நீளிசையை முழக்கினளே பெண்ணாள்.

வேனிலையும் வேட்கைமிகும் காதலையும் வேண்டித்
தான்இனிய புறாஇசைக்கும் தீங்குரலைத் தந்தாள்.

தென்றல்இளங் காற்றவளின் செய்திமணந் ததுவே
தென்றல்இளங் காற்றவளின் செய்தியைக்கொண் டதுவே.

கிரெம்லின்மணி ஓசைஎங்கும் கேட்டினித்தல் போலே
விரைந்திசையும் விரிவுலகின் நாடெங்கும் விரியும்.

அவளுக்கே மூச்செறிந்தேன் இளைஞனாம்அந் நாளில்
அவளுக்கே அரற்றினேன் அறிவில்லாப் போதில்.

உண்மையிலே ஒருமுறைநான் அவளைமுத்த மிட்டேன்
அன்றிருந்தே அவளின்றி அலறிடும்என் நெஞ்சம்.

நல்லாண்மை யோடவளை நான்முத்த மிட்டேன்
பல்லாண்டு பல்லாண்டாய் உதிர்ந்திடும்என் கண்ணீர்.

பெருவானில் முகிற்கப்பல் பீடுடனே செல்லும்
உருசியமே, பொன்னாடே, என்காதல் வெல்லும்.

46

மிகையில் லுக்கோனின்

உருசியக் கூட்டரசு

(பி. 1918)

* * *

வகுத்தவாழ் வெல்லையின் மிகுதிக் குப்பின்
வாழ்வதில் இன்பமே, சூழ்ந்திடும் துன்பமும்.
குருட்டுத் தனமாய்க் குண்டொன்று நெருப்பாய்ச்
சுருக்கெனத் தைக்கையில்
எழும்மண் ணோசைகள் முழுமையும் மறந்து,
சுருள்வில் போல்நான் உருண்டுபுரண் டெழுந்தேன்.
பின்னும்அங் கிருந்த தென்ன?
இஃதே—
அக்கணத் திருந்து
மீண்டும் நாற்பத் தொன்றில்
வாழ்கின் றேன்நான், வாழ்கின் றேன்நான்,
வாய்ப்பொன் றேஎனைப் பாதுகாத் திட்டது.
முன்னர்நான் கொண்ட பற்றையும்
பற்றிலாத் தன்மையும் அற்றைநாள் இருந்து
காலத்தால் கணித்துச் சாலத்தீர்ப் பிடுவேன்.
வாழ்கின் றேன்நான், வாழ்வுபொய் யாயினும்
வாழ்கின் றேன்நான்; நகர்கிறேன். ஆயினும்
ஓய்ந்தி ருப்பதாய் உணர்ந்திடு கின்றேன்.

கொஞ்சம் கொஞ்சமாய் உண்மையில் குறைந்து,
கனவினில் சிக்கிச் சாவின் விளிம்பில்
நடக்கின் றேன்நான்.
என்செயல் வியப்பினை அளிக்கும்என் றறிவேன்,
என்சிரிப்பு அப்படி மருட்கை அளிக்கும்,
என்பெரு மூச்சு துன்பம் சுமக்கும்.
அந்நொடிக் காட்சி கண்ணில் சுழலும்
எவ்வளவு இழிவாய் இவ்வாழ்வு இருப்பினும்
இடுந்துயர் தரினும் நடுங்கிட மாட்டேன்;
புல்லிய வாழ்வின் போக்கினைச் சிரிக்கிறேன்:
அந்நாள் தோழரை, அமர்க்கள மறவரை
நினைந்து வருந்தி நெடுமூச்சு விடுகிறேன்.
தேவ பாணியாய் மேவும் அவர்குரல்
என்னுள் இன்றும் எதிரொலித் திருக்கும்;
உங்களைக் காணினும் அவரையே நினைக்கிறேன்.
தங்கப் பதக்கமோ, தகும்புகழ் உரையோ
வெற்றி வாகையோ புனைந்திட வில்லைநான்.
பெற்றிருந் ததெல்லாம் ஒற்றைத் துமுக்கியும்
கடுத்து நெய்த இடுப்புக்கச் சையுமே.
எங்கும் சுற்றி வரும்படி நீதான்
வரம்பிலா வாழ்நாள் வழங்கியுள் ளாயோ?
போதிய வாழ்நாள் எனக்குஇங் குள்ளது
குறிவைத்துப் பாய்ச்சும் துமுக்கிதீ மழையில்
நனைந்துகொண் டிருப்பது போலக்
கற்றூண் எதிரில் காண்பாய் நீயே!
விழியினை வேறு வழியினில் திருப்பேன்.
வாழும் உனக்கென வாழ்ந்துஅவன் மடிந்தான்;
அறியப் படாமல் அவன்இருக் கின்றான்.
இங்குள படைஞனை ஒருமுறை பார்த்துளேன்,
விழாமகிழ் நிலையொடும் வேதனை யோடும்
என்றென் றைக்கும் முடிவொன்று இல்லா
வாழ்வினை வாழ்த்திப் பாடிக் கொண்டே
வாழ்நாட்கு மேல்நான் வாழ்ந்துகொண் டிருக்கிறேன்.

இதற்குள் நானும் எங்கோ நெடுந்தொலை
ஓடி யிருக்க வேண்டும்; இருப்பினும்
போகிறேன், போகிறேன்; போயாக வேண்டுமே.
எங்கே இறப்பும் ஒருவனை ஒருமுறை
தன்கையி லிருந்து தப்பவைத் ததுவோ
அங்கே நான்போய் அடைந்திட வேண்டும்.
அங்கே,அவ் வேளையில்
துமுக்கியின் ஒலியினைத் தொடர்ந்துநான் கேட்கையில்,
தனித்த உளத்தொடும்
புழுதியில் சுருண்டும் நீட்டியும் படுப்பேன்.
பெயர்இல் லாதவர் பெயர்தெரி யாதவர்
தம்மைஎல் லாம் நான் முந்திடு வேனே.

* * *

மகிழ்வுக்கு ஏது நினைவு?
நீங்கள் அதனைக் காண முடியாது!
நிகழ்ந்த பல்லாண்டாய் நேற்றுங் கூடச்
சரிபார்த் தேன்அதை.
நுண்ணிய துயரும்தன் வடுவினைப் பதிக்கும்,
ஆனால் மகிழ்ச்சிக்கு ஏது நினைவு?
ஓ, இல்லை.
காற்றைப் போன்றது அறிவோம், நுகர்வோம்.
கதிர்ஒளி போலும், காற்றினைப் போலும்
இயற்கை யானது மகிழ்வு.
எனவே, அதன்நினைவு அதனொடு மறையும்;
இன்னலுக் கென்றும் முன்வரு கில்லோம்.
மகிழ்வில்நீ இருப்பின் சொற்கள் வேண்டா.
நெஞ்சினில் உள்ள நெஞ்சாங் குலைஅது;
துன்பம் அதனைத் துளைத்தால் அன்றி
என்என அதனை எண்ணுவது இல்லை.

குறைந்தது ஒருநூற் றாண்டு ஆயினும்நீ
வாழ்வாய் என்று நினைக்கிறாய்.
என்றன் சிரிப்பில் நின்று வியக்கிறாய்?
துயரக் கண்ணீர் துளித்தல் இல்லையே?
இவ்வுலகு இருந்துநான் விடைபெற
எவ்வித விரைவும் என்னிடம் இல்லை.
வென்றிட முடியா வேதனை இல்லை—
அவமதித் தவர்க்குஎல்லாம் அளறுண்டு, ஏகுவர்.
நினைவிலா மகிழ்வினை நீக்கலா? இல்லை
என்றும் இல்லை.
யாமமே நெஞ்சாங் குலையின்
சுருங்கி விரியும் அறைபோன் றவர்கள்;
இரண்டும் ஒன்றிலே.
என்னையும் என்றன் மகிழ்வையும்
எந்த இகழ்வும் வாய்ப்புக் கேடும்
தொடர்பு அறுத்திடத் துளியும்முடி யாதே!

47

ஆந்திரேய் லுபான் மால்டேவியா

(பி. 1912)

அஃது எளிது

எழிலின் எளிமை செழித்தினிக் கின்றது.
தூய்மனத் தென்றலின் தாய்மை விரல்கள்
குன்றின் முடியில் அன்புடன் தழுவையில்
முற்றிய கோதுமை மொய்க்கதிர்த் திரள்கள்
இனிய நாளின் கனிந்த மூச்சினில்
அலைபாய்ந்து உருண்டு நிலம்புர ளும்மே.

எளிது தானே புதுமை மிக்கது.
விண்ணையும் மண்ணையும் ஒண்கதிர்க் கற்றைகள்
இணைப்பில் மணந்து பிணைந்திருக் கையில்,
கோடைக் காலம் சாடும்; இயற்கை
மீறிய கோணல் மாணல் விதத்தில்
நடுங்கிடும் மூடுபனி நெடுந்தோள் மீதில்
நாளின் எழுச்சித் தாளமிட்டு ஆடிடும்.

கால அளவு துல்லிய மானது;
இரவின் குளிர்ந்த நீல நிறத்திலும்,
எழில்மிகு வைகறை விழிப்பிலும், பகல்தான்
மாலைப் போதில் நீளமறை கின்றது.

வாழ்க்கை வண்மொழி துல்லிய மானது;
சிறக டித்துப் பறக்கத் துடிக்கும்
புதியதாய் முளைத்த கதிர்களைத் தொடுகையில்
மணிப்போ தில்நீ மகிழ்ச்சியை உற்றறி.

விளைந்த வேளாண்மை அறுவடை செய்தற்கும்
களம்தாள் அடித்துக் காற்றில் தூற்றி
உமியை நீக்கி மாவுரு வாக்கி
அப்பம் ஆக்கி வைத்தற் பொருட்டே,
உலகெலாம் அமைதி நிலவும் உறுதியின்
நம்பிக்கை நங்கூரம் இட்டுள்ளது.

எளிது வாகும் அளியியல் வாழ்க்கை;
கழனியில் ஒருவனைக் காண்கின் றாய்நீ
அவனின் பெயரை அறிகிலாய் எனினும்
'நற்பேறு அடைக'எனச் சொற்களைத் தருவாய்.
நன்றியை அவனும் அன்பினால் மொழிவான்.

நன்றி யுள்ளஇந் நன்னில மீதினில்
தலைவனைப் போலவன் தலைநிமிர்ந்து நிற்கிறான்.
கோதுமை மணிகள் காற்றில் அலைந்திடத்
தோதுடன் பயணிகள் தொழுதுபணிந் திடல்போல்
பயிர்க்கதிர் அனைத்தும் நயத்துடன் வணங்கின.
நெற்றிக்கு மேலே கையை உயர்த்தி
முற்றிய உழைப்பின் முத்தொளி வியர்வையை
வழித்தெறிந் தனனே உழைப்பின் தோழனே.

48

ஆந்திரேய் மலிஷ்கோ — உக்ரைன்

(1912-1970)

* * *

ஓரிணை நீலக் கால்புதை அரணம்
    ஒடுகால், நீலுடை உடுத்தி
யாரையும் வருத்தும் குறும்பனும், கொடுமை
    இயற்றலில் மகிழ்பவன் தாமும்
மாரிமா மழையாய் இணைந்துவந் தேனும்
    இணைச்சுருள் அவிழ்ப்பர், மீண்டும்
வீரிடும் ஆற்றின் நீல்நிறம் வளைத்து
    மீண்டிடும் ஆழநீர்ச் சுழியில்.

வெளிர்நிற நீலக் குண்டினால் விரிந்து
    ஏரியைச் சல்லடை யாக்கும்
அளித்திடும் நீல வான்மழைப் பாட்டால்
    அடவியும் சிலிர்த்திடும் விழித்தே;
களிப்புடன் மென்காற்று என்மன நிலையில்
    சிரிப்புடன் கண்ணடித் தேதன்
ஒளிர்மனக் காதற் குறிப்புகள் தம்மை
    ஊற்றின நீர்மையாய் எமக்கே.

பொழியினும் கண்ணீர் போலது சாரல்
பொழிந்திடும் மகிழ்ச்சியின் துய்ப்பே.
எழிலொடும் மகிழ்ச்சியின் முறுவலும் எய்தும்
இருண்டநீள் பூம்பொழில் யாவும்
இழிந்தவிண் இடிபோல் ஓக்மரங் கள்தாம்
மோதியே அடங்கிடும் ஒலிகள்;
செழித்தஓக் மரத்தின் ஈரித்த முடிகள்
சிலிர்த்திடும் மகிழ்ச்சியில் திளைத்தே.

புன்னை சூழ்ந்த சாலை

திரும்பிப் பார்எனை!
நான்இங் கிருக்கிறேன்.
ஒருவர்க் கொருவர் தேவையா னவர்நாம்.
கொடும்புயல் காற்றால்
கிழிந்து உலர்ந்த கொடியை
உனக்குமே லாய்என் நினைவுயர்த் தட்டும்.
சாலையே, புன்னைகள் சூழ்ந்த என்றன்
சாலையே!
வீரனின் துணிவும் தீரமும்
உனக்குநான் கொணர்வேன். ஆயினும்
வறண்டு நீரிலாக் கண்களில்
உன்துணி வுண்டு.

பொறுத்தற்கு இயலா இடுக்கண் களைநான்
உனக்குஎனக் கொணர்வேன்; ஆனால் நீயோ
அவற்றினும் மிஞ்சிய அனல்துயர் கொண்டுளாய்.
வெறியனல் போரில் சொரிந்த எண்ணிலா
வெடிகுண்டு களாலும், கொடியவர் சூழ்ந்த
அழிபோர்ப் புயலால் அரிக்கப் பட்டும்,
தீய்க்கப் பட்டும் திண்டு முண்டாய்

எரிந்துரு மறைந்துநீ நிலத்திடைக் கிடக்கிறாய்.
கரிந்தும்நீ இறவா நிலையைக் கண்டுளாய்.
மூண்ட சினத்தால் முதுகு நிமிர்ந்து
படையிலாக் கையால் புடைத்தனை இருளில்.

நம்முடை மக்களின் கன்னத்தி லிருந்து
கண்ணீர் துடைத்ததும் நின்அருள் அன்றோ?
சாலையே,
புன்னைகள் சூழ்ந்த என்றன் சாலையே!
வடுவுடன் குருதி வடித்த பாங்கினில்
உடுப்புக ளோடும் படுமூடு பனியிலும்,
கருநிற அருவருப் பான புகையிலும்,
தோன்,நீபர் ஆற்றின் மாண்புடைக் கரைகளில்
பகைவர்க ளாலே கறையு றாமலும்,
வெல்லப் படாமலும் கிடந்தனை நீயே.
உன்னைச் சூழ்ந்த நன்னி லங்களில்
நாங்கள் உண்டோம்; நாங்கள் உறங்கினோம்;
வீங்கிய புண்களைப் பாங்குறக் கட்டினோம்;
விரிந்து பரந்த சிறந்த பெருமித
வானினை நோக்கி மடிந்த வீரர்கள்
தலைவணங் காமலே செலுத்தினர் வணக்கம்.
சாக்காட்டுத் துயரில் தாக்குற்று நைந்தும்,
நோக்காட்டி னால்யாம் உளம்கிழி பட்டும்,
தீயோர் தீய்த்த கீவின் மண்ணினை
முத்தமிட் டோம்யாம். என்றென் றைக்கும்
எங்கள் உள்ளங்க ளோடும்யாம்,
நின்னொடும் ஒன்றாய் ஒன்றிநின் றோமே.
சாலையே,
புன்னைகள் சூழ்ந்த என்றன் சாலையே!

49

ஐஸ்டினாஸ் மார்கின்கேவிஸியஸ்

இலித்து வேனியா

(பி. 1930)

இந்நாளே இலெனின் பிறந்தநாள்

இப்பொழுது இலெனின் பிறந்த நாளில்
தப்பிலாது அவரை மணிதொறும் நினைப்பேன்;
நாள்தொறும் நாளேடு களைநான் படிக்கையில்
அவரைப் பற்றியே தவறாது நினைப்பேன்.

காலை உணவுக் கவளம் எடுக்கையில்
அவரைப் பற்றியே உவந்தின் புறுவேன்.
பள்ளிக்கு மகளைச் செல்கென விடுக்கையில்
அவரைப் பற்றியே படர்ந்திடும் நெஞ்சம்.
மற்றென் வேலையைப் பற்றித் தொடர்கையில்
அவரைப் `பற்றியே கவிந்திடும் நினைவு.
மங்கிய நகர்ப்புற மங்குல் விண்ணிலே,
வானூர்தி இரைச்சலைத் தான்கேட் கையிலே
அவரைப் பற்றியே இவர்ந்திடும் கருத்து.
புதிய கட்டடம் உதித்தெழும் போதிலும்;
இடம்பெ யர்ந்திடும் குடும்பம் ஒன்றுதன்
மூட்டை முடிச்சினை ஏற்றிடும் போதிலும்;
அன்னை வளர்த்த அவரைக் கொடிகளின்
மென்தளிர் இலையிடைத் தென்றலின் அசைவிலும்;

அவரைப் பற்றியே சிவந்திடும் எண்ணம்.
ஒவ்வொரு முறையும் அங்கா டியினில்
செவ்விய மக்களோடு உரையா டுகையில்
அவரையே பற்றித் தவழும்என் நினைவு.
அண்டை வீட்டார் தெருவில் காண்கையில்
ஒருவருக்கு ஒருவர் மருவி மகிழ்ந்தே
'இதுநல்ல நாள்'என இயம்பும் போதும்,
அவரைப் பற்றியே நயந்திடும் உள்ளம்.
தேனொலி வழங்கும் வானொலி இசைக்கும்
பள்ளுப் பாட்டின் துள்ளலைக் கேட்கையில்
அவரைப் பற்றியே நினைந்திடும் நெஞ்சம்.
சாய்வு மேசையில் வெற்றுத் தாள்களை
ஒய்விலாது எடுத்துப் புரட்டும் போதிலும்;
எதிர்வர விருக்கும் நாள்களின் கனவுப்
புதிர்களில் மூழ்கி மிதக்கும் போதிலும்
அவரைப் பற்றியே உவந்தின் புறுவனே.

உடன்பிறப்பே கவனி......

அரவமன்றி நாமிருப்போம்—ஆங்கொருகால் கிணற்றினையும்,
புரவிகள் அதன்அருகே புனல்பருகும் காட்சியையும்
கண்டாலும் காண்போம்.
தலைகளினைக் குதிரைகள் தாம்தூக்கும், வாயிருந்து
நீர்த்துளிகள் ஒவ்வொன்றாய் நிலத்தில் விழுந்திடுமே.
முற்றத்தின் நீளத்தை முழுதும் அளப்பதுபோல்
பற்றிப் படருமந்த பாய்புரவி நீழல்கள்.
கதிர்மறைவு.
கூரையின் மீதில்ஒரு கொக்கமர்ந்து காட்சிதரும்.
அசையாமல் கழிந்தஒரு நாளினைப்போல் ஆங்கதுதான்
கடைக்கண்ணால் இவ்வுலகைக் கண்காணித் திருக்கிறது,

மனைநோக்கி வருவோர்க்கு வாயில் திறந்தேதன்
வரவேற் பளிக்கிறது,
காலடிகள்......அவற்றை மழைத்துளிபோல்......ஆழத்தில்
கோலநிலம் தாம்உறிஞ்சும்......
கண்ணிற்குத் தோன்றாத சிரைகளின் ஊடாகத்
தண்ணீர்க் கிணறதனைத் தாமடையும்.

என்றனுக்குச் சிறிதுநீர் இறைத்துத் தருவீரே
வாளியி லிருந்தேநான் வாய்வைத்துக் குடித்திடுவேன்.
இன்றெல்லாம் கடுங்களைப்பால் நொந்துவிட்டேன்.
அச்சுறுத்தும் விரல்கள்போல் ஆங்குள்ள புன்னைமரம்
தியங்கிருட்டாம் உடைபுனைந்து தெரிவதனைக் காண்கிலையா?
அஞ்சாதே—நாமெல்லாம் அழிவற்றோம் என்பதெலாம்
நீழல் மடமாயை யே.

50

சாமுவெல் மார்ஷாக் உருசியக் கூட்டரசு

(1887—1964)

இறவாமை

நான்குமகிழ் ஆண்டுகளாய் இறவாமை துய்த்தேன்,
நான்விதியை நினைந்தழுது கண்ணீர்விட வில்லை;
தோன்றவில்லை இறப்பென்முன் தப்பெண்ணம் இல்லை.
சுடர்வாழ்க்கை வாழ்வதற்கே, வாழ்வதற்கே அன்றோ?

இவ்வினிய உண்மையினைச் சிறார்களொடும் துய்ப்போம்
வாழ்க்கைநிகழ் காலம்எனில் இன்னல்அச்சம் ஏது?
ஒவ்வியஅவ் இறப்பொருநாள் உறுதிஎன் றாலும்
உவந்துநுகர் வாழ்க்கையினைச் சாவஞ்சி நிற்கும்!

உருசியமொழிப் பாடம்

காலைக்கதிர் ஒளியில்ஒரு வகுப்பின்அறை மூழ்கும்
கற்கும்அறை விரிவேந்துடன் அமைதிக்கிட மாகும்.
மேலைத்திசை முன்னால்உள கருமைநிறப் பலகை
பின்னால்உள எழுதும்மர மேசைகளில் எல்லாம்

கோலச்சிறார் கருமைதனில் வெள்ளைநிறத் தாலும்,
வெள்ளைநிறக் குறிப்பேட்டில் கருமைநிறத் தாலும்
'வேண்டோம்,கொடும் போரைவெறுப் போம்போம்' என
[வரைவார்.

ஆக்கச்செயல் பலபண்ணுவர் உயர்சோவியத்து மக்கள்
அகழ்வார்நிலக் கரியை,அரும் மந்தைகளைக் காப்பார்;
ஊக்கம்மிகும் உழைப்பால்எழும் ஒளிர்சோவியத்துச் சிறுவர்
உண்டாக்கிடக் கற்பார்பல உலகோங்கிடும் சொற்கள்.

எழுத்துத்தொடர்ந் தெழுத்தாய்எழுத் தமையும்இசை யோடே
எழும்சொற்களும் ஒன்றன்பினால் ஒன்றாய்த்தொடர்ந்
[துரைக்கும்;

எழுகஉல கெங்கும்நட் புமைதிஅனை வர்க்கும்
இணைகஉயர் ஈடில்பொது வுடைமைநல வாழ்வே.

'போரும்உயிர் அழிக்கும்கொடும் பூசல்இனி வேண்டா,
பொன்னானநம் இளைஞர்மதி முதியோர்தமக் கெல்லாம்
சீரும்,பொலி மகிழ்வூட்டிடும் உலகம்இது வாகும்'
எனச்சோவியத்துச் சிறுவர்மகிழ்ந் தெழுதித்தாய் மொழியை
இன்புற்றுமே தென்புற்றுமே உலகோங்கிடக் கற்பார்.

51

லியோனித் மர்த்தினவ்

உருசியக் கூட்டரசு

(பி. 1905)

விண்ணும் மண்ணும்

இப்புடவிப் பேரெல்லை அகன்ற கன்றே
ஏகிடுமேல் (இதுவுண்மை நிலைமை யானால்)
அப்பொழுதுஉம் உணர்ச்சிகள்தாம் யாவை? நீவிர்
நிற்பதெங்கே அறிவியலைப் பயிலா மக்காள்?

இப்பேச் சனைத்தும் சிவப்புச் சூழ்ச்சியே
உரத்த தருக்கமும், கலந்துரை யாடலும்
எவர்மன மாயினும் அதனை
எதிர்விளைவு அலைகளில் இழுத்துச் செல்லுமே.

அண்டத்தில் மண்டியுள்ள உடுக்க ளைப்பார்
அகல்வெளியில் உடுக்கணங்கள் தெளிவாய்த் தோன்றும்
எண்ணவிய லால்அன்றிச் செயல்மு றையால்
இவ்வுலகை நோக்கிமுகம் திருப்பு வாயே.

பிறப்பிட மாகிய சிறந்தஇம் மண்ணில்
ஒவ்வொன் றும்தாம் செவ்விய உறவில்
சேரவும் இணையவும் ஒன்றவும் அவாவிடும்.

பறவைத் திரளில் பறவைகள் கூடும்;
ஆங்கது போலவே, ஆர்வம் தூண்டிடக்
குதிர்களுக் குள்ளே கூலம் குவியுமே.

மாந்தனும்தன் உடன்பிறந்த மாந்தன் தன்னை
மகிழ்வுதரும் நண்பனாய்க் கொளநி னைப்பான்;
மாந்தன்இங்கு மாந்தனாக முயலு கின்றான்;
மனவளத்தால் செயல்திறத்தால் அதற்கு ழைப்பான்.
ஆந்துணையும் முடிவின்றி நீளும் இந்த
அண்டத்தில் இதுஅவனால் முடியும் அன்றே.

சுவடுகள்

இன்ப வளமனைக் கோ,ஓர் குடிசைக்கோ
ஏகிடும் வேளையிலே,
முன்முக மண்டபம், மூலை ஒடுக்கத்து
முன்னே நுழைகையிலே,

நெஞ்சை மகிழ்விக்கும் நீளிசை கேட்டு
நெருங்கும் இடத்தினிலும்,
செஞ்சொல் இயம்பிச் சிரித்து விருந்தேற்கும்
சின்னக் குடிசையிலும்,

துப்புர வான தரையில்உன் சுவட்டினைத்
துடைத்திட நேர்ந்ததுவா?
ஒப்புர வாலுனை ஏற்ற விருந்தினர்
உள்ளம் உவந்தபின்னர்

கதவை அடைத்து நீவிடை பெற்றபின்
கசப்புணர் வால்அவர்கள்
உதட்டைப் பிதுக்கும் நிலையடைந் தனரா
உரைப்பாய்? அல்லது நீ

விட்டுப் பிரிகையில் வேட்கை மனத்தினால்
வேதனை உற்றனரா?
நட்பால் பிரிந்துவிருந் தோம்பினார் நெஞ்சில்
கண்ணில் புலப்படாமல்
இட்ட அடிச்சுவடு இட்டனை யாஎன்றே
இயம்புக என்னிடத்தே.

ஓவியன்

தவழும்இரா நிலவெனவே
தன்மகளின் ஓவியத்தைத் தீட்டினான்;
உவந்தவளும் திரைத்துகிலில்
உருவமைந்து வண்ணத்திலே நீந்தினாள் — அவள்
ஒருநொடியில் விழியிருந்து நீங்கினாள்.

மைந்தர்களை வரைந்துஉவந்தான்
மாண்புடைய தூரிகையின் முனையாலே;
முந்தியதோர் பூம்பொழில்தான்
முளைத்ததங்கே இசைப்பறவை கணத்திலே.

தெளிவில்லை என்றார்சிலரே,
சிதைவுள்ளம் என்றார்சிலரே — வெறுத்தார்;
வழித்தெடுத்தான் வண்ணமெலாம்
வடித்தெடுத்தான் தன்னுருவைச் சிரித்தே.

ஓவியத்தில் ஒன்றிவிட்டார்
ஒருவருமே குழப்பமுற வில்லை!
கூவினரே மகிழ்ந்தெல்லோரும்
'கொண்டுமுடித்தான் நாமதுதான்' என்றார்.

52

ஸிர்பாய் மௌலெனவ் கசகிஸ்தான்

(பி. 1922)

மண்ணின் மைந்தன்

ஓ,பே ரண்டமே,
சிடுசிடுப் புடன்நீ செருக்குற்று இருக்கிறாய்.
எவ்வளவு புகழ்இருந் ததுஅப் பொழுது.
அப்பொ ழுதுநீ செருக்குஅறு படவே
ஊர்தி செலுத்துவோன் உரத்திற்குப் பணிந்தே
பிடரி முகிலினை இடறி எறிந்தனை!
காணீர் உடுக்களின் வழிதெளி வானதே......
மண்ணின் பின்னால் அனைத்தையும் விடுத்தே
விண்வெளி மாந்தன் முன்செல் லுங்கால்
ஊக்கம், நம்பிக்கை தேக்கிய பார்வையைப்
பாய்ச்சினான் முதலில்.

மண்மூ தாட்டியே......
வெண்மை நீல நிறத்துடன், விண்மீன்
மாந்தனுக்கு எத்தனை சிறிதாய்த் தெரிகிறாய்.
மண்ணக அன்னையர் மட்டுமே செயல்போல்
விண்வெளி மைந்தனுக்கு இன்பம் புரிவாய்.
நீணிலம் மீதவன் மீளும் வரையிலும்
கருத்தாய் ஆர்வப் பரபரப் புற்றாள்.

அவள்கைத் துணையுடன் அழைத்துச் செல்கிறாள்;
அண்ட வெளியில் மீண்டும் இருட்டிலும்
வழிகாட்டி யாய்அவள் விழிப்புற் றிடுவாள்.
உயர்வு, தொன்மை அன்புக் குரியவள்
தன்மகனையே ஊன்றிக் கவனிக் கின்றாள்.

பாழில்ஓர் மீகாமன்
சிற்றுடுக் கள்சில விரைவாய் ஆங்கே
மற்ற உடுக்க ளோடுடன் திரிந்தன.
பயணப் படத்தில் குறித்த வண்ணமே
துணிவுடன் மேலும் உயர்ந்துயர்ந்து ஏறினான்.
நெருங்கிய நிலத்தாய் சிறிய நெஞ்சின்
துடிப்பினில் தோய்ந்தாள்.
சிறியதா ?
அன்றே, பெரியதாம்
ஏனெனில் மிகப்பெரும்
அச்சம் தரும்அவ் வேளையில்
அனைத்துல கத்தின் அனைவர் நெஞ்சமும்
இணைந்து அங்கு ஒன்றின
தங்கள் ஆற்றலின் பெருமிதத் துடனே.

53

எட்வர்டஸ் மிஸெலைடிட்டிஸ் லிதுவேனியா

(பி. 1919)

மாந்தன்

கதிரோனாம் மண்டலத்தில் காலூன்றி உறுதியுடன்
மிதந்தோடும் நிலக்கோளின் மீதில்நான் நிற்கின்றேன்.
நிலத்தையும் பரிதியையும் நேர்நின்று இணைத்தபடி
நிலவும்இரு கோளத்தின் நடுவினிலே நான்உள்ளேன்.
மனத்தளங்கள், மூளையின் கருவூலம், மண்ணுலகின்
இனத்தளப் புதைவளம்போல் எண்ணில் செழிப்பனவாம்.
அவற்றிருந்து நிலக்கரியை அகழ்ந்தெடுத்துக் கொள்வதுபோல்,
உவக்கும் கனிவளத்தை உருக்கிஎடுத்துக் கொள்வதுபோல்,
பெருங்கடலில் மாப்பெரிய நாவாயை விடுகின்றேன்;
இரும்புத் தொடர்களால் நிலமெல்லாம் இணைக்கின்றேன்;
விண்அளக்கும் பறவைபோல் விண்ணூர்தி ஆக்குகின்றேன்;
விண்கணைகள் தம்மைப் படைக்கின்றேன்; மின்னலினால்
உலகினைப்போல் முட்டை உருவமைந்த என்தலை
நிலஆழத் திருந்தே நிறைந்துவெளிப் போந்ததுவே.
எனினும்என் தலையின் எரிசுடர் கோளத்தின்
இனிமை பொருந்திய இன்னொளிப் பாங்கன்றோ
நிலத்திற்கும் கோள்களுக்கும் உயிர்ஊட்டிக் கொண்டுளது.
நலந்திகழ எவ்விடத்தும் மாந்தஇனம் வாழ்கிறதே.

நானின்றேல் நானிலந்தான் உயிரற்ற ஒன்றன்றோ?
நானிலமும் உருக்குலைந்து, நல்குரவால் இக்கோளம்
எல்லையற்ற வெளியினிலே இலக்கின்றித் திரிந்திடுமே;
பல்கதிர் நிலவில் எதிரொளியைப் பார்த்திடுமே;
அச்சம் தருகின்ற ஆவியற்றுத் தோன்றிடுமே.
பெரும்பாடு பட்டுலகம் என்னைப்பெற் றெடுத்ததுவே,
ஒருதுயர்ப் போதில் உலகம்என் தலையினையே
அண்ட வடிவினிலே ஆக்கியது; ஆதலால்என்
மண்டை பரிதியைப்போல் நம்கோள்போல் மாறியது.
அளவில் சிறிதெனினும், ஆற்றல் அருந்திறனில்
நிலவும்இவ் உலகினும் நெடும்பெரிதாய் மெய்ப்பிக்கும்
படைத்த அழகெல்லாம் பணிவுடனே இவவுலகம்
உடைமைச் சிறப்பாக ஏற்றுவந்து கொண்டதுவே.

உலகத் தின்கருவில் உருவாகி னேன்முதலில்
உலகத்தை யேபுது உருவாக்கி னேன்பின்னர்
என்றுமே அறியாத எழிற்சிறப்பு மேம்பாட்டில்
நன்று செழித்திடவே ஞாலத்தை நான்சமைத்தேன்.
கதிரோனாம் மண்டலத்தில் காலூன்றி உறுதியுடன்
மிதந்தோடும் நிலக்கோளின் மீதில்நான் நிற்கின்றேன்.
செங்கதிரும் என்வழியே மண்ணில் இறங்குகிறான்;
இங்குலகும் செங்கதிரை நோக்கி எழுந்திடுமே.
உழலும் இருகோளும் என்றன் உறவோடே
சுழலும் களிமகிழ்வுக் கொண்டாட்டம் சுற்றிடுமே.

கலைகளின் பாங்கோடு கைத்தொழில் மேம்பாடும்
உலைவற்ற என்கைகள் உண்டாக்கித் தந்தவையே.
எனைச்சூழ்ந்து எழுந்துள்ள ஈடற்ற பெருநகரம்,
மனைகளெலாம் என்படைப்பே; பைஞ்சுதைச் சதுக்கங்கள்
மக்களை உந்துகளை மகிழ்ந்துலவச் செய்கின்ற
எஃகொத்த பாலங்கள்; எனைச்சூழ்ந்து இயங்குகின்ற
நீராவிப் பெருங்கப்பல்; நீள்விசும்பின் வானூர்தி;
ஏராள மானநல் ஏருந்து; கடைபொறிகள்;
மற்றென்னை மகிழ்வில் மலர்வித்துச் சூழ்ந்துலவும்
எற்றி வெளிவளைவில் ஏமுறும் விண்கணைகள்........

நான்இங்கு நிற்கின்றேன்

மாட்சியுடன் பேரறிவு மண்டிய திண்ணியனாய்,
ஊட்டமிகு தடந்தோளின் ஆற்றல் உடையவனாய்,
ஒண்சுடர் ஞாயிற்றை என்செயற்கு உட்படுத்தி,
மண்ணில் உயர்ந்தவன், மாண்புடைய மாந்தன்நான்.
கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
வழங்கிடுவேன் கதிர்முறுவல்; வையம் முழுமைக்கும்;
நான்இங்கே நிற்கின்றேன் — ஏனெனில் நான்மாந்தன்!
ஆன்ற பொதுவுடைமை யன்!

54

ஜூபன் முல்தாகலியேவ்

கசகிஸ்தான்

(பி. 1920)

குளம்போசை

குண்டாந்தடி வீச்சும்சுழல் கொடுஞ்சாட்டை யின்ஓச்சும்
கொண்டேவரும் அடுவேட்டையர் குவிமண்டைக ளோடும்,
சண்டைக்கிடா தோல்கூரையுள் கொள்ளைப்பொருள்
[தன்னைக்
கண்டுபகிர் விளைவால்எழும் கடுஞ்சச்சர வொலியில்
பண்டைக்குல மரபோர்துயர் பழக்கத்தினில் வாழ்ந்தார்.
கொண்டல்இடி எனச்சாலையில் குளம்போசையைக்
[கேட்கின்......

வரலாறதன் தொடக்கம்முதல் எண்ணில்துயர் இடையும்,
இரக்கப்பரி வற்றுஇன்னலில் ஏசும்வசை தாங்கிப்
பரவும்ஒளி காலைவரை வருத்தும்முது குடனே
ஒருபோதினும் முறையீடின்றிப் பரிமாந்தரைச் சுமக்கும்
நிரலேவழி யினிலேகுளம் போசைதனைக் கேட்கின்
விரவும்வியப் பொலியால்மன விளிம்பும்அதிர்ந் திடுமே.

சூயென்சியின் தொலைநல்சம வெளியில்எதிர் ஒலிக்கப்
பாய்தீஎன அக்தோபரின் வாழ்த்தோங்கிய நாளில்
மேல்ஓங்கியே மிளிர்செங்கொடி குதிரைமுது கமர்ந்தே,
தீஓங்கியே தணியாச்செழும் தீரர்குல மக்கள்
வாய்ஓங்கிய முழக்கம்எனில் சூறாவளி காட்டும்
மாயாப்பெரும் குளம்போசைகள் மலிபுல்வெளி கேட்கும்.

சீர்சால்சம வெளிமேல்சிறு தடுப்பும்,வரை வின்றிக்
கார்காலமும் இளவேனிலும் நாரைஎனச் செலுமே.
ஈர்வாள்நிகர் நெடும்புல்நில ஈடில்குதி ரைகள்
பேர்வான்புகழ்க்கு எட்டாஉயர் பெருமைதனைப் பெறுமே.
'சீர்மேவிய விலங்கின்இனம் சிம்புள்எனப் பறக்கும்'
நேர்இவ்வுரை பரிமேய்ப்பவர் நிமிர்ந்தேமகிழ்ந் துரைப்பார்.
ஆர்வந்தரும் குளம்போசைகள் அடர்புல்வெளி ஆர்க்கும்.

வேடிக்கையாய் உடன்போக்கினில் விறலாண்மையைக் காட்ட
ஆடிக்களத் தன்மைத்தரும் அரும்பாவைய ரோடே
ஓடிக்கொளும் கடுங்காற்றென ஊரும்பரி மாக்கள்,
சாடிப்புரண் டோடும்மலை ஓடையென முழங்கும்.
கூடிக்கிளர் குளம்போசையைச் செவியில்கொளும் முன்னம்
பாடிக்கொளும் குதிரைமலைக் கோமான்கதை கூடப்
பீடின்னிசை பொன்னாட்டுயர் பெருமைதனைக் காட்டா.

என்ஆருயிர் மேலாம்பரி மந்தைதனைக் காப்பேன்;
இன்காவலும் உரிமையுடன் இருக்கத்தலை ஈவேன்.
வன்புல்நில முதுமக்களே, காண்பேன்புது நாள்கள்
என்நாடுயர் பேராண்மையை எய்திமகிழ் வுறுவேன்.
வன்புல்நில வெளியில்மகிழ் குதிரைக்குளம் போசை
என்கேளிரின் நெஞ்சங்களில் இன்பூட்டிட விழைவேன்.

55

மிகோல நக்னிபேத — உக்ரைன்

(பி. 1911)

கழிந்திடும் மனம் இயங்குநிலை

சோர்ந்து களைப்புற் றிருக்கிறேன் — மிகச்
சோர்ந்து களைப்புற் றிருக்கிறேன்.
ஆர்வம் கனிந்த முறுவலால் — சிறு
அனலின் கணப்பின் அருகிலே
ஓய்ந்து களைப்பாற வேண்டுவேன் — இந்த
ஒன்றினை அன்புடன் வேண்டுவேன்.

நிமியப் பொழுதொன்று மட்டுமே — ஆம்
நிமியப் பொழுதொன்று மட்டுமே
நிமியங் கழியத் தொடருவேன் — என்
துமுக்கி நிலைக்கஉம் தோளிலே;
அமர்முனை காண்போம் விரைவிலே — என்
உடன்பிறந் திட்ட பிறப்புநாள்!

நிமியப் பொழுதொன்று மட்டுமே — அரை
நிமியப் பொழுதொன்று மட்டுமே.
இமியும் நடுவே தடைபடல் — இல்லை
ஏகுவோம் நில்லாமல் ஏகுவோம்.
நிமிர்ந்து முன்னேறுமுன் ஏறெனக் — குரல்
நீள ஒலித்ததுஎக் காளமே.

அரைநொடி தான்ஓர் அரைநொடி — எக்
காளம் முழங்குவோர் பின்செல்வேன்;
விரைந்து முழக்குக எக்காளம் — தொடு
வானின் விடிவெல்லைக் கப்பாலும்
விரைந்து முழக்குக எக்காளம் — எழும்
களிப்பிற்கும் கண்ணீர்க்கும் ஊடேதான்.

நின்றிட வில்லை அறிகவே — அரை
நிமியமும் நின்றிட வில்லைநான்;
வன்குரல் எக்காளப் பேரொலி — செவி
வாயில் புகுந்த நொடியிலே
முன்னுறும் என்ஆற்றல் மீண்டதே — சோர்வு
மூடு பனிஎன ஓடிற்றே!

உடன்பிறந்தான் கான்ஸ்டென்டினுக்கு

உற்றுக் கேளாய் உடன்பிறப்பே!
ஓங்கும் தென்றல் இசைக்கிறது;
எற்றும் ஆப்புக் கணைவடிவில்
ஏகும் நாரைக் கூட்டங்களும்;
சுற்றி வரும்டெஸ் னாவைச்
சுமந்துவரும் இனிய வெண்பனியை — உடன்
தொடர்ந்தழைக் கும்இள வேனில்அணியை!

உற்றுக் கேளாய் உடன்பிறப்பே!
உருமும் இடிவான் முழக்கினையும்
பற்றும் மின்னல் உலைக்களம்போல்;
பரிதிக் கண்ணே கொல்லன்உலை;
கத்திடும் பைன்காட்டு மரம்கூடி — உருகு
காரீயமாய்க் கானாறு ஓடும்பாடி!

உற்றுக்கேளாய் உடன்பிறப்பே!
உளங்கவரும் வேனிலைப்போல்
பற்றிப்பறந்து இசைக்கும்நாரை,
பார்மயக்கும் வேனிற்பாட்டால்
வற்றிவிடும் தூக்கம்எலாம் கரைந்தே — அட
வயல்வெளியில் காற்றொலிக்கும் விரைந்தே!

உடன்பிறப்பே கோஸ்டியாவே!
ஊக்கும்நாரைச் சிறகினிலே
படர்ந்துமனைக்கு வந்திடுவாய்
தாமனிலே படுகொலையால்
கடற்படைஞர் கொல்லப்பட்ட நாளிலே — அவர்
கழறியசொல் கேட்கிறதிப் போதிலே!

அலைந்துருமும் இடிமுழக்கம்,
ஆண்டுகளோ உருண்டோடும்,
தொலைவான கல்லறையில்
அமைதியுடன் யாம்துயில்வோம்.
மலைக்குத்துப் பாறைஎனை
மறித்துநிறுத்தி விடுவதாலும்
அயர்ந்தென்தோளில் தோழன்ஒருவன் உறங்குகிறான்
ஆதலால்என் ஆவியினை அனுப்புவேன்!

56

செர்கி நரவசாத்தவ் உருசியக் கூட்டரசு

(பி. 1919)

சோவியத்தின் வல்லமை

இளையமுன் னணிக்கூட் டத்தார் காலத்தால் தொலைவில்
[உள்ளார்

விளைந்தது தீமு ழக்கம், அரோராபீ ரங்கிக் கப்பல் —
இளஞ்சிறார் தீக்கொ ழுந்தின் எரிநாவின் காட்சி காண்பார்
வளைபுடி யோனின் வாள்கள் வழங்கிடும் வீச்சைக் காண்பார்.

புரட்சிப்போர்க் களத்தில், பாறு மயிருடை எவ்வி ளைஞன்

உரந்தகு வீர னாக இறப்பதைக் கனாக்கா ணாதான்?
இறந்தபின் நடுகற் காக ஈவரே நினைவூட் டச்சொல்;
சிறந்தஎம் சோவி யத்தின் வல்லமைக் காக என்றே!

இளைஞர்கள் மாந்த ராவார், வயதினில் விழிப்புக் கொள்வார்
வளைந்திடார், அயரா வன்மை வாழ்வின் வாயிலில்
[அடைவார்

உளைந்திடார், கண்ம றைக்கும் ஓங்கிய போர்த னக்கே.
விளைந்ததம் பெற்றோர் கண்ட கடுமையை விஞ்சிக்
[காண்பார்.

ஆண்டுகள் நாற்பத் தொன்றும், அதைத்தொடர் நாற்பத்
[தைந்தில்
ஈண்டுதம் உயிர்அனைத்தும் ஒவ்வொரு வருமே ஈந்தார்;
மாண்டன மலர்மொட் டுக்கள்; மாய்ந்தனர் உண்மை வீரர்;
ஆண்டகை யாளர் வீழ்ந்தார், சோவியத்து வல்ல மைக்கே!

நல்லநாள் தீநாள் தோறும் நானுமை நினைக்கின் றேனால்
இல்லைநீர் அந்தோ, போரின் வெற்றிஇங் கெய்தும் போதில்;
இல்லைநீர் ஸ்புட்னிக் வானில் எறிந்துழல் காலப் போதில்;
புல்வெளிக் கரம்பு கன்னிப் புலம்விளை செழுமை காண.

இன்றுவாழ் வினிலே நானே இறவாநல் மலரைப் போல
நன்றென்றன் உள்ளத் துள்ளே நானுங்கள் உளங்கள் தம்மை
இன்புறத் தாங்கு கின்றேன், ஏற்பேன்சூள் உரையை நானே!
என்றுமே வாக்க ளிப்பேன் சோவியத்து வல்ல மைக்கே!

57

யோஸவ் நோனாஷ்விலி ஜியார்சியா

(பி. 1920)

ஜியார்சியப் பாடல்

பச்சைக்கொடி முந்திரிக் கொழுநிழலில் வாழ்வுதரும்
பாங்குமிகு தொட்டில் இதுவே;
இச்சையுடன் பாடகரும் இன்னினிய காதைகளை
இன்புறவே பாடும் இடமே;
மெச்சுபுகழ் உருசுவெலி மேவும்இசை நெஞ்சமதில்
மிக்கினிமை ஊட்டி மகிழும்;
நச்சுபுகழ் ஆண்மைமிகு போர்மதுகை நாளும்எமை
நயந்துநனி ஊக்கி வருமே.

எந்தையர்கள் விரும்பிமகிழ்ந் தின்பமுடன் செங்குருதி
ஈந்தஅரும் நாடும் இதுவே;
உந்திஎழும் எங்குருதி ஒங்கும்உழைப் பொன்றதனால்
ஒள்ளொரியின் வெப்பம் உறுமே.
பந்தின்எழும் அவ்விசையின் பறவைதரு பண்ஒலியும்
பனிஒளிரும் மாம லையுமாய்
மந்திரத்தால் எழுந்ததுபோல் மாண்புமிகு பேரழகாய்
மண்ணினின்று மேலெ ழுந்தனை!

இரவின்ஒளி பரவுமட்டும் கழுகினங்கள் செல்லும்
விரைவுடனே மானினங்கள் குதித்தெழுந்து பாயும்
பரவும்எழில் நிலமென்று சியார்சியநா டென்றார்
கருதிவைத்த பெயர்இதுவும் கவின்பொருத்தம் தானே.

இங்கினிய இளைஞர்இதழ் பாடுகிற இயவன்ன,
ஊர்முலியின் ரீரோவி னுடைய
பொங்கினிய பண்ணின்ஒலி எவ்விடமும் புத்தமுதாய்ப்
புகழ்பொலியக் கேட்க வருமே.
தங்குபந்தற் கால்களையே தழுவுகொடி முந்திரிகள்
தழைத்தொளிரும் காட்சி யுடனே
எங்கும்ஒளிர் கோதுமைகள் விளையும்வயல் காட்சிகளும்
இனிதுமகிழ் பாடல் தருமே.

கனிகளையும் பருப்பினையும் உடன்பிறந்தார் போலமர்ந்து
பகிர்ந்துண்டு களிப்பர் மக்கள்
இனியஇளஞ் சிறுவர்களும் பங்குபெற வழக்கிடுவர்
தன்னலம்எள் அளவும் இல்லை.
தனைமறைக்காத் திறந்தஉளம் தத்தமக்குள் நம்பிக்கை
தழைத்தோங்க அன்பு மிகுவார்,
நனிமுழுதும் வழங்கிடுவார், தடைச்சுவர்கள் சிறிதுமிலா
நல்லுளத்தின் பெருமை திகழ்வார்.

'விருந்தினர்கள் வரல்கடவுள் விளைத்த வரமாகும்'—
இருந்தபெரி யோர்கள்உரை இதுஎன்று தேர்வோம்;
திருமருவு நிலம்என்று சியார்சியநா டென்றார்
அருமொழியில் வைத்தபெயர் அதுபொருத்தம் தானே.

ஓடுகிற அயோரிஎனும் ஆற்றின் நெடுங்கரையில்
ஓடிவிளை யாடு சிறுவர்,
கூடுசிறு குதிரைஇணை வண்டியினில் ஏறிவான்
கோழியினைக் கூவி அழைப்பர்.
பாடுபழம் புகழுடைய திபிலிசியின் கோட்டைமதில்
பகைவர்களும் துயர முறவே
நீடுயரம் நெருங்கிடுதற் கரியவணம் எழுப்பியவர்
நிகரில்திறம் திண்மை அருமை!

குறிஞ்சியுடன் செம்மலர்கள் குளிர்பனிவீழ் மார்கழியில்
குலவும்எழில் கொஞ்சி மகிழச்
செறிந்தெமது தோட்டம்எலாம் அரும்புகளும் பூக்களுமாய்ச்
சிறந்தினிமை செழித்தி ருக்கும்;
வெறியுடனே பனிப்பாறை வீழ்வதென மின்ஒளிரும்
நிலையங்கள் வெளிச்சம் உமிழும்;
அழிவின்தெளி வெனஓடும் மலையோடைச் சாரலிலே
ஆலைபல ஆர்ந்து நிற்கும்.

எவ்விடமும் எப்பொழுதும் எம்அருந்தாய் நாட்டின்
செவ்வியநல் சீர்ப்புகழும் சிறக்களழுந் தோங்கும்.
இவ்வெழில்கொள் நன்னாட்டைச் சியார்சியநா டென்றார்
ஒவ்வுபுகழ்ப் பெயரிதனில் உறுபொருத்தம் காணீர்.

எங்களது சியார்சியத்தைச் சிறியதென இயம்பிடுவார்
எவரடா இந்த மண்ணில்?
பொங்கிவழிந்து எங்குமுள குதிர்கள்எலாம் கதிர்மணியால்
புடைசரிதல் காண்கி லீரோ?
தங்குமலை எல்பரசின் தடக்கைகள் தாவிஎழுந்து
உயர்வானைத் தடவல் கண்டும்,
எங்கும்இணை இல்லாத இயற்கைஎழில் தான்கண்டும்
இங்ஙனம் இயம்பல் உண்டோ?

வழிகின்ற கொழுநறவால் ஒளிக்குவளை பலநிரம்ப
வார்த்துமகிழ் கின்ற நாடு!
பொழில்மலர்கள் கதிர்தழுவிப் பூரித்து வேனில்தனைப்
புகழ்ந்துவர வேற்கும் நாடு!
அழிவிலதாம் புகழ்ப்பெருமை சோவியத்து நாட்டினுக்கே
அளித்துயர்த்தி நிற்கும் நாடு!
ஒழிவில்லாப் பேரின்பம் வையமிதில் இதனைவிட
ஒன்றெமக் குண்டு கொல்லோ?

பெருமைஎழில் தாயகத்தின் கொடியில்அலை பாயும்
அருமைமிகும் இன்பவெள்ளம் அளைந்துமகிழ்ந் தாடும்
ஒருபெரிய சோவியத்தின் ஒன்றியத்தோடு இணைந்த
திருவுடைய சியார்சியாஎம் சிறந்தஎழில் நாடே!

58

ஸக்கி நூரி

தாத்தாரியா,
உருசியக் கூட்டரசு

(பி. 1921)

இளவேனில் கூட்டிசை

இயற்கையின் களியாட்டம் எழுந்தோங்கி
மிகுகின்ற இளவேனிலில்,
உயிர்க்கின்ப மகிழ்வூட்டும் பறவைகள்
மயலோசை தரும்போதினில்,
செயற்கைஏர் உந்துகள் சிறப்பாக
நிலத்தினில் உழுதார்த்திடும்.
வியப்பொன்று அறிகநீர் விரையும்ஏர்
உந்துலவும் அம்மண்ணிலே
மயற்கைசேர் உறைபனி கேடயம்போல்
படர்ந்துற மூடியே
துயின்றதும் அறிவிரேல் தொழிலாளர்
தோள்வலிப் புகழ்பாடுவீர்.

அனைத்துலகும் எங்கள்முன் அணிபெற
ஆர்த்திடும் அரும்பேரிசை,
முனைந்துயாம் கிளர்வுற்று முகிழ்க்குமா
மகிழ்ச்சியை எமக்கீந்திட,
வினைக்கென்று காத்துளது அன்னைநிலம்
நோக்கியே உழுவோர்யாம்

மனையிலே சீர்செய்த மாணிக்க
விதைகளைக் கொண்டேகுவோம்.
மனத்தினைக் கவர்வதாய் இளமையில்
எழிலுடன் இளவேனிலின்
புனைவுற்ற பசுமையும் பொன்மையும்
திகழ்நிலம் பொலிவூட்டுமே.

அன்பாளர் உதவிபோல் அகல்வானின்
நிறைமழை நிலம்பெற்றதால்,
தென்பான பேராற்றல் சேறான
நிலத்தினில் சிறப்புற்றிட,
மின்வான எல்லைவரை மேன்மைமிகு
கோதுமைப் பயிர்ஓங்கிடும்.
என்னேகொல் இவையெலாம் கோடையில்
நிறைவுறும், இதுபோதிலோ
இன்பான இளவேனில் எய்தியது
நானிலம் மகிழ்பூப்பவே.

அழகு

அழகிய பொய்யினும் அழகிலா மெய்இனிது.
சீரிய கூரிய செறிமொழிச் சொற்கள்
செவிகளை விழிகளைக் கவர்ந்தினி திழுக்கும்.
நீதியில் மனத்தில் நேர்மையில் தானே
உள்ளத் தழகின் உயிர்ப்பினைக் காணலாம்.
உள்ளம் கவர்ந்த கண்கள் இரண்டின்
நிகரிலா அழகை நிகழ்த்த முடியுமா ?
பொறுமைசார் பற்றையும் உண்மை அன்பையும்
அனைத்தினும் சிறந்த அழகுக்கு மேலாம்
பண்பென மதிக்கிறேன் பாரில். ஆயினும்,
அழகினை உணரா திருப்பதும், அதனால்
ஒருகுறை தெரியாது உலவித் திரிதலும்
அய்யகோ! நினைக்கவும் அருவருப் பாகுமே.

59

அக்ஜெமால் அமரோவா

துருக்மேனியா

(பி. 1928)

அமுதாரியா ஆற்றில்

ஒன்றபின் ஒன்றாய் எழுந்திடும் அலையால்
அழைக்கும் ஊற்றாறு,
செந்நெறி பிடித்த பசும்பட் டுடையாள்
சிந்தை கவர்ந்திடுவாள்.

கானல் நீரே ஓடிய பாலையில்
கலிக்கும் செழும்புனலில்,
ஊனுயிர் காக்கும் ஒப்பில் நீரினில்
உலவும் படகார்ந்தே.

குதிரைகள், மக்கள், கொழிபால் குடங்கள்
கொள்வாய் படகோட்டி,
கதிரொளி கருக்கிய பண்ணைப் பெண்களைக்
கூத்திற்கு அழைத்தேகு.

வீசும் காற்று படகை அசைத்துஉன்
விருந்தாய் விளங்கட்டும்
ஏகும் வணிகர் குழுப்போல் குதிரைகள்
மக்கள் இறங்கட்டும்.

60

செர்கி ஓர்லவ் — உருசியக் கூட்டரசு

(பி. 1921)

* *

உருசியா முன்போல் இல்லை, உண்மையே
உருசிய மக்களும் முன்போல் இல்லை; ஆம்.
அப்படி யேஅவர் இல்லை என்பதால்
செப்புக எக்குறை? எப்படி யும்அவர்
புத்தம் புதிய கொள்கையால் விரையும்
வரலாற்று வழியினைத் திருப்பி விட்டனர்.
'ஒழிக போர்'என ஓங்கித் துமிக்கியை
மண்ணில் குத்தினர்; மற்றுங் குறுகிய
பத்து நாள்களில் எத்திசை களிலும்
நானிலம் அனைத்தையும் நடுங்கச் செய்தனர்.
ஓரிடம் மட்டுமா? பாரெலாம் அதிர்ந்தன.
விண்ணை அளாவும் கோபுரம் எழுப்பலாம்,
பாபிலோன் தோட்டம் மலர்ந்திடச் செய்யலாம்,
வியப்புறும் ஆற்றல்கள் முயற்சியில் உள்ளன;
மாபெரும் அருஞ்செயல் ஆவதும் ஆற்றலால்.
புதுநம் பிக்கையின் புத்துணர்ச் சித்தழல்
பெற்றிடப் பிறரைப் பிணைத்திட வேண்டா.
ஆயி ரத்துத் தொள்ளா யிரத்துப்
பதினேழாம் ஆண்டின் இறுதியி லேதான்

உருசிய நாட்டின் ஒளிச்சுடர் ஒளிர்ந்தது.
உருசியம் நோக்கி உலகெலாம் திரும்பின
பிந்திக் கிடப்பதாய்ப் பேசினர்,அந் நாடுதான்
உண்மை விடுதலை முதன்முதல் கண்டது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டின்
உச்சியிலே தான்என் உயர்விடம் காண்பேன்.
வரலாற் றில்முன் காணா வகையினில்
அறிவும்உள் ளுணர்வும் அளவிறந்து உயர்ந்தன.
உருசிய நாடு கருவுற்றுப் பெற்ற
கருத்து களாலே வரலாறு
உருப்பெறு கின்றது உயர்வினை நோக்கியே.

* * *

சிரித்தாள் பெண்ணாள் சிந்தை கவர்ந்த
சிரிப்பை முன்பின் கண்டறியேன்.
விரித்த கலைபோல் விம்மிப் புரண்டு
நிழலும் ஒளியும் கூத்தாடும்.

காற்றோ அவளின் ஆடை விலக்கும்
கையால் குறும்பைத் தடுத்திடுவாள்.
ஆற்றா மாந்தன் அல்லல் படவே
ஆர்க்கும் சிரிப்பின் களிப்பீந்தாள்.

பேரின் பத்தின் தழலில் மூழ்கிச்
சூழ்ந்த தனைத்தும் மாறிற்று.
பேருல கெல்லாம் சுருங்கிக் குழம்பி
இளமை புதுமை ஒளிபெறுமே.

ஒன்றும் இல்லை; ஆனால், அடடே
ஒப்பில் லாஓர் மாயமடா!
என்றெம் மொழியும் சொல்லும் உணர்த்தா
ஏற்றம் பெண்ணின் சிரிப்பாகும்.

61

ரசிய ஓவனேஸ்யான் அர்மீனியா

(பி. 1919)

மதுவருந்தும் பாடல்

தங்கநிற நல்மதுவைக் கிண்ணம்நிறைத் திடுவேன்
தக்கோர்கொடி முந்திரியைப் புகழ்தல்வியப் பலவே.
கங்குல்ஒளி நண்பகலாய் ஆக்கிடும்நல் மதுவே......
கலந்துஅனைவர் தாமும்முன் காணியர்க்கே குடிப்போம்.

கீழ்நாட்டுக் கிண்ணமது மகிழ்ந்துறிஞ்சிச் சுவைப்பேன்
கிளர்ச்சிதரு கருங்கிண்ணம் கிளர்ஒளியைத் தருமே.
ஆழ்களிப்பின் காதல்இர வுக்கினிதுஇம் மதுவே,
அவ்வினிய காதலர்க்கே அனைவருமே குடிப்போம்.

நிமிர்பரிதி நீள்சுடராய் பசும்பொன்ஒளி கூடும்
நிறைமதுவை வழிந்திடவே நிரப்பிடுவீர் கிண்ணம்,
நிமிர்தலையைக் கிறக்குமணம் நிலவறைதான் மதுவை
நீடுயர்க நண்பர்என வாழ்த்திநாமும் குடிப்போம்.

மூன்றான கிண்ணமது நிறைத்திடுவேன் முடிவாய்
மூசைப்பொன் விண்ணின்வழி உதிர்பருவம் ஏற்கும்,
ஆன்றகொடி முந்திரிகொள் காலவிழா இன்பம்
அமுதக்கொடி வளர்த்தவர்க்கே அனைவருமே குடிப்போம்.

* * *

தோட்டவேலைக் காரன்கைகள் கரடுமுரடு, ஆனால்
தூயஉள்ளம் அன்புமிகும் மென்மைநலம் கொஞ்சும்.
போட்டுடைத்துக் கொத்திவெட்டும் கற்குவியல் எல்லாம்
பொன்னான தோட்டத்துச் சுவராகச் சூழும்.

உழுதநிலம் போல்முதுமை நெற்றிச்சுருக் கங்கள்
உழைப்பினையும் அன்பினையும் இரக்கத்தையும் காட்டும்.
விழுதெனவே அடுத்தசெயல் என்னஎன எண்ணும்
விழிப்பார்வம் பற்றூக்கம் கூர்விழியில் மின்னும்.

வியர்வையினால் மரஞ்செடிகட் கெல்லாம்நீர் இறைப்பான்
காவலனும் நண்பனும்ஆம் மாந்தன்வியர்வை ஆமே.
பெயர்ந்துசிறு செடிமாயின் மனவருத்தம் கொண்டு
பெருகுதுயர்க் கண்ணீரை அருவிஎனச சொரிவான்.

கன்னிநிலம் தன்னைஅவன் கடும்உழைப் பினாலே
கவின்சோலை ஆக்கிடுவான், பாட்டின்ப மனையாய்த்
தன்னுடைய பொறுப்புணர்ந்து தொழிலனைத்தும் செய்வான்
தரும்உலக நன்றியினைப் பெற்றுஉவகை பூப்பான்.

62

அந்த்ரேய் பாஸர்

காபரோவ்க்,
உருசியக் கூட்டரசு

(பி. 1925)

புகைக்குழல்

முதியவென் கோவின் கதைஇது வாகும்:
மீன்பிடி படகுடன் கடலில் சென்றனன்,
குதித்துப்பின் கரைக்கு மீண்டதும் தன்புகைக்
குழாயை இழந்தது உணர்ந்து வருந்தினான்.
இதனை அறிந்தனர் அவனின் தோழர்கள்
இறுதியில் வென்கோ தலைவனை அணுகினான்.

'வீண்மொழி பேசி நிற்றல் வேண்டிலேன்
விசைப்படகு எனக்கு வேண்டும் தருகவே,
தாண்டினேன் இன்றுநான் ஆழூர்க் கப்புறம்
தவற விட்டனன் என்புகைக் குழாயினை'
ஆண்டில் முதிய வலைஞன்ன் சொல்லுவா:
'அஃதிலை என்றால் நடைப்பிணம் நானே.'

சிரித்தனர் அனைவரும்; 'முதுமையின் கோலமா?
இழந்தபுன் குழலுக்கு இத்தனை சீற்றமா?
பரிவுடன் தலைவன் வென்கோவிற்கு இயம்புவான்:
'படகுபோய் விட்டது மீண்டிடாது ஐயனே
உரியதுஒன்று என்றால் தள்ளு படகினை
ஓட்டச் சொல்லுவேன் உனக்கு'என்று இயம்பினான்.

முதிய வாங்கா மூண்டனன் வெறியினால்
'முடிந்த கதைஇது விட்டிடு இளைஞனே,
முதியவர் தம்மை மதிப்பதுஇப் படியா?
முழுதும் விசைப்படகு யாவர்க்கும் உரிமையே!'
கொதித்துக் கிழவன் கூறக் கேட்டதும்
கொண்ட பையில்நான் கையினால் துழாவியே
'இதனைக் கொள்கநீ சினப்பதில் பொருளிலை
இப்பழம் புகைக்குழல் உன்னதே பெற்றிடு,'

என்று கொடுத்ததும் புகைக்கூண்டு போலே
இனிது புகைத்தனன் வன்கோ அமைதியாய்.
'நன்றி கூறினேன்; ஒன்றுகேள், என்சினம்
நாடு குழற்குஅன்று கொள்கைக் காகவே!
நன்றிலாப் பொழுது நமக்கு நேர்கையில்
நடத்தஓர் படகும் வாய்ப்பது இல்லையே;
இன்றெ னக்கொரு பதற்ற வேளையில்
ஈவரே விசைப்படகு, என்று இயம்பினான்.

63

போரிஸ் பாஸ்டர்நாக் உருசியக் கூட்டரசு

(1890-1960)

எல்லாவற்றிலும் நான் அறிய விரும்புவது

அனைத்தி லும்நான் அறிய முயல்வதோ
அடிப்படை மெய்ப்பொரு ளையே.
முனையும் நாள்எலாம் தேர்வு செய்தொழில்
முழுமன உணர்வில் மூழ்கலே.

கடந்த காலத்தின் சாரம், யாவினும்
கால்கொண்டு ஊன்றும் அடிப்படை,
இடங்கொள் மூலம் உயிர்ப்பு,உள் உளவுகள்
யாவினுக்கும் விளக்கம் வேண்டுவேன்.

விதியின் பேரலைக் குழப்பம் ஓர்தலும்
விளையும் நிகழ்ச்சிகள் நோக்கலும்
வதிதல், உணர்தல்,நல் அன்பு, சிந்தனை,
வாழ்வு கண்டிட வேட்கிறேன்.

உருச்ச மைப்பதிட உள்ள வல்லமை
உணர்வு போதும்என்று உரைத்திடில்
அருமைக் காதலின் அங்கக் கூறினை
அடிகள் எட்டினுள் பகுப்பனே.

தீவி னைப்பயன் விலக்கு றுங்கனி
வாய்ப்பைப் பற்றிய நிழலையும்,
ஆவற் பாய்ச்சல், விடாமு யற்சிநம்
அங்கை முழங்கையும் எழுதுவேன்.

சட்டம் விளக்குவேன் நீதி யின்முறை
சார்ந்த முதல்நிலை காட்டுவேன்,
பெற்ற புகழினர் அவர்தம் முற்பெயர்
பேசுவேன் எளிதில் பேசுவேன்.

செப்ப னிட்டபூந் தோட்ட மாகஎன்
செய்யுள் சீர்செய முயலுவேன்.
ஒப்ப வேஇரு பக்கம் ஓங்குஎலு
மிச்சை யாம்எழிற் பாடலே.

புதிதாய் வெட்டிய வேலி யின்மணம்
பொழியும்; செம்மலர், புல்வெளி
மிதிக்கும் வெட்டிய வைக்கோல் கோரைகள்
மின்னும் இடிக்கும்என் பாட்டிலே.

பூங்கா, தோப்புகள், பழந்தரு தோட்டம்,
பொலியும் கல்லறை யாவையும்
பாங்காய் சோப்பின் படைத்தது போலப்
படைப்பேன் வியப்புறு காட்சியே.

விளையாட் டிற்கும்மன வேதனைக் கும்இடை
வெற்றி யின்கொடி வீறிடும்......
வளையா வில்லின் நாணி ருந்திசை
வார்க்கும் வில்லிசை பாடிடும்.

64

அலெக்சாண்டர் ப்ரொக்கபியேவ் உருசியக் கூட்டரசு

(1900-1971)

இரண்டாம் நாள்

அரோரா கப்பல் வாழ்த்து வெடியொலி மடிந்ததுவே
அதனின் உடலை நீவா ஆறு கடந்ததுவே.
இராவும் இருளும் வந்தன, விண்மீன் விழித்தனவே
நீவா உறங்கி இன்கன வதனில் ஆழ்ந்ததுவே.

புதுயுகம் ஒன்றைப் பெற்றிடத் தொல்லைப் பட்டதுவே.......
கடுமைத் தோற்றமும் களிப்பின் மிகுதியும் கலந்தனவே.
மதுகை மிகுந்த வைகறைப் பொழுது புயல்எனவே
மண்ணின் மடியில் பெட்ரோ கிராடில் புலர்ந்ததுவே.
மக்கள் இனிமேல் போரைப் பற்றிப் படியாரே
மாய்க்கும் வாள்கள் ஏர்க்கொழுவாக மாறினவே.
திக்குகள் எட்டும் இந்தச் செய்தி பெற்றனவே
எத்தனை எத்தனை மக்கள் விரும்பி எதிர்பார்த்தார்.
அரோரா மீண்டும் வெடித்து உரத்துப் பேசியதே,
ஆனால் இம்முறை வானொலி மூலம் அழைத்ததுவே,
சரேல்என எங்கும் எவர்க்கும் விரைந்தது ஒருசெய்தி:
நட்புறவு அமைதி நானில மக்கள் வாழியவே.

போர்மறவனின் நெஞ்சம்

துப்பாக்கிச் சனிய னாலே, பிளந்தது படைஞன் நெஞ்சம்
எப்பாங்கும் குருதி வெள்ளம் இடையிலே அவன்கி டந்தான்.

கல்லறைக் குள்ளே மெல்லக் கஸ்பனித்து இறக்கி னார்கள்
வல்லவன் களத்தோ ழர்கள் வெடிப்பொலி வழங்கி னார்கள்.

மதிப்புற வளிக்க மாலை பீரங்கி முழக்கி னார்கள்
எதிர்த்தெழு புகையின் நீலம் குமுறியே வழிய னுப்பும்.

நீலவா னிருந்து விண்மீன் நிலத்தினை நோக்கும் எங்கும்
நீலஞ்சேர் காற்று மிக்க நினைவென விரைந்து வீசும்.

வீரப்போர் மறவன் வீழ்ந்தான் மறைந்தது வல்லூறு ஒன்று
வீரனின் மனையாள் வாழ்வின் விளைவினை நுகர வேண்டும்.

புரட்சிப்போர் வீரன் ஆங்கே பொங்கியே கத்த லுற்றான்
'இறந்திடேன் இறக்க மாட்டேன் இறப்பெனக்கு இல்லை
[இல்லை.'

மூடிய கல்ல றைக்கல் மூச்சுவிட் டதிர்ந்து வீழும்
நீடிய மரமாம் ஆப்பிள் நெஞ்சிருந் துயர்ந்த தோங்கி.

கோப்புடன் கிளைகள் ஓங்கிக் குளிர்நிழல் அளித்து உவக்கும்
சேப்புவெண் திரையாய்ப் பூக்கள் கல்லறை சிறக்கக் கொட்டும்.

மலையிருந் தோங்கும் காற்றில் அசைந்திடும் மறவன்
[நெஞ்சாய்க்
குலையிருந்து உயிர்த்து டிப்புக் குன்றிடாது இசைக்கும் துள்ளும்.

65

ராபர்ட் ரவ்தேத்ஸ்வென்ஸ்கி

உருசியக் கூட்டரசு

(பி. 1932)

விலைக்கு வாங்கப்பட்டேன்

ஆம்நான் வாங்கப்பட்டேன்,
உண்மையில் வாங்கப்பட்டேன்.
உறங்கையில், கனவில். நினைவிலே
'பாவலன் முடிந்தான்'
சோவியத் தியலார் உறுதி செய்தனர்.
நண்பர்கள் நகைத்தனர்;
'உயிருடன் நன்றாய் இருக்கிறான் உறுதியே'
குரண்சுடேட் பனியினை உடைத்தே
வாங்கப்பட்டேன் உண்மைதான்.
படைத்தளபதி லெதியின் சொல்லினால்,
அவனின் கண்ணினால்.
உள்நாட் டுப்போர்த் தலைவர் களாலே,
சாவையே தண்டனை யாக்கும்
கடிய நெஞ்சு சிவாஷ்களால்.........
மாசு மறுவற்ற தேசுடைப் பனிகளால்
நெடுநாள் முன்னரே வாங்கப் பட்டேன்;
நெடுந்தோள் மறவன் ஐரிடிஷால்,
போர்க்குமுன் இருந்த சீர்ஒழுங்கு அமைதியால்,

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத் தொன்றில்
கொல்லப்பட்ட வீரர்களாலும்
செங்கதிர் வெயிலால் உலர்ந்த அவர்தம்
செங்குருதி யினாலும்...........
இலையடர் காட்டின் இடையில்
எதிர்பாரா விதத்தில் எதிர்ப்பட்ட போர்க்கள
வீரரால் ஒளியில் வாங்கப் பட்டேன்.
கோகாலா மாவின் கோல நிறங்களால்,
பகுவின் பாங்குறு தேநீர் அதனால்,
ஏருந்து இயற்றும் அமைதி இளைஞரால்,
மண்ணைவிட்டு எழுப்பும் மிதப்பூர் தியினால்
வாங்கப் பட்டேன்.
சுழல்பொறிக் கப்பலின் மிதவைத்தட் டிடத்தில்
ஒருநாள் ஒருத்தி கூர்விழி பாய்ச்சி
என்னை வாங்கினாள்.
(எந்த வலையினால் எனைப்பிடித் தாள்என
இன்னும் அறிகிலேன்.)
இருந்தும், அன்று முதலாய்
இளவே னிலால்என் வாழ்வை எண்ணுவேன்.
இன்இள வேனில் வன்கருஞ் சிட்டுகள்
பறப்ப தனாலே அறிமுக மாகும்.
என்மகளே என்னை வாங்கினாள்.
இஃதொரு தொல்லை அன்றோ?
என்னையும் அன்னையும் அன்றிப்
பின்னை யாரிடம் பின்னி ஆடுவாள்?
வடித்த வாளிலே பொறித்த சொற்களால்
பிடித்தெனை வாங்கினான் கம்சதாவ்.
இடையில் அன்கரா அருவியால்
வாங்கப் பட்டேன்.
மேலும், பாலன்கா, கிஃசியால்
தெரிந்தவை தெரியா தவைகளால்
வாங்கப் பட்டேன்.
துன்புற்றுப் பிறந்தஎன் பாடல் வரிகளால்
எங்களின் தகுதியைப் பிறருடன் இணைத்து
வையம் அறிந்திட வாங்கப் பட்டேன்.

மாயகோ விசுகியால், சுவட்லோ வால்நான்
வாங்கப் பட்டேன்.
பாட்டுகள் உயிர்கொளும் மாபெரும்
நாட்டினாலும், எங்கே மகிழ்ச்சி நாள்தொறும்
இரட்டிப் பாகுமோ,
எங்கே செல்வம் எதிர்கா லத்திற்கு
எமக்கே சேர்க்கப் படுமோ,
எங்கே இடுக்கண், இன்னல், இடர்ப்பா டிருப்பினும்
அங்கே தழல்பெறும் நெஞ்சங் களாலும்
வாங்கப் பட்டேன்.
முழுது மாகநான் வாங்கப் பட்டேன்,
அடக்கி மடக்கி வாங்கப் பட்டேன்.
என்னிடம் வாங்க இனிஒன்றும் இல்லையே.

66

பால் - இரிக் ரும்மோ

எஸ்தோனியா

(பி. 1942)

நெஞ்சிலோர் இரும்புத்துண்டு

அவன்ஒரு படைஞன் ஒரோனிஷ் அருகே அவன்மனையாம்
அடர்மீன் துளைத்த வான்,குளிர் ஒளிமை ஆங்குமிழும்.
பிறந்திருந் தேன்நான் அப்பொழுது யாவரும் எனைச்சூழ்ந்தார்,
பெண்மகள் உடைக்குள் சீர்பெற்று இன்ப உணர்வுற்றேன்.

எங்கோ நடந்தது அந்த நிகழ்ச்சி யான்அறியேன்;
எரியும் பிணிமனைப் படுக்கைபோற் பனியும் மடிந்துவிழும்,
அங்கோ பறவை, பரிதி, ஒருமரம் கூடஇலை!
அவனோ நெஞ்சில் அடியொன்று பட்டான்; இறக்கவிலை.

ஒருவரை ஒருவர் எவ்வகை அறிவோம்? அவனுடைய
உட்புண் ஆறிற்று; நானும் வளர்ந்தேன், பள்ளிசென்றேன்
இருபதாண் டின்பின் தாளிகை கண்டேன்; துணுக்குற்றேன்.
நெஞ்சில் இரும்புத் துண்டுடன் வாழ்ந்தான் என்றறிந்தேன்.

பள்ளித் தேர்வு சிறுவன் நெஞ்சை அழுத்துகையில்,
தங்கை முதற்பேறு வந்துதன் நெஞ்சில் தாங்குகையில்,
உள்ளே இரும்புத் துண்டை நெஞ்சில் வைத்திருந்தான்.
ஓகோ! இருப தாண்டாய் நெஞ்சும் உறுதியதே.

போர்மிகக் களைத்துப் போந்தது போக்கிடம் தான்தேடிப்
புகுந்த நெஞ்சில் இரும்புத் துண்டு துருவேறும்
ஓர்நாள் காலை இருப தாண்டின் பின்எழுந்தான்
ஒடிந்த துண்டின் தழல்போல் தகிப்பை உணர்ந்தனனே.

இன்றே அவனின் வரலாறு அதனை அறிந்திட்டேன்,
என்நெஞ் சிலும்ஓர் இரும்புத் துண்டென் றுணர்கின்றேன்,
அன்னோன் துண்டோ அகற்றப் பட்டது, துயரில்லை
ஆயினும் இனிஎன் நெஞ்சில் அத்துண்டு அழுத்திடுமே.

67

மக்சிம் ரில்ஸ்கி உக்ரைன்

(1895-1965)

நட்புறவு

நான்அறிவேன் ஒருமலரைப் பனிக்குழந்தை என்பர்
நல்லழகும் இல்லையதில் நறுமணமும் இல்லை,
ஆனகுளிர் பனிக்காலம் வரும்வரைக்கும் எங்கும்
அடர்ந்தெங்கும் அடுக்கடுக்காய் அதுமலர்ந்து திகழும்.
ஆர்ப்பாட்ட வடிவில்லை மேன்மைஎழில் இல்லை;
அமைதிமிக இருந்திடினும் தன்தகுதி உணரும்.

சிறப்புறுத்தும் நிறமில்லை, மணங்கூட இல்லை;
தேன்சுவையோ குறையில்லை; மிகையில்லை; மேலும்
பிறன்காலில் வீழ்ந்திரந்து கெஞ்சுவதும் இல்லை;
பேசும்எல்லாப் பருவத்தும் தானிருந்து வாழும்,
வாழ்வதிலும் பூப்பதிலும் வலுவிழப்ப தில்லை;
வீழும்உறை பனியில்தான் அதுசோர்ந்து வீழும்.

மாந்தரிடை நட்புறவும் இத்தகைய தாகும்.
வன்மைமிகும் உழைப்பினிலும் போரினிலும் ஒன்றி
ஏந்துபுயல், போராட்ட எதிர்ப்புகளைத் தாங்கி
எஃகெனவே அசைக்கவொணா உறுதிநிலை கொள்ளும்;
தொல்லையினைத் தோல்வியினை அஞ்சாமல் எதிர்க்கும்;
புல்லியதாம் புறப்புனைவு தேவையோ அதற்கும்?

நண்பரிடைப் புகழ்மொழிகள் நயவுரைகள் ஆகா.
நட்புறவை வாய்மொழியால் புனைந்திடவோ வேண்டும்?
பண்புயர்ந்த நட்புறவுக்கு இணையாமோ காதல்?
பயிலும்உண்மை நட்பென்றும் அழிந்தொழிதல் இல்லை.
நட்புறவுப் பிணைப்பதனைச் சாவுபிரித் தாலும்
நட்புறவு, செயல்களினால் ஞாலத்தில் வாழும்!

68

ராமிஸ் ரிஸ்குலோவ் கிர்கீசியா

(பி. 1934)

மக்கள்

அனைத்து மக்களின் கண்ணீர் அனைத்தும்
இணைந்துபாய்ந் தோடினால்
குன்றையும் ஆற்றையும் உப்பாய் மாற்றிடும்;
பள்ளத் தாக்கெலாம் உப்பளம் ஆகிடும்.
மலர்களின் மணமும் கைத்துப் போகுமே!

அனைத்து மக்களின் புன்னகை அனைத்தும்
மலர்ந்தோன் றானால்,
அனைத்து மகிழ்ச்சியும் சால்பும்
இணைந்தோன் றானால்,
மண்ணில் புதியதோர் செஞ்சுடர் எழுந்திடும்.
வன்கொடுங் கோலர்கள் பொறாமையால் மடிவரே.

மக்கள்!
காலங் காலமாய் ஞாலம் அளந்த
மாபெரும் நாடோடி மக்கள்.
நாட்டுக் கதைதரும் பூத விலங்குபோல்
வலிய தாயினும்
அன்பு பூண்ட பூத விலங்கிது,
ஈறிலாக் காலமாய் நீளு கின்றது,

நகர்கின் றதுவே,
ஆயிரம் ஆயிரம் கால்க ளுடனே,
ஆயிரம் ஆயிரம் கண்க ளுடனே,
ஆயிரம் ஆயிரம் முகங்க ளுடனே.
உணர்வன யாவையும், காண்பன யாவையும்,
ஒலிப்பன யாவையும் உட்கொண் டிருக்குமே.
அதன்நினை வாற்றலும் எல்லையுள் அடங்குமோ?
மக்களின் இனிய மொழிகள்
சிற்றூர் பேரூர் முற்றிலும் பரவிடும்.
கனவில் காணும் அனைத்தையும்
முயல்வ தனைத்தையும்
மக்கள் தாமே வழங்கிட முடியும்.

வேனிற்காலத்தில் ஒரு நாள்

வயது பதினெட்டு வாய்த்ததும்
தேர்ந்தெ டுத்திடப் பாதைகள் எத்தனை.
இன்இள வேனில் பருவம்,
கதிரவன் ஒளிர்கிறான்,
புத்தம் புதிய புற்களின் பொலிவு!
வேனிலின் கிளர்ச்சி
உன்னையும் நன்றாய் ஆட்டி வைத்திடும்.
உன்முன் உள்ள வாய்ப்பெலாம் காணின்
உன்தலை சுற்றும்.
நம்பிக்கைப் பெரும்படை உன்முன் நடந்திடும்.
காற்றில் அசைந்திடும் கொடியை
எல்லை இல்லாக் காலப் புயலோ
எரிதழல் ஆக்கிடும்.

புல்லில்ஓர் சிறுவன்
ஆட்டுக் குட்டிபோல் துள்ளி ஆடுவான்.
குழந்தை களின்பல காற்றூ தல்கள்
உலகத்துள்ள காற்று முழுதையும்
உட்கொளத் தோற்றுச்
சிரித்து வெடித்துச் சிதறிப் போகுமே.

69

ரசூல் ரஸா

அசர்பைசான்

(பி. 1910)

நால்வர்

நால்வர் சந்தித்தோம் —
நம்பிக்கை, ஐயம், கவலை, நான்.
நேரமோ நள்ளிரா
நிறைந்தது பெருமழை
காற்று உறுமிற்று.

நம்பிக்கை நவின்றது :
மழையும் நின்றிடும், காற்றும் ஓய்ந்திடும்
இரவும் முடிவுறும், பொழுதும் விடிந்திடும்
பொன்கதிர்ப் பரிதி முன்எழுந் திடுமே.

ஐயம் புகன்றது :
எப்பொழுது? வினவுவேன் எப்பொழுது?
மழைபனி யானால்? காற்றும் புயலாய்
இரவு நீடித்தால், என்ன செய்வது?

கவலை கழறிற்று :
மழைநின் றாலும், காற்றடங் கிடினும்
என்ன அதனால்?
என்னுளே புலம்பும் தனிமையின் ஏக்கம்
விடியலில் விடியுமா?

நம்பிக்கை உரையை இவ்வாறு
ஐயம் மறுத்தது; ஐயத்தின் உரையைக்
கவலை மறுத்தது.

நானோ? ...... கேட்டுக்கொண் டிருந்தேன்,

நம்பிக்கை உரையினை,
ஐயத்தின் சொற்களைக்
கவலை மொழிகளை —

விடியற் பொழுதை எதிர்பார்த் திருந்தேன்
பொன்னொளி விடியல் —

எப்பொழு தாகுமோ?
என்ன கொணருமோ?
ஏதும் கேட்டிலேன்.

அமைதியாய்

நம்பிக் கையின் மெல்லொலி கேட்டேன்
பேசுவாய்!
என்னிடம் பேசுவாய்!

70

காரா ஸெயித்லியேவ் துருக்மேனியா

(1915-1971)

துருக்மேனியன் முத்துகள்

மாதம் ஆறுமே கழிந்தன,
மலருமுன் பருத்தி மொட்டுகள்.
காதற் செங்கதிர் பருகி,
கண்ம லர்ந்தன ஒளியிலே.

பச்சை மணித்தழை இடையிலே
பருத்த முத்துகள் போலவே
இச்சை யாய்க்குடி யானவன்
கனவில் வாழ்ந்தன மொட்டுகள்.

மாந்த இன்பமும் துன்பமும்
மண்டி நிறைந்தது; பஞ்சினை
ஏந்து செடியெலாம் காற்றினால்
இன்ப மாய்அசைந் தாடிடும்.

நாளை என்றுகாத் திராமலே,
நாளின் வைகறை முன்னமே
வேளை வந்ததுஎன்று அறுவடை
மேவு வார்தமைப் போற்றுவோம்.

மேலும் ஒருமணி நேரமும்
மேவு பனித்துளி என்னவே
சால எண்ணியே நிலத்திடைத்
தான்ந டந்தனன் பண்ணையாள்.

குளிர்கூ றாவளி பேய்த்தனம்,
கொண்டு அரற்றுமுன், இலையுதிர்
தெளிவுக் காலந்தான் முடியுமுன்,
சேர்ந்தெடுப் போம்நாம் பருத்தியை.

நிலத்தின் எல்லைகள் வரையிலும்,
நெடுகச் சென்றிடும் நடைவழி
நிலத்தின் மண்அவன் வாழ்வென
நீண்ட காலமாய் ஆயின.

துருக்மே னியக்குடி யானவன்,
தூய நம்பிக்கை யாவுமே
பருத்தி மேல்அவன் வைத்துளான்,
பருத்தி யேஒளிப் பீடெலாம்.

இயற்கை யின்கலை யாவிலும்,
எழில்மி குந்திடல் பருத்தியே
முயற்சி, நம்பிக்கை, அச்சமும்,
முளைந்து ஒன்றாக்கிப் பிணைந்திடும்.

துருக்மே னியநா டிலையுதிர்
காலப் பருத்தியால் ஓங்கிடும்
பெருவனப் புடைவெண் பருத்தியால்
பள்ளத் தாக்குகள் பொலியுமே!

71

பருயிர் சேவாக் — அர்மீனியா

(1924-1971)

உலகத்தின் கணிப்பானுக்குரிய உழைப்பும் துல்லிய மானிகளும் *(ஒரு பகுதி)*

கணக்கெடுக் கின்றீர், கணக்கெடுக் கின்றீர்
நிற்கா மல்நீர் கணக்கெடுக் கின்றீர்.........
எங்கே, இதைக்கணக் கெடுங்கள் பார்க்கலாம்:
ஓரிளம் பெண்ணின் உள்நெஞ் சிருந்து,
மின்னிக் கொழிக்கும் கன்னஞ் சிவந்திட,
எளிதாய் நாமெலாம் நாணம்என் றிசைக்கும்
அணுக்கதிர்ச் சுடர்ஒளி மினுமினுப் பேற்றிட,
எவ்வெவ் அலைகளில், எத்துணைக் கணங்களில்
எவ்வளவு குருதி விரைந்திடும் இயம்புவீர்?
எதிர்பாரா வகையில் எவரையே னும்யாம்
கண்எதிர் காண்கையில் காற்று மண்டிலக்
கலக்கம் தேங்கிய கண்ணைஊ டுருவும்
அண்டக் கதிர்களின் அளவு தன்னையும்,
பார்வையும் பார்வையும் பாய்ச்சுஒளி வீச்சினால்
நெஞ்சுக்கு நன்மை நிகழுமா? தீமையா?
என்பதை யும்கணக் கெடுங்களேன் பார்க்கலாம்.

கணக்கெடுக் கின்றீர், கணக்கெடுக் கின்றீர்
நிற்கா மல்நீர் கணக்கெடுக் கின்றீர்......

இன்இளங் குழந்தைகள் மென்மயிர்த் தலையைப்
பிஞ்சு விரல்கள் கொஞ்சும் போதும்,
காதற் கினிய மாதரின் மெல்லிடை
தழுவி மகிழ்ந்து குழைவுறும் போதும்,
பாட்டி மார்களின் மெலிந்த தோட்புறம்
அணைத்திடும் போதும்நம் அங்கையின் வழியாய்ப்
பாய்ந்திடும் மின்சாரம் எவ்வளவு என்றும்,
பதிலுக்கு நம்மீது பாயும் மின்சாரம்
கூடவா, குறைவா எவ்வளவு என்றும்
கணக்கெ டுத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்.

இடைவி டாமலும் தொடர்ந்தும் கணிக்கிறீர்.........

ஆயினும் இதனை அறிந்ததுண் டாநாம்?
மாந்தன் சிரிப்பதேன்?
மண்ணுல கத்து வாழும் உயிர்களுள்
மாந்தன் மட்டுமே சிரிப்பவன், இதுஏன்?
இன்னும்ஓர் வேலையை இடுகிறேன்; செய்க.
உலகச் சிரிப்பெலாம் மொத்தமாய்க் கூட்டுக;
அவற்றின் ஆழம் அழுத்தங்கட் கேற்பப்
பிரித்துத் தனித்தனிப் பெயர்கொடுத் திடுக.
கெக்கலி நகைக்கும் எக்களிப் புக்கும்
வேறு பாட்டினை விளக்கிக் கூறுக.

இடைவி டாமலும் தொடர்ந்து கணிக்கிறீர்......

இன்னும் ஒன்று கணக்கிட வேண்டுவேன்;
நாம்ஒவ் வொருவரும் ஓங்கும்இவ் வாழ்வில்
பொதுப்பட எத்தனை மகளிரைக் கொதிப்புறும்
காமக் கிளர்வுடன் கண்டுவெறித் திருப்போம்;
உடன்பிறப்பு அன்பொடும் ஊன்றிப்பார்த் திருப்போம்;
இவற்றை எல்லாம் எண்ணிக் கணிக்க!

மேலும்நம் வாழ்வில்
எத்தனை பெண்டிரோ இனியராய் நம்மை
உள்ளன் போடு காதலித் திருப்பர்;
அத்தகு மகளிரை அறியாது போயினோம்.
இனியேனும் அன்னார் எங்கிருக் கின்றனர்
என்பதை அருள்கூர்ந்து எமக்குக் காட்டுக!
இன்னும்,
உண்மையாய்ப் பார்த்தால், உலகில் நமக்குப்
பெயரில் லாமலே பிறந்த குழந்தைகள்
எத்தனை எத்தனை யோயார் கண்டார்?
மொத்தக் கணக்கை மொழியவேண் டுவனே.

நல்ல மாலைப் பொழுது

ஞாயிறு போய்மறையும்—ஒளி—நாளின் பகல்குறையும்
தாய்மலை அத்தனையும்—நிழல்—குழந்தை களைத்தருமே.
சேய்கள் படிப்படியாய்—வளர்ந்து—பெற்ற தாய்தனையே
தூய்இருள் கல்லறையில்—கொண்டு—தூர்த்தே புதைத்திடுமே.

பாய்ந்தெழும் சூறாவளி—நின்று—வானிடை மேல்எழும்பும்
தாய்கன்னி வான்ஏற்றம்—உண்மை—தானென்று
[சான்றுரைக்கும்.
தேய்குளிர் வானத்திலே—பறவைத்—தோற்றத்தி லேதிரண்ட
ஆயதோர் ஊனுருவம்—மெல்ல—அழகுறச் சிறகடிக்கும்.

பள்ளத்தாக் கின்இடையில்—பெண்—பாவை ஒருத்திநிற்பாள்
உள்ளவள் காலடியில்—உலகின்—அச்சுச் சுழல்கிறது.
தோன்றா அவ்அச்சின்—வெளித்—தோன்றும் ஒருகூறாய்
அன்புஇவ் உலகியக்கும்—எழில்—அணங்கவள் நிற்கின்றாள்.

குற்றம் நடந்தஇடம்—தனில்நான்—மாட்டிக் கொள்ளவில்லை
குற்றத்தைக் கண்டுரைக்க—யாரும்—சான்றிலர்; ஆனாலும்
குற்றம் புரிந்தவன்நான்—என்—குற்றம் உணருகின்றேன்
வெட்கமாய் நடுக்கமுடன்—இந்த—மெல்லியை
[விடுத்துரைப்பேன்:

மற்றவள் எனக்குரியாள்—அவட்கு—மாலை வணக்கம்.அடி
ஒற்றைத் தனிமயிலே.........

72

ஸ்திபன் ஷிபச்சேவ் உருசியக் கூட்டரசு

(பி. 1899)

மாந்தனின் உள்ளங்கை

மாந்தனின் உள்ளங் கைதான்
பரந்தகன் றிருக்கும் காணாய்;
ஏந்திடும் வலிமை ஓங்கும்
ஈடிலா ஆண்மைச் சின்னம்.

குறுக்கிலும் மறுக்கி லும்ஆழ்
கோடுகள் பரந்தி ருக்கும்
நெறிப்படும் அவனின் போக்கை
தெளிவுற விளக்கிக் காட்டும்.

நெம்புகோல் அழுத்தும் போது
நெகிழ்விலாக் கடினம் கொள்ளும்
கொங்கைகள் தழுவும் போதோ
கூச்சத்தால் சிலிர்த்தி ருக்கும்.

உள்ளங்கை மாந்தன் வாழ்க்கை
விரிவினைக் காட்டும் வார்ப்பு.
வெள்ளமாய் அவன்பு ரிந்த
செயல்களை விளக்கும் சான்று.

தண்ணீரை உள்ளங் கையால்
தாங்கியே எடுக்கும் காலை
விண்ணகம் தலைகீ ழாக
விரிந்திடக் காண்பீர் நீரே.

இக்கரை இருந்து நீங்கள்
அக்கரை ஏகு தற்குத்
தக்கஓர் துடுப்பும் ஆகும்
தப்பிலாது உதவும் என்றும்.

நெடியபோர்ப் படையில் முன்னாள்
நின்அகங் கைது ணிந்தே
கொடியினை உறுதி யாகக்
கொண்டதை நினைந்து பாராய்.

மடியினில் மழலைச் செல்வம்
மகிழ்வுடன் நெளியும் போதில்
மிடைந்திடும் உன்அ கங்கை
மெல்லென வருடும் அன்றே.

போக்கிரி ஒருவன் வீணாய்ப்
புகுந்துநம் சினத்தை மூட்டின்
தாக்கிடும் அவன்கன் னத்தைத்
தண்டனை அளிக்கும் கையே.

உலகினைச் சுற்றிப் பற்றி
உவகையில் மகிழ்வ தைப்போல்
நலந்திகழ் ஆப்பிள் தன்னை
நயமுடன் பிடித்து ருட்டும்.

மாசுறா வண்ணம் தூய்மை
மணக்கட்டும் அவ்வுள் ளங்கை,
பேசிடும் நேர்மை ஒன்றே
பெற்றியை உணர்த்தி டட்டும்.

பனிக்காலத்திற்குப் பிரியாவிடை

மரங்களுடன் மலைகளுமே பனியால்உடை புனையும்,
வாரம்பல கழிந்திடவும் வறட்சிமெலத் தோன்றும்;
பிரியும்உனை வழியனுப்ப வருந்தமுறு கின்றேன்;
பெய்பனியைப் பனிப்புயலைப் பிரியமனம் இல்லேன்.

வெண்பனியின் இன்னொளியால் கண்கூசச் செய்வாய்
வியப்புறும்உன் பேரெழிலில் வாழ்க்கைபல மறையும்.
அண்மையிலே ஆனபனிப் பாதைமறை வுறல்போல்
அருவாழ்வின் தடம்மறைய அடக்கிஒளிர் கின்றாய்.

இறுதியாய்வான் வெண்மீனின் அடியில்நிற் கின்றேன்
இம்முறைபோல் இனியுன்னை நான்காணற் கில்லை.
நொறுக்குகிறேன் பனித்திரளை என்கையில் ஏந்தி
நொறுக்குவதேன்? காரணம்ஏன்? நான்அறிகி லேனே.

73

லோயிக் ஷெரலியேவ் — தாஜிகிஸ்தான்

(பி. 1941)

மரம்

காற்றி ரைந்து வீசுகின்ற
கனத்த மலையின் முகட்டினிலே
ஏற்ற உச்சி மேலுச்சி
இருகண் காணா இடத்தினிலே
தோற்றியது ஆங்கோர் மரம்அதனைத்
தொலையா இந்த உயரத்தில்
நூற்றாண் டின்முன் வைத்தார்யார்?
மருண்டு நோக்கி வியக்கின்றேன்.

முகில்கள் குலவும் நிலம்அதனை
இளக்கத் தோட்டக் காரனிலை,
மகிழ்ந்தம் மரமாம் குழவியினைப்
பேணிக் காக்கவும் ஆளில்லை;
எனினும் பச்சென்று அதுதிகழும்
எஃகைப் போலும் அதுநிற்கும்.
தனிவன் புயலால் தாக்குண்டும்
தளரா உறுதி நிலைபெறுமே.

பனிவீழ் பாறை முகட்டினிலே
அஞ்சா துயர்ந்த திண்மரமே,
தனித்தாழ் வேர்கள் முதலாகத்
தழைத்த பசுமை மணிக்கிளைகள்
இனிமை வெறியால் பூத்தாடி
எக்க ளிப்பால் கண்மூடி
முனைந்து பெற்றினி வீழாநின்
விடுதலை தன்னில் திளைத்திடுமே.

74

யுவான் ஷேஸ்தலோவ்

(பி. 1937)

காண்டி-மான்சி
மாவட்டம்,
உருசியக் கூட்டரசு

உருசியா

கேட்டறி யாத கேடுசெய் உறைபனி
என்தாய் உயிரினைக் கொண்டு சென்றபின்,
கொடிய தீமையின் குறட்டுப் பிடிகள்போல்
உறைபனி என்றன் உயிரையும் கவ்விச்
சில்லிடச் செய்திடச் சீறிய வேளையில்,
உருசியா அருமைத் தாய்மை உணர்வுடன்
பெருவழி காட்டும் பேரன் புடனும்
தன்அருட் கையை என்மேல் வைத்தது.
அறிவினை வலிமையைத் துணிவினைக் கொடுத்தது.
உணவினை வீட்டை நிலத்தினைத் தந்தது.
இன்இள வேனிலின் பொன்னொளி விழிகளால்
இன்புற நோக்கித் தென்புற ஊக்கி,
நாளொரு மேனியும் பொழுதொரு நிறமுமாய்
என்னை வளர்த்தனள் அன்னை உருசியா.
தாய்மைப்பே ரன்பால் தளிர்த்ததுஎன் நெஞ்சம்
வாழ்வில் திளைத்திட வளர்ந்தன விழைவுகள்.
இளமை வாயிலை எய்திடும் போதில்
வளமகள் இன்ப வடிவி னளாகிக்

கண்டாள் என்னை; விண்டதுஎன் உறுதி
ஏவி மயக்கும் ஆவல் விழிகளால்
சரண்புகுந் தேன்நான்; உரனை இழந்தேன்.
இன்இள வேனிலின் பொன்கதிர்ச் சுடராய்
என்னுள் மகிழ்ச்சியின் மின்னொளி நிறைத்துக்
காலங்கள் தம்மைக் கணங்களாய் மாற்றினாள்.
மெய்யன்பி னாலே கையொடுகை பிணைத்து
வாழ்க்கை மதுவினை அடிவரை பருகினோம்.
நிறைஇன் பத்தால் நிமிர்ந்து மகிழ்ந்தேன்.
இன்பிலும் துன்பிலும் மழையிலும் வெயிலிலும்
என்றன் தோழியும் மனைவியும் அவளே.
இங்ஙனம் நடத்திய இன்ப வாழ்க்கையில்
உருசியா அளித்த ஒருபெரும் பரிசாய்ப்
பெருமை பூரிக்கப் பிறந்தனள் ஒருமகள்.

விரைவில் ஒருவருக் கொருவர் எங்கள்
தாயக மொழிகளில் அளவ ளாவுவோம்.
அன்னையைப் போல்அவள் நல்லியல் பினளாய்,
உருசிய அன்னையின் பெருங்குணத் தினளாய்,
உருசியமும் மான்சியும் மருவி மணக்கும்
இருவகைக் குருதி அவள்உடல் பாயுமே.
யாவரும் அவளை இருவகை யாகவும்
அழைக்க, மற்றும் அறிக அம்மகள்
இருமடங் காய்எனக்கு இனியள்என் பதையே.

75

ஓலெக் ஷெஸ்தின்ஸ்கி உருசியக் கூட்டரசு

(பி. 1929)

* * *

தம்மக்கள் குழந்தைஎனின்
தவிப்புடனே துயின்றிடுவர் அருளுடைய அன்னையரே;
தம்மக்கள் வளர்கையிலும்
தயக்கமுடன் துயின்றிடுவர் அன்புடைய அன்னையரே;
தம்மக்கள் வயதடைந்தும்
தணிப்பின்றித் துயின்றிடுவர் ஆர்வமுடை அன்னையரே;
புனிதமிகு தூங்காமை!
எம்முடைய அன்னையர்க்கே எப்படிநாம் நன்றியினை
இயம்பிடுவோம்? எப்படித்தான் கைம்மாறு செய்திடுவோம்?
பண்பான கைகட்கு முத்தமிடும் பற்றாலா?
வெண்கூந்தல் தனைவருடும் வேட்கைமிகு விருப்பாலா?
இளமையிலே தாம்மறைய எடுத்திட்ட கல்லறையில்
வளரும் மலர்கட்கே தண்ணீரை வார்த்திட்டா?
அன்னையர்தம் அன்புக்கே நன்றிக் கடனுண்டோ?
நன்றொளிரும் செங்கதிர்க்கு நேர்உதவி செய்வதுண்டோ?
மண்ணளிக்கும் விளைவிற்கு மாற்றுதவி புரிவதுண்டோ?
எண்ணிலாக் காலம் எவைதரினும் ஈடாகா......!
என்றாலும் நல்லசெயல் ஏதேனும் நாம்செய்தால்

பீடுமிகும் ஒருசெயலைப் பெருஞ்செயலை நாம்செய்தால்
பேருலகில் அன்னைமார் புன்முறுவல் பூத்திடுவர்
சிரித்து மகிழ்ச்சியினால் சிந்திடுவர் கண்ணீரை
இருப்போரும் என்றோ இறந்தோரும் தாம்.

பொதுமையர்

எங்கள் காலப் புதுமை மக்கள்யாம்
ஈடி லாப்பொது வுடைமையர்
எங்கள் வல்லமைக் கைகள் நல்லுணர்வு
ஆற்றலால் மென்மை கொண்டன;

இங்கெம் கையிலே கடல்கள், குன்றுகள்,
இனிய பள்ளத் தாக்குகள்
தங்கி உள்ளன படர்ந்த என்னுடைத்
தாயகம் நிலைத்து ஓங்குமே.

எஃகு ருக்கிடும் ஆலை மாபெரும்
ஏமு றும்நகர் ஆக்குவோம்;
எஃகின் உறுதியால் அச்சம் அற்றுமே
இங்கு அனைத்தையும் ஆற்றுவோம்;

மிக்க பேரொளிச் செங்க திர்தனை
விழிக்கு நேர்வழி காணு வோம்;
தக்க வண்ணமாய் எந்தப் போதிலும்
சமன்கொ ளும்நிலை பேணுவோம்.

எங்கள் நெஞ்சத் துடிப்பை மாநிலச்
செவிகள் யாவுமே கேட்டிடும்;
எங்கள் நெஞ்சகத் செந்தீ மின்னலை
நிலையம் ஓங்கிட முட்டிடும்;

இங்கிவ் உலகினில் இயங்கும் ஞாயிறு
மறைந்த தென்னும் வேளையில்
பொங்கு பொதுமை வாணர் நெஞ்சமே
பொலியும் செஞ்சுடர் ஆகிடும்.

உலகம் எங்கள் முகத்தை நோக்கியே
உழன்றுழன் றுவகை கொண்டிடும்;
உலகின் இன்முக உருள ழில்எலாம்
உயர்ந்தி னிமையால் ஓங்கிடும்;

மலர்செம் பருத்தி வண்ண வானுடன்
வைகறைப் பொழுது அலர்கையில்
நிலவும் வாயிலில் பவழ மல்லிகை
நிறைந்து பூத்தெழில் கொஞ்சிடும்.

எங்க ளின்தொகை கோடிக் கணக்கின,
யாங்கள் வாழும்இம் மண்ணினைத்
தங்கும் அன்புடைக் கையால் தாங்குவோம்
தழைக்கும் நகர்களை ஓம்புவோம்;

கங்குல் வானிலே செம்ம லர்களால்
கண்ம லர்ந்தன மீன்களே;
எங்கள் காலணித் தூசி மேம்பட
ஏகுவோம் தொடர்ந்தே ஏகுவோம்.

எங்கள் காலணித் தூசி மேம்பட
ஏகுவோம் தொடர்ந்தே ஏகுவோம்;
இங்கிவ் உலகினுக்கு ஏற்ற யாவையும்
யாங்கள் ஈந்திட முந்துவோம்;

இங்கு வேறு புத்துலகங் கள்எழின்
இனிது காப்பதில் ஆய்ந்துமே
அங்கண் ஞாலம் அத்த னைக்குமே
அக்க றைபொறுப் பாகுவோம்.

76

கன்ஸ்தாந்தின் சிமனவ்

உருசியக் கூட்டரசு

(1915-1979)

ஏட்டின் தொடர்பாளரிடமிருந்து

முன்னுரை

இதழ்ஆசிரியத் தோழரே, இஃதென் அறிக்கை
என்னுடைக் குறிப்பேட் டிருந்து எடுத்தது.
வியட்நாம் இடர்ப்பாட் டெல்லையில்
இருப்பதைப் பார்த்தேன்.
போர்த்தீ புற்றெடுக் கின்றது;
வெற்றுரை நடையில் விரிப்பதைக் காட்டிலும்
பற்றும்என் செய்தி பாட்டிலே.
....

6

இளமை நினைவுதான் எதில்தொ டங்கிடும்?
வளமிகு மரங்கள் வளர்ந்த பொழிலிலா?
ஆற்று மணலிலா? அடைமழைத் தெருவிலா?
இவைஎதுவும் இன்றிக்
கொலையுறும், சிந்தும் கொடுங்கண் ணீரிலும்,
விண்ணூர்தித் தாக்கலின் சங்கொலி முழக்கிலும்,

செவிகள் அறுபட முகிலிடை வீறிடும்;
கொடிய ஒலியிலும், குப்புறப் புழுதியில்
மக்கள் விழுந்து பதுங்குகாட் சியிலும்,
கண்ணின் முன்னே நிகழும் சாவினைக்
காண நேரிட்ட கடுங்காட் சியிலும்
அந்த நினைவுகள் அமையுமேல் என்செய?
ஐந்திலும், பத்தோடு ஐந்திலும்
இருபத் தைந்திலும்,
அவர்களின் நினைவு போரில் தொடங்கும்
இந்நாட்டில் இதுநிலை மறக்க முடியுமா?
இதனை மனத்தால் கற்பனை செய்வோம்.
....

8

விண்ஊந்து பயணக் குறிப்பினைக் கொண்ட
கையேடு அதனில் இல்லைஅப் போரே,
ஆனால், அஃதோ அணிமையில் உள்ளது.
பதினைந்து நிமியப் பறப்பினுக் குள்ளே
வானூர்தி எந்திர வாய்அ டங்கினால்
நாட்டின் எல்லைக் கோட்டுப் பகுதியில்
பீரங்கிக் குண்டுகள் வீறிட்டு
எரிமலை வாயாய் விரிவதைக் காணலாம்.
இப்பொழு தெல்லாம் வியப்புக் குரிய
அனைத்துலக வான்வழி முளைத்துள் ளதுவே.
இங்குயாம் பயணம் செல்கிறோம்; நொடிக்குளே
அங்கே அவர்கள் படுகொலை புரிகிறார்!
வியப்பினும் மேலாம் வியப்பு!
போரினை ஏமாற்று வதுபோல்
கல்கத்தா விலிருந்து விண்ணுந்துப் பறப்பில்
பயணச் சீட்டுடன்
முரணிய உடையும் கரடி முடியுடன்
புதைகுழி தோண்டும் வெட்டியான் போல
அமெரிக்க இளைஞர் வந்தனர் மூவர்;

அந்த இலாவோசுக் காட்டின் மேலே
அமெரிக்க இளைஞர் பறந்துகொண் டிருந்தனர்.
இருக்கைக் கச்சையை இறுக்கிக் கட்டிப்
போர்த்தழல் வேர்கொண் டிருந்த எல்லையில்
பறந்துகொண் டிருந்தனர்.
அநாய்நகர்க் கூட்டத்துக்கு அவர்கள் சென்றதும்
அடையாளத் தாள்களை அழலில் பொசுக்குவர்.
வெளித்தெரி யாமல் கைகள் இறுகிட
எங்களுக் கெல்லாம் அயலவ ராக
அங்கே பறந்தனர். அடுத்த நொடியில்
குதிக்கப் போகும் குதிகுடைக் காரர்போல்
பதற்றத் தோடு பார்க்கின் றனரே!

9

போரிஸ் காபடோவ் தாய்க்கு

முதலில் நம்ப முடியவே இல்லை.
ஓடஸ்டா விலிருந்து கடற்படை இளைஞர்
ஐபாங் நாவாய்க் குறட்டில்
(போரில் மாண்ட சீர்எழுத் தாளர்)
போரிஸ் காபடோவ் பெயர்பெறு கப்பற்கு
வண்ணம் தீட்டும் வாகினைக் கண்டேன்.
போரிசைக் கண்டுநான் நாள்பல ஆயின.
நலந்தான். மூச்சும் நன்றாய் இழுக்கிறார்;
நடப்பதில் சளைத்திலர் என்றே கூறுவர்;
ஆயினும்,
இரங்கத் தக்கது ஒன்றுண்டு, அவர்தம்
நண்பர்க் கேதும்மடல் எழுதினார் இல்லை.
இருப்பினும் என்ன
நல்ல ஒருபணி நண்ணியது அவரை,
விருப்ப மானதை அருமையாய்ப் பெற்றுளார்;

தரைப்படை விட்டுஅவர் கடற்படை சேர்ந்தார்.
தாயே உன்மகன் தலைசி றந்தஓர்
அலைகடற் பாங்கில் உலவிடு கின்றான்.
உயிருடன் உள்ளாய் என்பதைக் கூட
அறிகிலான். தாயே இருந்துஒரு மடலினைப்
போரிசுக்கு எழுது. போக்கலாம் விடையை;
அவற்குச் செய்தி அணுகிட வில்லையேல்
கப்பல் துறைஒன்று சேரும் பொழுதில்
கப்பல் தலைவன் எழுதுவான் ஒருவரி
போர்க்கா லத்தில்இப் போக்கெலாம் உண்டே......
....

14

கடலைக் கண்டால் அக்கடல் நினைப்பேன்
குன்றுகள் காணின்அக் குன்றுகள் நினைப்பேன்
துயரும் பழைய துயரையே கிளறும்;
ஒவ்வொன் றும்மற் றொன்றினைக் கிளறும்
பிறர்துயர் என்றொரு துயரமே இல்லை.
இதனை ஏற்றிடா ஒருவன் உலகில்
கொலையினைச் செய்கிறான் அல்லது
கொலைசெயப் பழக்கப் படுத்தப் படுகிறான்.

77

யாரஸ்லாவ் ஸ்மெல்யாகோவ்

உருசியக் கூட்டரசு

(பி. 1913)

அழகிய சிறுக்கி லைடா

மணங்கமழும் சரக்கொன்றை மலர்ந்து உவக்கும்
மருங்கினிலே வெண்குடில்கள் இணைந்தி ருக்கும்
மனங்கவரும் அழகணங்கு லைடா அங்கு
வாழ்கின்றாள் தென்பகுதி வீதி தன்னில்!

நீண்டபெரும் பொன்னருவி அவளின் கூந்தல்
நெய்யுண்ட தீப்பந்தம் போல மின்னும்;
பூண்டகரு நீலவுடை தன்னில் வாசல்
பூத்த எழில் பூக்கோலம் பொருந்திப் பாடும்.

சித்திரைமா தத்தைநன் குணர லாகும்
தேன்மணக்கும் ஒளிகிளரும் ஞாழல் பூக்கள்
இட்டுவைத்த கோலம்போல் அமைதி யாகப்
பூந்துகளை எழில்காலைப் பொழுதில் தூவும்.

எதிரொளிக்கும் சாளரத்தில் அவளைக் காண்பீர்,
ஈடற்ற எழிலணங்கு சிறுக்கி லைடா
கதிரொளிபோல் அமைதியுடன் நடந்து செல்வாள்
கண்டறிவீர் அவளழகின் இருப்பும் எங்கோ?

அத்தெருவின் எதிரினிலே வாழு கின்ற
அமைவற்ற இளைஞனையே வினவ வேண்டும்;
பித்தானான் அவள்பேரில்! உறங்கும் போதும்
பின்எழுந்து நடக்கையிலும் அவள்பேர் சொல்வான்.

'பேரழகி இளஞ்சிறுக்கி லைடா' என்று
பேரன்பால் காலணிஇட்டு உலவும் பாங்கில்
ஆர்வமுடன் சுண்ணத்தால் எழுதி நிற்பான்
அடக்கவொணா ஏமாற்றம் அவனைத் தாக்கும்.

விடாப்பிடியாய் மங்கைபால் இளைஞன் கொண்ட
வெங்காதற்கு ஊராரும் உருகிப் போவார்;
விடாக்காதல் புட்கினும்தான் கொண்டான், உண்மை.
வேல்விழியாள் ஐபினும்தான் விரும்பி னாளே.

விரைவினிலே அவன்வளர்வான், புகழுங் கொள்வான்,
வீட்டுறையும் தெய்வங்கள் தடைது றப்பான்,
கரையற்றுப் பொங்குகிற காத லுக்குக்
கவைக்குதவா இத்தெருக்கள் குறுக்கல் தாமே.

காதலுற்றோற்கு எல்லைகள்தாம் ஏதும் இல்லை,
கடும்பழியை நாணத்தை எலாம்து றப்பான்.
ஓதும்இந்த உலகின்நால் சந்தி தோறும்
ஒள்ளிழையாள் பெயர்அதனை எழுதி வைப்பான்.

தரைக்கோடித் தென்முனையில் நெருப்பி னாலும்
தண்கூபான் வெளியில்கோ துமையி னாலும்
உருசியாவின் கழனிகளில் மலர்க ளாலும்
ஒலிகடலில் நுரையாலும் எழுதித் தீர்ப்பான்.

பேர்எழுதும் பித்தத்தால் விரல்தீய்ந் தாலும்
பேரிருளின் வான்ஏறச் சளைக்க மாட்டான்;
வியனுலகின் தொடுவானுக்கு அப்பால் விண்மீன்
கூட்டமாய் விரைந்தொன்றி விடுவாள் லைடா!

உறங்குகின்ற மாசுகோவின் கனவுக் கப்பால்
ஓங்கிஇவை ஒளிரட்டும் அந்திப் போதில்
நிறநீல முகில்பரப்பின் பக்கந் தோறும்
நிலைக்கட்டும் இவ்வினிய காதற் சொற்கள்.

ஆவணப் பெயர்ப்பேடு

மண்ணில் மறைந்ததும், துன்பம் அடக்கிக்கண்
நீரைப் பொழியாமல் என்உடலை — எழும்
பண்வேய்ங் குழல்எனப் பாடி முழங்கிடும்
தொடர்வண்டிப் பாதைக்கு அருக மைப்பீர்.

நான்இங்கு இறந்ததும் ஓடும் தொடர்வண்டி
நிலையத்தின் பக்கத்து இருத்திடுவீர் — ஒளித்
தேனின் நிழல்கனிப் பீர்ச்மரக் கீழ்ஒரு
சிறுகுன்றின் மேல்நான் கிடந்திடுவேன்.

இருண்டும் தனித்துமே கல்லறை தோன்றும்
எனினும்அக் காரிருள் கங்குலிலே — தொடர்
உருள்வண்டி கள்பறந்து ஓடிடும் போதில்
ஒளிக்கீற்றும் வெம்மையும் ஓங்கிடுமே.

வாழ்வினில் பெற்ற மகிழ்வொளி தன்னை
வீச்சொளி வந்து நினைவுறுத்தும் — வண்டி
போழ்ந்த ஒலியடைப் புற்றும் எதிரொலி
பொங்கிடும் மின்னலாய்த் தந்துஅகலும்.

78

ஜானிஸ் சூத்ரபகல்ன்ஸ் இலத்வியா

(பி. 1894)

சோவியத் இலாத்வியா

முன்னும் பின்னும் காலத் தைநான்
முனைந்து நோக்கையிலே,
மோதும் எண்ணம் உன்னைப் பற்றி
அருமைப் பொன்னாடே!
தின்னும் முதுமை விரைந்து காட்டி
இறப்பைத் தேடிடலாம்.
வாழ்வில் பாடிய தனைத்தும் அங்கைக்
குள்ளே அடக்கிடலாம்,
இன்னும் உலகில் என்உயிர் மூச்சின்
எல்லை ஒன்றுகொண்டே
என்றும் மகிழ்வாய்ப் படைத்தஎன்
பாடல்கள் தம்மை அளந்திடலாம்.

எனினும் உள்ளம் கதிர்வட் டத்தை
உவப்பாய் நோக்கிஎழும்,
என்றன் கால்கள் பரந்து சிறந்த
நிலத்தில் ஆழ்ந்தூன்றும்,
மனிதர்க் கென்றன் சொற்கள் இன்பம்
ஏதும் விளைத்திருப்பின்

மறைந்த ஆழ ஊற்றில் இருந்தவை
மண்மேல் பொங்கினவே!
இனிய அகன்ற ஆறுகள் நிலங்கள்
காட்டை விரும்புகிறேன்,
இம்மண் மலர்ந்த அழகும் என்றன்
பாட்டில் நிலைக்கட்டும்.

கழிபே ருவகை தந்த விதிக்கும்,
களத்தில் அதுபெறவே
கனல்செங் குருதி சிந்திய வீரர்க்கும்
நன்றி மிகவுடையேன்;
துளியும் வெற்றுப் பகட்டுச் சொல்லால்
மயக்குதல் செய்யேன்நான்,
தொட்டுச் செழிக்கும் நன்றி அனைத்தும்
உள்ளார்ந்து எழுந்தனவே.
'வெளியில் மிகவும் உள்ளது' என்றே
விம்மும் இளந்தென்றல்
விரைவாய் நானும் பணியை முடிக்கச்
சென்றிட வேண்டுமன்றோ?

என்றன் பணியது உண்மை உயர்வு
நன்றியை ஒலிக்கட்டும்
ஈவேன் அதற்கென் அன்பும் வலிமையும்
வாழ்நாள் போதெல்லாம்.
என்றன் செழுமை அன்பின் உயிர்ப்பில்
சிலிர்த்து மேலோங்கும்,
எண்ணக் குரலோ அல்லும் பகலும்
தலைக்குள் எதிரொலிக்கும்.
முன்னும் பின்னும் காலத் தைநான்
முனைந்து நோக்கையிலே
மூளும் நெஞ்சத் தீக்கனல் என்றும்
முழங்கி எரிகிறதே.

79

ஒல்ஷாஸ் சுலைமானவ் கசகிஸ்தான்

(பி. 1936)

...... நினைத்துப்பார்

ஏனோ மாந்தர் வானோக்கி எழுகிறார்?
வானில் பறக்கும் வல்லூ றுகளையே
உயர்வாய் நினைக்கிறார்?
ஏனோ மாந்தர் தாங்கள் படைத்த
அழகினை எல்லாம்
'ஓங்கியது' என்றும் 'உயர்வு'என்றும் சொல்கிறார்?
ஆறுகள் பாய்ந்து வீறுறும் நிலங்கள்,
ஆற்றுப் படுகையில் மேற்படும் நகர்கள்,
நாட்டின் நீல நரம்பாம் ஆற்றின்
ஊட்டத் தாலே மாட்சிமை பெற்றிடும்,
நிலமாம் நெஞ்சம் நிமிர்ந்து பறந்திடும்.
மங்கிய அற்றைநாள் விண்மீன் களுக்கு
வழிகளை வகுத்தல் சாலக் கடிதாம்.
மண்ணில் அதனினும் மிகவும் கடியது
நெஞ்சில்வடு வுண்டாக்கும் வழியைக் காண்பது.
அவ்வழி,
நிலத்தின் குறுக்கே ஆறுசென் றிடல்போல்
நகரையும் நகரையும் இணைக்கும்;

கதிர்போல் இருட்டைத் தடுத்துக்
கடந்த காலத்தைக் கண்முன் கூட்டிடும்.
நெஞ்சின் சாலையோ
விண்மீன் இடையுனைக் கொண்டு நிறுத்திற்று—
கடினம் எனினும் காணும்அவ் வழியினை,
ஏனெனில் அவ்வழி
ஒளிதிகழ் இற்றைநாள் உடுக்களை நோக்கி......
நெடுந்தொலைவு உன்னை அழைத்துச் செல்லுமே.

80

அலெக்சி சுர்கோவ் உருசியக் கூட்டரசு

(பி. 1899)

ஒருசிறுமி உறங்குகிறாள்

வழிப்போக்கில் ஸ்டாலின்கிராட் வழியாகப் போனேன்.
மடிந்ததுயர்ச் சாம்பலில்பின் மலர்ந்தந்த நகரம்.
வழிதிரும்பும் போதில்போர்க் குறிப்புகளைத் தேடி
நிலைப்பேழை இருந்தெடுத்துப் பிரித்துப்பார்த் திட்டேன்.

எரிப்பூட்டும் தீயபுகை மூச்சடைக்கும் அறையில்,
எரிகுண்டால் மீண்டும்சுவர் நடுங்குதல்போல் தோன்றும்.
விரிநிழலில் இருந்தாழ்ந்த கொடியதொரு நோக்கால்
விரைந்துளத்தைத் துளைத்ததுவே வெங்கொடிய போரே.

பின்பனியின் புயற்காற்றோ உயிர்இலாச்சிற் றூரைப்
பேயான சுழற்காற்றால் பிடித்தாட்டல் உணர்ந்தேன்;
என்றாலும் ஒருசிறிய பெண்குழந்தை நன்றாய்
எந்தஒரு துயரற்றுக் காப்புடனே உறங்கும்.

கண்மூடி இருந்தாலும் அறிதுயிலில் விதும்பும்.
கருநீல ஒளிவிழியை இமைமூடித் தழுவும்.
கொண்டாடும் அவள்கனவோ மிகஇனிய வாகும்
கொடியஎன்றன் கனவுகள்போல் நெஞ்சைஅவை எரிக்கா!

முகில்படியாத் தெளிவான்போல் குழந்தையதன் இளமை
முரணச்சம் குருதிவெறி அங்கில்லை. எனினும்,
திகிலுண்டு, தீச்சகுனம், தீக்குறிகேட் கின்றேன்
திரும்பவும்பாழ்ப் போர்வெறியே எதிரொலிக்கு தந்தோ!

ஓநாய்போல் பிணம்தின்னும் மனிதப்பேய்க் கூட்டம்
அவுஸ்விச்சில் எரியுடலை மீண்டும்தினக் கத்தும்;
ஈரோசி மாச்சாம்பல் இப்பொழுதும் வீழ்ந்து
குருதியினை எரியூட்டும் எச்சரிக்கை செய்யும்.

கோடையிடி மின்னலிலே குண்டொலியே கேட்பேன்,
கூடும்ஓர் அமைதியில்என் நரம்பிறுகி நிற்கும்.
பீடைஎன எனைப்பிடித்த எண்ணங்கள் இன்றிப்
பேரமைதி யில்துயில்வாய் பெண்ணமுதே பிள்ளாய்!

என்பேத்தி யேஉறங்கு, ஸ்டாலின்கிராட் நகரம்
எரிகையில்என் மயிர்வெளுத்த தானாலும் நன்மை:
செந்நீரில் வரைந்தஅந்தக் காட்சிஇனி மீளா.
சீரழிக்கும் கொடுமைகளைச் சீரழிப்போம் யாமே.

* * *

மாலைப்பொழுது; மீன்நிறை வானம்;
சுகுமிப் பெருநிலையம்
மாந்தன் பக்கத் திருந்தான் தனியே
சிந்தனைப் போக்கினிலே
நீல வானைச் சுட்டிக் காட்டி
உணர்ச்சிக் கட்டுடனே
'பாரீர் துணைக்கோள் அதுதான்'
என்றான் கிளர்ச்சி நிலையுடனே.

முழங்கை தொட்டுநின் றங்குப் பார்த்தேன்
முடிவில் விண்மீன்கள்
மூரலாய் மின்னி விளையாட் டயர்ந்தன.
நாங்கள் மிகுசிறிதாய்

வழங்கிய துணைக்கோள் தெளிவில்
ஒளியொடு மேலே பால்வழியில்
வானில் சிறிதாய் குறுகிக் குறுகிச்
செல்லக் கண்டிட்டோம்.

மிதந்து செலும்அவ் விந்தை வெளிச்சம்
மெல்ல மிதந்தேபோய்
விண்மீன் கணத்தின் எல்லை இல்லாப்
பரப்பில் மறைந்ததுவே;
அதற்குள் அருகில் மாந்தன் சொன்னான்
'அடடா நம்கால்கள்
மண்ணில் நன்றாய் ஊன்றி உள்ளன.
அதனால் நாம்பிழைத்தோம்.'

81

மிகாயில் ஸெவத்லோவ் உருசியக் கூட்டரசு

(1903-1964)

அடிவானம்

வானம், அன்னை மண்ணொடும் கூட
வந்தது கீழ்என்றார்,
வனப்புற அதனின் விளைவாய் அடிவான்
பிறந்தது என்றாரே.

வானும் மண்ணும் ஈன்ற மகனைக்
காணத் துடித்திட்டேன்
நானும் ஓடினேன் அவனும் ஓடினான்
எட்டாத் தொலைவானான்.

போக்கிலி தன்னைப் பிடித்தல் கடினம்
என்றுணர்ந் தேன்எனினும்
பார்க்கப் போகிறான் தனக்கு நிகராய்ப்
பக்கத் தெனைஒருநாள்.

இவ்வாறு அவன்தன் இடம்விட்டு இடத்தில்
நழுவும் இயல்புணர்ந்தேன்;
ஏறும் முகட்டை விட்டு மற்றோர்
முகடாய் விரட்டுகிறேன்.

கவ்வும் சூழ்ச்சி வேண்டும்; விரைவும்
இன்னும் மிகவேண்டும்;
ஒருகால் தோற்றால், மீண்டும் துரத்தித்
தொடரத் தான்வேண்டும்.

தொடுவான் நிலத்தில் அடையா ளத்தைப்
பொறித்தே உவந்திடுவேன்;
தொலைப்பேன் வானின் வழியில் மயக்கி
அழைக்கும் மரங்களையும்;

கொடிய அவன்தன் விலங்கையும் பழக்கிக்
கையால் உணவிடுவேன்
எனினும் அடடே விரட்ட விரட்ட
இன்னும் செல்கின்றான்.

காலால் நடந்து தொடுவான் விரைவைக்
கண்டிட முடியாது
கடும்பரி மீதில் ஏறி அமர்ந்து
கடுகி விரைந்திடுவேன்;

மேலும், தொடுவான் அறைகூ வல்தனைச்
சிரித்துப் புறந்தள்ளும்;
விடுத்தேன் குதிரை, படர்ந்தேன் உந்தில்,
எனினும் பயனில்லை.

சாலவான் ஊர்தியில் பறந்தேன் விசும்பின்
மகன்என் கையிருந்து
தப்புதல் அரிது சந்திப் பேன்என
உறுதி மேற்கொண்டேன்.

ஆனால் வானின் சூழல் முற்றும்
அங்கே மாறியதே.
அடுக்கடுக் கான மலைக்கூட் டத்தின்
அடிவான் விளிம்பெங்கே?

வான்ஆள் காடுகள், ஏரிகள், விதைப்புக்
கான நெடுவயல்கள்
வரிசை வரிசை யாகக் கண்முன்
வந்து படர்ந்தனவே.

நானா வகையில் விழிக்கு விருந்தாய்
நல்கும் காட்சிபல
ஆனால் எங்கே? எங்கே இந்த
ஓடும் அடிவானம்?

ஓடி இவர்ந்து பறந்தே எப்படி
உன்னைத் தொடர்ந்தாலும்
ஓங்கும் விரைவில் நெருங்க நெருங்க
விலகி மறைகின்றாய்;

கோடி சூழ்ச்சிகள் விரைவுடன் எத்தனை
கொண்டு தொடர்ந்தாலும்
கும்மா ளத்தால் என்னை அலைத்துக்
கூத்துப் பார்க்கின்றாய்!

அடிவா னேநீ, அடையாளம் ஏதும்
இன்றி மறைந்திட்டாய்
அடடே உனக்கென்று உண்மை வாழ்க்கை
உலகில் இலைபோலும்;

முடிவாய் ஒன்று வேட்டையி லிருந்து
நற்பொருள் பெற்றிட்டேன்,
முயற்சி, விடாமை, வன்பொறை இவையே
முதன்மை எனக்கொண்டேன்.

நானும் என்றன் தோழரும் தொலைவில்
பரந்த புதிதான
மெய்மை சிறந்த தொடுவா னங்களை
நாளும் ஆய்கின்றோம்,

மேனாள் காணா வழிகள் தோன்றின்
மீண்டும் எங்களுடை
முனைப்பார் வத்தைத் தணிவை இந்த
உலகில் காட்டிடுவோம்.

மருத்துவ மனையில்

இனிஇவ் வுலகில் எதனை நம்பி எதிர்பார்ப்பேன்?
என்னை வந்து பார்க்கின் றார்!விடை பெறுகின்றார்.
இனிதாய் மீனை வெங்கா யத்தால் சூழல்போல்
என்னை அவர்கள் பெருமை மதிப்புடன் சூழ்ந்திடுவார்.

ஐந்து மணிக்கே ஆளற்று மூடும் பணிமனையில்
அமைதி யாக அழியத் தான்நாம் பிறந்தோமா?
மைந்துடன் இன்னும் உள்ளேன் உயிருடன் என்பதனை
மக்கள் என்றன் நெஞ்சத் துடிப்பால் உணர்கிலரா?

விடடா சோர்வை; வாழ்நாள் இன்னும் விரியுமடா!
மனத்துள் துணிவு சற்றே தளர்ந்தது; அதனால்என்?
அடடே நெஞ்சில் உள்ள குத்துச் சண்டையிலே
ஐயம் இல்லை அடித்து நொறுக்க அணித்துள்ளான்.

என்னே இந்தப் பிரியா விடைகள் குப்பைகளே!
சிவந்த இரத்த மதுதான் நரம்பில் வழிகையிலே
என்னே இந்த வாழ்த்துப் பாடல் வழியனுப்பல்
உயிரோடு இருக்கையில் இறப்பைப் பற்றிப் பேச்சேனோ?

என்றன் உயிர்த்தீ கொழுந்துவிட் டெரிந்து சுடர்ந்திடுமே,
ஆண்டுகள் எனக்கே உறுதி மொழியை வழங்கிடுமே,
குன்றுதோள் மறவர் துமுக்கி யுடனே நடந்திடுவார்
குழந்தைகள் ஆடத் தாயார் வெளியே கொணர்ந்திடுவார்.

என்னையும் இந்த மருத்துவ மனையையும் விழிப்புடனே
இருந்து முதிர்ந்த இரவு காவல் காக்கட்டும்...
இன்னே வருவாய் காலைப் பொழுதே, என்தனிமை
அறையின் சாளரம் துமுக்கிக்கு உற்ற புழைசெய்வேன்.

82

மக்சிம் தாங்க் — பைலோரஷ்யா

(பி. 1912)

கோடரி

வந்தவினை அத்தனையும் கோடரியி னாலே:
அந்தஇருள் காட்டுக்குள் இஃதிலையேல் செல்லேன்.

அசைந்திசைக்கும் பைன்மரத்தை வெட்டியிருப் பேனா?
இசைத்தாளக் கருவிகளை வடித்திருக்க மாட்டேன்.

நெறித்தாளம் கையிலையேல் திருமணத்தேன் விருந்தில்
குறிஞ்சிப்பண் பாடஎனைக் கூப்பிடுவார் யாரே?

இவ்வினிய இசையறியாது இருப்பின்அவள் அன்பும்
செவ்வினிய நன்மதுவும் கிட்டியிருக் காவே.

கிண்ணங்கள் இன்சிரிப்பில் கிட்டிஉற வாடப்
பெண்ணவளும் எளியன்மனம் பிடித்திருக்க மாட்டாள்.

கங்குல்தொறும் அவள்மனைக்கு மறைந்தொளிந்து போனேன்
இங்கிதெல்லாம் உண்மையிலே கோடரியின் குற்றம்.

மடலுக்கு ஒரு விடை

என்றன் மடற்குநீ எத்தனை
சின்னஞ் சிறிய விடையினைத் தந்துளாய்!
குறிப்பேட் டிருந்து கிழித்த
சிறிய தாளையும் நிரப்பினாய் இல்லை!
உலகில், அனைத்தையும் ஒளியில் மகிழ்வில்
வலம்வரச் செய்யும் நலம்கிளர் நெஞ்சின்
காதற் சொற்கள் நீஅறிந் திலையோ?
உண்மையில்
தட்ப வெப்பம் பற்றி எழுதலாம்.
சொற்கள் வேறெதும் சொல்லி இருக்கலாம்.
ஒருவர்க் கொருவர் உரைத்திடச் செய்தி
இல்லையேல் மற்றவர் என்ன என்னவோ
எழுதுவ துண்டே! எழுதி யிருக்கலாம்.
இலையுதிர் காலப் பொலிவினைப் பற்றியும்;
குடிசைக் கருகில் நெடிது உயர்ந்தஇரு
மாதித ழாய்மலர் வாதுமை பற்றியும்;
ஈரவான் பறக்கும் நாரைகள் பற்றியும்
அழகோ வியங்களை எழுதினால் என்ன?
யார்வந் திருந்துஉன் வாயிலைத் தட்டினும்
மடலினை எழுதி முடிக்கும் வரையில்
கதவைத் திறவாது இருக்கலாம்.
உருளைக் கிழங்கு பானையில் இன்னும்
கொஞ்ச நேரம் வெந்தால்தான் என்னவாம்?
பூனை, நூல்உருண் டையை இழுத்துச்
சிக்கல் பற்பல செய்தால் என்னவாம்?
குறிப்பேட் டிருந்து கிழித்தெ டுத்த
ஒருசிறு பக்கமும் நிரம்பிட வில்லையே.
உனக்கு மட்டும் நான்மடல் எழுதினால்
எண்ணிய தெல்லாம் எழுதி முடிக்க
இடமே போதாது. ஆதலால்
அஞ்சல் தலையின் அடியிலும், மறைவாய்க்
கொஞ்சல் முத்தம் கொடுத்துமுடிப் பேனே.

என் அன்றாட உணவு

என்அரிய தாயகமே! எண்ணமெலாம் உன்றனக்கே
இன்பக் கதிர்விளைவை ஏமுற்றுக் கையினிலும்;
அச்சமின்றித் தூங்கும் அமைதிக் கனவினிலும்;
பச்சைப் பசுந்தோப்பின் ஒவ்வோர் மரத்தினிலும்,
சிற்றூர்ப் பசும்புல்லில் தென்றல் மணத்துடனே
பற்றார்ந்து உயிர்இணைக்கும் பாட்டின் ஒலியினிலும்;
அக்கறை கொள்கின்றேன் அன்புத் திருநாடே
இஃதேஎன் நாள்உணவு ஆம்.

சாலைப் புழுதியினால் சற்றெமக்குக் கைத்ததுண்டு,
காலவிழி நீர்உப்பாய் சற்றே கரித்ததுண்டு,
தூவும் மிளகோடு தோய்ந்துரைத்த தானாலும்
மேவும்நல் நட்புறவால் மிக்க இனித்ததுவே.
மிக்கெல்லாக் காலமும் வெற்றி விளைத்ததனால்
இஃதேஎன் நாள்உணவு ஆம்.

வெளியூர்நான் செல்லுகையில், மேவும்என் தோழர்
அருகில் அமர்ந்து விருந்தில் அளாவுகையில்
மார்பின் குறுக்கேஎன் கைகள் மடங்கையிலும்
வேறோர் உணவினைப் பைக்கட்டில் வைக்காதீர்
ஏலாதே என்றன் வயிறு.

83

அப்தில்தா தஸிபாயேவ் கசகிஸ்தான்

(பி. 1909)

இளமையும் முதுமையும்

பொங்குபெரும் வாழ்வென்னும் சாலையெலாம் திரிந்தேன்;
புகழ்ந்துமதித் திடுமாந்தன் எனவாழு கின்றேன்.
எங்கேயோ தொலைவினிலே மலைக்கும்புல் தரைக்கும்—
இடையினிலே என்இளமைக் காலங்கள் வாழும்.

பழங்காலத்தை முன்னோர் கணக்கிட்டார். சொன்னார்:
பழங்காலம் திருடர்போல் தந்திரம்சூழ் வழியாம்;
அழகியதாம் ஒருசிறிய வாழ்வதனை மாதம்,
ஆண்டுகள்தாம் ஒன்றன்பின் ஒன்றாகத் திருடும்.

காலம்விரைந் தோடிடினும் நேர்மைதவ றேன்நான்,
கருதுகிலேன் கடுஞ்சொல்லைக் கடிந்துரைக்க மாட்டேன்;
ஓலமிடேன் இச்சொல்லைப் பறந்தோடும் காலத்து
ஒருகுறையைக் குற்றம்எனப் பழித்தல்முறை இல்லை.

காலமேஎன் கனவார்வம் தனைத்தணித்தாய் இல்லை;
கவிதைகளைப் பாடல்களை எடுத்துக்கொள்; ஆனால்,
காலமேநின் நிழலில்ஒரு சொல்லும்வீண் இன்றி
மக்கட்கும் உலகிற்கும் கனிந்தீய வேட்பேன்.

வெள்ளிநரை என்தலையில் ஒளிசூட்டி னாலும்
வீறார்ந்த என்னுடலில் பசுமைநிலை கொள்ளும்.
இன்னும்என் சீரிளமைக் கைகளினால் நிலங்கள்
மலைச்சாரல் புல்வெளிகள் எலாம்மகிழ்ந்து பூக்கும்.

மாந்தன்தன் வாழ்ங்காலம் நீட்சியெலாம் புதிய
மணிப்புனல்கொள் ஆறுகளின் வழிகளையே காட்டும்.
ஏந்தியுள்ளே கனன்றெழுந்த உணர்வுகள் யாவும்
யாம்படைத்த பெருங்கடலுள் அலையாகி நிற்கும்.

என்இனிய தாயகமே, கரும்பைப்போல் மலர்போல்-
யான்கொண்டேன் முதுமை,நீ புத்திளமை கொண்டாய்.
முன்னிருந்த என்இளமை கழிந்ததிங்கே ஆனால்,
முனைந்தகுடி யரசுதன்னில் அதுமலரக் கண்டேன்.

84

நிக்கொலாய் திகனோவ் உருசியக் கூட்டரசு

(1896-1979)

எதிர்காலத்திற்காக

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டில்
ஆடிமாதம் பத்தொன்ப தாம்நாள் தன்னில்
மீயுயர்ந்து பரந்த அரண்மனைச் சதுக்கம்
வெவ்வேறு நிறமாந்தர் குழுமி நின்றார்,
பாய்ந்துருளும் வெள்ளம்போல் உலக நாட்டின்
படைபோலும் வலியர்அவர் சேர்ந்தி ருந்தார்.

மூன்றாவது அகிலத்தின் பேர வைக்கு
முன்னிருக்க அவரெல்லாம் அனுப்பப் பட்டார்;
ஆங்கிருந்த அரண்மனையை வியந்து பார்த்தார்,
அதன்சிறப்பை முற்றும்இழந் திருக்கக் காண்பார்.
தூணில்தனி யேநிற்கும் அரமகள் போல
தொல்சிறப்பை அதுவிழந்து வெறிதாய் நிற்கும்.

பேராள்கள் காண்பதெலாம் வியந்து கண்டார்
பெருமனையின் வளைமுகட்டில் பரிதேர்ச் சிற்பம்
சீரோங்கும் பேரறைகள் யாவும் கண்டார்;
இன்றங்குத் தொழிலாளர் உரிமை யோடும்
நேராக நடக்கின்றார்! சதுக்கம் தன்னில்
நீடுபெருந் தலைமைலெனின் உடன்ந டப்பார்.

கடந்திட்ட முன்னாளின் இராக்கள் தம்மை
நினைந்தபடி கடந்திடுவார், அந்த நாளில்
ஊர்ப்புறத்தே ஒளிமங்கும் சேரிப் பாங்கில்
நடந்திடுவார் அதையெல்லாம் எண்ணி எண்ணி
நடந்திடுவார் விரிந்துயர்ந்த அரண்ம னைக்கண்.

அவர்படித்துப் படிப்பித்தார் எதிர்கா லத்தில்
ஆகின்ற நற்செயல்கள் பயன்கள் தம்மை!
அவர்களோ மேலான போராட் டத்தின்
அடர்வெற்றிக் கனவுகளில் மிதந்தி ருந்தார்.
அவர்உவந்து நடக்கின்றார் தொலைவி' லிருந்து
வந்தஅருந் தோழருடன் அருகி ருந்தே.

'புகழ்மிகுந்த ஒருநாளில், பணிதான் இங்கே
முடிந்ததுவே; எம்முடைய நாட்டிற் கேகி
உகந்த இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த
உழைப்பதெங்கள் உயிர்க்கொள்கை' என்று அவர்கள்
மிகமுழக்கம் செய்திட்ட உறுதிப் பாட்டைத்
தோழர்லெனின் வேட்புடனே கேட்டு உவந்தார்.

அரண்மனை, தோரண வாயில்,இளங் கருங்கற்
சதுக்கங்கள் அத்தனையும் எம்நூற் றாண்டின்
திறம்பொருந்தப் புத்தமைப்பில் விரிந்து நிற்கும்,
வரலாற்றின் வெம்மைமிகு மூச்சுக் காற்று
நிரம்பியங்குப் பரந்திருக்கும், மக்கள் நெஞ்சில்
நேவாவின் குளிர்நடுவில் வெம்மை ஏற்றும்.

தோழர்லெனின் உறுதியுடன் அமைதி யாகத்
துணிவோடு நம்பகமாய் நிற்கக் காண்பேன்.
நேவாவின் கடற்காக்கைக் குரல்மட் டுந்தான்
நிமிர்ந்தொலிக்கும்; மக்களிடை அமைதி சூழும்.
தோழர்லெனின் பேரவையில் பேசி நின்றார்
தெளிவாக உயர்ந்தொலித்தது அவர்கு ரல்தான்.

வருங்காலம் சீர்பெறவும், பேணிக் காத்து
வாழ்வுநலம் நிலைபெறவும் பேச லானார்.
மருள்நீங்கப் பெற்றபெரு வெற்றி பற்றி
மன்பதையை முன்விளித்துப் பேச லானார்.
தெறுகதிரோன் மறைகின்றான்; அந்தி வானச்
செவ்வொளியில் நகரெல்லாம் குளித்து நிற்கும்;
அருந்தலைவர் பின்அங்கு வரவே இல்லை;
அந்நாளே நகரில்அவர் கடைசி நாளாம்.

85

அலி தொகம்பாயேவ் கிர்கீசியா

(பி. 1994)

பின்னோர்க்கு

எதிர்கா லத்து மனிதா, என்றன்
விருப்பம் உரைப்பேன்கேள்,
பதிப்பாய் உன்றன் நெஞ்சில் இஃதுன்
மரபின் உடைமையடா.

புல்வெளி யூடும் பூங்காட் டூடும்
தொடர்வண்டி ஓடுகையில்,
புல்வளர்ந் துள்ள கல்லறை கள்தமை
அடிக்கடி காண்பாய்நீ.

போராண் மைபுகழ் பேசரும் பீடு
பொலியும் களப்போரில்
பேராண் மைதிகழ் நினைவுச் சின்னம்
பிறங்கும் இருபாலும்.

யார்யார் கல்லறை அறியோம் பெயர்கள்
போற்றிப் புகழ்ந்தாடப்
பேர்சார் தந்தை பிறந்தோன் மகன்என்று
உள்ளார் பலராக.........

தங்கள் மக்கட் காக அவர்கள்
தம்மை இழந்தார்கள்
பொங்கும் துமுக்கி பொசுக்கும் குண்டுகள்
நாட்டைப் பொசித்தனவே.

பெருஞ்சீற் றத்தின் பனிப்புயல் பகைமை
சாடி ஒழித்ததுபோல்
பெரும்போர்ச் செயலால் வீரர் அனைவரும்
சமமாய்ப் பீடுற்றார்.

பின்னோர்க் காகப் பெரும்போ ரிட்டு
மறைந்த மறவர்க்கே,
அன்னை மண்ணாள் தன்சீர் மடியில்
அடைக்கலம் தந்தனளே.

விரைந்தோ டுங்கால் இருபக் கத்தின்
வீரர் கல்லறையை
மறவா தேஅம் மறவர் களுக்குநீ
நன்றி வணக்கமிடு.

வீரர்கள்! போரில் சாவை விழைந்தார்
அச்சப் படவில்லை,
ஆர்வக் கனவு நம்பிக் கைகளை
இறப்பிலும் கொண்டிருந்தார்.

நிலத்தில் புதைந்தார் பெயரை மாண்புற
நாளும் நினைத்திடுவோம்;
மலர்த்திநம் வாழ்வை மணக்கச் செய்தது
படைஞர் மறவாண்மை.

தன்னலம் இல்லாச் செயல்கள் தம்மை
நூலில் கற்கையிலே
அந்நல இன்ப உயர்வை அடைய
ஆர்வம் கொளவேண்டும்.

செழிப்படை வீர்நீர் எம்மர பினரே,
சிறந்தது நம்காலம்
செழிக்கும் எவையும் நாடும் மக்களும்
நெடுநாள் வாழட்டும்.

வருங்கா லத்தீர்! உங்கட் காகப்
பாட்டை வடிக்கின்றேன்,
பெரியோர் நினைக்க, இளையோர் அறியப்
பாட்டைப் படைக்கின்றேன்.

86

மாட்ஸ் த்ராத் எஸ்தோனியா

(பி. 1936)

மண்ணின் மண்ணாய்

கருமையும் கடுமையும் கலந்த பாறைபோல்
மண்ணின் மண்ணாய் நான்இருக் கின்றேன்.
உளிகொண்டு செதுக்கிய இறுகிய கருங்கல்
பாறைஎன் நெஞ்சு! அந்தப் பாறையில்
காட்டு மலர்கள் ஊட்டமிட்டு உயர்ந்திடும்.
வாடைக் காற்றில் பாடிடும் வனமலர்.
என்றன் பாட்டாம் முந்நீர்க் கடற்புள்
கத்துக் கத்தெனக் கத்திப் பறக்கும்.
சிறுவர்க்குப் பாடும் அரியதா லாட்டுப்
பாடல் பங்குகள் பாடி முடிந்தன;
இனிஎன் பாடல் எழுச்சிப் பாடலே!
ஒவ்வோர் அசையும், ஒவ்வொரு சொல்லும்
மாந்த நெஞ்சின் தூங்கும் விழிகளைச்
சரளைக் கற்களாய்ச் சென்றுகுத் தட்டும்.
குறட்டை விட்டே உறங்கும் கனவினில்
போலி அமைதியில் காலம் கழிப்பவர்
காதலில் நினைவெலாம் கவிழ்ந்துநிற் பாரையும்,

கங்குற் காவலர் தங்களை யும்,எம்
சந்தப் பாடல்கள் உந்திவிரட் டட்டும்.........

சுவர்க்கோழி போல்நான் பொருள்இலாப் பாட்டை
மழைவில் புருவக் குழைவினுக் காகவும்,
மதுகுடித் தாடும் புதுவெறிக் காகவும்,
மெல்லிய இனிய நல்லிசை கொண்டு
பாடேன் பாடேன், பாடவே மாட்டேன்.
பள்ளமும் மேடுமாய்ப் படைச்சால் நிறைந்த
என்றன் நாட்டின் சொந்தக் குன்றையும்
விண்வெளி தன்னையும், கல்லுளி மங்கன்
பேரிரைச் சலுடன் ஏருந் தைந்தினைப்
பூட்டி முதிய நாட்டின் நிலமுகம்
உழுதே எழுதிடும் ஒருநூற் றாண்டின்
வாழ்வையும் என்றன் பாடல்கள்
நீள முழக்கி நெடுகப் பாடுமே!

87

மிர்ஸோ துர்சூன் ஜாடே

தாஜிகிஸ்தான்

(பி. 1911)

என் செங்நீலக் குதிரை

என்அரும் நெஞ்சே! புகழ்கின்றேன்
இடர்கள் ஏதும் தராதவன்நீ;
செந்நீ லத்துஎழில் அற்புதம்நீ,
சிதையாத் தண்மை வலுவுடையாய்;

இன்பில் சுமையாம் வேலையிலும்
இடறாய்; நிறைவாய்ப் பணிசெய்வாய்.
நன்றாய் ஒய்வு வேண்டியேநீ
நாளும் தொல்லைப் படுவதில்லை.

ஓய்வில், லாமல் உழைக்கின்றாய்
உளைச்சல் மூச்சை விடுவதில்லை.
காலம் உன்றன் தோழனடா,
கனிந்த உறுதி தாளமடா!

வாழ்வின் அரிய புதுமைகளை
எளிதே ஏற்றுக் கொள்கின்றாய்;
சூழ்ந்துன் பங்கில் வருவோர்க்கே
ஏற்றுக் கொள்ளும் தோதுடையாய்.

வேண்டு வன்என் உயிர்நெஞ்சே!
விழைந்து உழைக்கச் சளைக்காதே;
வேண்டு கின்றது என்உள்ளம்
வாழ்வின் முடியாக் கடன்எண்ணி...

ஈண்டொ ருத்தி காத்துள்ளாள்
இதழ்முத் தத்தின் சுவைக்காக,
வேண்டித் திரும்பும் என்கால்கள்
புதுநா டுகளை வேட்புற்றே.

பின்போ வதையோ நிற்பதையோ
பெரிதும் தவிர்க்க வேண்டுகிறேன்.
இன்போ தான விடியல்வரை
இரவில் கனைத்த பெருங்குரலின்

மின்போல் இனிய நுட்பமிகு
சொற்கள் நன்மை விளைவிக்க
அன்போடு இரவுப் போதெல்லாம்,
காதல் மொழிகள் ஆளவிடு!

தேவை யான நேரத்தும்,
சிறிது பொறுமை கொளவேண்டும்.
ஆவல் ஒன்று, முடிவற்ற
மக்கள் உலாவல் காண்பதுவே:

மேவும் ஆழ்ந்த பனிப்புறத்தே
வேட்புற்று உழல வேண்டுகிறேன்;
யாவற் றுக்கும் மேலாகப்
பசும்புல் தரைமேல் செலவேண்டும்.

தலைவ, அதனால் மேற்செல்வாய்,
தழுவும் காட்சிப் பொருளாவோம்.
அலையும் நமது வழிப்போக்கின்
தொடக்கம் இதுவே சோர்வென்ன?

தொலையாக் காலம் உள்ளதுவே,
சாக்காட் டிறுதி தனைச்சாற்ற
உலவும் வழியில் மூடுபனி
ஓங்கட் டும்மேல் ஆடையென.

மண்ணின் வியப்பே! விரைவாகி
மடியாது இருக்க வேண்டுகிறேன்,
எண்ணி எந்த மாந்தனுமே,
இயற்றும் பொருளா? அல்லவேநீ.

விண்ணில் கதிரோன் மறைகையிலே
விரைந்து ஒலிக்கேல் சாவுமணி,
கண்ணில் தெரியும் ஒட்டகத்தின்
கழுத்தில் தொங்கும் மணிஅலநீ.

கருஞ்சி வப்புப் பொலிகின்ற
கனலும் வீரப் பாய்மாவே,
பெருகும் உணர்ச்சி மிகும்வரையில்
பிரியாது என்னைத் தாங்கிடுவாய்.

உருகிச் சிவந்த பொன்னாகக்
குளம்பால் கல்லில் பொறிபறக்கும்,
அருமை யாக உனைநம்பி
அமர்ந்தோன் நிலைஇல் மானுடனே.

88

அலெக்சாண்டர் துவர்தோவ்ஸ்கி உருசியக் கூட்டரசு

(1910-1971)

* * *

வேனில்இளங் காற்றினிலே கரைவதில்லை, இல்லை
வெற்றுமணல் தரைஉறிஞ்ச வற்றுவதும் இல்லை.
வீண்ஏனவே எம்குருதி சிந்தியதும் இல்லை.
விளையும்புது நிலத்தினிலே பாய்ச்சியதே ஆகும்.

நாற்பதாண் டுக்காலம் மிகநீண்ட காலம் —
மண்ணில்அது காயாமல் சிவந்தபடி உளது.
காட்டியநல் ஈகத்தின் செங்குருதி இன்றும்
காயாமல் சிவப்பாக உப்பாக உளது.

புற்கள்எலாம் பசுமைபெற மரங்கள்தழைத்து ஓங்க
போற்றுவதும் வளர்த்ததுவும் போதாமல், மற்றும்
இற்றைக்கும் வற்றாமல் ஓங்குசுடர் வானின்
எரிகதிராய் கதிர்ஒளிரக் காணுகிறோம் நாமே.

எம்முடைய நெஞ்சினிலே துடித்ததுதான், நாடி
நரம்புகளில் எங்கெங்கும் பாய்ந்தோடிக் கூடி,
எம்முடனே இம்மண்ணில் மீண்டெழாத மாந்தர்
ஏற்றமிகு பெருநினைவை ஊற்றெனவே பாய்ச்சும்.

இந்நாளின் வெற்றிக்கோ எங்களுடை நன்றி
இசைப்பெருமை மதிப்பினையும் யாம்தெரிவிக் கின்றோம்.
செந்நீரைப் பாய்ச்சிஎங்கள் பாதைக்கு மேன்மை
செய்தவரை யாம்நினைத்தல் நன்றிக்கு வித்தாம்.

மீண்டும்மீண்டும் உரிமைப்போர்க் கருவிகளை ஏந்த
நமைஅழைக்கும் முழுஉரிமை அவர்குருதிக் குண்டே,
யாண்டும்இங்கு மக்களுடைச் செங்குருதி பாய்ந்த
நாடுதான் தலைநிமிரும் என்றுரைப்பார் அன்றோ!

* * *

ஆர்வத் துடிப்புன்றன்
நாடிநரம்பினில் மோதுகையில்—மணிப்
போது பறந்திடும்,
ஊர்ந்திடும் பாழும் நிமியங்களே!

ஆர்ந்த படைப்பினில்
ஆழ்ந்திடும் போதில் அடடேநீ—உன்
உலகைநின் வாழ்வை
முழுதும் மறந்து பறக்கையிலே

புத்தம் புதுமைகள்
சொல்லொணா வண்ணம் பொலிகையிலே — உன்
பொன்னான வாழ்வினை
வாழ்ந்திடும் வேட்கையும் பொங்குகையில்

மெத்தப் பொழிந்த
மகிழ்ச்சியின் கண்ணீரை எண்ணுகையில் — நீ
மீண்டும்அக் கண்ணீர்
மிதந்திடா வண்ணம் நிறுத்திடலாம்.

ஒருவனின் ஆண்டு
முதிர்ந்திடில் எஃகுளம் வேண்டுமடா — அதால்
ஓடிய நாள்மின்னல்
தன்னை நினைத்துப் புலம்பல்ஒழி!

அருமை இளமைதான்
ஆர்க்கும் பெருமைக் குரியதில்லை — உன்
அகவைக்கு மேலாம்
அறிவுடைமைகொண்டு சிறந்திடுவாய்.

தாயரின் திருமுன்

தொடக்கமுதல் இறுதிவரை அன்னை யர்க்குத்
தொடர்ந்துநாம் சொல்லிடுவோம் விடைவ ணக்கம்.
தொடக்கத்தில் குழந்தைஇளம் பருவத் தில்நாம்
கவலையின்றி உரைத்ததனை மறுத்தல் இல்லை.

வெளித்தங்க எங்கட்குப் படுக்கை பெட்டி
விருப்புடனே எடுத்துவைப்பார் அன்பின் அன்னை;
வெளியில்யாம் வேர்த்திடவே நிற்போம், ஏனோ
தடைபட்டுப் போகாதோ பயணம் என்போம்.

பின்பொருநாள் முற்றாகப் பிரியும் நாளும்
பின்தொடர நோக்காடும் துயரும் கொண்டோம்.
அன்புமக்கள் என்பதற்கே சரியோ தப்போ
அஞ்சல்வழி ஆர்வத்தை அறிவித் திட்டோம்.

அவர்கள்முன் காணாத மகளிர் தங்கள்
அரியஒளிப் படங்களினை அனுப்பி வைத்தோம்;
அவர்கள்பே ருள்ளமுடன் முன்பின் காணா
அருமந்த மருமகட்கு வாழ்த்தி சைத்தார்.

மருமகளின் பின்சிறிய பேரர்......பின்போ
வானிருந்தோர் தொலைவரிதான் வந்து சேரும்;
திரும்புகின்றாய்; மீளவொணாப் பிரிவே அன்றோ,
பாட்டிக்கும், அருந்தாய்க்கும், உனக்குந் தானே.

89

தெபோர வாரன்டி

எஸ்தோனியா

(பி. 1916)

சரீமா தீவுக்குமேல் பறக்கும்போதில்

மெல்லெனஓர் ஒத்திசையில் மேவும்உன்றன் பெயரும்
மெத்தனமாய்க் குளிர்விறைத்து நெகிழ்வின்றி ஒலிக்கும்
சொல்விடும்எச் சீரிசையும் தொடர்பிலாத ஒன்று
சூழ்ந்திசைக்கும் உட்செவியின் சுவைஉணர நன்று.

ஓ சாரிமா! ஓ சாரிமா!
யான்அறிந்த அன்புருவத் தோற்றஎழில் எல்லாம்
வைகறையின் இனியபனித் திரைமறைவில் ஒளிரும்.
தேன்தெறிக்கும் திவலைகளால் கரைகள்மென்மை மேவும்;
தெரியும்கடற் கரைகளையே தெறிக்கும்அலை கரைக்கும்.

மொட்டொன்றைக் கடலினிலே விட்டெறிந்தால் போலே
முழுமூச்சாய் அலைகளொடும் சுழன்றுயர்ந்து நிற்பாய்,
பற்றுடனே வழிபாட்டில் பாராட்டும் இன்பம்
பற்றியேநீ கடல்தெய்வம் பரவிஏத்து கின்றாய்.

செங்கதிரும் நீழல்களும் விளையாடும் பள்ளத்
தாக்குகளை விழியாரக் கண்டுதிளைக் கின்றேன்.
எங்கணும்நற் சாலைபல! விரிகுடாவில், ஆஆ
இமைத்திறக்கைமின்னமி ன்னப் பிறழ்கின்ற மீன்கள்.

அலைக்காற்று, தண்காற்று, ஆ!அரிய காற்று!
ஆசைதீர்க்க முடியாத அரியமணக் காற்று!
பலதிசையின் புன்னைமணம், தாழைமணங் கமழும்
பாங்குமிழும் கடலுப்பும் சுமந்துவரும் காற்றே.

குழந்தைமையில் புயலாகிக் குமுறிநின்ற காற்று
கொழுந்தணலாய் வெடித்தெறிந்து தணல்ஊதி ஏற்றுச்
சுழல்அலையில் கடற்காக்கை உரத்தொலிக்கும் எங்கும்,
சுழற்றிறக்கை ஒலி,பயண ஆசைகளை எழுப்பும்.

முகில்கிழித்துக் காற்றுலவும் வானரங்கைச் சிறுவன்
குருகினைப்போல் தன்கழுத்தை வளைத்தரிய வியப்பில்
முகம்கொடுத்துக் காணுவதும் மகிழ்வில்முளைத் தாடி
முந்துவதும் இன்றுளளிய காட்சிஎனல் ஆகும்.

விரைவில்தன் கட்டிருந்து வெளியில்வந் திடுவான்,
மிதித்தறியாப் பாதைகளில் வேட்கைஉந்தச் செல்வான்,
விரைபவனை எம்மனிதர் எவ்விதச்சூ ழலுமே
மீண்டிடவே மறித்தவனைத் தடுக்கமுடி யாது.

சாரிமாத் தீவின்மேல் உயரிருந்து பார்த்தால்
சட்டென்று வானகமே கடலாகத் தோன்றும்.
பாரித்த என்நெஞ்சால் அதையளந்து பார்ப்பேன்,
படுதிரைசூழ் தீவழகு முகமாகப் பொலியும்.

உயர்வான வெளியினிலே நான்பறந்த போதும்
சாஅரிமா ஊன்றியஎன் வேர்க்கால்கள் அறுமா?
இயற்கையாய் என்றும்அவை பிணைத்திருக்கும் என்னை
இங்கவைதாம் நிலையான மிகஆழத் துள்ளே!

90

ஓஜர்ஸ் வாஸெட்டிஸ் லத்வியா

(பி. 1933)

புதுத் தொடர்வண்டி வழி அமைத்தல்

இடத்தேர் வாளர்!
படர்நெடுங் காலத் திற்குமுன்
அவர்களைப் பற்றி அறியு முன்னரே,
அவர்கள்தாம் என்றன் அரும்பெரும் வீரர்.

இப்போது நாங்கள் இணைந்தே இருக்கிறோம்.
கப்பும் கோரைக் களர்நிலப் பாங்கில்
ஊசி இலைமரப் புதர்களின் நடுவே.

இப்புற்கள் எங்கட்கு இனியவை தாமா?
எப்படி என்னால் இயம்பிட முடியும்?
களைப்பால் நானும் தள்ளாடு கின்றேன்,
களைப்பால் என்றன் கத்தியை இழக்கிறேன்.

ஒருமாந்த னுக்கு ஒருகிண்ண இறைச்சி,
ஒருமாந்த னுக்கு ஒருகோடி ஈக்கள்.

வீறுணர்ச்சி!
வீறுணர்ச்சி என்றால் என்ன?

ஒருமுள் எலியை உன்கன் னத்தில்
அழுத்திப்பார் தெரியும்.
வீறுணர்ச்சி!
குத்தித் தொலைக்கா திருந்தால் சரிதான்.
கத்தட் டும்அது!
முயற்சியை விடுகிலோம்!
கரிநெய் எனவே கனத்தும்,
உப்புக் கடலாய்க் கரித்தும்
கண்ணில் வியர்வை வழியினும் விடுகிலோம்.
அந்த வியர்வை விழியை மறைத்திடும்,
கண்முன் இருக்கும் கருவியை மறைத்திடும்.
புருவத் தின்கீழ் விழிக ளாஅவை?
குழிகள், பாழுங் குழிகள்!

ஆயினும்,
இடம்கண்டு இயங்கும் தடம்அமைப் பவரின்
பெருமித உணர்வை எதுதான் முறிக்கும்?
இப்பெரு மிதமும், தலைவணங் காமையும்
எம்மி டத்தில் இருப்பது கண்டுதான்
எங்கள்பால் யாவரும் அன்புகொள் கின்றனர்.
ஊசி இலைப்புதர் உடைகளைக் கிழிக்கும்
ஆள்களின் ஒருவனின் கையையும்
துண்டித்து எறிந்தது.
அவனின் காதலி உரைத்தாள்:
'இருகைக ளோடும்நீ இருந்தால் அன்ப,
உன்னை முடமாய்க் கருதுவேன் நானே.

இடத்தேர் வாளர்!
என்றன் வீரர்கள்!
ஊசி. இலைக்குறுங் காட்டினைத் தாண்டிடும்
எங்கள் வானொலி அழைப்பினைக் கேட்டிரா?
நாவாய் நடத்துநன் தன்பெருங் கப்பலைத்
துறையிலோ, துறைமுகத் திலோஇ லாமல்
இடையில் நிறுத்தினான் எதற்கு நிறுத்தினான்?

இடஅமைப் பாளனை ஏற்றிக் கொள்ளவே.
கொடுங்காட் டுக்குள் நடப்பீர்
விந்தைகள் புரியும் வீரர்நீர்! எதற்கு?
கொடுங்காடு திருத்திச்
சோவியத்து ஆட்சிக்கு மின்வலி சேர்க்கவும்
சோவியத்து ஆட்சியோடு இந்தப்
புடவி முழுதையும் பொருத்திக்கொள் ளவுமே.

91

பக்தியார் வகப்ஜாடே அசர்பைசான்

(பி. 1925)

விரைவு

முன்புநான் பாக்குமை பெருநது மாசுகோ சென்றிடவே
முனைந்து விரைவு வண்டியில் ஏறின் மூன்றிரவும்
முந்நாள் பகலும் ஆகும்; வேறு வழியில்லை.
முற்படு கற்கள் தம்மை எண்ணிக் கழித்திடுவேன்.

இப்பொழு தோநான் பாக்கு-மாசுகோ வானூர்தி
எண்ணும் மூன்று மணிக்குள் சென்று சேர்கின்றேன்.
தப்பாது உடனே இங்கே நானும் திரும்பிடுவேன்,
எனினும் அடடே, இன்னும் சலிப்பாய் இருக்கின்றேன்.

ஒளியின் விரைவில் நானும் பறக்க விழைகின்றேன்.
உள்ளம் செல்லும் விரைவைப் பார்த்தால் அதுகூட
வெளியில் சும்மா தொங்குதல் போலும், சிறகு இரண்டும்
விறைத்துக் கிடப்பது போலும் எனக்குத் தோன்றிடுமே.

என்றன் எண்ண விரைவுக் கேற்ப ஏன்நானும்
பறத்தல் கூடாது? (இதுவெறுஞ் சவடால் பேச்சன்று.)
இந்நூற் றாண்டின் மகன்நான்! இந்தப் பேரூழி
எதிலும் போட்டி யிடும்உந் தாற்றல் உடையதுவே.

உயரே, உயரே விரைந்து விரைந்தே என்எண்ண
உயர்வையும் மீறி ஓங்கிப் பறக்க விரும்புகிறேன்;
அயர்வில் லாமல் என்னையும் முந்திச் சென்றிடவே.

92

எர்கின் வகிதோவ் உஸ்பெகிஸ்தான்

(பி. 1936)

ஒளிப்படம்

என்றும் மறந்திட மாட்டேன்என்று எண்ணி இருந்தேன்நான்
என்றன் இனிய நண்பர் அன்பின் இயல்புடையார் ......
அந்தோ இன்று மறந்தேன் அவரை! நான்கண்ட
ஆண்டைக்கூட மறந்தே போனேன், அடகெட்டேன்!

அவரை நினைவில் இருத்திடும் ஏதோ அடையாளம்
உண்மையின் அன்பொளி மின்னும் அரிய முகச்சிரிப்பு!
அவரின் அருமை முகத்தில் எதையோ துருவுகையில்
கண்ணில் என்னையும் கொண்டுள் ளாரா எனக்காண்பேன்.

கடந்து வந்த உலகைத் தட்டுத் தடுமாறித்
தடவிப் பார்த்து நம்பிக்கை அற்று நிற்கையிலே
அடர்ந்த ஆழத் திருந்தோர் எதிரொலி அழைத்ததுவே.

உணர்வை யும்பகுத் தறிவையும் விழித்தெழச் செய்தவற்றைக்
கிளறு கிளறெனக் கிளறினேன். ஆகா! பாரீரே!
இனியஎன் மக்காள் உங்கள் நெஞ்சுள் என்வாழ்க்கை
எழுதுநூல் குறிப்பாய்ச் சிதறிக் கிடத்தல் காணீரே.

93

அந்தனாஸ் வென்ஸ்லோவ — லித்துவேனியா

(1906-1971)

உன்னுடன்

உன்னுடன் வாழ்ந்துளேன் வேனில் காலநல்
ஒளிகொள் பூவொடும் பூத்துளேன்.
முன்னி வீசிடும் இலைகள், பேரலை
முழக்க மாய்ச்சணல் ஆடிடும்,
வன்னிப் பூமரம் கோடைத் தென்றலில்
வாரி வீசிடும் தேன்மணம்,
துன்னி ஒன்றியே தோழ மையுடன்
துணைகொள் அங்கமாய் வாழ்ந்துளேன்.

இலைகள் வீழ்ந்திடும் காலப் போதினில்
விதைத்த கோதுமை நல்விதை
தலைகொண்டு ஓங்கிடும் கரிசில் மாநிலத்
தாய்மை யின்மடி தாங்கியே,
நிலைகொள் இன்பனிக் காலம் முற்றிப்பின்
நீக்கும் வேனில்நாள் வந்ததும்
இலைகொண் டோங்கிடும் கோது மைக்கதிர்
என்ன உன்னொடும் வாழ்ந்துளேன்.

தீயி னால்நிலம் கருகிப் பாழ்படத்
    தீயினால் மனைகள் வீழ்வுறத்
தீயி னால் புகைக் கூண்டு கள்பட
    வெறுமைச் சின்னமாய்க் காண்கையில்,
வாழ்வி னில்பலம், இளமை கொண்டசீர்
    பசுமை சேர்முளை ஓங்கிடச்
சூழ்ந்து காப்பதென் கடமை என்றுநான்
    சூள்உரைத்து உறுதி பூண்டுளேன்.

நாட்டை யேநெருப் பாறு சூழ்ந்துபாழ்
    நரக மாக்கிவிண் ஓங்கையில்
கேட்டைக் கண்டுநான் நின்னு டன்மனம்
    கிடந்து துன்பினால் ஏங்குவேன்;
வேட்டை ஆடிடும் கொடிய வெந்தழல்
    விண்மு கத்தினைத் தீய்க்கையில்
கேட்டில் ஓர்மகள் தன்னந் தனியளாய்க்
    கிளர்ந்து விம்மிட விம்மினேன்.

அடர்ந்து எரிந்திடும் புகைத்தி ரைவழி
    அல்லல் கள்மிகுந் திருப்பினும்,
கிடந்து போர்வெறிக் குண்டு கள்தரும்
    நிலம்அ திர்ச்சியின் போதினும்,
படர்ந்து அரத்தமே தோய்ந்த புல்வெளி
    இடைந டந்தனென் தேசமே!
தொடர்ந்து சென்றுனை அடைந்தி டும்ஒரு
    வழிஅ மைத்துளேன் ஏற்கவே.

முறிந்த ழிந்தபோர் உந்து கள்பனி
    மூடி டும்வழி யூடெலாம்
இறந்த தாய்உள மரத்துப் போனஎன்
    உடலி னால்தவழ்ந்து ஊர்ந்துமே,
சிறந்த வெற்றியும் இறுதி வேளையில்
    சேர்த்த னன்எனது ஆருயிர்ப்
பிறந்த நாடுநீ வெற்றி பெற்றனை
    வளரு வாய்எனக் கூறினேன்.

அமைதிப் போதினில் வானில் மின்னியே
அரும்பி டும்உடுத் தொகுதிபோல்,
இமைநெ ரித்திடும் உச்சியில் சற்றும்
ஓய்வில் விண்ணிலே பொலிகிறாய்!
இமைதி றந்துயிர் எங்கும் ஓங்கிடக்
கோடை மாரியின் வெள்ளமாய்
அமையும் எண்ணில உயிர்கள் தோன்றிடும்
அருமைத் தாயகம் ஆயினை.

என்றன் தாயகம்! என்றன் பாடலை
நெஞ்சு உவந்துநீ ஏற்பையேல்,
பொன்றல் இன்றியே பொலியும் நின்ஒளி
புணர்ந்தி டச்செய வல்லையேல்,
என்றன் ஊனுடல் மாயும் எனினும்என்
பாடலுக்கு இறப்பு இல்லைகாண்;
மன்னும் மானுட வாழ்வைப் பாடிடும்
புத்தெ ழுச்சியைப் பாடுமே.

94

ஆரன் வெர்கெலிஸ் உருசியக் கூட்டரசு

(பி. 1918)

திறந்த நெஞ்சங்களுடன் ஒருநாள்

திறந்த உளங்கட்கு உரிய நாளிது விளம்புகிறேன்
வருக அனைவரும்! குறுகிய சந்திப்பு இதுஎனினும்
வருவார் தம்முள் ஒருசில ரேனும் என்னுடனே
நிலைபெறும் நட்பில் என்றும் நெருங்கித் தங்கிடுவர்.
நல்லோர்ப் பிணைக்கும் இணைப்பை அறுத்தல் மிகஅரிது;
பொல்லா மனிதரை விட்டுப் பிரிதல் மிகஎளிது.
மூடிய முகங்க ளுடனே உட்புக எண்ணாதீர்,
மூடிடும் என்றன் உள்ளக் கதவும் உமைவெறுத்தே!
புகழுரை சொல்லி மயக்கலாம் என்றோ, நினைத்தபடி
வளைக்கலாம் என்றோ என்முன் கூனிக் குழையாதீர்.
நன்றிஃது அறிவீர், உண்மை நண்பர் உளம்வாழ்வர்.
என்றும் தாரேன் தீவழி யோர்க்குஎன் உளந்தனையே.
இம்முறை யில்நான் சிலரை இனிதே எச்சரித்தேன்.
போக்கிலி கள்தாம் இடங்கல் மடங்கலாய் ஓடினரே.
அன்னார் இழப்பால் வருத்தம் குழப்பம் சிறிதுமிலை.
வட்டம் நெருங்கினும் வளையம் மிகமிக விரிந்ததுகாண்.
திறந்த நெஞ்சொடும் செப்புவேன்: எவர்க்கும் நல்வரவே.

துறந்தி டுகநீர் சுணக்கம், கூச்சம் கொளவேண்டா.
நான்புல் வெளியில், காடுகள் ஊடே நடக்கின்றேன்
நடுங்கேன் பிறர்பெயர் கொண்டும் என்றும் செல்வதிலை;
நான்நல் திறந்த மனத்துடன் நண்பரைக் காண்கின்றேன்;
நானா வழியிலும் வெளிப்படை யாக இருக்கின்றேன்.
பல்வகை மாந்தரைச் சாலையி லேநான் சந்திப்பேன்,
பலர்க்கும் வாழ்த்துரை கொண்டவர் இல்லம் படர்ந்திடுவேன்.
பிரியும் போதும் மீண்டும் சொல்வேன்: 'என்நெஞ்சம்
கரவில் லாமல் உங்கட்கு என்றும் திறந்திருக்கும்.
'நெருங்கி வாரீர், மக்காள், நட்பில் நிலைத்திடுவோம்';
இணைந்தே நமது மகிழ்ச்சியை இனிதே துய்த்திடுவோம்;
திறந்த நெஞ்சொடும் செப்புவேன்; எவர்க்கும் நல்வரவே.
துறந்தி டுகநீர் சுணக்கம்; கூச்சம் கொளல்வேண்டா.

95

கிரிகோரே வியெரு

மால்டேவியா

(பி. 1935)

கைகள்

மண்ணில் பிறந்ததும் என்தலை மீதினில்
கற்பனைக் காதையினில்
கொண்டு புனைந்திடும் சீர்திகழ் பொன்முடி
ஒன்று கவிந்ததுவே;
கண்ணெனக் காத்தஎன் அன்புறு தாயவள்
மென்தளிர்க் கைஅதுவே!
கண்ணெனக் காத்தஎன் அன்புறு தாயவள்
மென்தளிர்க் கைஅதுவே!

அன்புறு தாயவள் கைகளின் மென்மையும்
ஆளும் இனிமையும்போல்
இன்புறு காதலி ஈர்த்தெனைக் கொண்டனள்
என்னுயிர் ஏமுறவே.
தென்புறும் அன்னவர் தேனிகர் கைகள்என்
நெற்றியில் தென்றலடா!
தென்புறும் அன்னவர் தேனிகர் கைகள்என்
நெற்றியில் தென்றலடா!

மயக்குறு மக்கள் எனக்குளர் ஆயினும்
இன்னும் இரவினிலே,
அயர்ப்புறு தொல்லையால் தூக்கம்இல் லாமல்நான்
நொந்து கிடக்கையிலே,
வியப்புறும் அன்னையின் கைஎனை மெல்ல
வருடுதல் போல்உணர்வேன்.
வியப்புறும் அன்னையின் கைஎனை மெல்ல
வருடுதல் போல்உணர்வேன்.

புதுமலர் மென்மையை வென்றிடும் தாய்அவள்
கைகாள் வாழ்த்துகிறேன்.
இளங்கிளை போன்றநீர் ஆண்டுகள் சென்றிட
வற்றித் தளர்வடைந்தீர்.
முதுமைநீர் எய்தினும் உங்கள் வருடுதல்
போல்இன்பம் பொழிபஎவை?
முதுமைநீர் எய்தினும் உங்கள் வருடுதல்
போல்இன்பம் பொழிபஎவை?

கணையாழி

அன்புக் குரியஎன் காதலியின்—கணை
ஆழி அதனைமால் டேவியத்தின்
வண்புல் வெளியினில் விட்டெறிந்தேன்—பின்
மலைகள் கடந்ததைத் தேடிச்சென்றேன்.
இன்றெனது ஓட்டத் திறமையெலாம்—அட
இவ்வழியில் கற்றுக் கொண்டதுதான்!

அன்பு கெழுமிய காதலியின்—கணை
ஆழியி னைப்பெரும் ஆழ்கடலில்
பின்பு நழுவிட விட்டெறிந்தேன்—கொடும்
பேரலைக்குள் மூழ்கிக் கண்டெடுத்தேன்.
இன்றுஎன்றன் நீச்சல் திறமையெலாம்—அட
இவ்வழியில் கற்றுக் கொண்டதுதான்!

என்றன் அருமந்த காதலியின்—கணை
ஆழியை விண்ணினில் விட்டெறிந்தேன்.
பின்என்றன் காலை நிலத்திருந்தே—நனி
பிய்த்துவிண் ஏறிநான் தேடலுற்றேன்;
இன்று விசும்பினில் நான்பறந்தால்—அதும்
இவ்விதமாய்க் கற்றுக் கொண்டதுதான்!

மால்டேவியச் சுரங்கம்

மேன்மை மிகுந்த மால்டே வியமே,
என்நிலச் செல்வமே, உன்பா லிருந்தே
எல்லா வற்றையும் பெறுகின் றேன்நான்......
வன்மை செறிந்தநின் வெண்மரு திருந்து
திண்மையும் மிடுக்கும் நன்குநான் பெற்றேன்.
முதிர்ந்தநின் கோதுமைக் கதிர்த்தலை இருந்தே
இணக்க வணக்கப் பண்பினைக் கற்றேன்.
எண்ணிலாக் காலம் மண்ணினில் நிலைத்தே
ஆக்கம்உற் றெழுந்தஉன் ஓக்மரத் திருந்து
தேக்கிய உறுதியும் நோக்கின் மிடுக்கும்
நெஞ்சத் திடமும் மிஞ்சிடப் பெற்றேன்.
செல்வ வளந்தரு குன்றுகளி லிருந்தே
நல்அடக் கத்தினைப் பல்கிடக் கற்றேன்;
எழுச்சி மிகுந்தஉன் நாட்டியத் திருந்துதான்
விழிப்பும் உணர்ச்சியும் தழல்எனப் பெற்றேன்.
கொடிமுந் திரிகளின் படர்தலி லிருந்துதான்
இறுகத் தழுவிடும் இன்கலை கற்றேன்.
உன்றன் மிகுந்த நாட்டுப்பாட் டிருந்தே
என்றன் மென்துயர் இசையினைப் பெற்றேன்.
தேனூற் றானஉன் கான்சுனை யிருந்துதான்
கலகலத் திடும்என் களிநகை பெற்றேன்.
இன்றென் முன்னோர் கல்லறைமுன் நின்றே
என்பொன் னாடே, உன்னைநான்
என்றும்நே சிப்பேன் என்றுசூள் உரைக்கிறேன்!

96

எவ்கெனி வினகூரவ் உருசியக் கூட்டரசு

(பி. 1925)

மாபெரிய இயற்கை ஆற்றல்...

இயற்கைப் பெரும்பேர் ஆற்றல் பலவுள்
இசையும் ஒன்றாகும்.
யாதென விளங்கா அளவுக் கதனின்
ஈர்ப்பும் பெரிதாமே.

மயக்கும் ஆற்றல் அதனால் மேலும்
மேலும் மிகுமன்றே
மந்திரம் போலத் தொடர்ஒவ் வொன்றும்...
நெஞ்சைப் பிணித்திடுமே.

கண்ணீர் காணாக் கண்ணில் கண்ணீர்
மல்கிடச் செய்திடுமே,
கருத்தில் இனித்துச் செயலறச் செய்யும்
கனியும் கிறக்கமடா!

மண்ணில் மாந்த நரம்புகள் ஊடே
மகிழ்ந்து பாய்ந்திடுதே!
கண்ணில் படாமல் நீரில் உப்பாய்
எங்கும் கரைந்துளதே.

அறையின் அடியில் அடக்கி மடக்கி
ஒடுக்கி வைத்திடினும்
அதனின் நல்ல தீய எழுச்சி
உணர்ச்சிப் பாங்கெல்லாம்

முறையின் அனைத்து வரம்பை உடைத்துக்
கிளர்ந்து புரட்சியினை
மூட்டும், பொங்கும் வெறிச்சீற் றத்தில்
முனைந்து வீறிடுமே.

ஊசியின் சிறிய காதில் ஒட்டகம்
தன்னை நுழைத்தல்தான்
ஒப்பில் இனிய இசைத்தேன் உயர்வின்
ஓங்கல் ஊற்றாகும்.

வீசித் துள்ளித் திரிந்து யாவும்
பேய்போல் விடுபட்டே
வேட்கும் புலன்கள் உவகைக் களிப்பில்
மூழ்கப் பிணித்திடுமே.

கொழிக்கும் களிவெறிக் கூத்தில் நெகிழ்ந்து
நாமும் பங்குறவே
குருட்டுத் தனமாய் எண்ணிப் பாராது
அழைக்கும் இசைநமையே.

ஒழிப்பீர் உலகியல் கட்டுப் பாட்டை
உரிமை பெறுகென்றே
உணரும் கவலை சிந்தனை அற்றஇப்
பேய்கள் நமைஅழைக்கும்.

நூற்றாண் டுகளாய் இசையின் தந்திர
நுண்மை அழைப்புக்கள்
மாந்தர் நெஞ்சைத் தாமறி யாமலே
ஈர்த்து நுகர்ந்தேற்கும்.

போக்குப் போலத் திடும்எனத் தோன்றும்
பொல்லா எண்ணமுடன்
பொல்லாக் குடியர் தாள்தடு மாறி
வயலுள் புகுந்தலைவர்.

இன்தே றல்விழா, இசைச்சுற் றாட்டம்
ஈர்க்கும் வெறிக்கூத்தில்
எல்லாம் மறந்து வழியும் தவறி
இசையால் கிளர்வுறுவார்.

புல்லாங் குழலை ஆர்பியன் ஊதிப்
புதுமை செய்திடுவான்,...
இன்றும் கதும்என அடக்கம் அற்ற
எக்களிப் பெழுச்சியுடன்
இருளைப் பிளந்தே இன்னிசை ஒன்று
முழங்கிப் பரந்திடுமேல்

மென்யா மரத்தைப் பிளந்தொரு கத்தி
பட்டை கிழிப்பதுபோல்
மேன்மை மனத்தின் நிறை கிழித்து இசைதான்
கிறுக்கை விளைத்திடுமே.

97

அந்த்ரேய் வஸ்னஸெஸன்ஸ்கி

உருசியக் கூட்டரசு

(பி. 1933)

நிலம்

தூய ஆவியாய்த் துளிர்க்கும் மென்மையாய்
நேயம் மிகுந்த நிலத்தினில்
வெற்றுக் காலுடன் சுற்றிட விரும்புவோம்.
எங்கே? எதியோப்பி யாவிலா?
அல்லது அவானாவிலா?
இரைசொ னானின் நிழல்மிகு காவிலா?
கதிரவன் காயும் சவானாவிலா?
தொடர்பில் லாத தொலைவுப் பாங்கிலா?
பெருமைக் குரிய பிறந்த இடத்திலா?
நாங்கள் மாந்தர்,
நாங்கள் நிலத்தில் நடப்பதை விரும்புவோம்.
விடுதலை பெற்றநம் உடலின் வழியே
மண்ணின் உயிர்விசை உருவிப் பாய்ந்திடும்.
நகர மக்களாய் நாம்ஆ னதனால்
தரையின் பாவு கற்க ளாலும்,
விரைதொடர் வண்டிகளாலும்,
கருமை நிறத்துக் கமழ்வழி யாலும்,
பெருகும் உந்தூர்தி களாலும்

அருமை நிலத்திருந்து பிரிக்கப் பட்டோம்......
கல்லைப் பிளந்தெழும் நல்லூற்றுப் போல,
முல்லைக் கொடிஒன்று முளைத்து வருகையில்
எல்லை இல்லா இன்பம் கொள்கிறோம்.
தளையிடும் விலங்குகள், பதுங்கு குழிகள்,
போரின் பொல்லாச் சுறுநாற் றங்கள்
இல்லா இனிய உலகினுக்கு ஏங்கிக்
கனவுகள் காண்கிறேன். அந்த உலகில்
நரந்த மரங்கள் பூத்துக் குலுங்குக!
நல்ஒளிக் கனவுகள் அங்கும் நிரப்புக!
பனிச்சிடும் ஒளிமழை படர்விளக் கேற்றுக!
மங்கையர் அந்த மண்ணில் ஓங்குக!
நீராவி வண்டிகள் நிரல்பட இயங்குக!
கொழுங்கனி குலுங்குக! கூலங்கள் நிறைக!
மந்திர உலகமாய், ஆமாம்,
மாந்தர் உழைப்பின் மந்திர உலகமாய்
அதுதிக மூட்டும். அதன்உயர் இன்னிசை
உரறி முழங்குக! செருக்கொடும் ஓங்குக!
மண்ணி னின்று சென்றுஒரு மைந்தன்
செவ்வாய்க் கோளில் ஆங்கொரு மூலையில்
மகிழ்வுடன் பழுப்பு மண்ணினை அள்ளுவான்.
அவன்தன் விழிகள் ஆர்வம் ததும்ப
நீலப் பச்சைக் கோளினை நோக்கிடும்
இதுவா தொலைவு? என்றும் அணிமையே.

சைபீரியன் குறிப்பேட்டிலிருந்து

கிண்ணம் வழிந்திட மதுவை நிரப்புவர்
குடிஅதை! இன்றேல் கெட்டொழிவாய்;
வண்ணக் குழவியர் இரட்டையர் இங்கே
காட்சிக் குரிய பொருத்தமதே.

வலிய மருப்பினைப் போல்பல கிளைகள்
வளைந்து குலுங்கி விசைந்தாடும்,
பொலியும் சுழல்பொறி போலமீன் ஒன்றின்
விலாப்புறம் அசைந்து மின்னிடுமே.

சுருள்வில் விசையுடன் வெளிப்படு தல்போல்
சூழும் வலையில் கயல்துள்ளும்,
பெருவிண் பரிதி முகிலைக் கிழித்திடல்
பெருவியப் பாகும் மறக்கொணுமோ?

முளிதயிர் போல்அடர் மூடுப னித்திரை
அணில்கட்கு இனிய துறக்கந்தான்;
களிகொள் மகளிரில் பேறுபெற் றாய்நீ
காத்துளது உனக்கு வருங்காலம்.

மாசுகோ நகரில் விற்பனை மகளாய்
விளங்கினை; காட்டில் வந்துள்ளாய்,
கையில் சுத்தியல் களிப்புடன் தாங்கிக்
கடுகி எங்கே விரைகின்றாய்?

பந்தைப் போல்உயர் குதிகால் கள்மரப்
பலகை மீதில் தடதடக்கும்
அந்துயிற் காட்டை எழுப்பியும் விடுமே
அகற்றும் கரடித் துயிலினையும்,

குறும்பைப் பார்;அட, நிற்கும் போதில்உன்
காலைக் குத்திடும் சிறுசெடிகள்?
சிறிய முளைகள் நீஅடித் திடுவாய்
'உலைக்களம்', 'ஆலை' பட்டடையே.

சேக்குவிய ரில்ஒரு காட்சியி னைப்போல்
காடுகள், போர்அரண், குன்றுகளே;
ஆக்கம் மிகும்மற அரிவையர் இங்கே
ஆட்டிப் படைப்பர் உலகினையே.

98

ஸமெத் வர்கூன் அசர்பைசான்

(1906 - 1956)

ஏன் இந்த விரைவு ?

உடுக்கள் ஒளிரும் வானம் ...... ஆழ்கடல்...
முகந்து வீசும் பெருங்காற்றே.
எடுத்து மதுவைக் கிண்ணம் வழியவே
இட்டு நிரப்பி ஏந்துகின்றோம்.

''எளிதில் உலகை மறப்போம் வாராய்''
என்று நானும் சொல்லுகிறேன்.
குளிரும் வந்தது நெருப்பை மூட்டிடு
கொழுந்து விடட்டும் என்கின்றேன்.

பொழுது கழித்தே புலர்க வைகறை
போகாது இரவும் நீடுகவே.
விழுதுறு நெருப்பின் அருகில் குந்துவேன்
எண்ணச் சுழலில் மூழ்குகிறேன்.

கூறும்என் மொழிகள் அறிவுமேம் பாடு
கொண்டில; ஆயினும் பிழைஎன்ன?
தேறும்என் நண்பன் அறிவுளான் ஆயின்
தெரிந்து கொள்வான் என்சொற்கள்.

வேட்கை மீறி அன்பும் பாடலும்
விழைந்து நான்மிக ஏங்குகையில்,
வாழ்க்கை ஆர்வமும் உணர்வின் கிளர்ச்சியும்
வளர்ந்தென் உள்ளே பொங்குகையில்,

நேரம் விரைந்து பறந்து செல்வதை
வேண்டேன் — ஏன்இப் பரபரப்பே?
ஆற அமரப் பொழுதின் இன்னலம்
அமர்ந்து நுகர விழைவேனே.

பெருமனம் கொள்வாய் அன்பின் காதலி,
பேசி விடாதே உண்மையினைப்
பெருகும் முதுமை என்றன் மீதினில்
விரைகுது என்பதை விளம்பாதே.

வந்தென் கையைப் பற்றிடு, அன்பே,
வையம் முழுதும் சுற்றிடுவோம்—
இந்த உலகில் காண எண்ணிய
யாவும் இன்னும் காணவில்லை.

கற்பனைச் சிறகினில் ஏறிச் செல்வோம்
கடல்கள் கிழித்துச் சென்றிடுவோம்
வெற்று வானை நினைந்து நோக்கிடோம்,
அச்சம் அகற்றி வந்திடுவாய்.

நாவாய் பற்பல நங்கூ ரந்தனை
நாடாது இயங்கும் வழிகளிலும்,
மேலாம் சாலைகள் வேறெவை உண்டு?
மிகவும் சிறக்கும் நம்பயணம்.

உயரே இருக்கும் உடுக்கள் ஊடுநான்
செல்லின் அன்றி வீழ்ந்தாலும்
இயம்பு வேன்நான்: மகிழ்ந்தே நின்றிடு;
ஏகேல் துயரே; மேற்செல்லப்

பரியைத் தார்க்கோல் கொண்டு முடுக்கிடேல்
பதறேல் ஏன்இவ் ஓட்டந்தான்?
அரிய பொழுதை ஆற அமரநான்
அழுந்தி நுகர விழைகின்றேன்.

குழந்தைப் பருவத் தோழா, நீயும்ஓர்
வேட்கைக் காரன் பிறவியிலே!
பழந்தூங் கும்மலை நாடு முழுவதும்
பார்த்துத் துருவும் பாங்குடையாய்.

உவக்கும் புல்வெளி எங்கும் திரிவோம்
உடன்என் னோடும் நீவருவாய்.
சிவக்கும் நாணொடும் புல்லினுள் ஒளித்திடும்
செழுமை மலர்களை வாழ்த்திடுவோம்.

புல்லுள் மலரைப் பறிக்க எண்ணேன்,
வெட்டிப் போட ஒப்புகிலேன்;
சொல்இல் லாத அவற்றின் இன்மொழிப்
பொருளை அறிய முயல்வேனே.

அவற்றின் பக்கம் மெதுவாய் நின்றுநான்
அன்பால் அவற்றை நோக்கிடுவேன்;
உவக்கும் இனிய ஒவ்வொன் றின்முகம்
ஊன்றி நோக்கி மகிழ்வேனே.

விழித்தே அவையும் என்னை நோக்கிடும்
வியந்து பார்க்க நான்நிற்பேன்;
கழியும் உயர்வாய் மெதுவாய்ச் சோம்பலில்
காலம்: எதற்குப் பரபரப்பே?

விரைந்து பறக்கக் காற்றா? நான்அட்
வீணாய்ப் பதற்றம் ஏன்இங்கே?
இருந்து மெல்ல ஆற அமர
எல்லாம் நுகர விழைவேனே.

ஓடைக ளேநீர் பதறாது செல்க!
    முகில்காள் மெல்ல ஊர்ந்திடுவீர்;
நீடுறு வாழ்வே பற்பல துணுக்காய்
    நீயும் பிரிந்து நிற்பாயே.

உன்றன் ஒவ்வோர் அணுவையும் தனியே
    ஒதுக்கி எடுத்துநான் பார்க்கட்டும்
என்றன் நினைவில் உன்சிறப் பெல்லாம்
    இனிதாய் வந்து பதியட்டும்.

மெய்மைகள், உணர்வுகள், செயல்கள், சிந்தனை
    மேவும் சுவட்டைப் பதிக்கட்டும்
பொய்யாய் மங்கிப் போகாது அவற்றின்
    புதுமை என்றும் நிலைக்கட்டும்.

வாழ்நாள் குறைவே, அதனால் ஒருநாள்
    வாழ்வில் பன்னிரண் டாண்டுகளை
வீழ்நாள் படாமல் செறிவுறத் திணிக்கும்
    விதத்தை நாமும் கற்றிடுவோம்.

இனிய புலவ! இன்பப் பாடல்கள்
    எழுதுமுன் வியர்வை சிந்திடுவாய்,
முனைந்து விரையேல், தூவலே! வாழ்வுநூல்
    முடிக்க என்ன அவசரமே?

பகலே கழிக; இரவே செல்கநீ
    ஆயினும் பளிச்சென மறையாதீர்......
நுகரப் பிறந்தேன்; ஆற அமர
    நுகர்ந்து மகிழ்வேன் வாழ்வினையே.

* * *

விரிந்த இரவு வானத்தே
    விண்மீன் ஒன்று பொலிந்தொளிரும்;
திரிந்த முத்தாய் ஒளிர்சாம்பல்
    திகழும் முகில்கள் மலையடையும்......

என்றன் இன்பக் கனவுகளும்
இரவில் நிலையாய்த் தங்கிடுமே.
பொன்றும் புயல்காற் றுடன்காலம்
மென்மேல் விரைந்து போகிறதே.

நிலத்தை, பூங்கா, சோலைகளை,
நிறைந்த ஆற்றை, விண்ணரங்க
நலத்தை யாவும் நோக்குகிறேன்,
எல்லை உண்டோ புடவிக்கே?

இந்தப் புடவிப் படைப்பெல்லாம்
எண்ண எண்ண அற்புதமே,
எந்த வழியி லும்விளக்க
இயலா அரிய புதிராகும்.

உலரும் செம்பூ தனிலிருந்தே
உதிரும் இதழ்கள் ஒவ்வொன்றாய்......
நிலமேல் இறப்பவை புதுப்பிறவி
எடுத்து மீண்டும் திரும்பிடுமே.

எண்ணும் மூளை மிகச்சுருங்கி
இங்கே பொடியாய் உலர்ந்திடுமே;
மண்ணுயிர் இறந்தும் புதுப்புதிதாய்
மீண்டும் பிறக்கும் புதிர்என்ன?

மெய்யாய் இயற்கை தனைத்தானே
மீண்டும் படைத்துக் கொள்ளுமடா!
வையம் என்றும் நிலைக்குமடா!
வாழ்வுக்கு அழிவே இல்லையடா!

வாழ்க்கை வளஞ்சார் பெரும்படைப்பின்
வகுத்த ஒருசிறு துகளாகும்.
வாழ்ந்து முடிந்தே அழிபவர்நாம்
எனினும் உலகம் வாழ்ந்திருக்கும்
மனிதன் மீண்டும் பிறந்திடுவான்......

99

அலெக்சாண்டர் யாஷின் உருசியக் கூட்டரசு

(1913-1968)

என் மனைவிக்கு என்மீது அன்பில்லை

என்மனை விக்கு என்மீது அன்பிலை......
என்பால் அவட்கு அன்பிலை என்று
சின்னா ளாகவே ஐயம் உற்றேன்......
என்னா யிற்றது, சந்திக்கும் வேளையில்
ஒப்பந்த மீறுகை என்றே கருதினேன்;
அப்படி யேஅது நடந்து விட்டது.
நிலைமை முன்பே கலகலத் திருந்தது,
சுமைமேல் இதுவே கடைசித் துரும்பு;
என்மனை விக்கு என்மீது அன்பிலை......

எப்படி இருப்பினும், என்ன தான்இது?
தீய நேர்வா? நன்னி மித்தமா?
விடுதலை வாழ்வா? புதுப்பிணைப்பின் தொடக்கமா?
போர்அறை கூவலா? சீரிணைப்பு நாளா?
சூன்இருபத் திரண்டா? மே ஒன்பதா?
வாழ்ந்துகொண் டிருக்கிறேன் ஒன்றும்புரி யாமல்;
துயருற வேண்டுமா? அன்றிதை
வெற்றியாகக் கொள்வதா?

புழுங்கிக் கிடப்பதா? விட்டது சனிஎன
நன்றி சொல்வதா?
என்னையும் அவளையும் நன்கு புரிந்திலேன்.
வாழ்வுச் சகடம் சிக்கிக் கொண்டது;
இடம்பிடித் திருந்த பகைவரின் படைகள்
திடுமென விட்டுச் சென்றஓர் களம்போல்
அறையெலாம் என்ன தாறு மாறுகள்;
கடந்த ஆண்டின் வேட்டைக் குப்பின்
துடைக்கப் படாமல் கிடக்குதென் துமுக்கி;
பனிச்சறுக்குப் பட்டையும் மூலையில் கிடந்திடும்;
பனிநிறை நிலவோ, அணிதிகழ் காடோ
நினைந்தெனை அழைப்பதும் இல்லை.
பிரித்திடா மடல்கள் குவிந்துள மேசைமேல்;
உழவுச்சால் இடையில் களைமுளைத் தல்போல்
நூல்பேழை தூசியின் கால்பட்டு அழுந்தும்.
உண்டேனா இல்லையா? என்ன செய்கின்றேன்?
கண்டது யார்கொல்?

முகத்தினை மழித்த நாள்எது? அறிகிலேன்.
எந்தப் பணியையும் செய்திட இயலேன்;
உறங்கவும் இயலேன்.
மூச்சினை விடவும் முடிவ தில்லை.
எழுதிட இயலேன்.
கடவுளே என்ன நடக்கிறது அறிவிநீ!
உயர்கின் றேனா? அல்லது
மயங்கி வீழ்கின் றேனா?
நிலத்தை நோக்கியா? நிலத்தினுள் ளேயா?
அல்லது ஒருகால் இதைத்தான்
எடையற்ற நிலைஎனக் கூறுவர் போலும்!
முன்பொரு காலம் என்சேம வைப்பில்
உறுதியாய் இருந்தேன்,
முன்பணம் அளிக்க முடிந்தது.
தாக்க முடிந்தது; என்நிலை யைநான்
காக்க முடிந்தது.

இன்றென் மனையாள் அன்பிலள் ஆனாள்,
ஒற்கத்தின் ஊன்றுகோல் அற்றுப் போனேன்.
இரண்டகம் ஒவ்வொரு பக்கமும்
என்னைச் சுற்றி வஞ்சம் கொண்டகோ
அல்லும் பகலும் அமைதியை அழித்திடும்.
அரண்இல் லாத பெருநகர் போலப்
பாதுகாப்பு அற்றேன்.
பெருமி தம்தலை தூக்கவே இல்லை.
அமைதியும் வெறுமையும் எனைச்சூழ்ந் துள்ளன.
அவைதாம் உலகம் அனைத்தும்
தோன்றுமுன் பாகத் தோன்றிய படியே.

100

ஸுல்பிய உஸ்பெகிஸ்தான்

(பி. 1915)

முடிவற்று அலைந்திடும் உள்ளம்

நிலத்தூடும், கடலூடும், வானூடும் பயணங்கள்
நிகழ்த்து கின்றேன்;
பலவான சிற்றூர்கள், நகரங்கள், நாடெல்லாம்
பறந்தும் உள்ளேன்;
நிலவுலகம் பலவண்ணத் திண்டாகப் புதிர்வழியாய்க்
கிடக்கும், எங்கும்
கலத்துறைகள் வாழ்மனைகள், எண்ணங்கள், கனவார்வம்
பொலிந்து நிற்கும்.

எங்கெங்கு நான்செலினும் கனவோடே உடன்கொள்வேன்
பாட்டை, அன்பை.
இங்கிந்த உலகந்தான் ஓய்வில்லாது இயங்குதல்போல்
இயங்கு கின்றேன்.
கங்குல்துயில் கனவினிலும் என்பயணம் மேன்மேலும்
தொடர்ந்தே செல்லும்,
செங்கதிர்ப்புத் தொளிநோக்கிச் செல்கின்ற நாவாய்என்
படுக்கை ஆகும்.

காலத்தேர் விரையட்டும், தடுத்திடும்ஓர் உரிமைநமக்கு
இல்லை அன்றோ?
ஞாலத்தின் புவிஈர்ப்பில் இழுப்புறல்போல் உலகொழுங்கில்
இழுக்கப் பட்டேன்;
ஆலித்த என்படைப்பில் வாழ்வருமை நிகழ்வெல்லாம்
நிறைந்தி ருக்கும்;
வேலியற்ற இயக்கத்தில் முடிவின்றி அலைந்திடும்என்
வேட்கை உள்ளம்.

பாடல்

அக்கச்சியே, ஆருயிரே உன்னைப்பாடு வேனே—என்
அகம்எல்லாம் நிறைந்ததுஉன்றன் அன்புநலந் தானே!
அக்கச்சியே, தாயகத்தைப் பாடுகின்றேன் நானே—முகில்
அடைவிலாது மலர்ந்தொளிரும் அழகிதுநம் வானே!

பளபளத்து மின்னிஒளிர் பருத்திவயற் காடு—ஆ!
பரிதிஎழும் அடிவானின் எல்லைவரை மேடு;
தளதளத்த கொடிமுந்திரி அறுவடையின் போது—நம்
தனித்தொளிரும் பருத்திகளைப் பறிப்பதுவே தோது.

திறமையான பரிவுமிகும் இனியகைக ளாலே—ஒளிச்
சீர்பருத்திக் கதிர்களினை மலரச்செய்வ தாலே,
உறவுமிகும் அக்கச்சியே உன்னைப்பாடு கின்றேன்—உன்
ஓங்குசெழும் விளைவைத்தரும் நிலத்தைப்பாடு கின்றேன்!

கதிர்எழுமுன் நீஎழுந்து கடமைசெயச் செல்வாய்—கீழ்க்
கருக்கிருட்டு வைகறையில் விரைந்துதொழில் செய்வாய்!
ஒதுங்கிமறை வானரங்கில் உடுக்கள்ஒவ் வொன்றாய்
உன்னுடைய உழைப்பருமை ஓங்கிடுமே நன்றாய்!

திறமிகும்உன் பெரும்உழைப்பை நாடறிந்த தின்று—அடி
திளைக்கின்றேன் அக்கச்சி பெருமிதத்தில் நன்று!
வறள்பாலை நிலத்தினிலே வனப்புச்செம் மலர்கள்—முகம்
மலர்ந்துவந்து நின்உழைப்பைப் பாடும்அதன் மலர்கள்!

★

சோவியத்துக் கவிஞர் நூற்றுவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர்கள்

பெயர் :		பாடல் எண் :
1. அலக்ஸ் மில்லர்	:	*14அ; 25; 29; 33; 35; 38; 59; 62; 85; 91; 98அ; 100.*
2. அவ்ரில் பைமேன்	:	*7; 11; 13; 24; 28; 41அ; 63; 88; 92; 99.*
3. ஆர்கையி ஜான்ஸ்டோன்	:	*50; 68அ; 69; 81.*
4. இரீனா ஜெலாஸ்னோவா	:	*10; 12; 13இ; 20அ; 27; 33அ; 37அ; 40; 43அ; 47; 48; 49அ; 51ஆ; 71அ; 75; 77அ; 80அ: 95; 96; 97; 98.*
5. ஒல்கா ஷோர்ட்டிஸி	:	*16அ; 72.*
6. ஒல்கா மொசியென்கோ	:	*31அ.*
7. கிளாடியஸ் ஈவன்ஸ்	:	*16; 17; 30; 55; 56; 57; 61; 73; 75அ; 83; 88ஆ.*
8. டாம்போட்டிங்	:	*5இ; 21அ; 28அ; 34அ; 41; 44; 46; 49; 53; 60; 78; 80; 86; 87; 93.*
9. டோரியன் ரோட்டன்பர்க்	:	*1; 2; 9; 14; 15; 20; 21; 24; 31; 32; 35அ; 36; 43; 43ஆ; 50அ; 51; 52; 54; 58; 60அ; 61அ; 65; 67; 71; 74; 81அ; 82அ; 84; 97அ.*

10. பீடர் டெம்பெஸ்ட் : *4; 6; 8; 22; 23ஆ; 26; 51அ; 79; 94.*

11. பெர்னார்ட் மீரஸ் : *13ஆ.*

12. மார்க்ரெட் வெல்லின் : *5; 34; 45; 89; 90; 100அ.*

13. யூஜினி ஃபெல்ஜென்பேர் : *3; 39; 66.*

14. ரோபர்ட் டக்லிஷ் : *76.*

15. லூயிஸ் ஸெல்லிகேப் : *46அ; 70; 88அ.*

16. வாலண்டினா ஜாக்குயி : *3ஆ; 18; 19; 42; 68.*

17. வால்டர் மே : *77; 82; 82ஆ.*

18. ஜோயி வாலஸ் : *64.*

குறிப்பு : *பாடல்களை மூலத்துடன் ஒப்பிட்டுப்பார்த்துச் செப்பம் செய்தவர் பேராசிரியர் ம. இலெனின் தங்கப்பா.*

அருஞ் சொற்பொருள்

அகம்—வீடு; உள்ளம்
அகவை—வயது
அங்காடி—கடை
அட்டி—தடை
அடர்—நெருங்கும்; கூடும்
அடவி—காடு
அடைவு—மறைவு
அண்டம்—புடவி; உலகம்
அணித்து—அருகில்
அதால்—அதனால்
அமுதக் கொடி—திராட்சைக் கொடி
அயர்வு—சோர்வு
அரண்—மதில்; கோட்டை
அரணம்—கவிந்த செருப்பு; ஷூ
அரத்தம்—குருதி; இரத்தம்
அரவம்—ஒலி; சப்தம்
அருமந்த—அருமருந்தன்ன
அரோரா—அக்டோபர்ப் புரட்சி தொடங்க அறிவிப்பு வெடிப்பைத் தந்த கப்பல்
அல்—இரவு
அல்லா—கடவுள்
அல்லிசைப்புள்—இரவில் பாடும் பறவை
அல—அல்ல
அலக்கண்—துன்பம்
அலகு—கூர்மை; முனை
அவார்—தாகிஸ்தானில் வழங்கும் ஒரு மொழி
அள்ளூறல்—வாயூறல்
அளறு—நரகம்; பாழிடம்
அறிதுயில்—அரைத்தூக்கம்
அறை கூவல்—சூளுரை; சவால்
ஆப்பிள்—ஒரு கனி வகை
ஆலித்தல்—மேல் எழல்
ஆவணம்—சாசனம்; பத்திரம்
ஆழி—பெருங்கடல்; மோதிரம்
ஆற்றல்—வல்லமை
இசைப்பேழை—பியானோ
இடத்தேர்வாளர்—பணிக்கான இடம் தேர்பவர்
இடர்—தொல்லை
இடறாய்—தவறமாட்டாய்
இடுக்கண்—துயர்; துன்பம்
இணைவிழை அறை—மேலை நாட்டு ஆடவர் பெண்டிர் நடமிடும் இடம்
இரண்டகம்—சூழ்ச்சி; வஞ்சனை
இரா—இரவு
இருபால்—இரண்டு பக்கம்
இரும்பொறி—மெஷின்
இரைந்து—கூச்சலிட்டு
இரோஷிமா—இரண்டாம் உலகப்போரில் அழிவுற்ற ஜப்பான் நகர்
இல்—வீடு; இல்லாத
இவர்தல்—ஓட்டுதல்; சவாரி
இறுகி—அழுந்தி

இன்பியல்—இனிய முடிவுடைய நாடகம்
இன்னல்—துன்பம்
இன்னியம்—தோற்கருவி
இன்பகல்—இனிய பகல் வேளை
ஈகம்—தியாகம்
ஈகை—கொடை; வண்மை
ஈர்த்து—கவர்ந்து
ஈர்ப்பு—இழுத்தல்; கவர்தல்
உடன்பிறப்பாண்மை—சகோதரத்துவம்
உடுக்கள்—விண்மீன்; நட்சத்திரம்
உந்தாற்றல்—பெருஞ்சக்தி
உந்து—தள்ளு
உந்துதல்—தள்ளுதல்
உயிர்ப்பு—மூச்சு; சீவன்
உவப்பு—மகிழ்வு
உளைச்சல்—களைத்தல்
ஊதாம்பை—பலூன்
ஊரல்—சோவியத்து நாட்டின் ஒரு பகுதி
ஊழ்—விதி
ஊழி—யுகம்
எழில்—அழகு; வனப்பு
ஏசுதல்—திட்டல்; வைதல்
ஏந்து—வசதி; சௌகரியம்
ஏமுறுதல்—மகிழ்வுறுதல்; செம்மாத்தல்
ஏருந்து—இயந்திரத்தால் இயங்கும் ஏர்; டிரேக்டர்
ஏல—பொருந்த
ஏலாது—ஏற்காது
ஐயம்—சந்தேகம்
ஒரேஷியோ—சேக்ஸ்பியர் நாடகக் கதைமாந்தன்
ஒரோனிஷ்—ஊர்ப் பெயர்
ஒளிப்படம்—நிழற்படம்
ஒளிமை—ஒளியின் தன்மை; வெளிச்சம்
ஒற்கம்—தளர்ச்சி
ஒன்றியம்—யூனியன்
ஓக்—தேக்கைப்போல் வலிய மரம்
ஓகை—மகிழ்ச்சி; இன்பம்
ஓங்கல்—மலை; உயர்தல்
ஓச்சு—வீசுதல்
ஓல்கா—சோவியத்தின் பேராறு
ஓலம்—கூப்பாடு
கங்குல்—இரவு
கச்சை—மேற்சட்டை; இடையில் கட்டும் பட்டை
கடற்புள்—கடற் பறவை
கடுமை—திண்மை
கணம்—கூட்டம்
கணிப்பான்—கண்ணணி; கம்பியூடர்
கணையாழி—மோதிரம்
கம்மியன்—கருமான்
கமழ்—மணம்; வாசனை
கமுக்கம்—இரகசியம்
கயல்—மீன் வகை
கரவு—வஞ்சனை
கரிசில்—கருமண் நிலம்
கரிப்பு—உப்பாயிருத்தல்
கருக்கல்—மாலை இருள்
கருவூலம்—களஞ்சியம்; பொக்கிஷம்
கல்—ஒலிக் குறிப்பு
கவிகை—குடை
கழிபேர்—உயர்ந்த
களம்—இடம்; போர்க்களம்
கன்னி நிலம்—உழப்படாத புது நிலம்
கனத்தல்—சுமை; பளு
காகசு—சோவியத்து நாட்டு மலைத்தொடர்
கார்—கார் காலம்; முகில்; மழை

கார்சியாலோர்கா—ஸ்பானியப் புரட்சிக் கவி
காரைத் தூண்—பைஞ்சுதைத் தூண்; கான்கிரிட் பைல்
காற்றூதல்—பலூன்
கான்—காடு
கான்றுமிழ்—காறித்துப்பு
கிட்டி—கிடைத்தல்; நெருங்கல்
கிறக்கம்—மயக்கம்; தலை சுற்றல்
கிறுக்கை—மயக்கினை
கீழ்—கிழக்கு; கீழே
குடில்—வீடு
குதிகுடை—பாராசூட்
குப்பி—பாட்டில்
கும்மாளம்—பெரு மகிழ்ச்சி
குருகு—கொக்கு
குருதி—செந்நீர்; இரத்தம்
குவளை—கிண்ணம்; செங்கழுநீர்
குழந்தைமை—குழந்தைப் பருவம்
குறடு—புடைப்பு; முன் இடம்
குறியிடம்—அடையாளமாகக் குறித்துக்கொண்ட இடம்
கூட்டிசை—குழுப்பாடல்
கூதிர்—பனிக்காற்று; குளிர் காலம்
கூற்றம்—காலன்
கைநூல்—கை எழுத்துப்படி
கொடிமுந்திரி—திராட்சை
கோப்பு—சீர்; ஒழுங்கு
கோள்—கிரகம்; பிளானட்
சகடம்—சக்கரம்
சதுக்கம்—தெருக்கூடல்
சரளைக் கல்—சாலைக்கிடும் சல்லிக் கல்
சளைத்தல்—களைப்படைதல்
சால்பு—நற்குணம்; மாட்சிமை
சாளரம்—பலகணி; சன்னல்
சாறு—நீர்மம்; வடிநீர்; குழம்பு
சிவேரி—சைபீரியா
சிறார்—சிறுவர்
சீற்றம்—சினம்; கோபம்
சுணக்கம்—மெத்தனம்; தாமதம்
சுமை தூக்கி—பொருள்களை ஏற்ற இறக்கப் பயன்படும் கருவி; கிரேன்
சுருள் வில்—ஸ்பிரிங்
சுவடு—காலடி
சுனை—நீர் ஊற்று
சூள்—வஞ்சினம்; உறுதி கூறுதல்; சபதம்
செக்கர்—சிவப்பு
செங்காவலர்—சோவியத்தின் செஞ்சேனை
செந்நீர்—இரத்தம்
செம் பூ—சிவந்த மலர்
செம் மலர்—சிவந்த மலர்; ரோசா
செம்மாப்பு—அகமலர்ச்சி; வீறு
செர்ரி—ஒரு கனி மரம்
செவ்வழி—நல்வழி; பண்
செவ்வாய்—கோள்; கிரகம்
செவ்விய—சிறந்த
சேப்பு—சிவப்பு
ஞாயிறு—பரிதி; சூரியன்
ஞாலம்—உலகம்
ஞாழல்—புலிக்கொன்றை; சங்குப் பூ
தண்—குளிர்ந்த
தணல்—கனிந்த நெருப்பு
தணிவு—பொறுமை
தந்திரம்—சூழ்ச்சி
தார்க்கோல்—மாடு, குதிரைகளை ஓட்டும் முள் கம்பு
தாழி—பெரிய பானை

திகில்—அச்சம்
திண்காழ்—வைரம் ஏறிய (மரம்)
திண்ணிய—வலிமை வாய்ந்த
திண்மை—உரம்; வலிமை
திவலை—நீர்த்துளி
திறவு கோல்—சாவி
தீக்குறி—கெட்ட சகுனம்
தீங்கு—தீமை
தீ விலங்கு—சீனப்புராணத்தில் வரும் சரபம்; டிரேகன்
துகள்—தூசு
துகில்—துணி
துணிக்கை—தூள்
துணைக்கோள்—செயற்கைக் கிரகம்
துமுக்கி—துப்பாக்கி
துயில்—உறக்கம்; தூக்கம்
துருவல்—உட்சென்று பார்த்தல்
துருவி—உட்குடைந்து
துலாக்கோல்—தராசு
துறக்கம்—வானகம்; சுவர்க்கம்
துன்பியல்—துன்ப நாடகம்
தெறிக்கும்—வீசும்
தென்பு—மகிழ்ச்சி
தேறல்—மது
தொடர்பாளர்—செய்தி ஏட்டின் நிருபர்
தொடர் வண்டி—ரயில் வண்டி
தொடுவான்—விடிவானம்
தொலையா—பல
தொன்மை—பழமை
தோது—ஒத்து; ஏந்தான
நச்சு—நஞ்சு; விடம்
நட்பமைதி—சமாதானம்
நம்பகம்—நம்பிக்கை
நறவு—மது; கொடிமுந்திரிச் சாறு
நறா—மது; கள்
நாவாய்—கப்பல்
நிமியம்—நிமிடம்
நிரயம்—அளறு; நரகம்
நிலவறை—சுரங்கம்; பதுங்கு குழி
நிலைப்பேழை—அலமாரி
நீட்சி—நீட்டித்தல்; நீளல்
நுகர்தல்—அனுபவித்தல்
நுண்மை—நுட்பம்
நூல்பேழை—புத்தக அலமாரி
நூறி—மோதி; சிதறடித்து
நெஞ்சாங்குலை—இருதயம்
நேயம்—அன்பு
நேவா—ஓர் ஆறு
நொய்மை—மென்மை; மிருது
நோக்காடு—மனவருத்தம்
பட்டடை—கொள்ளன் களரி; உலைக்கூடம்
படைஞன்—படைவீரன்
பண்டு—முற்காலம்
பதைவு—பதற்றம்
பரி—குதிரை
பரிவு—இரக்கம்
பலகணி—சன்னல்
பற்று—ஆர்வம்; விருப்பு
பா—பாட்டு
பாக்கிசை—மேலைநாட்டு இசைவாணர் இசை
பாகை—தலைப் பாகை
பாண்டம்—ஏனம்
பார்—உலகம்
பாரித்த—விரிந்த
பால்வழி—விண்ணில் தோன்றும் ஒளிவட்டம்; மில்கி-வே
பாலை—வறள் நிலம்
பாவலன்—கவிஞன்
பிடரி—குதிரையின் கழுத்து
பிணி—நோய்
பிணித்தல்—இணைத்தல்

பிய்த்து—பிரிந்து
பீடு—பெருமை
பீதுவன்—மேலைநாட்டு இசைப் புலவன்
பீர்ச்—ஒரு வகை மரம்
புகைக்குழல்—சுங்கான்
புகைக் கூண்டு—புகைபோக்கி; சிம்னி
புட்கள்—பறவைகள்
புடவி—அண்டம்
புத்தமைப்பு—புதிய அமைப்பு
புத்தெழுச்சி—புதிய எழுச்சியால் வரும் மகிழ்ச்சி
புதல்—புல், பூடு
புரவி—குதிரை
புரை—குற்றம்; குறை
புலம்பல்—அழுதல்
புழுதி—தூசி
புழை—துளை
பூதவிலங்கு—சீனத்தொன்மத் தீவாய் விலங்கு; சரபம்; டிராகன்
பெயர்ப்பேடு—பதிவேடு; ரிகார்ட்
பேராயம்—காங்கிரஸ்
பேராளர்—பிரதிநிதி
பேரியாழ்—பல நரம்பிசைக் கருவி
பேரூழி—யுகம்
பொதுமையர்—பொதுவுடைமையர்
பொறை—பொறுமை; சுமை
பொன்றும்—அழியும்
போக்கிலி—போக்கற்றவன்
போரிஸ்-கார்படோவ்—ஓர் எழுத்தாளர்
போருந்து—போர் வண்டி; டாங்க்
மகமது—அவார் மொழிப் புலவன்
மகிழுந்து—சிறிய உந்துவண்டி
மண்டு—நெருங்கு
மந்திரம்—எண்ணவேட்கை
மயற்கை—மயக்கம்
மருங்கு—பக்கம்; தெரு
மருட்கை—வியப்பு; ஆச்சரியம்
மருப்பு—யானைத் தந்தம்
மருள்—ஐயம்
மலர்த்தி—மலர்வித்து
மறம்—வீரம்
மறவர்—வீரர்
மறவாண்மை—போர் வீரம்
மன்பதை—மக்கள் சமூகம்; உலகம்
மா—பெரிய; சிறந்த; குதிரை
மாசுகோ—சோவியத்து நாட்டின் தலைநகர்
மாந்தன்—மனிதன்
மாரி—மழை
மின்வலி — மின்சார ஆற்றல்
மீகாமன்—வானூர்திவலன்-பைலட்
மீயுயர்—மிக உயர்ந்த
மீறுகை—மீறுதல்
மீன்—நட்சத்திரம்
முகடு—மலை உச்சி
முகில்—மேகம்
முரண்—மாறுபாடு
முரித்தல்—உடைத்தல்; வீழ்த்தல்
முளிதயிர்—கட்டித்தயிர்
முறித்தல்—ஒடிதல்; கெடுதல்
முனைந்து—முற்பட்டு
மூரல்—புன்னகை
மெய்ப்பொருள்—தத்துவம்
மேனாள்—முன் நாள்
மைந்து—பலம்
மொய்ம்பு—வலிமை
மோசாட்—இசைக் கருவி
யா—ஒரு வகை மரம்
வசை—திட்டு

வடு—தழும்பு; காயம்
வண்மை—வளமை
வரற்கு—வருவதற்கு
வல்லமை—ஆற்றல்
வல்லூறு—ஒரு பறவை
வழிப்போக்கு—பயணம்
வளமனை—மாளிகை
வறள்—வறண்ட
வறிது—பயனின்மை
வன்மை—கடினம்; பலம்
வன்னி—ஒரு வகை மரம்
வாகு—அழகு; ஒழுங்கு
வாகை—வெற்றி; வெற்றி மாலை
வாய்ப்புக்கேடு—துர் அதிர்ஷ்டம்
வாயில்—வாசல்
வார்ப்பச்சு—தானே இயங்கும் அச்சுக் கோப்பு
வானரங்கு—விண்வெளி; ஆகாயம்
வானூர்தி—ஆகாய விமானம்
வாஸ்டாக்—ஏவுகணையுள் ஒன்று
விசும்பு—விண்; வான்
விடை வணக்கம்—பிரிவிடை
விண்—வானகம்
விண்உந்து—ஏர் பஸ்
விண்கணை—ஏவுகணை; ராக்கெட்
விண்கலம்—செயற்கைக் கோள்
விண்ணகம்—வானம்
விண்மீன்—உடு; நட்சத்திரம்
விண்வெளிக் கப்பல்—விண் கலம்; ஸ்பேஸ்-ஷிப்
விதிமுறை—நெறிப்படி
வியப்பு—அதிசயம்
விரகு—தந்திரம்; சாமர்த்தியம்
விரைவு—வேகம்
விலங்காண்டி—காட்டு மிராண்டி
விலங்கு—குதிரை
விழு—சிறந்த
விழுப்புண்—போரில் முகத்திலும் மார்பிலும் படும் காயம்
விழைவு—ஆர்வம்
விளிம்பு—கீரை; எல்லை
விறல்—வீரம்; வெற்றி
விறலாண்மை—போர்த்திறன்
விறைத்தல்—மரத்துப் போதல்; குளிர் நடுக்கம்
வீச்சொளி—திடீரென்று வீசும் ஒளி
வீரர்—தலைவர்; போர் மறவர்
வீறு—பெருமை; வெற்றி
வீறுணர்ச்சி — வியப்பூட்டும் திறம்
வெறி—விரைவு; மணம்
வேகம்—தீவிரம்
வேட்கும்—விரும்பும்
வேட்கை—பற்றுள்ளம்; பேராவல்; தாகம்
வேனில்—இளவேனில்; முதுவேனில்
வைகறை—விடியல்

❋ ❋ ❋